# ஈழநாதம்

விலை - ரூ.12.00

**Eelanatham** மக்கள் நாளிதழ்

## ஆண்டுச் சிறப்பிதழ்



# அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கங்கள்!

ஈழநாதம் தனது பதின் மூன்றாவது அகவையைப் பூர்த்தி செய்து பதின்நான்காவது அகவையில் கால் பதிக்கும் இன்றைய நாளில் முதலில் தனது நன்றியினை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது. ஏனெனில், அதன் கடந்த காலப்பணிக்கு ஆதாரமாகவும், ஆதரவாகவும் இருந்தவர்கள் அவர்களே.

ஈழநாதம் மக்கள் தினசரி தனது வரலாற்றுக் காலத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலை ஒத்ததொரு சூழ்நிலையை இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை. அதாவது ஒரு வருடத்திற்கு மேலாக நீடித்திருக்கும் ஓர் அமைதியான சூழ்நிலையில் அது இதற்கு முன் பயணித்ததில்லை.

1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஈழநாதம் அமைக்கப்பட்டு சில மாதங்களில் தொடங்கிய யுத்தமானது, இது வரையிலான ஈழநாதத்தின் வரலாற்றுக் காலத்தின் பெரும் பகுதியை ஆக்கரமித்துக் கொண்டிருந்து. இடையில் சிலமாதங்கள் அமைதி நிலவியிருப்பினும் யுத்தத்திற்குள்ளேயே ஈழநாதம் வாழ்ந்து, வளர்ந்ததெனலாம்.

இந்நிலையில் யுத்தமானது மக்களை எவ்வாறெல்லாம் பாதித்ததோ அதே அளவு பாதிப்பினை ~ சிலசமயங்களில் அதனைவிட அதிகளவில் கூட ஈழநாத்தினை பாதித்துள்ளது. இடப்பெயர்வுகள், பற்றாக்குறைகள் என்பன பெரும் சவால்களாக இருந்தன. ஆயினும் சவால்களை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி கொண்டதன் காரணமாகவே ஈழநாதம் தனது பயணத்தை இன்றும் தொடரக் கூடியதாகவுள்ளது.

ஒரு பத்திரிகையின் வரலாற்றுக்காலம் என்ற ரீதியில் 13 ஆண்டு காலம் நீண்ட தொன்றல்ல. ஆனால், ஈழநாதம் சந்தித்துள்ளது போன்றதொரு சவால்களையும், நெருக்கடிகளையும் தாண்டி பதின்நான்காவது ஆண்டில் கால் பதிப்பதென்பது இலகுவான தொன்றல்ல. ஏனெனில், ஈழநாதம் தனது 13ஆண்டு கால வரலாற்றில் ஏழு இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளது. இதில் ஒன்று கடல் தாண்டியதும் ஆகும்.

இத்தகைய நெருக்கடிகளைத் தாண்டி ஈழநாதம் தளராது வெளிவந்தமைக்கு மக்கள் வழங்கிய ஆதரவும், ஈழநாதம் பணியாளர்கள், பணிப்பாளர்கள் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட சேவையுமே காரணமாகும். ஆயினும் யுத்தச் சூழ்நிலையானது ஈழநாதம் நவீனத்துவம் பெறுவதை ஒரு தசாப்த காலத்திற்குப் பின்தள்ளியிருந்ததென்பது உண்மையே.

ஆனால், தற்பொழுது நிலவும் அமைதிச் சூழ்நிலையானது, ஈழநாதம் தன்னை மெருகேற்றிக் கொள்ளவும் விஸ்தரித்துக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்துள்ளது. தொலைத் தொடர்பு வசதிகள் கிடைக்கப் பெற்றுள்ளதில் இருந்து ~ அச்சுப்பதிப்பு முறையில் கிடைக்கப் பெற்ற வசதிகள் வரை அதன் மெருகேற்றத்திற்கும் விஸ்தரிப்பிற்கும் காரணமாக அமைந்துள்ளதெனலாம்.

இதேவேளை கிடைக்கப்பெற்ற வாய்ப்புக்கள் ஈழநாதத்தின் வளர்ச்சிக்கு இன்று உதவுபவையாக இருப்பினும், அவற்றின் முழுமையான பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் வேறு சில வளங்கள், வாய்ப்புக்கள் ஈழநாதத்திற்கு முழு அளவில் இன்னமும்




கிடைக்கப் பெறவில்லை.

ஆகையினால் ஒப்பீட்டளவில் ஈழநாதம் மாற்றங்களைக் கண்டுள்ளதெனினும் ~ அது மக்களுக்கான முழு அளவிலான சேவையினை நிறைவு செய்து வருவதாக நாம் கருதவில்லை. மக்களின் எதிர்பார்க்கையைப் பூர்த்தி செய்ய இன்னமும் ஈழநாதம் விஸ்தீரணமாகப் பணியாற்ற வேண்டும் என்பதே எமது மதிப்பீடாகும்.

இதனால் பல்வேறுபட்ட இடையூறுகளையும், சவால்களையும் எதிர்கொண்டு சமாளித்து தடைகளைத் தாண்டிவந்துள்ள ஈழநாதத்தினை மக்களின் எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்யும் வகையில் வளர்த்தெடுத்தல் என்பதே எமது குறிக்கோளாகும். அதற்கு கடந்த காலத்தில் மக்கள் வழங்கியது போன்றதொரு ஆதரவைத் தொடர்ந்தும் அவர்களிடம் இருந்து ஈழநாதம் எதிர்பார்க்கின்றது. மக்கள் ஆதரவு வழங்குவார்கள் எனவும் அது பூரண நம்பிக்கையைக் கொண்டுள்ளது.

- நன்றி -

பிரதம ஆசிரியர்.

# வாழ்த்தும் வாசகர்கள்



செந்நெல் தலையசைத்து,
செந்தாமரை முகம் மலர்ந்து,
கடல்கள் தாலாட்டி,
கரையை முத்தமிட்டு,
வீரத் தமிழுடன்
வீரர்கள் விளையும்
தமிழீழ மண்ணில்,
ஈரேழு அகவைகாணும்
ஈழநாத இனியவனே!

என் இதய அறைகளில்
இருக்கையிட்டு
அமர்ந்திருக்கும் நீ,
அரசியல் அற்புதங்களை
ஆணிவேருடன்
அம்பலமாக்கி,
இளையோர்க்கென
இளைய நாதம் அமைத்து,
பொதறிவுப் பொக்கிஷங்கள்,
பொருண்மியச் செய்திகள்
பலவுடன்,
போட்டிகள் பல தந்து ~ நீ
ஆற்றிடும் சேவைக்கு
போற்றிட வார்த்தையில்லை.

என் மனத் தாளில்
நினைவுப் பேனாவால் ~ நீ
நித்தமும் இப்புவியில்
பவனி வர
உளந்திறந்து வாழ்த்தி
உனக்கு இக்கவி
வரைகிறேன்.
"வாழ்க நீ
வளர்க உன்பணி"

- டா. அனிற்ராசாளினி

நாரினிலே நறுமலரை நங்கையவர்
மாலையெனத் தொடுக்கின்ற செய்கைபோலே
பாரிலுள்ள செய்தியெல்லாம் தொகுத்திங்கே
பழகுதமிழ் மொழியிலே தந்திடுவன்
ஆரிவரோ கேட்கின்ற குழந்தை கட்கும்
ஆன்மிகம் தேடுகின்ற முதியவர்க்கும்
பாரிபோல செய்திகளை வழங்கிடுவான்
பார்த்துமிக பயன்களை பெற்றிடுவோம்

பல்வேறு செய்திகளை வழங்குகின்ற
பத்திரிகை உனக்கு இன்று
ஆண்டுவிழா வந்ததென அறிந்து நாம்
ஆசையுடன் பாடுகின்றோம் வாழிநீ
பாலகனாய் நீயிருந்து புரிகின்ற
பயன்மிக்க செய்கை போல
பருவந்தான் வந்தபோதும் பணிபுரிய
வேண்டுமென வாழ்த்துகின்றோம் வாழ்க நீ

- பூ. நகுலன்-

தகுந்த தலைவனை ஈங்கு பெற்றது
தமிழ் மணங்கமழும் நிலம் பெறவென்று
தமிழ்மொழி தன்னையும் பெற்று மகிழ்ந்தது
எம்முள் உணர்வினைப் பகிர்ந்திடவென்று
உயிரினை கூடப் பெற்றது இங்கே
மானம் வருமெனில் கொடுத்திடவென்று
உண்மையில் ஈழ நாதமே உன்னைப்
பெற்றதில் மகிழ்ந்தோம் வாழ்த்திட இன்று.

அல்லும் பகலும் அயராதுழைத்து
ஆற்றிய சேவைகள் என்னே! என்னே!
கல்லும் முள்ளும் கடந்தது போல
துன்பமும் துயரமும் எத்தனை கடந்தாய்

அந்நியர் வெறியால் அல்லல் அடைந்து நாம்
அங்கிங் கெனவே இடம் பெயர் போதும்
தொற்றியே எம்முடன் தொடர்ந்ததை எண்ணி
இப்புது அகவையில் புகழ்ந்துனை வாழ்த்தினோம்.
ஈழநாதமே இப்புவி தனில் நீ
என்னென்றும் நிலைத்து வாழிய நீடு!

- மாவன்னா

# கிளிநொச்சியின் எழுச்சி

இப்பொழுது ஈழப் போரின் தலைநகரம் கிளிநொச்சி தான் என்றாலும் அதன் புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்தவரை அது ஒரு கூரையில்லாத நகரம்தான். மீளக் குடியமர்வு தொடங்கி சுமார் இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. அந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக கடந்த ஓராண்டுக் காலம் புரிந்துணர்வுக் காலம் என்ற போதிலும் கிளிநொச்சியின் சராசரி விவசாயி இடிந்த தனது வீட்டை மீளக் கட்டியெழுப்ப எதற்காகவோ காத்திருப்பதுபோலத் தோன்றுகிறது.

வீடுகளை மீளக் கட்டியெழுப்பப் போதிய பணபலம் அவர்களிடம் இல்லாமலிருக்கலாம் அல்லது சமாதான முயற்சிகளைப் பற்றிய ஐயமும் காரணமாய் இருக்கலாம்.

ஒருபுறம் சாதாரண சனங்கள் வீடுகளை மெதுமெதுவாகக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்க இன்னொருபுறம் ஒரு அரசியல் தலைநகரமாக நிர்வாகத் தலைநகரமாக, பேச்சுவார்த்தை நகரமாக கிளிநொச்சி மிக வேகமாக எழுச்சி பெற்று விட்டது.

சில மாதங்களுக்கு முன்பு மூன்று லட்சம் மதிப்பிடப்பட்ட காணிக்கு இப்பொழுது எட்டு லட்சம் கேட்கப்படுகிறது. மூன்று அறைகளும் ஒரு விறாந்தையும் உடைய ஒரு வீட்டிற்கு மாதம் ஐயாயிரம் ரூபாய் வாடகை கேட்கப்படுகிறது. முற்பணமாக ஒரு லட்சம் கேட்கப்படுகிறது. அதுவும் மின்சாரம், தொலைபேசி போன்ற வசதிகள் எதுவுமில்லாத ஒரு வீட்டிற்கு. இது கொழும்பில் உள்ள வாடகை நிலவரத்துக்கு ஏறக்குறைய நிகரானது. அந்தளவுக்கு கிளிநொச்சியின் பெறுமதி உயர்ந்து விட்டது. முன்னெப்பொழுதும் இந்தளவுக்கு அதன் பெறுமதி உயர்ந்ததில்லை. கிளிநொச்சியின் வரலாற்றைப் பொறுத்தவரை அது இவ்வாறு எழுச்சி பெற்றது இதுதான் முதற்தடவை.

இது ஒரு செயற்கையான எழுச்சியே.

பொருளாதார வார்த்தைகளுக்கூடாகக் கூறினால் கிளிநொச்சியின் விவசாயப் பொருளாதாரத்தால் திரளும் உபரி, அதை ஒரு தலைநகரமாக உயர்த்தப் போதுமானதல்ல. அதுவும் சில வருடங்களுக்கு முன்பு ஒரு படைநகரமாக, சனங்களற்ற பேய் நகரமாகக் காட்சியளித்த ஒரு நகரம், தன் இயல்பான வளர்ச்சிப் போக்கில் இவ்வளவு விரைவாக, ஒரு தலைநகரமாக எழுச்சி பெறுவது என்பது பொருளாதார அர்த்தத்தில் சாத்தியமேயில்லை.

முன்னரும் அதாவது "சத்ஜெய" இடப் பெயர்வுக்கு முன்னரும் கூட கிளிநொச்சி இப்படியொரு தலைநகரமாக எழுச்சிபெறத் தேவையான சமூகப் பொருளாதாரக் கலாச்சாரப் பின் பலங்களைக் கொண்டிருக்கவில்லை.

முதலாவதாக அதற்கு வேண்டிய உபரித் திரட்சி இருக்கவில்லை.

இரண்டாவதாக கிளிநொச்சி இதற்கு முன்னெப்பொழுதுமே ஒரு கவர்ச்சிமிக்க கல்வி மையமாகவோ அல்லது ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கலை, கலாச்சார பண்பாட்டு மையமாகவோ இருந்ததில்லை. அதற்கு வேண்டிய ஒரு கல்விப் பாரம்பரியமோ அல்லது ஆங்கில அறிவுடைய நடுத்தரவர்க்கமோ அதிகம் காணப்படாததும் ஒரு முக்கிய காரணம்.

இதனால் தாய்மொழி தவிர பிறமொழிகளிலும் ஆளுமையுடைய, அதனாலேயே உலகளாவிய தொடர்புகளைப் பேணவல்ல அதாவது கொஸ்மோபொலிற்றன் மயப்பட்ட ஒரு உயர்குழாம் கிளிநொச்சியில் முன்பு காணப்படவில்லை.

இத்தகைய ஒரு பகைப்புலத்தில் சத்ஜெயவுக்கு முன்னரும் கிளிநொச்சி ஒரு தலைநகரமாக எழுச்சி பெறுவதற்கு வேண்டிய அடிப்படைகள் அதிகம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

இப்பொழுதும் அத்தகைய அடிப்படைகள் முழுவளர்ச்சி பெற்றுவிடவில்லை.

ஆயின், கிளிநொச்சியின் எழுச்சி எனப்படுவது செயற்கையானதும் தற்செயலானதுமா?

ஒரு விதத்தில் அப்படித் தான் சொல்ல வேண்டும். ஆனால் இன்னொரு விதத்தில் அது தவிர்க்க முடியாதது, அசாதாரணமானது என்றும் சொல்ல முடியும்.

எத்தகைய அர்த்தத்தில் தவிர்க்க முடியாதது?

இதைவிளங்கிக் கொள்வதென்றால் நாம் சற்றுப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

ஈழப்போர் இதுவரை இரண்டு முக்கிய சந்திகளைக் கடந்து வந்திருக்கிறது. முதலாவது யூலை 83, இரண்டாவது 'றிவிரச' படை நடவடிக்கை.

யூலை 83 இனச் சுத்திகரிப்பு, தமிழர்களை தாய் நிலம் பற்றிய திடீர் விழிப்புக்கு இட்டுச் சென்றது. அதுவரை கொழும்பின் சுகபோகங்களில் மெய்மறந்து கிடந்த தமிழர்களை, யூலை 83 திடுக்குற்று விழித்தெழ வைத்தது.

அதேசமயம் ஈழப்போரின் மீது உலகின் கவனம் அதிகம் ஈர்க்கப்பட்ட முதற்சந்தர்ப்பமாகவும் அது அமைந்தது.

அதோடு முக்கியமாக ஈழப்போரை பாக்குநீரிணையூடாக இந்தியாவுக்குப் பெருமெடுப்பில் திறந்து விட்ட சம்பவமாகவும் அது அமைந்தது.

> **ஓயாத அலைகள் ஒன்று ஈழப்போரை வங்கக் கடலின் ஊடாக பிராந்தியத்துக்கு வெளியே சர்வதேச சமூகத்துக்குத் திறந்து விட்டது. இதனால் முற்றுகையிடப் பட்டிருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் சர்வதேசக் கடல் வழியூடாக பிராந்தியத்துக்கு வெளியே தொடர் புகளைச் சுயாதீனமாகப் பேணுவது சாத்தியமாகியது. இதிலிருந்து தொடங்கியதே வன்னியின் எழுச்சி. அதாவது கிளிநொச்சியின் எழுச்சி.**

அதிலிருந்து தொடங்கி இந்தியாவின் பின்பலத்துடன் ஈழப்போர் வேகமெடுக்கத் தொடங்கியது. அகதிகள் இந்தியாவை நோக்கி ஓடினர்.

கெடுபிடிப் போரின் பிராந்திய வியூகத்தின் ஒருபகுதியாக மாறிய ஈழப்போர் திடீரென்று வீங்கியது.

ஈழப்போரில் ஏற்பட்ட இத்திடீர் வீக்கம் மற்றும் திடீர்த் திருப்பங்களின் அடிப்படையில் யூலை 83ஐ ஈழப்போரில் வந்த முதல் முக்கிய சந்தியாகக் கூறலாம்.

இதற்கடுத்தபடியாக வந்த இரண்டாவது முக்கிய சந்தியே 'றிவிரச' படைநடவடிக்கை.

95 இன் பிற்கூறிலிருந்து 96 இன் முற்கூறுவரை நடந்த இப்படை நடவடிக்கை ஈழப் போரின் மையத்தை யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு நகர்த்தியது.

இதற்கு முன்னரும் இப்படியொரு மையப்பெயர்ச்சி ஏற்பட்டது.

அது ஐ.பி.கே.எவ். காலத்தில்.

அது ஈழப்போரின் முதலாவது வனவாசகாலம்.

வன்னிக்காட்டின் ஆழத்துள் அடைகாக்கப்பட்ட ஈழப்போர் 90இல் புதுவீச்சுடன் நகர்மீண்டது. அதிகரித்த படையணிகளுடன் அதிகரித்த அங்கீகாரத்துடன் வரிப்புலிச் சீருடைகள் சகிதம் புலிகள் நகர் மீண்டனர்.

பிரேமதாசவுடனான சமாதானத்தின் பின்னணியில் இது நிகழ்ந்தது. ஆனால் இங்கு நகர் மீளல் எனப்படுவது தலைநகருக்குத்திரும்புதல், அதாவது யாழ்ப்பாணத்துக்குத் திரும்புதலாகவே காணப்பட்டது.










மாறாக 'றிவிரச' கொண்டுவந்த மையநகர்ச்சி வன்னிக்குள்ளேயே ஒரு புதிய தலைநகரைக் கட்டியெழுப்பக் காரணமாய் அமைந்து விட்டது.

இது ஈழப்போரின் இரண்டாவது வனவாச காலம்.

வனவாசம் என்ற வார்த்தை இங்கு அதன் மிகக் கண்டிப்பான அர்த்தத்தில் பயன்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியை அடுத்து காடும் காடு சார்ந்த நகரங்களையும் அதிகமுடைய வன்னிப் பெருநிலத்துக்கு ஈழப்போரின் மையம் இடம் பெயர்ந்தது என்ற அர்த்தத்திலேயே இங்கு வனவாசம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது.

முன்னரைப் போலன்றி இம் முறை கணிசமான தொகைச் சனங்களும் வன்னிக்கு வந்தார்கள். இங்கே அவர்கள் சிதையச் சிதைய புதிய மண்பட்டினங்களைக் கட்டியெழுப் பினார்கள்.

பிரதேச பேதங்களைக் கடந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை என்று எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்த சனங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் தமது அனுபவங்களைப் பகிர்ந்து புதிது புதிதாக மண்பட்டினங்களைக் கட்டினார்கள்.

தமிழர்களின் நவீன வரலாற்றில் சகல பிரதேசவாசிகளும் இப்படி பிரதேச பேதங்களைக் கடந்து ஒரு பெருநிலத்தில் ஒன்று திரண்டதும் குருதி சிந்தியதும் துயரங்களைப் பரஸ்பரம் பகிர்ந்ததும் இதுதான் முதற்தடவை.

ஈழப்போரின் இந்த இரண்டாவது வனவாச காலத்தின் முதற்கட்ட உச்சமே கிளிநொச்சியின் எழுச்சி.

'றிவிரச' கொண்டு வந்த இடப்பெயர்வும் ஈழப்போரின் மைய நகர்ச்சியும் இதற்கான அடிப்படைகளை உருவாக்கின.

இதெல்லாம் தொடங்கியது ஓயாத அலைகள் ஒன்றிலிருந்தே.

அச் சமருக்கான பின் புலத்தை மூன்று முக்கிய காரணங்களுக் கூடாக விளங்கிக் கொள்ள முடியும்.

முதலாவது - யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி ஈழப்போரின் இதயத்தில் நீங்காத ஒரு வலியாக நிலைத்துவிட, அதனால் உண்டாகிய வன்மம் புலிகளை முல்லைத் தீவின் மீது பாய வைத்தது.

இரண்டாவது - 'றிவிரச' இடப்பெயர்வினால் அதாவது 96 'எக் சோடசி'னால் புலிகளில் இணையும் புதிய போராளிகளின் தொகை திடீரென்று அதிகரித் தது. இதனால் புலிகளின் பலம் ஒப்பீட்டளவில் கூடியது.

மூன்றாவது - ஒரு விமர்சகர் கூறுவது போல, யாழ்ப்பாணம் வீழ்ச்சியுற முன்பு அங்கே புலிகளின் படையணிகள் அதிகமதிகம் அங்கிருந்த பெரிய படைத்தளங்களைச் சுற்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வன்னிக்கு நகர்ந்த இப்படையணிகளையெல்லாம் ஒன்று திரட்டி தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து புலிகள் முல்லைத்தீவைத் தாக்கினர்.

முல்லைத்தீவை மீட்டது என்பது ஒரு படைமுகாமைத் தூளாக்கியது மட்டு மல்ல, ஒரு நகரத்தை மீட்டது மட்டுமல்ல, இவை எல்லாவற்றையும் விட விசேஷமாக அது ஒரு பெருங் கடலை - வங்கக் கடலை - மீட்டது.

வங்கக் கடலை மீட்டமை எனப்படுவது ஈழப்போரின் இராணுவ அதிசயங்களில் மிகவும் கேந்திர முக்கியத்துவமுடையது.

83 யூலைக்கலவரத்தைத் தூண்டிய திருநெல்வேலித் தாக்குதலை விடவும் முக்கியத்துவமுடைய திருப்புமுனைத்தாக்குதல் அது.

அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் வெளியுலகத்துக்குமான ஒப்பீட்டளவில் பாதுகாப்பான ஒரு கடல் வழியைத்திறந்து விட்டது.

இக்கடல் வழியூடாக ஆரம்பித்த சர்வதேசத் தொடர்புகளின் உச்சமாகவே இப்பொழுது கிளிநொச்சிக்கு வந்து போகும் ராஜதந்திரிகளின் விஜயங்களையும் பார்க்க வேண்டும்.

யூலை 83 ஈழப்போரை பாக்கு நீரிணையூடாக இந்தியாவுக்குத் திறந்து விட்டது.

ஓயாத அலைகள் ஒன்று ஈழப்போரை வங்கக் கடலின் ஊடாக பிராந்தியத்துக்கு வெளியே சர்வதேச சமூகத்துக்குத் திறந்து விட்டது.

இதனால் முற்றுகையிடப்பட்டிருந்த புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசம் சர்வதேசக் கடல்வழியூடாக பிராந்தியத்துக்கு வெளியே தொடர்புகளைச் சுயாதீனமாகப் பேணுவது சாத்தியமாகியது.

நிலாந்தன்

இதிலிருந்து தொடங்கியதே வன்னியின் எழுச்சி. அதாவது கிளிநொச்சியின் எழுச்சி.

வங்கக்கடல் வழியூடாக வெளியுலகத்துடன் உண்டாகிய தொடர்புகள் மூலம் ஈழப்போர் புதிய பலத்தையும் பிராந்தியத்துக்கு வெளியில் பொறியாத ஒரு பின்தளத்தையும் பெறமுடிந்தது.

புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் 90களில் ஈழப்போருக்கான பொறியாத ஒரு நிதிப் பின்தளமாக உருவாகிக் கொண்டிருந்த ஒரு பின்னணியில் வங்கக் கடல்வழி திறக்கப்பட்டு விட அதனூடாக வெளியுதவி மெல்லச் சுரந்து வரலாயிற்று.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்கு முன்பு, யாழ்ப்பாண மையநோக்கு நிலையிலிருந்து திறக்கப்பட்ட கடல் வழிகளை விடவும் வன்னிமைய நோக்கு நிலையிலிருந்து

(35 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் கல்வி நிலை; இன்றைய தேவைகளும் மாற்றத்திற்கான ஆயத்தங்களும்

க.சின்னத்தம்பி

மனிதனை மனிதாயதப் பண்புகளுடன் வாழ வழி வகுப்பது கல்வியின் முக்கிய குறிக்கோள்களுள் முதன்மையானது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்வர். ஆயினும் நமது பிரதேசத்தின் தற்காலக் கல்விச் செயற்பாடுகளின் பொதுப்போக்கினை நோக்குவோமாயின் அது எமக்குக் கசப்பான உணர்வினைத் தரக்கூடும். பொருளீட்டும் செயற்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டும் கல்வியைப் கருதும் மனப்பாங்கு நம்மிற் பலரிடம் தொற்றிக் கொண்டு விட்டது. கற்ற கல்வியைப் வாழ்க்கைப் பயனுறு வகையில் பயன்படுத்துதலும், கற்ற கல்விக்குப் பொருத்தமான ஒரு வருவாய்தரும் தொழிலைத் தேடிக் கொள்ளுதலும் எமக்கு முக்கியமானவைதான். எனினும் இது மனிதாயதப் பண்புகளைப் பின்தள்ளும் நிலைக்கு இட்டுச் செல்வதுதான் தவிர்க்கப்பட வேண்டியுள்ளது.

தம் மத்தியில் கல்விக்கான சிறப்பிடம் ஒன்றினைக் கொண்டிருந்தமை, ஆசிரிய - மாணவ உறவினைப் பேணியமை, பிள்ளைகளின்பால் பெற்றோரின் அக்கறை, பரம்பரை பரம்பரையாக அறிவுத்தேட்டம் கையளிக்கப்பட்ட முறைமை என்பன தமிழர் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்புச் சுட்டிகளாகும். காலத்திற்கு ஏற்புடையவாறு இச் சிறப்பியல்புகளை மெருகூட்டியும், புதுப்பித்தும், மக்கட் தேவையுடன் ஒன்றிணைத்தும் செல்லக்கூடிய கல்வி முறைமையை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். கல்வி கற்றலின் அடிப்படை, மாற்றங் களை உள்வாங்கி ஷஉலகத்தோடு ஒட்ட ஒழுகல்' எனக் கருதலாம். இந்த வகையில் மாற்றத்துக்கான ஒரு கருவியாகக் கல்வி செயற்படுகின்றது.

சமாதானம், சமத்துவம், முரண்பாடுகளின் தீர்வு என்பன கல்வியினூடாக உருவாக்கப்பட வேண்டிய இன்றைய நிலையில், கல்வி முறையிலும் மாற்றங்கள் வேண்டப்படுகின்றன. உலகியல் மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் நம் சிறார்க்குக் கல்வி வழங்கப்பட வேண்டிய தேவையை நம்மால் சரிவர நிறைவு செய்ய முடியவில்லை.

அண்மைக் காலங்களில் தமிழர்கள், குறிப்பாக வடக்கு - கிழக்கில் வதிவோர், எதிர்கொண்ட அனர்த்தங்களும் அவலங்களுமே இந்த இயலாமைக்கான முதன்மைக் காரணியாகும். இவை மழை, புயல், பூகம்பம், வரட்சி போன்ற இயற்கை நிகழ்வுகளால் ஏற்பட்டவை அல்ல. பெரும் எண்ணிக்கையானோரின் உணவு, உடை, தரிப்பிடம் ஆகிய அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளையும் பாதுகாப்பு, அன்பு, சுயதிறன் அடைவு போன்ற உளவியல் தேவைகளையும் ஆட்டங்காண வைத்த போர்ச் சூழலால் ஏற்பட்டவையாகும். போர்ச் சூழலால் ஏற்பட்ட இந்த அனர்த்தங்கள் காலதாமத மின்றி வெற்றி கொள்ளப்பட வேண்டியவையாகும்.

புரட்சிகரமான, புதிய வழிகளில் கல்வி வழங்கல் திட்டமிடப்பட வேண்டும். இதன் முதற்படியாக எமது தேவைகளை இனங்காண வேண்டும். இவற்றுக்கான தீர்வு முயற்சிகள் உடனடி, நீண்டகால நோக்கில் முன்னெடுக்கப்படல் அவசியமாகும். இழக்கப்பட்டவற்றை ஈடுசெய்வதாகவும், நடப்பவற்றை வலுவூட்டுவதாகவும், நடக்க உள்ளவற்றை மேன்மையுடைத்தாக ஆக்கவும் இத்திட்டங்கள் வழிகோல வேண்டும். பொருளாதார மேம்பாடு மட்டும் முதன்மை நோக்கமாக இருக்கும் காரணமாக சுயநல நோக்கு மேலெழுகின்றது. இது, வேண்டத்தகாத போட்டிகள் உருவாக வழிசமைக்



கின்றது. எவ்வழியிலாயினும் 'நான்' மட்டும் மேலே வந்துவிட்டால் போதும் என்கின்ற மனப்பாங்கு வளர்ந்துவிட ஏதுவாகின்றது. இப் போட்டிகள் மாணவரிடையே மட்டும் தோற்றம் பெறுவதில்லை. அவர்களின் பெற்றோரிடையே கூட ஏற்பட்டுவிடுகின்றது.

சுயநலம் மனிதனிடத்து மேலோங்கும்போது நல்லியல்புகள் பல தானாகவே அவனிடமிருந்து விலகிவிடும். கல்விக்கான புதிய திட்டங்களை வரையும்போது, தனி மனித மேம்பாட்டோடு சிறந்த சமூக - கலாச்சாரப் பண்புகளும் விருத்தி பெறக்கூடிய வழிமுறைகள் சிந்திக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு இளமைப்பராயத்தில் வழங்கப்படக்கூடிய கல்வி முறைமைகளைச் சற்று நோக்குவோம்.

5 வயது வரையிலான முன்பள்ளிக்கல்வி, தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலான முறைமைப் பள்ளிக்கல்வி, உயர் கல்வியும் ஏனைய கல்வி ஒழுங்குகளும் என இவற்றினை மூன்று படிநிலைகளாக நோக்குவோம்.

## முன்பள்ளிக் கல்வி :

முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் எல்லோரினாலும் உணரப்பட்டு நீண்ட காலமாகிவிட்டபோதும், ஆட்சிபீடமேறும் அரசுகளெல்லாம் முன்பள்ளி பற்றி அக்கறை கொள்வதாகக் காட்டி வருகின்றபோதும், இவ்விடயம் தொடர்பான ஆணித்தரமான செயற்பாடு எதனையும் அவை இதுவரை மேற்கொள்ளவில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டும் முன்பள்ளிச் செயற்பாடுகளில் மாகாணக் கல்வி அமைச்சு ஆக்கபூர்வமான சில செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பிட்ட சில பிரதேசங்களில் இவை நல்ல முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றபோதும், பெரும்பாலானவை தொடர்ந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகளினால் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

முறைமைக் கல்வியின் தொடக்க நிலையாகிய தரம் 1 இற்குப் பிள்ளையைத் தயார்ப்படுத்தும் ஒரு பொது நோக்கிலும், பிள்ளைகளின் ஆளுமை விருத்தி மேம்பாட்டு நோக்கிலும் இன்று பல அமைப்புக்கள் முன்பள்ளிக் கல்வியில் அக்கறை காட்டி வருகின்றமை ஒரு வரவேற்றகத்தக்க விடயமாகும். இந்த வகையில் கிழக்குப் பல்கலைக்கழகமானது முன்பிள்ளைப் பருவப் பராமரிப்புக்கும் விருத்திக்குமான நிலையம் ஒன்றினை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும்.

## முறைமைப் பாடசாலைக்கல்வி :

தரம் 1 இல் தொடங்கி தரம் 13 இல் நிறைவுபெறும் பாடசாலைக் கல்வியானது ஒரு பிள்ளையின் வாழ்வின் எதிர்கால நிலைப்பாட்டை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். பல்வேறு பரிமாணங்களில் செயற்படுத்தப்படும் இக்கல்வி ஒழுங்கமைப்பின் பல அம்சங்கள் இக்கட்டுரையின் பின்னால் வரவுள்ள பகுதிகளில் சிறப்பாக நோக்கப்படுகின்றது.

## உயர்கல்வியும் ஏனைய கல்வி ஒழுங்குகளும் :

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வோருக்கு அதற்கு மேலும் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக பல்கலைக் கழகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், உயர்தொழில்நுட்ப நிறுவகங்கள் என்பனவும் குறித்த சில உயர்மட்டக் கற்கை நெறிகளை வழங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் உள்ளன. ஆசிரியர் கல்வியை மட்டும் வழங்கவென கல்வியியற் கல்லூரிகளும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இயங்குகின்றன. இதேவேளை, ஆசிரியர் பயிற்சி உட்பட வேறு துறைசார்ந்த பல கற்கைநெறிகளை வழங்கும் வகையில் திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் கல்வித் திட்டங்களும் இடம்பெறுகின்றன.

தமது வழமையான பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்குப் புறம்பாக பல்கலைக்கழகங்கள், சில பயன்மிக்க விரிவாக்கல் கற்கைநெறிகளையும் வெளிவாரித் தேர்வுகளையும் நடாத்தி வருகின்றன. எனினும் இப் பல்கலைக்கழகங்களில் வாண்மைக் கற்கைநெறிகள் தவிர்ந்த ஏனையவை சார்பாக பாரம்பரிய நூல்சார் கல்வி வழங்கும் முறைமை தொடர்கிறது. படிப்பு முடிந்து வெளியேறும் பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்கு ஏற்றவகையில் பல்கலைக்கழகக் கற்கை நெறிகள் மாற்றப்பட வேண்டியதன் அவசியம் இன்னும் சரிவர ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதனையே இது புலப்படுத்து கின்றது. தொலைக் கல்வி முறையில் வழங்கப்படும் கற்கை நெறிகள், குறிப்பாக ஆசிரியப்பணி தொடர்பானவை, சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவருக்கு உதவலாமெ னினும் முழுமையான தொழிற் தகைமையைப் பெற்றுக்கொள் வதற்கு உகந்தவை எனக் கருதமுடியாது.

## வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைக் கல்வி நிலை :

இனி, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயங்கும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளும் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளும் பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய இப் பிரதேசத்தின் கல்விச் செயற்பாடானது, எல்லாமாக 74 கல்விக் கோட்டங்களைக் கொண்டுள்ள 24 வலயக் கல்விப்பணிமனைக;டாக மேற்கொள்ளப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2001 ஆம் ஆண்டு புள்ளிவிபர வருடாந்த அறிக்கையின் பிரகாரம் 553,604 தமிழ்மொழி மூல மாணவரும் 89,965 சிங்கள மொழி மூல மாணவரும் இப் பிரதேசத்திலுள்ள 1981 பாடசாலைகளில் கல்வி பயில்கின் றனர். இப் பிரதேசத்தின் கல்வியானது பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இவற்றுள் பெரும்பாலானவை இப் பிரதேசத்திற்கே தனித்துவமானவை. நாட்டின் ஏனைய பிரதேசங்களிற் காணப்படும் பிரச்சினைகளினின்றும் பல்வேறு வழிகளில் வேறுபட்டுள்ளன. இதற்கும் மேலாக, மாவட்ட மட்டத்திலும்சரி மாவட்டத்தின் உபபிரிவுகள் மட்டத்திலும் சரி வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும் பொதுவான பல பிரச்சினைகளை இனங் காண முடியும். பின்வருவனவற்றினை எமது சிறப்புக் கவனத்தை ஈர்ப்பனவாகக் கருதலாம்.

- கல்விக்கான சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டமை.
- கலாச்சார சமூக நியமங்களுக்கு ஒவ்வாத அம்சங்கள்.
- குருவுக்கு' மதிப்பளிக்கும் மரபு காணப்படாமை.
- பிரதேச தேவைகள் நலன்களுக்குப் பொருந்தாத கல்வி முறைமை.
- கல்வி வழிகாட்டல் சேவை இல்லாமை.
- சுயநல மனப்பாங்கை வளர்க்கக் கூடிய கல்விச் செயற்பாடுகள்.
- எழுந்தமான (முறையாகத் திட்டமிடாத) மாற்றங்கள்.
- எதிர்கால நோக்கற்ற கல்விமுறை.
- பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டமையும், இடைவிலகலும்.
- பிரத்தியேகக் கல்வியின் விளைவுகள்.

இவ்வாறு இன்னும் பல பிரச்சினைகளையும் நலிவான அம்சங்களையும் கூறமுடியும். இப் பிரச்சினைகளைத் தனித்தனியாக நோக்க முடியுமெனினும், இவை ஒன்றுடனொன்று இணைபுற்றும் இடைவினையுற்றும் காணப்படுகின்றன. இவற்றுட் சில பின்வரும் பகுதிகளில் சற்று விரிவாக நோக்கப்படுகின்றன.

## கல்விக்கான சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டமை :

இந்நாட்டின் ஏனைய பிரதேச இளைஞர்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களின் கல்விச் சந்தர்ப்பங்கள் பல அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தமை நாடறிந்த உண்மை. குறிப்பாக உயர்கல்வி நிலையங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் வேளைகளில் தமிழ் மாணவர்கள் மிகச் சிறிய எண்ணிக்கையிலேயே தெரிவாகின்றனர். இவ்வாறான நடைமுறை இன்னும் தொடர்கின்றன. அத்துடன் உயர்கல்வி வாய்ப்புக்களை இப் பிரதேசங்களில் விரிவுபடுத்தும் முயற்சிகளும் போதுமானளவாக இல்லை. எடுத்துக் காட்டாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீடம் அமைப்பதற்கான அனுமதி பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டது இப்பீடத்துக்கென ஒரு பொறியியல் பேராசிரியர் நியமிக்கப்பட்டும் பீடம் ஒன்று அமைக்கப்படாமலே அவர் ஓய்வு பெறுமளவுக்குக் காரியங்கள் காலதாமதமாகின. அரசியல் மட்டத்திலும் அறிஞர் மட்டத்திலும் இவ்விடயம் குறித்து வலுவான அக்கறை காட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இதுவரை இம்முயற்சி கைகூடவில்லை. யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவகம், யாழ்ப்பாண, மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிகள், பலாலி ஆசிரியர் கல்லூரி என்பன தொடர்ந்தும் இரவல் இடங்களில் வளப்பற்றாக்குறை மத்தியில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையங்களில் ஆளணிப் பற்றாக்குறையும் பல வருடங்களாகத் தொடர்ந்து நீடிக்கின்றன.

## வளப்பற்றாக்குறை :

வளப்பற்றாக்குறையானது வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல கல்வி நிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நிலவுகின்றபோதும், இப் பிரதேசத்துக்குட்பட்ட தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் தொடர்பான நிலைப்பாடுகள் இங்கு நோக்கப்படுகின்றன. கல்வி கற்பதற்கான இடவசதி

(37 ஆம் பக்கம் பார்க்க)

# கொற்றத் திருச்சபையின் குரல்

எம் தாயக மண்ணின் வாயே!
கூவி நிலத்தூக்கம் கலைக்கும்
கொண்டைப் பூச்சூடிய கோழியே!
வாசம் சுமந்து எம்வாசல் வரும்
சாமந்திப் பூவே!
கொற்றத் திருச்சபையின் குரலே!
மதியுரைக்கும் ஆராய்ச்சி மணியே!
தேசம் கதிகலங்கி நின்றபோதில்
கை கொடுத்து வழிகடந்த கைத்தடியே!
வழமைபோல்
உனக்கிந்த வருட வாழ்த்து.
மெருகேறியுள்ளாய் பொலிவுடன்
மேனியில் பூசிய சதையுடன்
பருவ வயதை எட்டியுளாய்.
இளமை மிடுக்கு உன்னிலிப்போ
பிள்ளையைப் போகவிட்டு
அழகு பார்க்கும் தந்தை போல
எழிலில் கிறங்கியுள்ளேன் நான்.
வாழிய ஈழநாதம்!
உன் வாசலில் கேட்பது சங்கநாதம்
நீ புழுதி நிலத்திருந்து புறப்பட்ட பயணம்
பனிவிழும் தேசம்வரையும் நீண்டு
எங்கும் கால் பரத்தி நிற்கின்றாய்.
காலம் கதவு திறந்து போகிறது.
வாசல் எங்கும் புகுந்து நகர்கின்றாய்.
கால்களில் நாதமெழும் சதங்கை
கட்டியபடி நீ
நாதஒலி நாற்திசையும் எதிரொலிக்க
உன் " தமிழரின் தாகம்" சுமந்த கனவு
மெய்ப்படும் காலமிது.
ஈழநாதமே நட
தொடர்ந்து நட
எம் தலைவனைப் போல
வசமாயிற்று வாழ்வென்று நாளை
உன் வாயிலிருந்து வரும் வரை
ஈழநாதமே தொடர்ந்து நட
வாழிய பாடியபடி வருவேன்
இந்த வாசகவிஞன்.

-புதுவை இரத்தினதுரை

அழகனே!
நீ நட்ட பூச்செடி
பந்தல் கால் பற்றிப் படர்ந்து
நிழல் விழுத்தி நிற்கிறது.
பொன் நிறப்பூக்கள்
பூத்துப் பொலிந்துள்ளது.
கீழிருந்து பார்த்தனுபவித்து
வாசம் நுகர நீயில்லையென்பதே
நெஞ்சில் முள்ளேறி வலிக்கிறது.
இனி யாரும் வரலாம்.
வாசற்கதவு வரவேற்கும்.
எனினும் வாசல் வைத்தவன் நீயல்லவா?
பூவெடுத்து யாரும் மாலை கட்டலாம்.
மரம் வைத்தவன் நீயல்லவா?
உன் வாழ்வின் வசந்தகாலம்
கழிந்தது எம்முடன்.
உன் ஆளுமையின் விரிந்த காலம்
ஈழநாதத்துடன் தான் இருந்தது.
எப்படி மறக்க முடியும் ஐயனே
அந்த நாட்களை?
கடுகளவு பருமனிலிருந்து
விரித்த கையளவு வரையும்
உன் உழைப்பில் விளைந்ததல்லவா இது.
படமாய் இருக்கிறாய் சுவரில்
எம் நெஞ்சிலும் தான்.
நன்றி மறக்கோம் நாம்.
உன் நினைவுடன் தான்
எம் நாளாந்தம்.

# உன் நினைவுடன் எம் நாளாந்தம்



**மேஜர் அழகன்**
**(செல்வராசா இளங்கோ)**
**(முன்னைநாள் ஈழநாதப் பொறுப்பாளர்)**

# தமிழர் தாயகம் எதிர்கொள்ளும் புனரமைப்பும் புனர்வாழ்வும் தொடர்பான சவால்கள்

வாழ்வின் அடிப்படை வசதிகளைக் கொண்டவர்களாகத் தம்மை வளர்த்துக்கொண்டு அவற்றைத் தக்கவைப் பதற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் சீரழிக்கப்பட்ட தமிழர் தாயகமான வட- கிழக் கின் பிரதேசம் தற்போது புனர்வாழ்வு புனர மைப்பு பணிகளினை எதிர்கொண்டு நிற் கின்றது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படா விட்டாலும் ஓர் தற்காலிக நிறுத்தத்திற்கும், சாத்தியமான அரசியல் சுயாதிபத்திய தேடலுக் குமான காலமாகவே தற்போதைய காலத்தினைக் கொள்ள வேண்டியுள்ளது.

பேச்சுவார்த்தையின் கால நீட்டல்களின் போது மக்களின் வாழ்க்கையினை இயல்பு நிலைக்கு கொண்டுவந்து துன்பச் சுமைகளின் அழுத்தத்தினைக் குறைப்பதற்கான உடனடி முன் முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது எடுக்கப்படும் உடனடி மனிதாபி மான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளினை நிறைவு செய்யும் செயற்பாடானது ஓர் தற் குறியாக இல்லாமல் எதிர்காலத்தின் தொடக் கப் புள்ளியாக அமைய வேண்டியது அவசிய மாகும்.

அத்தகைய அரசியல் தன்னாதிக்கம் மிக்க சமூகத்தின் எதிர்காலத்திற்கான ஆரம்ப நிலைக்களமாக கொள்ள வேண்டிய மீளக்குடி யமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கை களின் போது பல விதமான நடைமுறைச் சவால் களினை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு சமூகம் உள்ளாகியுள்ளது.

அச் சவால்களினை எவ்வாறு எதிர் கொள்வது என்பதுதான், தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய உறுதியான நம்பிக்கை யினை உலக சமூகத்தின் மத்தியிலும், போராட்டத்திற்காக தங்களின் நலன்களினை இழந்துபோன மக்கள் மத்தியிலும் கட்டியெ ழுப்பும் முக்கிய காரணியாக அமையும்.

## சமூகத்தின் தேவையினை உணர்ந் துகொள்ளல்

சுமார் கால்நூற்றாண்டுக்குமுன் விடு தலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலைக்கு மீளவும் செல்லல் அல்லது இடிந்து போனவற் றினை மீளக்கட்டி யெழுப்புதல் தான் குறிக் கோளாக இருக்க முடியாது.

இவ் இருபத்தைந்து வருடகாலத்தில் தமிழர் தாயகமும் வாழ்வியலும் கீழ் நோக்கி வீழ்த்தப்பட்ட அதே வேளையில், இத்தீவின் ஏனைய பகுதிகள் தம்மை சாதகமான அபிவி ருத்திப் பாதையில் வளர்த்துக் கொண்டன,

**இரணியன்**

அல்லாது விரைவான அபிவிருத்திக்கான தளத்தினை இழக்காமல் தக்கவைத்துக் கொண்டன என்பதே உண்மையாகும்.

அத்துடன் அவை எதிர்வரும் காலங்களில் தம்மை எத்தகைய இலக்கு நோக்கி கொண்டு செல்லல் வேண்டும் என்பதில் தெளிவாக செயற்படுகின்றன என்பது உறுதியாகவும் உள்ளது.

இத்தகைய பின்னணியில் தமிழர் தாயகத்தின் வளர்ச்சிக்கோடு எதிர் மறையான திசையினுள் அமிழ்ந்து கிடப்பதோடு, வடக்கு கிழக்கிற்கு தென்மேற்கு பகுதிக்குமான அபிவிருத்திக் குறிகாட்டியின் இடைவெளி மிகப்பெரிதாக உள்ளது. இத்தகைய இடை வெளியை நிரப்புதல் என்பது மிகவும் சிறப் பாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அபிவிருத்திக் சார்ந்த புனரமைப்பு தந்திரோபாயத்தின் மூலமே முன்னெடுக்க முடியும்.

நிலையாக இருக்கும் இலக்கிற்கும் அதனை நோக்கி நகரும் இலக்கிற்கும் இடையிலான வெளியினைக் குறைப்பதற்காக எடுக்கப்படும் முயற்சியினை விட, முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இலக்கினை அடை வதற்காக முன்னிருந்து முன்நோக்கி நகர்தல் என்பது அதிக முயற்சியும், உறுதியும் கொண்ட செயற்பாடு களிலேயே முற்றான தாகத்தங்கியுள்ளது.

எதிர்வரும் பத்தாண்டுகளில் தென்னாசியா வின் முன்னணி நாடாக மாறும் இலக்குடன் இலங்கைத்தீவின் தென்மேற்குப் பகுதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது யுத்த வடுக்களினால் நிரம்பியுள்ள வடக்கு-கிழக்கு சமூக பொருளாதாரம் வரையறுக்கப்பட்ட அக்கால எல்லைக்குள் தன்னை தென்மேற்கி ற்கு சமாதானமாக கொண்டு வரத்தவறின்,



அது மீண்டும் வளங்களுக்காகவும் வாய்ப்புக காகவும் போராடுதல் என்கின்ற நச்சு வட்டத் தினை உருவாக்குவதாகவே அமையும்.

இதனைத் தவிர்க்க வேண்டுமானால் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் தன்னை எவ்வாறு ஒருமுகமாக விடுதலைப்போரில் ஈடு படுத்தியதோ அதைவிட பன்மடங்கு உத்வேக த்துடனும், ஒருங்கிணைப்புடனும் அபிவிருத்தி நோக்கிய வெறியுடனும் ஈடுபட வேண்டி யுள்ளது.

இது உலகத்திற்கு எவ்விதத்திலும் புதுமை யாக இருக்க முடியாது. 2ம் உலக மகாயுத்தத்தின் தோல்வியின் பின்னர் எவ்வாறு யப்பானிய சமூகம் தன்னை ஒரு வேலையில் வெறிகொள்ளும் (WORKAHOLIC) சமூக மாக மாற்றியதோ அதுபோல் வடக்கு கிழக் கில் வாழும் ஒவ்வொருவரும் தம்மை மாற்ற வேண்டிய காலத்தின் தேவைக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளார்கள்.

சம்பிரதாயபூர்வமான எட்டு மணித்தியால உழைப்பின் எல்லைக்குமப்பால் குறைந்தது 16 மணித்தியாலங்கள் குறிக்கோள் நோக்கி உழைக்கக் கூடியதாக எம்மை மாற்றக் கூடிய ஒரு மனநிலைக்கு எம்மை மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் கூட்டுழைப்பின் மூலம் பெறும் மிகை விளைவு (Synergy) உருவாக்கப்படவேண்டும்.

திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அவை அடுத்துவரும் பல தசாப்தங்களின் மாற்றங்க ளுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இருக்கும்படி உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

அத்தகைய திட்டங்களினை உருவாக்கும் போது உயர் புலமைகள், ஆற்றலினை பயன் படுத்த வேண்டி ஏற்படுவதோடு அப்புலமைகள், ஆற்றல் என்பன வெறுமனே தத்துவங்களின் பிரதியீடாக இல்லாமல் பயன்பாட்டுக்கான பிரயோகங்களாக இருக்க வேண்டும.

இத்தகைய ஓர் நிலை தமிழர் தாயகத் தின் நலனிலும் அக்கறையிலும் ஈடுபடும் ஆர்வம் கொண்ட எல்லோரினையும் உள் வாங்குவதாகவும், அதே வேளை எல்லோரும் மற்றவர் களின் அழைப்புக்காகக் காத்திராமல் தாங்களாகவே தங்களினை ஈடுபடுத்த முன் வருதலிலுமே தங்கியுள்ளது.

## மக்களின் புனர்வாழ்வும் சமூகக் கட்டமைப்பும்

யுத்தம் பௌதிக சொத்துக்களுக்கு ஏற்படுத்திய சேதம் அளவிடக்கூடியதாகவும், திட்டமிட்டு மீளப்பெறக்கூடிய தாகவும் உள் ளது. 'ஆனால்' மக்களின் உடல் உளவியல் நிலைகளில் ஏற்படுத்திய தாக்கமும், சமூகக் கட்டமைப்பில் ஏற் படுத்தியதாக்கமும் அளவிடும் எல்லைகளுககு அப்பாற்பட்ட தாகவும், இலகு வில் கணித வாய்ப் பாடுகள் போல் கணிப்பிட்டுத் தீர்வு செய்ய முடியாத வைகளாகவும் உள் ளன.

மரபுகளும், பண் புகளும் நிறைந்த சமூகத்தின் இறுக் கமான பாதுகாப்பு வலையமைப்பினுள் (SOCIAL NET) வாழ்ந்து கொண் டிருந்த சமூகம் யுத்த இடப் பெயர்வினால் சிதறடிக்கப்பட்ட போது சமூக பாதுகாப்பு வலையமைப்பு முற்றாக அறுக்கப்பட்டது. தனது அயலான் யார் என்பது மட்டுமல்ல, தனது அருகில் உறங்குபவனை அறியாத அளவுக்கு இடப் பெயர்வு மக்களை உதிரிகளாகவும், முகமற் றவர்களாகவும் ஆக்கியது.

இத்தகைய நிலை இலகுவில் தவறி ழைக்கக்கூடிய பலவீனமான சமூகப்படை யினை வளர்த்தெடுத்துள்ளது. இத்தகைய பலவிதமான சமூகப்படையில் மக்கள் எவ்விதத்திலும் இணைப்புக் கொண்டிராதபடி யினால் அவர்கள் முகமறியாதவர்கள் மட்டுமல்ல, முகமறிந்தவர்களினாலும் வன் முறைக்கும் சுரண்டல்களுக்கும் ஆளாகின் றனர். குடும்பங்களின் உறவுகளின் இறுக் கங்கள் தளர்ந்த போது இலகுவில் பாதிப்புக் குள்ளாகப்படக்கூடிய குழந்தைகள், சிறுவர் கள், பெண்கள், முதியோர்கள் என்ற புதிய தொகுதியினர் சமூகத்தின் சேவையினை வேண்டி நிற்கின்றனர்.

இவர்களுக்கான சமூகத்தின் பொறுப்பு மிகவும் வேண்டப்பட்டதோடு பல்வேறு சமூக நல அமைப்புக்களும் இல்லங்களும் கூட தம் ஆதரவுப்பணியினை விரிவாக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் ஆதரவு இல்லங்களும் சமூக நல அமைப்புக்களும் ஒரு நிரந்தர தீர்வாக இருக்க முடியாது.

எனவே மீளக்குடியமர்வின் போதும் புனர் வாழ்வின் போதும், மீளவும் சமூகப்பாதுகாப்பு வலை அமைப்பினை விரைவாக கட்டியெ ழுப்புதல் மூலம் அவ்வலையமைப்புப் பின் னல்களுக்கிடையில் இந்நலிவுற்றவர்கள், விசேட தேவைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்க ளாகவும் இணைத்து விடுதலேயதார்த்தமா னதும் நீடித்த ஓர் பயன்பாட்டு முறையும் ஆகும்.

## கட்டுமான அபிவிருத்தியும் வளப்பங்கீடும்

ஒரு சில எண்ணிக்கை தவிர்ந்த ஏனைய எல்லா வீடுகளும் முற்றாகவோ பகுதியாகவோ சேதமாகிய நிலையில் மீள்குடி யமர்வு என்பது ஒவ்வோர் குடும்பத்திலும் அதியுயர் முன்னு ரிமையாக உள்ளது.

ஏக காலத்தில் எல்லா வீடுகளும் மீள்குடி யமர்வுகளுக்கு தயார்ப்படுத்தப்பட வேண்டு மெனில் அதற்கான நிதிவளத்தினை நன் கொடையாளனிடம் இன்று பெற்றுக் கொள் வதாக இருந்தாலும் கூட புனரமைப்பிற்கான மூலப் பொருட்கள் தேடுதல் என்பது மற்று மொரு பாரிய சவாலாக உள்ளது.

குடா நாட்டில் நீர்வளமும் மண் வளமும், விவசாய இரசாயனங்களும் யுத்த கருவிக ளின் இரசாயனத்திலும் நிரப்பப்பட்டுள்ள நிலையில் மக்களின் குடிநீர் மற்றும் உணவுத் தேவைக்கான நீரின் தரம் என்பது எதிர் பார்க்கப்படும் நிலையிலும் மோசமாக உள் ளது. இந்நிலையில் கட்டுமானப் பணிக்கான மணல் அகழுதல் என்பது பாரிய சூழலியல் பிரச்சினையாகக் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே எதிர் கொள்ளும் பெருமளவிலான கட்டுமானப் பணிகள் என்பது மூலப் பொருட்க ளுக்காக அதியுயர் விலைகொடுத்தல் என்ற புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

அத்துடன் 99 வீதமான பாதிக்கப் பட்ட வீடுகள் கூரைக ளில் பாரிய சேதத்தி னைக் கொண்டுள்ள தோடு அவற்றின் பாரம் பரிய கட்டடக் கலைய மைப்பு பெருமளவு பனைமரங்களைக் கேள் வியாகவும் கொண் டுள்ளது.



இவற்றுக்கு மேலாக குண்டு வீச்சு, பீரங்கித் தாக்குதல் ஆகிய வற்றினால் தாக் கப்பட்டுள்ள கட்டுமான அமைப்புக்களின் கட்டமைப்புப் பெரும் தளர்ச்சி கொண்டதாகவும், விசேட தொழில் நுட்பத்திறன் கொண்ட புனரமைப்பு முறையினை வேண்டி நிற்பதாகவும் உள்ளது.

மேற் குறிப்பிட்ட விடயங்களினை நோக்கும் போது கட்டடங்கள் வீடுகளைப் புனரமைத்தல் அல்லது புதிதாக அமைப்பதற்கு முன்பு ஒவ்வொரு கட்டடமும் அதன் பலங்கள், பலவீ னங்கள் பற்றிய தொழில் புலமைசார் ஆய் வுக்கும் உட்படுத்தப்பட்ட வேண்டியுள்ள தோடு கட்டடங்களின் நிலைமைக்கும் வலுவுக்கும் ஏற்ப பொருத்தமான வலுவூட்டல் கட்டமைப் பினை அங்கு அறிமுகப்படுத்த வேண்டியு முள்ளது.

சேதமடைந்த கட்டடங்களை மிகக் குறைந்த உருமாற்றத்தின் ஊடாகவும், வலு வூட்டல் கட்டமைப்பு ஊடாகவும் மக்களின் தேவைக் கேற்ப அமைப்புக்களாக மாற்றுதல், சேதமடைந்த மூலப் பொருட்களை மீளப் பாவனைக்கு உட்படுத்தல் மூலம் மூலப் பொருட்களுக்கான கேள்வியைக் குறைத்தல் மற்றும் புதிய பொருத்தமான மாற்றுத் தொழில் நுட்பங்கள், இரும்பு அலுமினிய, கண்ணாடி, நாரிழை போன்ற மாற்று மூலப் பொருட்களின் பாவனையினை கட்டட அமைப்புக்களில் சேர்த்தல் மீள் கட்டமைப்பில் மேலும் அதிகளவில் பயன்படுததல் என்பன இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளது.

மேலும் குடியமர்தலின் மீளக்கட்டமைப்பு என்பதை பல்வேறு பல்பரிமாண கோணங் களில் அணுகவேண்டியுள்ளது. அதே போன்று ஏனைய சேவைக்கட்டமைப்புகளை பொறுத் தவரை அவைகளுக்கான கட்டுமானங்கள் கூட எதிர்காலத்தின் தேவைகளுக்கான தொழில் நுட்ப அபிவிருத்தி மக்களின் வாழ்க்கையில் விஞ்ஞான தொழில் நுட்பசாதனங்கள் ஏற்ப டுத்தும் மாற்றங்கள் ஆகியவற்றுக்கு ஈடு கொடுக்கக் கூடியவாறு திட்டமிடப்பட்டு செய்யப்பட வேண்டியுள்ளது.

## மனிதவளம்

மூடப்பட்ட பொருளாதார சூழலில் முன்னெ டுக்கப்பட்ட அரசியல் போராட்டம், உலகமய மாதல், திறந்த பொருளாதாரம், எல்லைகள் தாண்டிய முதலீடுகளின் பாய்ச்சலும் மனிதவ ளத்தின் நகர்வும் பெருகியுள்ள சூழலில்

(35 ஆம் பக்கம் பார்க்க)

# இயற்கையோடு இணைந்திருத்தலின் அவசியம்



கருணாகரன்

சுற்றுச் சூழல் பற்றி
இயற்கை பற்றி
காடுகளின் முக்கியத்துவம் பற்றி
இன்று உலகெங்கும் அதிகமும் பேசப்படுகிறது.

உலகம் அறிவியல் ரீதியாகவும் நாகரிகத்திலும் தொழில் நுட்பத்திலும் பெரும் வளர்ச்சி கண்டு நகர் மயப்பட்டு, நவீன மயப்பட்டு முன்னேறிய நிலையிலும் கூட காடுகளைப் பற்றியே இன்று கூடுதலாகப் பேசப்படுகின்றதென்றால் காடுகளின் முக்கியத்துவம், மரங்களின் சிறப்பு, பறவைகள், விலங்குகளின் அவசியம் மிகவும் தேவை என்றுதானே பொருள்.

இயற்கை பூமியின் பிரதான அம்சமாக இருக்கிறது. அது பூமிக்குக் கவசமாக இருக்கிறது. இயற்கை மனிதனுக்கு அவசியமாகவுள்ளது. மனிதனுக்கு மட்டுமல்ல மற்றெல்லா உயிர்களுக்கும் கூட இயற்கையே முக்கியமானது. உயிர்கள் வாழும் ஒரு கிரகமாக பூமி இருப்பதற்கு இயற்கையே உயிர் நாடி.

இயற்கையின் ஓரம்சம் காடுகள்.காடுகள் உயிரிகளின் பேரிடம்.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலெல்லாம், புதிய முறைகளில் காடுகளைப் பேணுகிறார்கள். இயற்கையைப் பாதுகாக்கிறார்கள். காடுகளைப் பராமரிப்பது பற்றியும் பேணுவதின் அவசியம் பற்றியும் அதிகமும் வலியுறுத்துகிறார்கள்.

இயற்கையை மேலும் மேலும் பாதுகாத்து வளர்த்தெடுப்பது பற்றியே அவர்களது கூடுதல் கவனம் இப்போது திரும்பியிருக்கிறது.

உலகமெங்கும் இப்பொழுது இயற்கைக்குத் திரும்புதலும் இயற்கையோடு இணைந்திருப்பதும் கூடுதலாக வலியுறுத்தப்படுகின்றது.

இயற்கையே வாழ்வின் முதலாவது தளமாகவும் களமாகவும் அமைகிறது.

இயற்கையை விட்டு மனிதன் விலகும் கணம்தோறும் அவனைப் பெரும் நெருக்கடிகள் சூழ்கின்றன. அகத்திலும் புறத்திலும் அமைதியிழப்பு மற்றும் தட்பவெப்பமாற்றம் உட்பட பெரும் தாக்கங்கள் பலவும் நிகழ்கின்றன.

எனவே, எல்லா வகையிலும் இயற்கையும் இயற்கையோடு இணைந்திருத்தலும் அவசியமாக இருக்கின்றது. இயற்கையோடு இணைந்திருப்பதற்கு இயற்கையைப் பாதுகாப்பது மிக அவசியம்.

இந்த இயற்கை பாதுகாப்புப் பற்றியே உலகம் இன்று அதிகமாகவும் பேசிவருகிறது. எண்ணற்ற அமைப்புகள் இயற்கைப் பாதுகாப்புக்காக உலகெங்கும் இயங்குகின்றன. சர்வதேசக் கவனமும், முக்கியமுடையதாக இருக்கிறது.

எப்படிப் பேசினாலும் இயற்கைப் பாதுகாப்பில்,

பெரும் பங்காயிருப்பது காடுகளின் பாதுகாப்பே. இந்த வகையில் - காடுகளைப் பாதுகாத்தல் என்பது நாடுகளைப் பாதுகாத்தல் ஆகும். அந்த வகையில் காடுகளைப் பாதுகாத்தல் சூழலைப் பாதுகாத்தல் ,காடுகளைப் பாதுகாத்தல் உயிர்களைப் பாதுகாத்தல், காடுகளைப் பாதுகாத்தல் மனிதர்களைப் பாதுகாத்தல். காடுகளைப் பாதுகாத்தல் உல கைப்பாதுகாத்தல் என்பதாகிறது.

காடுகள் இயற்கையானவை; இயற்கையின் அம்சமானவை; இயற்கையை வளர்த்தெடுப்பவை. காடுகள் விலங்குகளினதும், பறவைகளினதும் தாய்மடியாய் விரிந்திருப்பவை. காடுகள் இதமான காற்றைத் தருபவை. காடுகள் வெப்பத்தைச் சமநிலைப்படுத்துபவை. காடுகள் மழைவீழ்ச்சியைத் தருபவை.

காடுகள் இல்லாத உலகம் எப்படியிருக்கும்? பறவைகளும் விலங்குகளும் அற்றிருக்கும் பசுமையற்றிருக்கும் குளிர்ச்சியற்றிருக்கும் மழையோ சீரில்லாமல் பெரும் வெள்ளமாகவோ, வரட்சியாகவோ வெப்பம் பெருகியிருக்கும். எங்கும் அனல் காற்று வீசும். ஒருபுல், பூண்டைக்காணவே முடியாதிருக்கும். பருவ காலங்களற்றிருக்கும்.ஒரு பறவையின் குரலையும் கேட்கமுடியாததாகிவிடும். பறவைகளற்ற வானம் வெறிச் சென்றுவிடும். ஒருபச்சையைக் கூடக்காண முடியாததாகிவிடும். ஆறுகளோ, குளங்களோ இல்லாது போய்விடும்.

உலகம் விரிந்த பாலை வெளியாக மாறிவிடும். பாலை வெளியாக விரிந்த உலகில் மனிதவாழ்வு எப்படியிருக்கும்? மனிதர் எப்படியிருப்பர்?

நமது தேசத்தில் பெருமளவு காடுகள் இருக்கின்றன. அழகிய பெரிய காடுகளாக அவை விரிந்திருக்கின்றன. பலவகை மரங்கள் நிறைந்திருக்கின்றன.

காடுகளினுள்ளே பெரிய ஆறுகள் சுழித்தோடுகின்றன. சில ஆறுகள் பருவகாலத்தவை. சில சிறு ஊற்றுள்ளவை. காடுகளுள்ளே சிறு நீர் நிலைகள் உள்ளன. சில இடங்களில் சிறு வெட்டைகளும் சிறு வெளிகளும் இருக்கின்றன.

ஒவ்வொரு காட்டிற்கும் ஒவ்வொரு சிறப்புண்டு, ஒவ்வொரு இயல்புண்டு. ஒவ்வொரு காட்டிற்கும் இளமையுண்டு. ஒவ்வொரு அழகுண்டு ஒவ்வொருகாட்டுக்கும் இசையுண்டு. ஒவ்வொரு வேறுபாடுகளுண்டு. ஒத்திசைவு ஒத்ததன்மைகளும் உண்டு.

ஒரு மரம் முதுமையாகும் போது இன்னொருமரம் அப்போது முளைவிடுகின்றது. ஒருமரம் இலையுதிர்க்கும் போது இன்னொன்று துளிர்க்கின்றது. ஒன்று காய்க்கும் போது இன்னொன்று பூக்கிறது. ஒன்று கனியும் போது மற்றது கண்ணிகட்டுகிறது. எனவே -காடுகள் புதிரும் புதினமும் வியப்பும் வினோதமும் நிறைந்தவை. குளிர்மையும் இரகசியமும் எளிமையும் அழகுமுடையவை.

ஆனால் - காடுகளை நாம் நேசிக்கிறோமா? காடுகளை நாம் அறிந்திருக்கின்றோமா?

காடுகளை நாம் பேணுகின்றோமா? காடுகளை நாம் வளர்க்க முயல்கின்றோமா?

எமது தேசத்தின் காடுகளையும் காட்டு வளங்களையும் பாதுகாப்பதற்காக இருக்கும் வன வள பாதுகாப்புப் பிரிவையும் மிகச்சிறிய அளவிலான சூழல் கரிசனையாளரையும் தவிர பொதுவாகக் காடுகள் பற்றிய அறிவும் ஈடுபாடும் எத்தனை பேருக்குண்டு?

வேட்டைக்காரர்களையும் முதிய கிராமவாசிகள் சிலரையும் தவிர பொதுவாக நமது காடுகள் பற்றிய அறிவு பலருக்கும் பூச்சியம் தான்.

போராளிகளில் பலருக்குக் காடுகள் பற்றிய அறிவுண்டு. போராட்டத்தின் போதான வேறுபட்ட பிரத்தியேக அனுபவங்களில் ஒன்றாக காடுகள் பற்றிய அனுபவமும் அறிவும் ஓரளவுக்குண்டு.

பயிற்சிகளின் போது பிற போக்குவரத்துக்களின் வேளையில் நெருக்கடிகாலத் தலைமறைவுகளில் என்றெல்லாம் இந்த அனுபவம் வாய்த்திருக்கின்றது.

வேட்டைக்காரர்களுக்கும் முதிய கிராம வாசிகளுக்கும் இருக்கும் காடுகள் பற்றியஅறிவு அனுபவத்தின் பாற்பட்ட அளவிலானதுதான். காடுகளைப் பேணுவது பற்றியோ காடுகளின் தன்மை பற்றியோ காடுகளின் வளம் பற்றியோ அவர்களுக்கு அறிவு பூர்வமாக ஏதும் தெரிவதில்லை. ஆனால்

எங்களுடைய கல்வியிலோ அல்லது கற்றலின் போதுகளிலோ சமூக மட்டத்திலோ காடுகள் பற்றிய ஆர்வத்தையும் அறிவையும் எவரும் கவனம் கொள்வதில்லை. இது இன்னொரு புறத்தில் எமது வளங்களில் ஒன்றான, பிரதானமான வளத்தைநாம் அறியாதிருக்கிறோம் எனும் வேதனைக்குரிய ஒரு விடயமே.

இங்கே ஒரு நாடகத்தில் பேசப்பட்ட விடயம் ஞாபகத்துக்கு வருகிறது.

“எனது அயலைப்பற்றி, உறவுகளைப்பற்றி, தேசத்தைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஆனால் - மேற்குலகின் மலைகளையும், நதிகளையும் அவற்றின் நீள அகலங்களையும் நான் நன்கறிவேன்” இப்படித்தான் இருக்கிறது நமது அறிவும் ஈடுபாடும், கல்வியும், அக்கறையும், வாழ்க்கையும்.

இந்த அவலத்தைப் போக்க, இந்தத் துயர நிலையை நீக்க, காடுகளைப் பேணவும், காடுகளை வளர்க்கவும், காடுகள் பற்றிய அறிவைப் பெருக்கவும் சூழலை வளர்த்தெடுக்கவுமாக வனவளப் பாதுகாப்புப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு வளர்ச்சி; முன்னேற்றம்; சிறப்பு; நன்மையே எதிர்காலம் குறித்த நம்பிக்கையே ஆனாலும் இதுமட்டும் போதாது.

இப்பொழுது சில கேள்விகள். காட்டின் மரங்கள் பற்றி மரங்களின் வகைகள் பற்றி, வகைகளின் தன்மைபற்றி, தன்மைகளின் சிறப்பியல்புகள் பற்றி, காட்டின் அமைவுகள் பற்றி, ஒவ்வொரு காட்டிற்கும் ஒவ்வொரு அமைவுக்குமான மிருகங்கள் பற்றி அவற்றின் வாழ்முறைபற்றி பட்சிகள் (பறவைகள்) பற்றி அவற்றின் வாழ்க்கை அமைப்புப் பற்றியெல்லாம் நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கிறோம்? எப்படி அறிந்திருக்கிறோம்? வளமான காடுகள் நமக்குண்டு. பெருங்காடுகள், சிறுகாடுகள் என விரிந்திருக்கின்றன அவை.

மழைவீழ்ச்சிக்கும் வெப்பச் சமநிலைக்கும் நீருக்கும் நீரரிப்பை தடுப்பதற்கும் மண்ணின் வளத்துக்கும் உயிர்களின் வாழ்வுக்கும் சூழலின் அமைவுக்கும் பாதுகாப்பிற்கும் மையமான காடுகள் அவை.

எங்கள் காடுகளில் பல வகை மரங்களுண்டு. முதிரை, பாலை, கருங்காலி, வேம்பு, நாவல், விண்ணாங்கு, சடவக்கு, சுரவுணை, கொக்கட்டி, ஆத்தி, தில்லை, ஒதி, தேத்தா, காயா, நறுவிலி, இலுப்பை, வெள்ளுருவை, பனிக்கை, உலுவிந்தை, முறலி, வீரை, பங்கிராய், பிடங்கநாரி, குறுகூரை, நொடுநாரை, குருந்து, வேலம், விடத்தல், பிடான், செம்மணத்தி, நொச்சி, ஆல், இத்தி, பயறி, வாதமடக்கி, காஞ்சூரை, புளி, பன்னை, புன்னை, கூமா, கூளா, இலந்தை, துவரை, கருவேல், மாவிலங்கை, காட்டுத்தோடை, காட்டுமா, கருநாவல், குருந்தை, ஆவரசு, தம்மனை, வெடுக்குநாறி, கொண்டல், அரசு, கண்டல், மஞ்சவுண்ணா, மருது, கயட்டை என நீளும் பெருந்தொகை மரங்கள் இவை.

சிறுமரங்களாகவும் பெரு மரங்களாகவும் இவையிருக்கின்றன. இவற்றோடு செடிகளும் கொடிகளும் உண்டு. தண்ணீர்க்கொடி, மஞ்சள்க் கொடி, பிரண்டைக் கொடி, மொசுமொசுக்கை, யானைக்கொடி, குப்பிளாய்க்கொடி, காத்தோட்டி, புளுக்கொட்டி தவிட்டை, மான்கொடி என்று ஒரு நூறு கொடிகள் உண்டு. இதுபோல புற்களும் செடிகளும் நிறைந்திருக்கின்றன. எல்லாம் இணைந்தது தான் காடு. ஒன்றின்றி ஒன்றில்லை. மரங்கள், செடிகள், கொடிகள், புற்கள் மட்டுமல்ல பறவைகளிலும் கிளி, பருந்து, மைனா, மரங்கொத்தி, ஆலா, மயில், குயில், செம்பகம், காட்டுக் கோழி, நிலம் பதுங்கி, கானல்க் கோழி, கரிக்குருவி எனப்பலவுண்டு. இதுபோல மிருகங்களிலும் சிறுத்தை, யானை, சருகுபுலி, நரி, மான், மரை, கரடி, உக்குளான், முள்ளம்பன்றி, பன்றி, ஓநாய், மரநாய், முயல், கழுதைப்புலி, காட்டெருமை, நாவி, வெளுகு என்பனவும் உடும்பு, எலி, அணில், பாம்பு எனச் சிறு பிராணி மற்றும் ஊர்வனவும் நிரம்பியதே எங்கள் காடு. இன்னும் - சிற்றாறுகள், சிறுபாதைகள், காட்டாறுகள், சிறுகுளங்கள், மோட்டைகள், வெட்டைகள், திடல்கள் என்பனவும் இக்காடுகளில் உண்டு.

இயல்பான இயற்கையான காட்டின் அமைவு இவ்வாறிருக்க நாம் உருவாக்கிய மற்றும் உருவாக்கும் காடுகளும் நமது சூழலில் உண்டு. தேக்கு, சவுக்கு, சஞ்சீவி, சமண்டலை, வேம்பு, மலைவேம்பு என நாம் நடுகை செய்து வளர்க்கும் காடுகள் இவை. ஆனால் இந்தக் காடுகளுக்கும் இயல்பான காடுகளுக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் இருக்கின்றன.

இயல்பான காடுகளில் பல வகை மரங்கள், செடிகள், கொடிகள், புற்கள், மிருகங்கள், பறவைகள், ஆறுகள், குளங்கள், வெட்டைகள், வெளிகள் எல்லாம் இணைந்திருக்கும். ஒன்று பூக்கும் போது இன்னொன்று கனியும் ஒன்று துளிர்க்கும் போது மற்றது இலையுதிர்க்கும். ஒன்று காய்க்கும் போது ஒன்று கண்ணி கட்டும். பலவகை மரங்களாலானதால் பருவ காலங்கள் முழுவதிலும் காடு எப்போதும் எல்லாவற்றாலும் நிரம்பியேயிருக்கும் எனவே ஒரு காடு எப்போதும் புதிதாகவே இருக்கிறது. தட்ப வெப்ப சமநிலையுடன் பல்லின வேர்களின் தொழிற்பாட்டால் மண்வளமும் சிறக்கிறது. இவ்வாறு காடுநிறைந்திருப்பதால் இக்காட்டினுள் மரங்களும், பறவைகளும் பெருகுகின்றன சரணாலயமாக வாழ்கின்றன. வளர்ப்புக் காடுகள் இப்படியில்லை அவை ஒருவகைப் பயிர்ச் செய்கைதான்.

நாம் திட்டமிடுவதற்கேற்ப ஒரு வகை அல்லது இருவகை மரங்கள் மட்டுமே அங்கு நடுகை பண்ணப்படுகின்றது. ஒரே வகையாகவே முழு மரங்களும் வாழ்முறையைக் கொண்டிருக்கும். இதனால் இலையுதிர்காலமென்றால் காடு வெளிச்சென்றிருக்கும். வெப்பம் கூடியிருக்கும் துளிர் காலமாயின் முழுமரங்களும் துளிர்த்திருக்கும். எப்போதும் சமநிலை குறைந்தேயிருக்கும். சமநிலைக் குழப்பம் இதில் எப்போதும் உண்டு. இச் சமநிலைக்குறைவாலும் தனிவகை அமைவாலும் மிருகங்களும் பறவைகளும் பெருமளவில் இக்காடுகளை நாடுவது குறைவு அவற்றிற்கான பாதுகாப்பும், இக்காடுகளில் இல்லை. ஒன்றின் கழிவு இன்னொன்றின் சேதனம் என்ற வளச்சூழல் இங்கே குறைவு.

எங்கள் வரள், வலயச் சூழலில் காட்டில் சில மரங்கள் நீரைச் சேமிக்கும் இயல்புடையன சில இன்னொரு மரம் சேகரிக்கும் நீரிலே தமது வாழ்க்கையைத் தொடருகின்றன. ஒன்றின் வேர்த் தொழிற்பாடு மற்றதின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. ஒன்றின் துளிர்ப்பும் பூத்தலும் இன்னொன்றின் விருத்திக்கு ஏற்றதாகிறது. இவ்வாறான வளப்பரிவர்த்தனை மரச்செய்கைகளில் நடுகை மரங்களில் நிகழ்வதில்லை. ஆனாலும் உலகெங்கும் நடுகைக்காடுகள் உருவாக்கப்படுகின்றன. நமது சூழலிலும் இந்த வகைக் காடுகள் உண்டு. மக்களின் நாளாந்தத் தேவைகள் மற்றும் அடிப்படைத் தேவைகளுக்காக வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக ஈடுசெய்யவும் தளபாட மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்கான மரத்தேவைகளுக்காகவும் இவ்வகைக் காடுகள் (நடுகைக் காடுகள்) உருவாக்கப்படுகின்றன. பின்பு இவை பெரிதும் உதவுகின்றன.

ஆனால் இயல்பான காடுகள் இன்றியமையாதவை. இன்னொன்றின் பிரதியால் நூறு வீதத்தில் ஈடு செய்ய முடியாதவை. அவை இயற்கையின் பிரம்மரகசியமாய் தமக்கே உரித்தான தனித்துவத்தையும் மகத்துவத்தையும் கொண்டவை. இங்குதான், நாம் அவற்றின் பகுதியென்றும், அவை எமதின் பகுதியென்றும் விழிப்படைய வேண்டியிருக்கிறது.

காட்டை அறிவதில் ஆர்வத்தை வளர்த்தெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

இதற்கு வளத்துறை அறிவு சார் நூல்கள், வீடியோக் கசெற்றுகள், ஓடியோ செற்கள், சஞ்சிகைகள் ஓரளவுக்குப் பயன்படும். அத்துடன் நம்மிடையேயுள்ள வேட்டைக்காரர்கள், முதிய கிராமவாசிகள், விவசாயிகள் போன்றோரின் அனுபவங்களைச் சேகரிக்கலாம். பிரத்தியேகமான வன அறிவும் அனுபவமுடைய ஈடுபாடுடையோர் சிலரும் எங்கேனும் இருக்கக்கூடும். அவர்களைக் கண்டறிந்து அவர்களுடனான உரையாடல்கள் மூலம் வனவியல்பற்றிய மேலதி அறிவைப் பெறலாம்.

காடுகள் பற்றிய அறிவைப் பெருக்குவதுடன் மரங்களின் முக்கியத்துவத்தையும் காட்டு விரிவாக்கம், காடு பேணல், புதிய மரநடுகை, விலங்குப் பாதுகாப்பு, பறவைகள் பாதுகாப்பு போன்றவற்றிலும் இளையோரை ஈடுபட வைக்கும் ஒரு முன் மாதிரியை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் தமது சூழலை அறிவதிலும் இனம் காண்பதிலுமே அதிக கவனம் செலுத்துகிறார்கள். நாமும் நமது சூழலையும் வளங்களையும் இனங் காண வேண்டும். ●


பதினான்காம் அகவையில்
காலடி பதிக்கும்
ஈழநாதம்
Eelanatham மக்கள் நாளிதழ்
என்றென்றும் தமிழீழ மக்களின்
இதயநாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்
தமிழீழ வைப்பகம்
Bank of Tamileelam
தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்
வாருங்கள்
உங்கள் வளமான வாழ்விற்கு
வழிகாட்டுகிறோம்.
சி.7295

# சிறிலங்காவின் சீரழிந்த நீதிநிர்வாகம்



அரச நிர்வாக ஊழல், பொதுத்துறை முறைகேடுகள், திணைக்களத் தில்லுமுல்லுகள் ஆகிய முத்துறை ஆய்வுகளை மேற்கொள்ளும் தன்னார்வத் தொண்டர் அமைப்பான டிரான்ஸ்பேரன்சி இன்ரர்நேசனல் (Transparency International) சிறிலங்காவைப் பற்றிப் பாரதூரமாக விமர்சனம் செய்துள்ளது. இந்த அமைப்பின் தெற்கு ஆசியப் பிரிவு சிறிலங்கா, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், வங்காள தேசம் ஆகிய நாடுகளில் சென்ற வருடம் (2002) ஆய்வுகளை மேற்கொண்டது.

பெருமளவில் பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட வினாப் படிவங்களுக்குக் கிடைத்த பதில்களில் இருந்து இந்த அமைப்புத் தனது ஆய்வு முடிவுகளைப் பெற்றுக்கொண்டது. இதன் சிறிலங்காக் கிளை நிறைவேற்று இயக்குநர், ஜே.சி. வெலியமுன இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ; "சிறிலங்கா சமுதாயத்தில் அதியுச்ச ஊழல் மலிந்த அமைப்புக்களாக பொலிஸ் மற்றும் நீதித்துறைகள் இடம்பெறுவதை எமது ஆய்வுகள் நிரூபிக்கின்றன." என்றார். அடுத்த இடத்தில் காணி நிர்வாகம், வரி அறவீட்டுத் திணைக்களங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் அறியத்தருகின்றன.

தாம் பெற்றுக்கொண்ட படிவங்களில் ஒப்பமிட்டு நிரப்பிய செய்திப்படியும், ஆய்வு செய்யச் சென்றோர்களுக்கு வழங்கிய வாக்குமூலத்தின் படியும் சிறிலங்கா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒரு இக்கட்டான நிலையில் இருப்பதை உணர முடிகின்றது. "பொலிசாருக்குக் கொடுக்கும் வழமையான இலஞ்சப் பணத்தைவிட நாம் கோட்டு வழக்குகளில் தோல்வியைத் தவிர்ப்பதற்காக நம்பிக்கையான தரகர்கள் மூலம் நீதிபதிகளுக்கு இலஞ்சம் கொடுத்துள்ளோம்" என்ற திடுக்கிடும் செய்தியை அவர்கள் பலமுறை கூறுகின்றனர்.

ஹொங்கொங் தீவுகளில் தனது தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள ஆசியா சட்டவளத்துறை மையம் (Asian Legal Resources Centre) வெளியிட்ட ஆகஸ்து 2002 சஞ்சிகையில் சிறிலங்காப் பொலிசார் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆகஸ்து வரையிலான எட்டு மாதங்களில் சிறிலங்காப் பொலிசார் நடத்திய சித்திரவதை, பாலியல் வன்முறை, பாலியல் உறுப்புகளுக்குச் சேதம் விளைவித்தல் ஆகிய குற்றச்செயல்களில் முப்பத்தியேழை மாத்திரம் தெரிவு செய்து அது ஆவணப்படுத்தியுள்ளது. இவை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மீது வயது வேறுபாடின்றி நடத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும்.

இவற்றுள் விஜிதா யோகலிங்கம் என்ற தமிழ்ப் பெண்மீது நடத்தப்பட்ட வன்முறை சொல்லில் வடிக்க இயலாத கொடூரம் வாய்ந்தது. மனிதன் விலங்கினத்தில் இருந்து தோன்றினான் என்று சொல்வதைவிட மனிதன் விலங்கினத்திலும் கேவலமாக மாறுகிறான் என்பதற்கு இது சான்றாகும் என்று 'சஞ்சிகை' ஆசிரியர் தெரிவிக்கிறார். தமிழர்கள் விடயத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கும் சுப்பிறீம் கோட்டு நீதியரசர்கள் இந்த வழக்கில் பின்வருமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பணித்தனர், "1994ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சித்திரவதைக்கு எதிரான சட்டத்தின் கீழ் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்". ஆனால் இதுவரை காலமும் இதுபற்றி ஒருவகை நடவடிக்கையும் எடுக்காமல் சட்டமா அதிபர் திணைக்களம் காலம் போக்குகின்றது.

1948 டிசம் பர் 10ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபை மனித உரி மைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. இதன்மூலம் மனித வரலாற்றில் முதன் முறையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பின்பற்றவும் சர்வதேச சமுதாயம் பொறுப்பேற்றுக் கொண்டது. இப்பிரகடனத்தின் மிக முக்கிய அம்சமாக எல்லாவகைச் சித்திரவதைகளுக்கும் எதிரான கண்டனத் தீர்மானம் காணப்ப டுகின்றது. சிறிது காலத்தின் பின் சித்திரவதைகளுக்கு எதிரான விசேட சட்டத்தை ஐ.நா. நிறைவேற்றியதோடு, அதுபோன்ற சட்டங்களை அங்கத்துவ நாடுகள் இயற்றி அமுலாக்கவேண்டுமெனப் பரிந்துரை செய்தது.



பிரதம நீதியரசர்

1994 இறுதிப்பகுதியில் தனது ஆட்சி முடிவுக்கு வரும் தறுவாயில், அப்போதைய யூ.என்.பி. அரசு 1994 ஜனவரி 03.இல் சித்திரவதைக்கு எதிரான சட்டத்தை சமர்ப்பித்தது. பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி தொடங்கியபின் 1994 டிசெம்பர் 20 இல் அது சட்டமாக நிறைவேறியது, உடல், உளச் சித்திரவதைகள் யாவற்றையும் முற்றாகத் தடைசெய்யும் சிறிலங்காவின் இச்சட்டம், தனது சரத்து 2 பிரிவு 2இல் பின்வரும் உத்தரவைப் பிறப்பிக்கின்றது;

"போர், போராபத்து, உள்நாட்டு அரசியல் அமைதியின்மை அல்லது பொது அவசர நிலவரம் போன்ற யாதொரு காரணத்தையும் சித்திரவதையை நியாயப் படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது".

இச்சட்டம் நிறைவேறி எட்டு வருடங்கள் சென்று விட்டன. சிறிலங்கா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பெருமளவிலான அடிப்படை மனித உரிமை வழக்குகளில் பொலிசார் புரியும் சித்திரவதை சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் இடம்பெறுவதைக் காணமுடியும். சிறிலங்காவின் 1978 அரசியல் சாசனம் சரத்து 12 பிரிவு ஒன்றில் ஒவ்வொரு பிரசையின் சட்டப் பாதுகாப்பு உரித்து வலியுறுத்தப்படுகின்றது. அரசியல் சாசனத்தின் 11ஆம் சரத்து சித்திரவதைகளைத் தடைசெய்யும் அதேவேளையில், 13ஆம் சரத்தின் முதலாம், இரண்டாம் பிரிவுகள் சட்டத்திற்குப் புறம்பான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல்களைத் தடைசெய்கின்றன. இதே சாசனத்தின் 126ஆம் சரத்தின் கீழ் பொலிசார் புரியும் சித்திரவதைகளுக்குப் பரிகாரமாக சுப்பிறீம் கோட்டில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யும் உரித்து வழங்கப்பட்டுள்ளது.

சரத்து 126இன் கீழ், பொலிசாருக்கு எதிராகப் போடப்படும் ஒவ்வொரு அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கிலும் சட்டமா அதிபர் முதலாவது பிரதிவாதியாகக் காட்டப்படுகிறார். இது வெறும் சம்பிரதாயமல்ல. நீதி நிர்வாகத்தின் நடுத்தூணாகச் சட்டமா அதிபர் திணைக்களம் இடம்பெறுகின்றது. இதற்குரிய பொறுப்புணர்வுடன் அது செயற்படுவதில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்காப் படைகள் மற்றும் பொலிசார் மேற்கொள்ளும் அத்துமீறல்களுக்கு உரிய நீதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. சிறிலங்கா நீதி நிர்வாகத்தின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து பல வருடங்களாகின்றன.



தமிழர்கள் நியாயம் கோரும் சந்தர்ப்பங்களில் இத்திணைக்களம் மாற்றாந்தாய் மனதுடன் நடப்பதை நாம் அறிவோம். பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்கள்படும் சொல்லொணாத் துயரங்களை இத்திணைக்களம் அறிந்திருந்தும் நடவடிக்கை எடுப்பதில்லை. அது வேண்டா வெறுப்பாகத் தாக்கல் செய்யும் வழக்குகள் தோல்வியடைகின்றன. அரசியல் தேவைகளுக்காக அது துரிதப்படுத்தும் வழக்குகள் முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட நீதிபதிகள் முன் செல்கின்றன. இவர்கள் வழங்கும் தீர்ப்புக்கள் ஒரு பாரிய அரசியல் சதியின் அங்கமாக அமைகின்றன. இத்தனை கைங்கரியங்களையும் சட்டமா அதிபர் திணைக்களம் திரைமறைவில் இருந்து இயக்குகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் நடத்தும் வழக்குகளில் சாட்சியங்கள் முறையாக நெறிப்படுத்தப்படுவதில்லை. குற்றவாளியாகக் காணப்பட்ட பொலி சார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸ் திணைக்களத்தை அது நிர்ப்பந்திப்பதில்லை. குற்றவாளிகள் தொடர்ந்தும் சேவையில் இருக்கின்றனர். வழக்கு நடக்கும்போது குற்றம் சாட்டப்பட்ட பொலிசார் பணி நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அது நடைபெறுவதில்லை. சாட்சிகளை மிரட்டுவதற்கும், சாட்சியங்களை மாற்றியமைப்பதற்கும் வாக்குமூலங்களை மீளப்பெறுவதற்கும்

**கலாநிதி க. சோமாஸ்கந்தன்**

சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

சிறிலங்கா பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள், இலஞ்சம், பாலியல் குற்றங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிய சட்டவளத்துறை மையம் கூறுவதுபோல் பொலிசாரைத் தட்டிக்கேட்க யாருமில்லை என்ற நிலை இந்த நாட்டில் தோன்றிவிட்டது. சட்டத்தின் ஆட்சி சிறிலங்காவில் கிடையாது என்ற முடிவுக்கு மேற்கூறியமையம் வருவதற்கு இதுதான் முக்கியகாரணம்.

பொலிசாரின் அராஜகத்திற்கும், வன்முறை ஆட்சிக்கும் மூன்று வகைக் காரணங்கள் இருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர் :

1. மக்கள் நட்பை சிறிலங்கா பொலிஸ்துறை இழந்துவிட்டது. தேவையான புலனாய்வுத் தகவல்களை மக்கள் வாயிலாக அமைதி வழியில் பெற அதனால் முடியவில்லை. அகப்பட்டவர்களை அடித்து நொருக்கித் தேவையான தகவல்களைப் பெறுகின்றனர்.

2. பணம் படைத்தோரிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு அல்லது செல்வாக்குள்ளோரின் உத்தரவுப்படி பொலிசார் தாமே தண்டனை வழங்குகின்றனர். இந்த மட்டில் சிறிலங்காப் பொலிசார் ஒரு கூலிப்படையாக இயங்குகின்றனர்.

3. அரசு மக்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கும் எந்திரம் என்ற தவறான கற்பிதம் பொலிஸ் உட்பட திணைக்களங்கள் யாவற்றிலும் நிலவுகின்றது. தமிழர்களைத் துன்புறுத்தி இன்னல்களுக்குத் தள்ளுவது ஒரு தேசிய கடமை என்று அவை நம்புகின்றன.

ஆசிய சட்டவளத்துறை மையம் சிறிலங்கா பொலிஸ்துறை மறுசீரமைக்கபட வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்துகின்றது. சட்டம், ஒழுங்கு சீர்குலைவதற்கு இன்னுமோர் காரணமுண்டு. ஐ.நா. மன்றம்தயாரித்துள்ள சட்டத்தை அமுலாக்குவோருக்கான ஒழுக்க நடைமுறைத் தொகுப்பின் ஐந்தாம் சரத்திற்கு அமைவாக சிறிலங்கா பொலிசார் நடப்பதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. சட்டப் பணியாளர்களுக்கான கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் Un Code Of Conduct For Law Enforcement Officials என்ற பெயரிடப்பட்ட இந்த ஒழுக்க நடைமுறைத் தொகுப்பு

(08ம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின்....

வலியுறுத்துகின்றது. கடந்த சிலவருடங்களாக சிறிலங்காப் பொலிசாரைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும்படி சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பப்படுகின்றது.

சிறிலங்காப் பொலிஸ் துறையின் வீழ்ச்சி எப்படி ஆரம்பித்தது போன்ற ஆய்வுகளை இந்நாட்டின் பிரசைகளில் ஒருவரான கார்ள் முல்லர் தான் எழுதிய சமூக நாவல் மூலம் மேற்கொள்கிறார். நாவலுக்கு 'கொழும்பு' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. (Colombo By Carl Muller. Publishers. Penguin 1995). பிரிட்டிசார் வெளியேறியபின் பொலிஸ் திணைக்களத்தின் மேன்மை ஒரு சில வருடங்கள் தாக்குப்பிடித்தது. அதன்பின் அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகளின் பணியாளர்களாகப் பொலிசார் மாறிவிட்டனர். உயர் அதிகாரிகளின் தலைவிதி அரசியல்வாதிகளால் தீர்மானிக்கப்பட்டன. அதே சமயத்தில் எவ்வகை ஊழல் அல்லது வன்முறை புரிந்தாலும் எசமானர்களின் பாதுகாப்பு தமக்கு உண்டு என்ற நம்பிக்கை பொலிசார் மனதில் பதிந்துவிட்டது. மக்களைத் துச்சமாக மதிக்கும் போக்கு இவ்வாறு ஆரம்பித்தது என்கிறார் முல்லர்.

பிரிட்டிசார் காலத்தில் பொலிசில் இணைய விண்ணப்பிப்போரின் குடும்பப் பின்னணி, தனிப்பட்ட நடத்தை போன்றவை மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட்டன. இப்போது அரசியல்வாதிகளின் சிபாரிசு ஒன்று மாத்திரம் போதுமானது. இதனால் கசிப்பு - வியாபாரிகளின் புத்திரர்களும், பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தோரும் சிறிலங்காப் பொலிசில் இணையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆட்பற்றாக்குறை இன்னுமோர் காரணமாக அமைகின்றது. 'யார் வந்தாலும் சேர்த்துக் கொள்வோம்' என்ற நிலைக்கு பொலிஸ் திணைக்களம் தள்ளப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களாகிய எம்மைப் பொறுத்தளவில் 95 வீதம் சிங்களவர்களைக் கொண்ட சிறிலங்காப் பொலிஸ்துறை அப்பட்டமான இனவாத அமைப்பு. யாழ். தமிழ் விழாப் படுகொலையையும், யாழ். நூலக எரிப்பையும் சிறிலங்காப் பொலிசாரே செய்தனர். பின்னணி ஊக்குவிப்பை சிங்களத் தலைவர்கள் வழங்கினர். யாழ். நூலக எரிப்பை முன்னின்று நடத்திய பொலிஸ் அதிகாரி இன்னும் இறக்கவில்லை. பொலிஸ் திணைக்களத்தில் இருந்து ஓய்வு பெற்றபின் அவருக்கு கொழும்புத் துறைமுகப் பாதுகாப்புச் சேவையில் இடம் வழங்கப்பட்டது. இப்போதைய அரசின் நம்பிக்கைக்கு உரியவராக அவர் இடம்பெறுகிறார்.

சர்வதேச சிறுபான்மை உரிமைக்குழு (Minority Rights Group) என்ற பிரித்தானிய அமைப்பைச் சேர்ந்த ஆசிய விவகார நிபுணர், எலிசபெத் நிசன் (Elizabeth Nissan) சிறிலங்கா பொலிசார் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை இங்கு பார்ப்போம். தனது 2000ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், மேலிடத்து ஆதரவும் பாதுகாப்பும் தமக்கு உண்டு என்ற உறுதியான நம்பிக்கை, பொலிசார் புரியும் அத்துமீறல்களுக்குத் தூண்டு கருவியாக அமைகின்றன என்கிறார் எலிசபெத் நிசன். வெலிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதிகள் ஜுலை 1983இல் கொல்லப்பட்டனர். அரசு நடவடிக்கை எடுக்க மறுத்தது. இதனுடைய நேரடி விளைவாக ஒக்ரோபர் 2000த்தில் பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் நடந்தேறின என்று அவர் கூறுகிறார்.

குற்றம் புரிந்த தமது சகாக்களைப் பாதுகாக்கும் நோக்கில் விசாரணைகளை வருடக் கணக்காக இழுத்தடிக்கும் நடைமுறையை சிறிலங்காப் பொலிசார் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றனர். அத்தோடு வழக்குப் போடப்பட்டால் அதை தமிழ்ப் பிரதேச நீதிமன்றங்களில் இருந்து சிங்களப் பிரதேசங்களுக்கு மாற்றும் நடைமுறையையும் மேற்கொள்கின்றனர். வழக்கு சிங்கள நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றனர். இதற்கெல்லாம் சட்டமா அதிபர் திணைக்களம், உயர் நீதிமன்றம் என்பன ஒத்துழைப்பு வழங்குகின்றன. அநாமதேயமான நீதி இன்று தமிழ் நீதி, சிங்கள நீதி என்று பிரிந்துவிட்டதை இது குறிப்புணர்த்துகின்றது.

சிறிலங்கா நீதித்துறையின் வீழ்ச்சிக்கு உதாரணமாக, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மீது செலுத்தப்படும் கண்டனக் கணைகளைக் குறிப்பிடலாம். ஜனாதிபதி சந்திரிகாவின் விசுவாசியாகிய இவர், இப்பதவியை சந்திரிகாவின் நேரடித் தலையீடு மூலம் 1999 செப்ரம்பர் 16 இல் பெற்றார். பல மூத்த நீதியரசர்கள் உதாசீனம் செய்யப்பட்டனர். பிரதம நீதியரசர் பதவிக்கு முன் சட்டமா அதிபராகவும் அதன் பின் மேல் முறையீட்டு நீதியரசராகவும் சரத் என் சில்வா பதவி வகித்துள்ளார்.

பதிவுத் திருமணம், வைபவரீதியான திருமணம் என்பன மூலம் ஏற்கனவே இவருக்கு ஒரு மனைவி உண்டு. அவரை ஒதுக்கி வைத்துவிட்டு ஜெயசேகரா என்ற பொறியியலாளருடைய மனைவியுடன் சரத் என் சில்வா பகிரங்கமாகக் கூடி வாழ்கிறார். ஜெயசேகரா தாக்கல் செய்த வழக்கில் சரத் என் சில்வா எதிரியாகக் காட்டப்பட்டுள்ளார். வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி அபயரத்தின, சரத் என் சில்வாவின் தூண்டுதலின் பேரில் வழக்குப் பதிவேட்டிலிருந்து சரத் என் சில்வாவின் பெயரை வெட்டி நீக்கினார். இதற்குப் பிரதி உபகாரமாக அபயரத்தின உயர் நீதிமன்றத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டார்.

பிரதம நீதியரசர் பதவி வகிக்கும் காரணத்தால் நீதிச் சேவை ஆணையகத்தின் தலைவராகவும் அவர் பதவி வகிக்கிறார். அவருக்கு எதிராக அனுப்பப்படும் புகார்களை அவரே விசாரணை செய்து தள்ளுபடி செய்கிறார். இவருடைய தகாத உறவு பற்றிய மனுமீது இவர் தீர்ப்பு வழங்கியுள்ளார். கொழும்பிலுள்ள பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ மாளிகையில் பாதுகாப்பு அதிகாரியாக றோகண குமாரா என்பவரை சரத் என் சில்வா நியமித்துள்ளார். இவர் பலமுறை சிறை சென்று திரும்பிய ஆசாமி. இவருக்கும் பாதாள உலகக் கும்பல்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. பேராதெனியா பூங்காவில் நடந்த ஒரு படுகொலையில் இவர் சம்பந்தப்பட்டுள்ளார். இருப்பினும் சரத் என் சில்வாவின் பாதுகாப்பு அவருக்கு உண்டு.

சிறிலங்கா நீதிச் சேவைபற்றி 'றாவய' பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் ஆய்வு நூல் எழுதியுள்ளார் (An Unfinished Struggle By Victor Ivan). சிறிலங்காவின் முழு நீதிச் சேவையும் ஆட்டம் கண்டுள்ளது. அது பழுது பார்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறது என்று அவர் தெரிவிக்கிறார். இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிபதிகளில் லெனின் இரத்தின நாயக்கா என்பவர் மிகவும் வியப்பானவர். இவர் முன்பு அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பணியாற்றியவர். பண மோசடிக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்.

நீதிபதியாகப் பதவியேற்ற பின் ஒரு சிங்களப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு இவர் மேல் சுமத்தப்பட்டது. இதுபற்றி விசாரணை செய்த நீதிச்சேவை விசாரணைக் குழு அவரைக் குற்றவாளியெனத் தீர்மானித்தது. ஆனால். இன்றுவரை அவர் நீதிபதியாகப் பதவி வகிக்கிறார். இவர் பிரதம நீதியரசரின் நெருங்கிய நண்பர் என்பதை யாவரும் அறிவர்.

சிறிலங்கா நீதிச் சேவையில் பணியாற்றுவோர் இரு குழுக்களாகப் பிரிந்து பனிப்போரில் ஈடுபடுகின்றனர். பிரதம நீதியரசரின் குழுவில் அபயரத்தினா, லெனின் இரத்தின நாயக்கா போன்றோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி ஆதரவு உண்டு. நீதிபதிகள் சுனில் பெரேரா, ஜீ.டி. குலரத்தினா போன்றோர் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவுடன் இயங்குகின்றனர். அரசியல் சாசனத்தின் சரத்து 4 நீதியரசர்களை நீக்குவதற்கு வகை செய்கின்றது. இதைப் பயன்படுத்துவதற்கு அரசியல்வாதிகளின் சம்மதம் கிடைக்கவில்லை.

2001 தேர்தல் காலத்தில் ரணில் தலைமையிலான அணியினர், வெற்றி பெற்றபின் முதல்வேலையாக பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்யப்போவதாகக் கூறினர். வெற்றி பெற்றபின் மௌனம் சாதிக்கின்றனர். கதிர்காமருடன் இரகசிய உடன்படிக்கை செய்ததுபோல் சரத் என் சில்வாவுடனும் செய்து கொண்டுள்ளனர் போலும்.

சிறிலங்காவின் 27ஆவது பொலிஸ்மா அதிபராக அண்மையில் பதவியேற்ற தங்கராஜா எட்வேட் ஆனந்தராஜா பொலிஸ் திணைக்களத்தைத் திருத்தியமைக்கப் போவதாகப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். புதிதாகப் பதவியேற்பவர்கள் பாடும் வழமையான பல்லவி என்று இதைத் தள்ளி வைப்போம். தமிழ் மக்களுக்கு நேர்மையான நீதியான தீர்ப்பு வழங்கும் காவல்துறையும் நீதிச்சேவையும் தேவைப்படுகின்றன. இவை தமிழர்களுக்காகத் தமிழர்களால் நடத்தப்படுவதை விட வேறு மாற்றுவழி கிடையாது.





மின்னல் இலத்திரனியல்

உபகரணங்கள் திருத்தம்

யாழ் சாலை, —— கிளிநொச்சி.

PHOTO - COPPIER

போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

வீடியோ கமரா

சற்றலைற் அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்.

ரீவி-டெக்

DIGITAL RADIOS

இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் விற்பனை செய்யப்படும்.

ANOLOGE RADIOS

மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்

14-ஆவது அகவையில் கால் பதிக்கும் ஈழநாதமே!
பத்திரிகா தர்மத்தோடு மிளிர, உயர வாழ்த்துகின்றோம்.

(சி-7250)



# தீர்வு

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

எதை? எப்படி, அது தான் இப்போது உள்ள பிரச்சினை. இன்று நாளை என நாட்களைக் கடத்தியாகிவிட்டது. நாளைக் காலை கொடுத்தே ஆகவேண்டும்.

கொடுக்காவிட்டால் என்ன? தலையா போய்விடும். தலை போகாது. ஆனால், மரியாதை இல்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை என்ற மாதிரியான பெயர் வந்துவிடும். ஆனபடியால் கொடுக்கத்தான் வேண்டும்.

ஆனால், எதை? எப்படி? வேலை செய்யும் அலுவலகத்திற்குப் போய் அங்கு கிடைக்கும் நேரத்தைப் பயன்படுத்தித் தொடங்கிவிடலாம். தொடங்கிவிட்டால் பிறகு முடித்து விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

காலை ஒன்பது மணிக்கு அலுவலகம் போய்ச் சேர்ந்து அன்று பார்க்க வேண்டிய முக்கிய அலுவல்களைப் பார்த்து நிமிர்ந்த போது பதினொரு மணியாகிவிட்டது.

நல்ல மன நிலையும் இருந்தது. ஆன்ால், என்ன பிரயோசனம். மகாதேவன் வந்தார்.

'என்ன பிசியோ-" என்றார். வழக்கமான தோரணையுடன்.

"இல்லை" என்று நசிய வேண்டியதாகிவிட்டது.

"அப்ப ஒரு பதினைஞ்சு நிமிஷம் என்னோடை மினைக்கெட வேணும்."

என் மன வானில் கொலம்பியா றொக்கட் வெடித்ததுபோல ஒரு வெடிப்பு. அதைக்காட்டிக் கொள்ள முடியவில்லை. பரிதாபமாகப் புன்னகைக்க வேண்டியதாயிற்று.

மகாதேவன் என் முன்னால் வசதியாக அமர்ந்து கொண்டார்.

"என்ன பிரச்சினை எண்டால் யாழ்ப்பாணத்தில் உங்கடை அக்கா வீட்டுக்குப் பக்கத்தில ஒரு வீடு இருக்குத் தெரியுமே."

அக்கா வீட்டுக்கு அக்கம் பக்கம் எல்லாம் வீடுதான். இவர் எந்த வீட்டைச் சொல்லுகின்றார்.

"எந்த வீடு"

"பில்டிங் டிப்பாட்மென்ட் இஞ்சினியர் ஒருத்தர் மயில் வாகனம் எண்டு"

"ஓமோம்."

"அந்த வீட்டில என்ரை மனிசியின்ரை தம்பியார் ஆக்கள் வாடகைக்கு இருக்கினம்."

"ம்"

"தொண்ணூற்றி ஆறில் தென்மராட்சியால சனங்கள் திரும்பிப் போகேக்க இவையால சொந்த வீட்டுக்கு போகேலாமல் போட்டுது. தெரியும் தானே. இளவாலைப் பக்கம் அப்ப ஆக்களை விடேல்லைத்தானே"

"ஓமோம்"

இதையெல்லாம் ஏன் எனக்குச் சொல்லுகின்றார். இந்த வலை விரிப்பு எதற்கு?

"இப்ப பிரச்சினை என்னெண்டால் அந்த வீட்டை கொக்குவில் பகுதி ஆட்கள் இருபத்திரண்டு லட்சத்துக்கு வேண்டிப் போட்டினம்"

"பிறகு"

"வேண்டின ஆக்கள் வீட்டைத் திருத்த வேணும் எண்டு மனிசியின்ரை தம்பியார் ஆக்களை எழும்பச் சொல்லி இருக்கினம்."

"ம்"

"அதுதான் பிரச்சினை. அவை உடன வீட்டைவிட்டு எழும்பேலாது. தெரியும்தானே. பிள்ளையளின்ரை படிப்பெல்லாம் குழம்பிப்போயிடும்."

"வீட்டை வேண்டிய ஆக்களோடை கதைச்சுப் பாக்கலாம் தானே"

"என்னத்தைக் கதைக்கிறது. அவையின்ரை பிளான்வேறை"

"என்ன"

"வீட்டைத் திருத்திப்போட்டு கொழும்பு கொம்பனி ஒன்றுக்கு ஐஞ்சு இலட்சம் அட்வான்ஸ் வேண்டிக் கொண்டு மாதம் இருபத்தையாயிரம் ரூபாய்க்கு வாடைக்கு கொடுக்கப்போகினமாம்"

"அப்ப பிரச்சினைதான் "

"அதுதான் சொல்ல வாறன். யாழ்ப்பாணத்தில் வீடுகள் ஒரு பெரிய பிரச்சினையாய் இருக்கு."

மகாதேவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போது என் கனவு விரிந்து பரந்தது. யாழ்ப்பாணத்து தெருக்களைக் கவ்விக் கொண்டு வரும் வர்த்தக வலயம் எங்கு போய் நிற்கும்.

"இப்ப என்ன செய்யப்போறியள்?"

"அது தான் உங்களிட்டை வந்தனான். என்னெண்டால் உங்கடை அக்காவீட்டில அக்காதானே தனிய இருக்கிறா. அக்காவின்ரை வீட்டில ஒரு பகுதியை வாடகைக்குத் தந்தால் கொஞ்ச நாளைக்கு மனிசியின்ரை தம்பியார் வேறை வீடு பார்த்து எடுக்கும் வரைக்கும் சமாளிக்கலாம்.

அடி மடியில் கைவைத்து விட்ட மகாதேவனை நேரே பார்க்க சங்கடப்பட்டேன். அவசரமாக மேசையில் இருந்த கடிதத்தினை பார்த்துக் கொண்டே இருந்தேன்.

மகாதேவன் விடுவதாக இல்லை.

"உங்களுக்கு பிரச்சினை விளங்குதுதானே. இந்த உதவியை ஒருக்காச் செய்து தாங்கோ".

"உன்ரை வீட்டில இன்னுமொரு குடும்பத்தை குடியிருக்க வைக்க உனக்கு விருப்பமோ" என்று அக்காவிடம் எப்படிக் கேட்க முடியும்?.

அக்காவுக்கும் எனக்குமான உறவு நீண்ட காலம் சரியாக இருக்கவில்லை. பிறகு ஒரு புரிந்துணர்வு அடிப்படையில இப்ப ஓரளவு பரவாயில்லை. இந்தக் கொண்டிசனில வீட்டுக் கதையைக் கேட்டால் என்பாடு அதோ கதி தான். இதை எப்படி மகாதேவனுக்குச் சொல்ல முடியும். எப்படிச் சொல்லிச் சமாளிப்பது?

"அதில்லைப் பாருங்கோ அதில ஒரு பிரச்சினை இருக்கு அத்தானின்டை சகோதரி ஆட்கள் கொழும்பில இருந்து வந்து கோப்பாயில இருக்கிற தங்கடை வீட்டைத் திருத்தப் போகினமாம். அவை அக்கா வீட்டை தான் இருப்பினம். அதால உங்கட மச்சானுக்கு இடம் கொடுக்கிறது சிக்கலாய்த்தான் இருக்கும்".

மகாதேவன் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். அவர் தன்னுடைய மனிசியின் தம்பிக்கு எத்தகைய வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு வந்தாரோ தெரியாது..

"நான் உங்களைத்தான் நம்பி வந்திட்டன்"

"என்ன செய்கிறது பாருங்கோ அத்தானின்ர சகோதரி எண்ட படியால நானும் ஒண்டும் செய்யேலாது." என்று கையை விரித்தேன்.

"அப்ப அதை விடுவம் - இதைச் செய்து தாங்கோவன் -"

"எதை-"

நான் கேட்கத் தொடங்க அலுவலக பியோன் தலையை நீட்டினான்.

"ஐயா உங்களை வரட்டாம்" என்றான்.

சட்டென்று ஒரு நிம்மதி பிறந்தது. மகாதேவனிடம் தப்பி விடலாம்.

"அவசரம் எண்டால் போங்கோ- நான் பிறகு சந்திக்கிறன் ஐயா கூப்பிட்டால் ஏதாவது அலுவலாய் இருக்கும்."

மகாதேவன் எனக்கு முதல் கிளம்பிப் போய்விட்டார். நான் ஐயாவிடம் போனேன். ஐயா கேட்ட விபரங்களுக்கு தகவல்களைச் சொல்லி விட்டு ஹாயாக திரும்பி வந்தேன்.

நேரம் பதினொன்றரை மணியாகிவிட்டது. பன்னிரண்டு மணிக்குப் புறப்படுவதற்கு முன்னர் எதையாவது முயற்சிக்கலாமா? திரும்பி இருக்கைக்கு வர அன்றைய பத்திரிகை இருந்தது. பத்திரிகையைப் பார்க்க மனம் மரத்தில் ஏறும் சங்கதியாகி விட்டது.

தலைப்புச் செய்தி படித்து பக்கங்களைப் புரட்டிக் கொண்டு வர அந்த மனிதர் எதிரே நின்றார். கறுத்து மெலிந்த உடல் நிச்சயம் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் வாழ்பவராக இருக்க வேண்டும்.

"என்ன வேணும் ஐயா -"

அந்த மனிதர் தயக்கமாக என்னைப் பார்த்து "இஞ்சை நாங்கள் ஆறாம் வாய்க்கால் குடியேற்றத்திட்டத்தில இருக்கிறம்"

"என்ன பிரச்சனை-"

"எங்கடை காணியில ஒரு பகுதி உந்த யாழ்ப்பாண இடப்பெயர்வோடை வந்து இருந்தவை. பாவம் கஷ்டப்பட்டு வந்த ஆட்கள் எண்டு சொல்லி அப்ப இருக்க விட்டனாங்கள்."

"இப்ப-"

"எழும்ப மாட்டம் எண்டு சொல்லிச் சண்டை பிடிக்கினம்".

"இருந்தாப் போல எழும்பேலாது தானே-"

"அவை அங்கை வசதியான ஆக்கள் - ஆறு மாதத்துக்கு முதல் அவை சாமான்களை ஏத்திக் கொண்டு யாழ்ப்பாணம் போட்டினம். ஒரு கிழவன் மாத்திரம் இருந்தவர்."

"ஓ - அப்பிடியோ-"

"இப்ப அவையின்ரை நடவடிக்கையைப் பார்க்க யோசினையாய் இருக்கு. நாங்கள் வல்லமை இல்லாத ஆட்கள் தானே. கொஞ்ச நாளைக்கு கிழவர் இருக்கட்டும் எண்டு அப்ப சொன்னவை. இப்ப வேறை புது ஆக்களைக் கொண்டு வந்து இருத்தப் பாக்கினம். கேட்டால் கதையள் எல்லாம் பிழையாய் இருக்கு. அது தான் இஞ்சை பெரிய ஐயாவிட்டைக் கதைக்க வந்தனான். அவரைக் காணேல்லை".

"விதானையாரோடை கதைச்சனீங்களோ"

"இல்லை-"

"நீங்கள் போய் உங்கடை விதானையாரோடை கதையுங்கோ. அவை நினைக்கிற மாதிரி அடாத்தா எதுவும் செய்யேலாது. பெரிய ஐயா கூட்டத்திற்குப் போய் இருக்க வேணும். கொஞ்ச நேரம் நிண்டால் பெரிய ஐயாவோடையும் கதைக்கலாம்"

அந்த மனிதர் திருப்தியாகத் தலையசைத்தார். அவர் மனதில் ஒரு வெளிப்பு ஏற்பட்டது.

நேரம் பன்னிரண்டரை ஆகிவிட்டது. மேசையை ஒதுக்கிக் கொண்டு சாப்பாட்டுக்கு புறப்பட்டால் பிள்ளைகளை பள்ளிக் கூடத்தில் ஏற்றி இறக்கும் கருமங்களை முடித்துக் கொண்டு மீண்டும் அலுவலகம் வர எப்படியும் ஒன்றரை இரண்டு மணியாகிவிடும். அதன் பிறகு நேரம் வருமா?

இரண்டு மணிக்கு வந்த போது அலுவலகம் வெறிச்சோடிப் போய் இருந்தது. எதையாவது முயற்சிக்கலாம் என்று ஊக்கம் பிறந்தது. எதைத் தொடங்குவது எப்படித் தொடங்குவது



என்பது மறுபடியும் பிரச்சினையானது.

காலையில் கிடைத்த இரண்டு அனுபவங்களும் - மகாதேவன் சொன்ன பிரச்சினை, ஆறாம் வாய்க்கால் குடியேற்றத் திட்டத்தில் இருக்கும் மனிதர் சொன்ன விடயம் என்று இரண்டில் எதையாவது ஒன்றை...

என் மேசைக்கு எதிர்ப்பக்கம் இருந்த யன்னல் வழியாக குளிர் காற்று வீசியது. யன்னல் வழியாக வெளியே பார்த்தால் விரிந்த வளவுக்கு அப்பால் அந்தப் பெரிய வாகை மரத்தின் கீழ் ஒரு குடும்பம் இருந்து சமைத்துக் கொண்டிருந்தது.

நாலைந்து நாட்களாக இப்படித்தான் மூன்று கற்களையும் ஒரு சில அலுமினியப் பாத்திரங்களையும் வைத்துக் கொண்டு அவர்கள் சமைக்கிறார்கள் - சாப்பிடுகிறார்கள் - படுக்கைக்கு எங்கே போகிறார்களோ தெரியாது?

இப்போது இது மூன்றாவது பிரச்சினையாக என்னுள் முளைத்தது. மூன்றும் தனித்தனிப் பிரச்சினைகளா? ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதா?

முடிவை யார் சொல்வார்கள். விடை தெரிய வழி வேண்டும். எனவே இதையே சிறுகதையாக எழுத நினைத்து எழுத ஆரம்பித்தேன்.

❖

மக்களின் மனங்களில் நிறைந்த
ஈழநாதமே வாழ்க! வாழ்க!!

# மயில் புடவை மாளிகை



சேட்டிங், சூட்டிங், சாறி வகைகள்,
திருமண வைபவங்களுக்கேற்ற
அனைத்துப் புடவைகளைப்
பெற்றுக்கொள்ளவும்,
சிறுவர்களுக்கான றெடிமேட்
ஆடைவகைகள், பஞ்சாபி
வகைகள், சேட் வகைகள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்....

மயில் புடவை மாளிகை,
முல்லைத்தீவு.

(சி-7718)

14 ஆவது அகவையில்
கால் பதிக்கும்
ஈழநாதமே
வா
ழ்
க

காலை வேளையில் எங்கள் கருத்தினைக் கவரும்
ஈழநாதமே! உன் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

# எழிலகம் விற்பனை நிலையம்

புகையிரத நிலைய வீதி. கிளிநொச்சி.

மின்இணைப்புப் பொருட்கள்,
மின்னியல் சாதனங்கள் அத்
துடன் இலத்திரனியல் பொருட்
கள், ரீவி, டெக், கணினி, ஒலிப்
பதிவு சாதனங்கள், வீட்டு மின்
இணைப்புப் பொருட்கள், வீட்டு
நீர் வழங்கல் குழாய்கள்.

(சி-7251)



சேட்டிங் - சூட்டிங் - பட்டுச்சேலை -
பட்டு வேட்டி வகைகள் மற்றும்
அழகுசாதனப் பொருட்கள்,
கண்ணாடி பிறேமிங், ஏனைய வீட்டுத்
தளபாடப் பொருட்கள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய
ஒரே இடம்

சுகுணா
சுடர்ஒளி

இயங்கும் இடங்கள் :
பிரதான ஸ்தாபனம் : சில்வா வீதி, வட்டக்கச்சி.
கிளை : நீதிமன்றம் முன்பாக, கண்டி வீதி, கிளிநொச்சி.

# வண்ணச் சோலை

(சி-7271)

14ஆம் ஆண்டு அகவை காணும் ஈழநாதமே!
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
என வாழ்த்துகிறோம்.



# "அலை ஓசை" தொழில்நுட்பவியலகம்



யாழ். சாலை, (கரடிப்போக்கு) கிளிநொச்சி.

சகலவிதமான டிஜிற்றல் ரீ.வி, டெக், றேடியோ, போட்டோ ஸ்ரற் மெசின் என்பவற்றுடன் சகலவிதமான மின்னியல் சாதனங்கள் அனைத்தும் அதி உயர் தொழில்நுட்ப முறையில் நேர்த்தியாகவும், மிக விரைவாகவும் சீர் செய்து கொடுக்கப்படும். மற்றும் டிஸ் முறையிலான சற்றலைற் அன்ரனா என்பன சீர் செய்தும், பொருத்தியும் கொடுக்கப்படும்.

(சி-7278)



# மேற்கத்தைய மருத்துவக் கலையின் தோற்றமும், வளர்ச்சியும்

மனித சமூகத்தைத் தாக்கும் வியாதிகள் பற்றியும் அவற்றிலிருந்து மனிதனைக் காப்பாற்றும் வழிவகைகளைப் பற்றியும் கூறுவதுதான் மருத்துவக் கலை. பலநூற்றாண்டுகளில் படிப்படியாகப் பல்வேறு ஆராய்ச்சிகளாலும் இடைவிடாத உழைப்பினாலும் உருவானதுதான் இன்றைய நவீன மருத்துவக்கலை. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் தன் உடலின் மர்மங்களை அறிந்து கொள்ள ஆரம்பித்தான். ஆனால் விஞ்ஞான ரீதியாக மருத்துவம் வளரப் பல நூற்றாண்டுகளாயின.

புராதன கிரேக்கர், அக்ளிப்பியஸ் (Asklipios) என்ற தேவதைக்கு பெரிய கோயிலொன்றைக் கட்டி, நோயாளர் படுக்கைகள், விடுதிகள், அறுவைச்சிகிச்சைப் பிரிவுகள், உடற்பயிற்சிக் கூடங்கள், எண்ணெய்க்குளியல் பகுதிகள் போன்றவற்றையும் அங்கே அமைத்து, மருந்துகளுடன் சிகிச்சை அளித்தனர். கையில் ஒரு கோலும் அதைச் சுற்றிய பாம்புமாக இருந்த அத்தேவதையின் அடையாளத்தை மருந்துகளின் கடவுளாக வழிபட்டனர். உலக மருத்துவச் சின்னமாக இன்றும் அது பயன்படுத்தப்படுகின்றது.

பல விசித்திரமான நடைமுறைகளும் அக்காலங்களில் நிலவின. கற்கால மனிதன் கீல்வாதம்(Rheumatism) எலும்புருக்கி(டி.பி) நோய்களால் அவதிப்பட்டிருந்தமை ஆதி மனிதனின் எலும்புகளைத் தோண்டி ஆராய்ந்தபோது வெளிப்பட்டன. வியாதிகள் கெட்ட ஆவியால் ஏற்படுவதாக நம்பி நோயாளியின் மண்டையில் துவாரமிட்டு கெட்ட ஆவியை ெளியேற்றிவிட்டதாகச் சிகிச்சை செய்தும், கற்கால மனிதன் வந்துள்ளான். தோண்டி எடுக்கப்பட்ட மண்டையோடுகள் அதை வெளிப்படுத்தியிருந்தன. தாங்கமுடியாத தலைவலியால் அவதிப்படுபவனின் தலையோடு நாயின் தலையை அழுத்திப்பிடிப்பதால் அவனுக்குத் தீங்கு செய்யும் ஆவி அரக்கன் நாயின் தலைக்குள் புகுந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் மந்திரங்களையும் ஓதுவார்களாம்.



ஹிப்போகிரெட்ஸ்

பாபிலோனியாவுக்கும் எகிப்துக்குமிடையில் வாழ்ந்த ஹீப்ருக்கள், நோய்களைத்தருவதும், குணப்படுத்துவதும் கடவுள் தானென்ற கொள்கையில் மருத்துவர் மீது நம்பிக்கையற்றிருந்தனர்.

புராதன எகிப்தியர் மம்மிகளைப் (Mummy) பாடம் செய்வதற்கு முன் சில உடற் கூறுகளை அகற்றியிருந்தமையைப் பார்க்கும்போது அவர்கள் மனித உடற்கூறு பற்றி (ANATOMY) தெரிந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர் என்பது வெளிப்படுகின்றது. காயங்களுக்குக் கட்டுப்போடும் முறையும், வெட்டுக் காயங்களைத் தைக்கும் முறையும், எலும்பு முறிவுகளை சட்டம் வைத்துக்கட்டி நேராக்கும் முறையும் அவர்களால் கண்டறியப் பட்டவையே. எகிப்திய மன்னரின் பிரமிட் கல்லறைகளுக்குள் கண்ட மருத்துவக் கருவிகள் இதை உறுதிப்படுத்துகின்றன.



அம்ராஸ் பாரே

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவில் புகழ்பெற்ற ஹீரோபிலஸ் (Herophillus) என்ற மருத்துவர் நாடித்துடிப்பைக் கொண்டு நோயின் தன்மையைக் கண்டறிந்த முதலாவது நபராவார். நீர்க் கடிகாரம் என்ற கருவியைப் பயன்படுத்தி அதைக் கண்டறிந்தார். அக்காலத்தில் ரோமர்களும் மதிநுட்பம் வாய்ந்தவராகவும், இயற்கை வைத்திய மூலிகை மருந்துகளும், பெட்டகங்களுமாய் நோயாளரைக் கவனிப்பதில் வல்லவராயிருந்தனர். கி.மு.46இல் யூலியஸ்சீசரும் கிரேக்க வைத்தியத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் ஒருவராவார். தமக்கு நோய் அணுகாத வகையில் ரோமானியர் பிரமாண்டமான வாய்க்கால்களைக் கட்டிச் சுத்தமான குடிநீரை நகர்களுக்கு வரவழைத்தும், பூமிக்கடியில் வடிகாலமைத்துக் கழிவுகளை நகருக்கு வெளியே அகற்றியும் சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து வந்திருந்தனர்.

மந்திரங்களோடு , மூலிகைகளின் குணம் தெரிந்த மருத்துவம் இந்தியாவில் தோன்றினாலும், கி.மு.3000 ஆண்டில் சீனரே அதில் மேம்பட்டு விளங்கினர்.

கி.மு.460 இல் பிறந்த கிரேக்க நாட்டவரான ஹிப்போகிரேட்ஸ் (Hippocrates) என்பவரை மருத்துவத்தின் தந்தை என மேற்கத்தைய நாட்டினர் அழைத்தனர். நோய்க்கான காரணங்களையறிய முற்பட்ட முதல் நபரும் அவரே. இன்றும், மருத்துவம் பயின்று தொழில் நடத்த வெளிவருவோர் ஹிப்போகிரேட்ஸின் சத்தியப் பிரமாணங்களை உறுதியெடுத்துக்கொள்கின்றனர். இது (Hippocratesoth) எனப்படுகின்றது. அக்கால மருத்துவ முறைகள் பெரும் பாலும் அறிவியல் ஆராய்ச்சிகள் சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக மூட நம் பிக்கைகளும், மதச்சடங்குகளும் நிறைந்த ஒன்றாகவே இருந்தன.

நோயை முறியடிப்பதற்கு மருந்தும் மதமும் கலந்த ஒரு மருத்துவத்தை மொசப்பத்தேமியர் நாடியதற்கு, நோயென்பது தெய்வத்திடமிருந்துவரும் தண்டனை எனவும் கருதிவந்தமையே காரணமாகும். அதன் பின்வந்த எகிப்திய மருத்துவமும், மதத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வாறு ஆரம்பகாலங்களில் மருத்துவம் செய்து சுகமளிப்பவர்கள் மத ரீதியில் உயர்ந்தோராகவும் மதிக்கப்பட்டனர்.

ஆனால் காலப்போக்கில் மருத்துவத்தை அதிகமாக அறிவியல் கண்ணோட்டத்துடன் பார்க்க ஆரம்பித்தார்கள். அந்தவகையில், அறிவியல் முறையில் சுகமளித்தவர்களில் ஹிப்போகிரேட்ஸ் தலைசிறந்தவர். அவர் மருத்துவத்தை பகுத்தறிவுடன் அணுகுவதற்கும் அடித்தளமிட்டார். வியாதி என்பது தெய்வத்திடமிருந்து வரும் தண்டனை என்ற எண்ணத்தை ஒதுக்கிவிட்டு, அது இயல்பாகவே வரும் ஒன்றென்பதை நிரூபித்தார். உதாரணமாக, காக்காய் வலிப்பு நோய் கடவுளால் மட்டுமே குணப்படுத்த முடியுமென்றும், அது புனித நோய் (Sacred disease) எனவும் நெடுங்காலமாக நம்பப்பட்டு வந்தது. "பிற வியாதிகளைப் போல் புனித வியாதி என்ற எதுவும் கடவுளிடமிருந்து வருவதாகவோ, புனிதமானதாகவோ எனக்குத் தோற்றவில்லை" என்ற அவர் இயல்பாக வரும் ஒன்றென்றே கூறினார். மேலும் பல்வேறு வியாதிகளுக்கு அறிகுறிகளைக் கண்டறிந்து, பிற்கால சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக அவற்றைப் பதிவு செய்து வைத்ததிலும் அவர் முதன்மையானவர்.



எட்வர்ட் ஜென்னர்

கி.பி.164 இல் ரோம சாம்ராச்சியத்துக்கு வந்த கிளாடியஸ் கேலன் (Gladious Gelen) என்ற கிரேக்க மருத்துவர் புதுமையான அறிவியல் ஆராய்ச்சிகளிலிறங்கி, தமனி என்ற இரத்தக் குழல்களின் மூலம் உடலில் இரத்த ஓட்டம் நிகழ்கிறதென்ற உண்மையைக் கண்டறிந்தார். மனிதரையும், விலங்குகளையும் அறுத்துப் பார்த்ததன் அடிப்படையில் உடற்கூறு சம்பந்தமான நூலொன்றையும் அவர் எழுதியதால் பல நூற்றாண்டுகளாக மருத்துவர்கள் அதைப் பயன்படுத்திவந்தனர்.

1514 இல் புறூசெல்சில் பிறந்த அன்ட்ரியாஸ் வெசாலியஸ் 'மனித உடலின் வடிவமைப்பு' என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதினார். ஆனால் கேலன் கூறியதற்கு மாறாக அதிலிருந்ததால், அதற்குப் பலமான எதிர்ப்புக் கிளம்பியது. எனினும் அது நவீன உடற் கூறியலுக்கு அடித்தளமாகவும் அமைந்ததுடன், அவர் ஒரு முக்கிய மருத்துவ ஆராய்ச்சியாளராகவும் கணிப்பிடப்பட்டார்.

இருதயத்தையும், இரத்த ஓட்டத்தையும் பற்றிய கேலனின் கொள்கைகளும் காலப் போக்கில் காலாவதியாகி விட்டன. பின்வந்த ஆங்கிலேய மருத்துவரான வில்லியம் ஹார்வே, மிருகங்களையும், பறவைகளையும் அறுத்து ஆய்வு செய்வதில் தீவிரம் காட்டிப் பல வருடங்களைச் செலவழித்தார். 'விலங்குகளின் இருதயம் மற்றும் இரத்தத்தின் இயக்கம்' என்ற ஆங்கில நூலில் தமது கண்டுபிடிப்புகளை ஹார்வே 1628 இல் வெளியிட்டதையடுத்து அவம திக்கப்பட்டுத்தாக்கப்பட்டார். ஆனால், அவரது கண்டுபிடிப்புகள் மருத்துவத் துறையில் ஒரு திருப்பமாக அமைந்தன. அத்துடன் உடலின் இரத்த ஓட்ட மண்டலக் கண்டுபிடிப்பும் உண்மையானதாயிருந்தது.

அறுவைச் சிகிச்சை முறைகளிலும் அதிக முன்னேற்றங்கள் ஏற்பட்டி ருக்கின்றன. இடைக் காலங்களில் அறுவைச் சிகிச்சை என்பது எப்போதுமே சிகை அலங்கரிப்பாளரின் பணியாகவிருந்தது. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸ் நாட்டின் அம்ராஸ் பாரே என்ற சிகை அலங்கரிப்பாளரை நவீன நாளைய அறுவைச் சிகிச்கையின் தந்தை எனவும் குறிப்பிட்டனர். அவர் பிரான்சிலுள்ள நான்கு அரசர்களிடம் பணியாற்றியதோடு அறுவைச் சிகிச்கைக்குத் தேவையான எண்ணற்ற கருவிகளையும் கண்டுபிடித்தவராவார். 19ம் நூற்றாண்டின் அறுவை வைத்தியருக்கு இருந்த பிரச்சினை என்னவென்றால், அறுவைச் சிகிச்சையின் போது வலியைக் குறைக்க முடியாது போனமைதான். ஆனால் 1846 இல் பல் அறுவை வைத்தியரான வில்லியம் மோர்டன் என்பவர் சிகிச்சையின் போது மயக்க மருந்தின் பாவனையை அறிமுகப் படுத்தினார்.

1895 இல் வில்ஹெம் ரன்ட்ஜன் என்ற ஜெர்மனியர் மின்சாரத்தைக் கொண்டு ஆய்வு செய்கையில் அதன் கதிர்கள் எலும்பில் பாயாமல் சதைவழியே பாய்வதைக் கண்டார். அக்கதிர்களின் தோற்று மூலத்தை அவர் அறியவில்லை. ஆகவே அவர் அதை 'X' கதிர்களென அழைத்தார். ஆங்கிலத்தில் இன்றும் அப்பெயர்தான் வழங்கப்படுகிறது. அவரது கண்டு பிடிப்பு அறுவைச் சிகிச்சையில் புதிய புரட்சியை உண்டுபண்ணியது. அறுவை வைத்தியர்களால் இப்போது உடலில் கத்தியை வைக்காமலேயே உள்ளுறுப்புகளைக்காண முடிகிறது.

காலங்காலமாக பெரியம்மை போன்ற தொற்று நோய்கள் தொடர்ந்தவாறு



லூயி பாஸ்டர்

பரவலாகத் தொற்றி பயத்தையும் மரணத்தையும் ஏற்படுத்தின. இஸ்லாமியரான ஆர்-ராஸூ என்ற பேர்சியர், அக்கா

**ஜெனன்**

லத்தைய புகழ் பெற்ற மருத்துவர், பெரியம்மையைப் பற்றி மருத்துவ ரீதியில்

(38ம் பக்கம் பார்க்க)

இன்று பதின்நான்காம் அகவையில் காலடி பதிக்கும்
ஈழநாதம் மக்கள் நாளேட்டினை
யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர்,
பணியாளர்கள் வாழ்த்துகின்றனர்.

மருந்துப் பொருட்களை மொத்தமாகவும்; சில்லறையாகவும்
பெற்றுக்கொள்வதற்கும்

பஜாஜ், முச்சக்கரவண்டி, டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி உதிரிப்பாகங்களினை
சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

இன்றே நாடுங்கள்

# யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்

127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை மருந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட முகவரும், டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி பஜாஜ் முச்சக்கரவண்டி, உதிரிப்பாகங்கள் விற்பனை முகவரும்.

(சி - 7920)

நற்றமிழ் வளமும் காத்து, நலமுறு சேவைசெய்து
நயமுடன் செய்தி சொன்ன
ஈழநாதமே!
புது அகவை காணும் வேளை
அகம் நிறைத்து வாழ்த்துகின்றோம்.

# மதி உணவகம்

பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.

(சி-7720)

இந்நாளில் எமது இதயபூர்வமான
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
ஈழநாதத்திற்கு



பல சரக்குப் பொருட்கள், எரிபொருட்கள், பான்சி அயிற்ரம், ஆயுள்வேத மருத்துவ மூலிகைப் பொருட்கள், கோவில் அபிசேகப் பொருட்கள் அனைத்துக்கும் நாடவேண்டிய இடம்: துணுக்காய் சாலை துணுக்காயில் அமைந்துள்ள

தகவல்:
உரிமையாளர்
S. வரதலிங்கம்.

அன்று - விநாயகர் களஞ்சியம்
இன்று **திருமுதல் துலைவன் களஞ்சியம்**

(2906)

## 14 ஆம் ஆண்டில்
## காலடி எடுத்து வைக்கும் ஈழநாதமே!





ஈழத்தமிழர் இன்னல் நீங்குக!
ஈழநாதம் எங்கும் ஓங்குக!

ஈழநாதம், உடலழகு இல்லா நங்கை ஒருத்தி உடையாலும், அணிகலன்களாலும்
தன்னை அலங்கரித்தாற் போல நடவாள் என்பது உறுதி.

# தமிழீழ போக்குவரவுக் கழகம்

நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-7719)

# சிறப்புக் கவிதைப் பூக்கள்...

## பிறப்பின் மகிமை

என்னமாய் இனிக்கிறதென்
பிறப்பின் மகிமையை எண்ணுகையில்.
என் பேரை உச்சரிக்கும்
உதடுகளிலும் எவ்வளவு மகிழ்ச்சிகள்.

என்னைக் கருத்தரித்துக்கொள்ளவும்
காலம் கடந்தாவது குழந்தையென
கைகளில் பெற்றுக்கொள்ளவும்
என்னமாய் சிரமப்பட்டார்.
மாண்புபெற அந்த மனிதர்கள்.

பேறுகால வலியறியா மனிதங்களோ!
பெற்றோரையும்....
குழந்தையென்னையும் சபிக்கின்றார்.
ஒன்றுக்கும் உதவாத பிள்ளையென்றும்,
குறைப்பிரசவமென்றும்,
வாய்க்கு வந்தபடி திட்டுகின்றார்.
முளையிலேயே எனைக்கருக்கவும்
புதைத்துத் தொலைக்கவும் ஆரவாரம் இடுகின்றார்.

மாண்பு புரிந்த மனிதங்களோ
பிறந்த சேதி அறிந்த நாள் தொட்டு
திக்கெங்குமிருந்து திரண்டு வந்தார்.
வாழ்த்துக்கள் பாடி நின்றார்.
எனைத் தத்தெடுக்கவும் பலர் ஆதங்கப்பட்டார்.
அன்பளிப்பும், ஆகாரமும் கூடத் தந்தார்.

என் வளர்ச்சிப்பாதையில் இவர்கள்
படிக்கற்களாகவும்...
முன்னவர்களோ
தடைகளாகவும், இடர்களாகவும்
என்ன விந்தையடா?
என் பிறப்பின் பின்னணியில்
இருபக்க எதிர்வு கூறல்களா?

இருந்தும் எனக்குள் தெளிவிருக்கிறது
என் பிறப்பில்..
பழுதோ அன்றி குறையோ ஏதுமில்லை.
முகவரி முற்றுப்பெறாத காகிதமா?
தத்தளிக்கும் கப்பலைக் கரைசேர்க்கும்
கலங்கரையா?
கண்களில் மயக்கமும், மந்தமும்
களைந்த பின்னால் பார்ப்பவருக்குப்புரியும்.
என் பிறப்பின் மகிமை
அவை களையப்படாதவரை
இருளாகவும், தரமற்றதாகவுமே
என் பிறப்பு
அவர்களுக்கிருக்கும்.

அ.பி.குணா

## எதுவென்றாலும் நாம் தயார்

நாம் வாழவேண்டுமென்று
தங்களைக் கொடுத்தனர்.
ஊர் விடிய வேண்டுமென்று
ஊனினை உருக்கினர்.
இலட்சியம் தனை வெல்ல
தானையும் தயாராய் நடக்குது.
குண்டு மழை பொழிந்து,
குருதி பெருக்கெடுத்தாலும்,
எதிரியவன் பாய்ந்து,
கொடும் போர் தொடுப்பினும்,
நாம் பணியோம் வீரப்புலியாய்
பாய்ந்து பகை வெல்வோம்.
பயந்து படைசிதறத் தம்மையும்
வெடியுடன் அணைக்கும் வீரர் உளர்.

நாடு நாடாய் கடல்கடந்த நாட்டில்
சமாதானம் பேசுகிறோம்.
விருப்புடன் எம்முரிமை கொடுத்திடில்
மகிழ்ச்சியாய் ஏற்றிடுவோம்.
பொறுப்புடன் நடந்து கொண்டால்
நாமும் நீங்களும் உறவாகலாம்...
போர்தான் தீர்மானிக்குமென்றால்
அதற்கும் நாம் தயார் தான்.
பலமுடன் தான் உங்களுடன்
பேச விளைந்தோம்.
நாம் பலமடையவல்லவே!
தீச்சுவாலை அணைந்தது புரியுமே!
அலை ஓயாது அடித்ததும் தெரியுமே!

நம்பிக்கையாய் நடந்திட்டால்
நாடு வளம் பெறும்.

நாற்றைப் பிடுங்க நினைத்தால்
நாறிக்கிடப்பீர் வீதியிலே.
ஒன்றுமட்டும் உறுதியாய்
உங்களுக்குச் செப்புகிறோம்.
தொன்று தொட்டு தமிழர்
வாழ்ந்த பூமியிது.
நன்றாய் நாமும் நீங்களும்
நாட்டில் நலமாய் வாழ்ந்திட,
வேண்டாம் யுத்தம் போதுமென்று
நீங்களும் நினைத்திட்டால்....
எம்மை எம்மையே ஆளவிட்டு
உங்களின் இடத்தில்
இருந்து விடுங்கள்.

பல்லாயிரம் எம்வீரரும்
களப்பலியாகிய மண்.
அவர்களின் கனவுதனையும்
கலைந்திட விடமாட்டோம்.
மறுத்து எம்மை விரட்டிட
நீங்கள் நினைத்தால்...
பொறுப்பை ஏற்றிடுங்கள்,
போருக்கு வித்திட்டவர்
நீங்களென்று.
யாருக்கும் அடிபணியோம் நாம்.
வீரம் விளைந்த மண்ணில் தான்
பிறந்தோம் வீரராய்.
வீரத்தலைவன் பின்தான்
நாம் அணிவகுத்தோம்.
வீரர் கனவுதனைச் சுமப்போம்.
வீறுகொண்டு நடப்போம்.
எம் இலட்சியம் வெல்வோம்!

நடா.மருது

## தர்மம்

சிறப்புற நடக்கிறது
சித்தி விநாயகர் ஆலயத் திருவிழா
நாற்பது மைலிலிருந்து வந்த
நல்லதம்பியின்
நாதஸ்வரக் கச்சேரி,
சின்னக்கிளியின் வில்லுப்பாட்டு
அயலூரிருந்து வருவோர்க்கு
ஐந்து மூடை அரிசியில்
அன்னதானம் என்று
ஆயிரங்களைச் செலவழித்து
அமர்க்களமாய் நடக்கிறது
திருவிழா!
பக்குவமாய் மடிக்கப்பட்ட
பச்சைத்தாள் தெரியும் சேட்,
பளபளக்கும் பட்டு வேட்டி என்று
பணக்காரப் பகட்டுத் தெரிய
பூசை முடிந்து வருகிறார்
ஆயிரங்களைச் செலவழித்த - அன்றைய
உபயகாரர்.
ஆலய முன்றலில்
ஐந்தாறு சில்லறைகளுடன்
அமர்ந்திருந்தோரை
அலட்சியமாய்ப் பார்த்துவிட்டு
மனமுவந்திருக்கிறார்
ஒரு ரூபாய்.

மா. தமிழவன்

## மனித எலும்புக் கூடு

மு.நாகேஸ்வரன்(ஈசன்)

எங்கள் பாதங்களுக்குக் கீழ்,
பூக்களோ, முட்களோ
இல்லை.
கிடப்பது எல்லாம்,
மனித எலும்புக் கூடுகளே!

என்னையும் தம்பியையும் — என்
அம்மா தான் வளர்க்கின்றார்.
அப்பாவை — அந்த
அரக்கன் கொன்றுவிட்டான்!

எங்கள் பாதங்களுக்குக் கீழ்
இப்போ — முட்கள் இல்லை,
கிடப்பதெல்லாம்,
மனித எலும்புக்கூடுகளே!

அந்தச் சுடுகாட்டு வழியாகத்தான்,
எங்கள் அம்மா — தினமும்,
பாதங்களுக்கு பாதணிகளும்
இன்றி,
ஊருக்குள் உழைப்பிற்குப்
போகிறாள்...
என் அம்மாவின் பாதங்களில்,
எத்தனை எலும்புகள்,
குத்திக்குத்தி.........காயங்கள்!

என்னையும் தம்பியையும் —
தினமும்
எங்கள் அம்மா தான்
சுடுகாட்டு வழியாக
தன் மார்போடு அணைத்து
தூக்கிச் சென்று
பள்ளியில் விடுவாள்!

இப்போது,
நாங்கள் வளர்ந்துவிட்டோம்.
நடந்தே பள்ளி செல்கின்றோம்,
எங்கள் அம்மா,
எங்களைத் தூக்கிச் செல்லும் போது
எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள்...?
இப்போது தான் தெரிகின்றது!

எங்கள் பாதங்களுக்குக் கீழ்,
முட்கள் இல்லை.
கிடப்பது எல்லாம்,
மனித எலும்புக்கூடுகளே!

தம்பி,
பள்ளி செல்லும் போது,
கால் தடக்குப்பட்டு
கீழே விழுந்தான்.
அது, கல் அல்ல
மண்டை ஓடு.
அடையாளம் கண்டு கொண்டோம்.
அது,
எங்கள் அப்பாவின் மண்டையோடாம்.

அம்மா கண்ணீர் வடித்தாள்!

தம்பிக்கு எதுவும் புரியாது...
எங்கள் அப்பா — ஏன்
இப்படி இருக்கிறார் — என்று
அம்மாவிடம் கேட்டான்.
எப்படிப் பதில் சொல்வது
அவனுக்குப் புரியும்படி?

கணவன் இல்லாது,
எங்கள் அம்மாவைப்போல்
இன்று,
எத்தனை அம்மாக்கள்,
அல்லலுறுகின்றனர்!
எங்கள் பாதங்களுக்கு க் கீழ்,
முட்கள் இல்லை.
கிடப்பது எல்லாம்,
மனித எலும்புக்கூடுகளே!

இப்போது....
மரம், செடி, கொடிகள்
அனைத்தும்,
பச்சையாக வளர்வதில்லை.
எங்கள் தமிழர்களின் உதிரத்தை,
நிலத்தில் இருந்து உறிஞ்சி,
சிவப்பு நிறமாக
வளர்கின்றன!

எங்களை விட்டுப் பிரிந்த
உறவுகள்,
இப்போது....
மரம், செடி, கொடிகளுக்கு.
உரமாகி
உறுதியாக இருக்கின்றனர்!

எங்கள் பாதங்களுக்குக் கீழ்
முட்கள் இல்லை.
கிடப்பது எல்லாம்,
மனித எலும்புக்கூடுகளே!

புதுப்பொலிவு பெற்று மிளிரும் "ஈழநாதமே"
புதிய அகவைக்குப் புறப்படும் வேளை
வாழ்த்துகின்றோம்.

# பூந்தளிர் நகை மாடம்

"அசல் 22 கரட் தங்க ஆபரணங்களை
குறித்த தவணையில் பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய இடம்"

முன்பு புதிய யாயினி
எனும் பெயரில்
இயங்கி வந்தது.
தற்போது
பூந்தளிர் எனும்
பெயர் மாற்றத்தோடு
செயற்படுகிறது என்பதை
வாடிக்கையாளர்களிற்கு
மகிழ்ச்சியுடன்
அறியத் தருகிறோம்.





முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

(சி-7254)

பதினான்கு ஆண்டுக்குப் பாய்ந்து புதுமை
பல படைக்கப் புறப்பட்ட எமது
"ஈழநாதமே" எம் இனிய வாழ்த்துக்கள்!
உரித்தாகுக இவ்வாண்டில் ....



பணிப்பாளர், பணியாளர்கள்,
சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,
சுன்னாகம்.

(சி-7917)



ஈரேழு அகவை காணும் ஈழத்தின் நாதத்திற்கு இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்!

# ஈஸ்வரன்
## பொதிகள் போக்குவரத்து சேவை

எமது தலைமைக் காரியாலயத்தில் நீங்கள் ஒப்படைக்கும் பொருட்களை பாதுகாப்பாகவும், அதே நேரத்தில் துரிதமாகவும் மூன்றே மூன்று தினங்களுக்குள் மிகவும் குறைந்த கட்டணத்தில் நாம் உரிய முகவரியில் ஒப்படைப்போம்.

A~9 வீதியூடாக தலைநகரில் இருந்து யாழ் மண்ணுக்கு முதன் முதலாகப் பொதிகள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்த பெருமைக்குரியவர்கள்.

**யாழ்நகரில்**
இல. 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 021-222-2813

**தலைமைக் காரியாலயம்:**
இல. 132, டாம் வீதி, கொழும்பு -12.
Hot line -0777-674119 T.P. 074- 714312

**வவுனியாவில்**
இல. 148, கண்டி வீதி,
வவுனியா.
T.P- 024-22497

(சி-7903)



கடந்து வந்த பாதையெங்கும் நாதமே !
நீ கண்டு கொண்ட இன்னல் யாவும் தொடரும் உன் பணிக்கு
என்றும் தூய நல் உரமாகட்டும்.

- ✳ சல்வார் (பஞ்சாபி) வகைகள்
- ✳ ஸ்கேட், பிளவுஸ் வகைகள்
- ✳ சாறி வகைகள்
- ✳ ஆடவர்களுக்கு ஏற்ற சூட்டிங் சேட்டிங் வகைகள்
- ✳ சிறுவர்களுக்கு ஏற்ற சூட்டிங் வகைகள்

ஆகியவற்றை கிளிநொச்சி நகரில் பெற்றுக் கொள்ள

# மலரவன் புடைவை வாணிபம்

யாழ் சாலை, கிளிநொச்சி.



(சி-7918)

# “நாங்கள் எங்கட வீட்ட போகவேணும்.

# நீங்கள் உங்கட வீட்ட போங்கோ”

"நாங்கள் எங்கட வீட்ட போக வேணும்.

நீங்கள் உங்கட வீட்ட போங் கோ".

இந்தக்குரல் மிகவும் சாதாரண மானது போலத் தெரியும்.

மிகவும் இலகுவான தமிழில், இயல்பான நடையில், கிராமத்து வழக்கில் எளிமையாகத் தெரியும்.

ஆனால், இன்றைக்கு தமிழீழத்தின் முக்கிய அரசியல் நிலையில் இருந்து மேற்கிளம்பிய குரலாகவும் இந்தக் குரல்தான் இருக்கிறது.

இந்தக்குரல் கிளர்ந்தது ஒரு கிராமத்தில், தங்கள் சொந்த இருப்புக்களை இழந்து எல்லா உடைமைகளையும் உறவுகளையும் தொலைத்து விட்டு, இடம்பெயர்ந்து வந்து அகதிமுகாமில் வாழும் மக்கள் கூடிய ஒரு கிராமத்தில்.

வவுனியாவில் இந்த முகாங்களை நலன்புரிமுகாம் என்று செல்லமாக அழைப்பார்கள்.

பாவற்குளம், பூவரசங்குளம் பகுதிகளிலே கடந்த சில ஆண்டு களாக அரங்கவேலைகளிலே ஈடு பட்டு வருகிறது "அரங்க செயற் பாட்டுக்குழு" அல்லது Theatre Action Group (TAG) எனும் அமைப்பு. பூவரசங்குளம் ம.வி யில் மாணவர் மத்தியில் ஆரம்பிக்கப் பட்ட இந்த அரங்க வேலை, 1999 யூன் மாதம் மெல்ல ஆரம்பித்தது இந்த வேலை.

செயற்பாட்டுக்குழு.

மேற்சொன்னவாறு பூவரசங்குளம் பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்களுடன் அரங்கப் பயிற்சிகளில் ஈடுபட்டபோது பல அனுபவங்கள். அந்த இளையவர்கள், அரங்கிலே ஆடியும் பாடியும் விளையாடியும் மனந்திற ந்து கதையாடியும், தமக்குள் ஆழ்ந்து கிடக்கும் விருப்பு களை, தேவைகளை, பலத்தை உணர்ந்து கொண்டனர். தமது உள்மன நெருப்பு தீயவற்றைத் தீய்க்கும் சக்தி மிக்கது என்பதைக் கண்டு கொண்டனர்.

தம்முரையும் தமது அயலையும் ஆட்டிப்படைத்த 'கசிப்பு' எனப்படும் சட்ட விரோத விஷச் சாராயத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடும் நோக்குக் கொண்டனர்.

1999 மார்கழி மாதம் 26ம் திகதி ஒரு மழைநேரத்து மாலைப் பொழுதில் மனதைக் கிளறும் ஒரு அரங்க வடிவத்தோடு இலங்காரலூர் கிராமத்தில் களமிறங்கினர். கசிப்பின் கொடுமையினால் பாதிக்கப் பட்டிருந்த உள்மன உணர்வுகள் கொதிப்படைந்து பொங்கி வெளிப்பட்டபோது, அந்த ஆற்றுகைக் களத்திலேயே பார்த்து நின்ற கிராமத்து மக்கள் பங்களிக்க முன்வந்தனர். கசிப்புக்கெதிராய் கிராமம் அணிதிரண்டது.

திரண்டு வந்த மக்கள் சேனை

தமிழ்" எனும் மக்கள் எழுச்சிப் போர் அரங்குக்கும் பொங்குதமிழ் எழுச்சிக்கும் நிறையவே தொடர்புகள் உண்டு. சுருக்கச் சொல்வதாயின் பொங்குதமிழ் எழுச்சி என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உணர்ச்சி வெளிப் பாடுகண்ட ஒரு பேரரங்குதான்.

கடந்த தை 17ஆம் திகதி பொங்குதமிழ் எழுச்சியின் 2ஆம் வருட நினைவெழுச்சி யாழ். பல்கலைக் கழகத்தில் நிகழ்வு கண்டது. மட்டுநகர், திருமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பொங்கு தமிழ் எழுச்சிக்கான மக்கள் பிரதிநிதிகள் ஒன்று திரண்டனர். உணர்வெழுச்சியுடன் நிகழ்வு நடைபெற்றது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்.

"எமது நிலத்தை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும்"

என்ற தொனிப் பொருளிலே பிரகடனம் செய்யப் பட்டது. யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காலத்தின் தேவை கருதி இந்த நிகழ்வை ஒழுங்கு படுத்தியிருந்தது.

மேற்குறிப்பிட்ட அந்தத் தீபாவளிக் காலத்தை அண்டித்தான் பாவற்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணு வத்தினரும் பொலீசாரும் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கிராமங்களில் நல்லுறவுக் குழுக்கள் அமைத்தல், பாடசாலைகளில் சிரமதானம் செய்தல், நிவாரணங்கள் வழங்க முற்படுதல் என்று மக்களுக்குத் தமது நல்லெண்ணத்தைக் காட்ட அவர்கள் அவதிப்பட்டனர். இதைக் கண்டு கொதிப்படைந்தனர் கிராமத்து இளைஞர்கள். "கிராமிய பண்பாட்டு அரங்கக் குழு" இந்தக் கொதிப்பை அரங்காக்கியது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் புண்பட்டுப் போயிருந்த மக்களின் நெஞ்சுகளில் அந்த வடுக்கள் இன்னும் ஆறாமலே இருந்ததை சிறிலங்கா வின் இராணுவச் சிப்பாய்களும் அதிகாரிகளும் தமது புத்திக் கூர்மையினால் கண்டு பிடித்திருக்க நியாயமில் லைத்தானே. ஏனெனில் அவ்வளவுதூரத்துக்கு கடந்த காலங்களில் "Round up" நடந்த கிராமங்கள் இவை.

இந்த "Round up" என்ற சொல் தமிழ்ச் சொல்லா ஆங்கிலச்சொல்லா என்று பிரிக்க முடியாத அளவுக்கு கிராம மக்களுக்குப் பரிச்சயப்பட்டுப் போன ஒரு சொல்.

"நீங்கள் முந்தியும் சுத்தி வளைச்சனீங்கள். இப்பவும் எங்களை ஆசை காட்டி வளைக்கவோ போறியள்"

இப்படி முணுமுணுத்தனர் மக்கள்.

இந்த முணுமுணுப்பை வெளியே கொண்டு வந் தனர் கிராமிய பண்பாட்டு அரங்கக் குழுவினர். இந்தச் சுற்றி வளைப்பு அல்லது Round up என்ற காட்சியே அவர்கள் அரங்காற்றுகைக்கான பெரும் படிமமாய் விரியலாயிற்று.

தீபாவளிக்காலமல்லவா? சேவல் பிடிக்கும் காட்சி கண்முன்னே வந்தது. கோழிச்சேவலை மெல்ல "பா" க்காட்டி அரிசி,தானியம் போட்டு கூட்டுக்குள் அடைத்துப் பிடிப்பார்கள். அதற்குள் அகப்படவில்லையென்றால் கலைத்துக்கொட்டனால் எறிந்து முறித்துப்பிடிப்பார்கள் கிராமத்து மக்கள். இரண்டுமே கொன்று தின்பதற்குத் தான்.

இந்தப் படிமங்களோடும் காட்சிகளோடும் தான் அரங்க இளைஞர்களும் யுவதிகளும் இடம் பெயர்ந்து மக்கள் முடங்கிப் போயுள்ள அந்தச்சிறு குடிசைகள் நிறைந்த முகாங்கள் உள்ள கிராமங்களுக்குள் புகுந்தனர். அரிசி தானியத்துடன்கரப்பும்கொண்டு வந்தனர். சேவல்கள் அகப்படவில்லை. கறுப்புத் துணிகள் தலையிலே இறுக்கிக்கட்டிய மனிதர்கள் கொட்டன் தடிகளுடன் பாய்ந்து பாய்ந்து அதட்டி அதட்டி அங்கு நின்ற பெண்மயிலும் சேவல் ஒன்றை கலைத்துத் துரத்தத் தொடங்கினர். சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர் என்ற வேறுபாடு இன்றி மக்கள் உசாராகினர்.சேவலுக்குப் பாதுகாப்புக்கொடுக் கத் தாங்கள் முன் வந்தனர்.

கறுப்புத்துணிக் காரர் சேவலைத்துரத்த, மக்கள் கறுப்புத் துணிக் காரரைத் துரத்தினர். முன்னர் முணுமுணுத்தவர்கள் இப்போது உரக்கப் பேசினர்.

"எங்களை நீங்கள் அற்ப சொற்ப சலுகை காட்டி வளைக்க வேண் டாம். வெளியால போங்கோ" "உங் கட அரிசியும் பருப்பும் கிடுகும் எங்க ளுக்குத் தேவையில்லை."

"இவ்வளவு நாளும் செய்த தெல்லாம் நாங்கள் மறக்கேல்ல, இன்னும் எங்கட காயம் மாறேல்ல."

இப்படியே மக்கள் பலத்த வாக்கு வாதம் செய்தனர். ஆற்றுகையில் நின்றிருந்த வேலைச் சுற்றிக் கவச மாக நின்றனர்.

"இனிக் கிட்ட நெருங்கினால் எங்கட சின்னப் பிள்ளையளையும் சுடப் பழக்கி உங்களை எதிர்க்க விடுவம் " இப்படிச் சொன்னார் நடுத்தர வயதுத் தந்தையொருவர்.

"இவ்வளவு நாளும் உங்கட நல்ல மனம் எங்க போனது" இது தாயொருவரின் கேள்வி.

"எங்கட நிலத்தில எங்கட வீட்டில இருந்தமெண்டால் நீங்கள் ஏன் எங்களுக்கு அரிசியும் பருப்பும் தருவான்" இது மூதாட்டியொருவர்.

வாக்கு வாதம் முற்றிப்போயிற்று உணர்ச்சிக் கொந்தளிப்பு அதிக ரிக்கிறது. அடிபட்டு அடைத்து வைத் திருந்த உணர்வுகள் வெளிக் கிளம்பின.

"எங்கட வீட்ட நாங்கள் போக வேணும்.
உங்கட வீட்ட நீங்கள் போங் கோ".

இந்தக்குரல் எல்லோரிடமிருந்தும் மேற்கிளம்பியது. வானம் முட்ட அவர்கள் குரல் முழங்கியது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்." என்று கிராமத்து மக்கள் அணி திரண்டு நின்ற காட்சி அரங்க உறவுகளின் நெஞ்சைக் கரைத்தது. எல்லோருமே உணர்ச்சி கலந்தனர்.

அடுத்த நாட்களில் கிராமத்துக்கு மேற்படி அலுவல்களுக்காய் வந்தி ருந்த பொலிசார், இளைஞர்களும் மக்களும் தெளிவு கண்டு திகைத்தனர். எந்தக் குழுக்களும் அமைக்க முடியாது திரும்பிச் சென்றனர்.

"விடுதலையுடன் கூடிய சமா தானத்துக்காக எமது மக்களை நாங்கள் தயார்ப் படுத்துவோம்" என்று தெளிவுடன் உள்ளனர். அரங்க நண்பர்கள். இனி எந்தப் பேய்வந்தாலும், துட்ட ஆவி வந்தாலும் அதனை விரட்ட தமது அரங்குடன் அவர்கள் காத்திருக்கி றார்கள். எமது மக்களை உண்மை யான விடுதலை நோக்கி அணி திரட்ட 'அரங்கு' தயாரகவே உள் ளது. காலம் அறிந்து அது தன் வேலையைச் செய்ய இன்னும் வாய்ப்புகள் மலர வேண்டும்.



## மக்கள் அணிதிரட்டலில் அரங்கு

'அரங்கு' என்று சொல்லுகிறபோது அது தனியே நாடகம் என்று மட்டுமல்ல, ஒருமேடையில் ஆற்று கை செய்யப்படுகிற நிகழ்வு மட்டுமல்ல, அவை தாண்டி பல்வேறு பரிமாணங்களில் உருவெடுத்து நிற்கிறது அரங்கு.

சமூக ஆற்றுப்படுத்தலுக்கான ஒரு களமாக, ஆழமான வெளிப்பாட்டுக் கான ஒரு இடமாக, நோய் நீக்கும் மருந்து முறையாக - சிகிச்சையாக, தனியாளினதும் சமூகத்தினதும் உண்மையுணர்வுகளையும் விருப்புகளையும் வெளிப்படுத்தி மனிதர் தம்மைத்தாம் இனங்கண்டு மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்வதற்கான கல்வி முறையாக அரங்கு வளர்ந்து வருகிறது. தமது விருப்பத்தை அடைவதற்காய் மக்கள் அணிதிரளு வதில் இந்த அரங்குக்கு முக்கிய வகிபாகமுண்டு.

மேலை நாடுகளில் இந்த முறைமைகள் இருக்கின்றன. எனி னும், 'அரங்க செயற்பாட்டுக்குழு' அந்த முறைமைகளுக்குள் தன்னை அமுக்கிக் கொண்டதில்லை. மாறாக எமது தேசத்திலேயே வடக்கு - கிழக்கு பிரதேசத்திலேயே; இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் ஈழத் துத் தமிழ்த் தேசிய இனத்தின் மரபு வழித் தாயகத்திலேயே எமது தேசத்து மக்களுக்குத் தேவையான ஒரு அரங்க முறைமையைக் கண்டு பிடித்து வளர்த்து வருகிறது அரங்க

அடுத்தடுத்த வாரங்களில் கசிப்புக் கெதிராக அயலூர் கிராமங்களில் இறங்கியது. தாலிக்குளத்தில் 2000 தை 08 இலும் பூவரசங்குளத்தில் 2000 தை 10 இலும் மக்கள் வெள்ளமெனத் திரண்டனர். கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட இடங்கள் கண்டு பிடிக்கப் பட்டன. கசிப்பு பெரல்கள் உருட்டி வரப்பட்டு மக்கள் முன் வைக்கப்பட்டு கொத்தி, கொழுத்தி எரிக்கப்பட்டது. உணர்ச்சி பொங்கும் இந்த நடவடிக்கைகள் பாவற்குளம் பகுதி நோக்கி விரைந்தது. மக்கள் தொடர்ந்து கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட் டனர்.

இவ்வாறுதான் அரங்கு மூலம் மேற்படி கிராமங்களில் மக்களை அணிதிரட்டும் வேலைகள் நடைபெற்றன. தளை நீக்கத்துக்கான ஒரு அரங்கப் பண்பாடு அந்தக் கிராமங்களில் மெல்லத் துளிர் விடலாயிற்று.

பாடசாலைகளில் சிறுவர்களை சுதந்திர செயற் பாட்டில் ஈடுபடுத்துவதிலும், ஆற்றலைத் தூண்டுவ திலும் இந்தக் கிராமங்களில் அரங்கு வேலை செய்தது. இந்த வேலைகளில் அந்தக் கிராமத்து இளைஞர், யுவதிகள் சேர்ந்தியங்கும் 'கிராமிய பண்பாட்டு அரங்கக்குழு' கடுமையாக உழைத்தது. பாடசாலை வேலைகளில் பெற்றோரை ஈடுபடுத்த அணிதிரட்டுவதில் இந்த அரங்க நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகித்தன.

இத்தகைய ஒரு அரங்கப் பண்பாட்டு வளர்ச்சியி லேதான் 2002ஆம் ஆண்டு தீபாவளிக் காலத்தில் மிக முக்கியமான சம்பவங்கள் மேற்படி கிராமங்களில் நடந்து முடிந்தன.

"நாங்கள் எங்கட வீட்ட போகவேணும்

"நீங்கள் உங்கட வீட்ட போங்கோ"

என்ற இந்தக் குரல் எங்கள் தேசத்தின் மக்கள் குரலாய் ஒலிக்கலாயிற்று.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் உலகம் அதிசயித்து நிற்கத் தமிழ்த் தேசிய இனம் அணிதிரண்ட வரலாற்றின் குறிகாட்டிதான் "பொங்கு

**செ. விந்தன்.**



பதின்நான்காம் ஆண்டு அகவை காணும் ஈழநாதம்
'வாழ்க வளமுடன்'

- கலர்/கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு சேவை
- நவீன கொம்பியூட்டர் மிக்சிங் வீடியோ படப்பிடிப்பு
- தரமான பாடல் பதிவு
- மணப்பந்தல் சேவை
- மங்கள நிகழ்வுகள் அனைத்துக்கும் தேவையான பொருட்கள்

இவையனைத்துக்கும் நீங்கள் ஒருங்கே நாடவேண்டிய இடம்

உங்கள் மகிழ்வான நாட்களில்
நாமும் இணைகிறோம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி, இராமநாதபுரம், கிளிநொச்சி.

(சி-7291)

ரகமான செய்திகளைத்
தரமான முறையில் தந்திடும்
ஈழநாதமே!
14 ஆவது அகவையில் காலடி வைக்கும் வேளை
மனதார வாழ்த்துகிறோம்.

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்

முதன்மைச் செயலகம், கிளிநொச்சி.

(சி-7281)

பதின்நான்காவது ஆண்டிலும்
'ஈழநாதம்' தன் பணி தொடர எமது வாழ்த்துக்கள்!

இளமைக்கு எழிலூட்டும்
உன்னத கலைநயமிக்க அழகிய
தங்க நகைகளைப் பெற்றிட வாரீர்!

புதிய ஆனந்தா நகைமாடம்

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7922)

ஈழநாதமே !
உன் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

- நவநாகரிக பிறேம்களிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- அழகிய சங்குப்பற்களை உறுதி மிக்கதாய்ப் பொருத்திக்கொள்ளவும்,
- மிதந்த பற்களுக்குச் சிறந்த முறையில் "கிளிப்" போட்டுக் கொள்ளவும்,

இன்றே விஜயம் செய்யுங்கள்

எரிக் கணேஷ்

மூக்குக்கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்,

564,566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.021-2222486

91,கே.கே.எஸ் வீதி
கொக்குவில் சந்தி.
80, கே.கே.எஸ் வீதி
சுன்னாகம்.

(சி-7921)

அகவை பதின்நான்காகும் எங்கள் ஆருயிர் ஈழநாதமே!
உன் பணி தொடர எமது வாழ்த்துக்கள்!

யாழ். நகரில் மின்னிடும் தங்க நகைகள் விற்பனையில் தமக்கெனத் தனியிடம் பதித்தவர்கள்

நியூ நகுலா ஜுவல்லறி இல. 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி இல. 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலா நகை மாடம் இல. 241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7907)

# யாழ். குடாவின் இன்றைய இலக்கிய உலகம்

பண்டிதர்
ச.வே. பஞ்சாட்சரம்

இரசிகனைக் கண்வழியாகவோ, செவி வழியாகவோ கவர்ந்து அவனைத் தன்னில் ஒன்றிக் கலந்து நிற்கவைத்து மகிழ்வூட்டுவதோடு மட்டும் நின்று விடுவது பொழுது போக்கு இலக்கியம். அதனோடு அவனது அறிவையும் உணர்வையும் மேம்பட வைத்து அதனூடு அவனதும் சமூகத்தினதும் வாழ்வை வளப்படுத்துவது உயர்ந்த முற்போக்கு இலக்கியம். இவ்வகை இலக்கியங்கள் உடனடி விளைவுகளைக் கருத்திற் கொண்டோ, நீண்டகாலப் பயன்பாட்டை இலக்காகக் கொண்டோ, அன்றி இந்த இரண்டினையுமே குறியாகக் கொண்டோ எழுவன.

கடந்த ஐம்பது ஆண்டுகளின் முற்பகுதியில் இலேசாகவும், பிற்பகுதியில் கொடூரமாகவும் இத்தீவு வாழ் தமிழ்ச் சமூகத்திற்கு அழிவுகளை விளைவித்து வருகின்றன சிங்களப் பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறைகளும் திட்டமிட்ட இன அழிப்பு முயற்சிகளும்! இதனால் ஒவ்வொரு தமிழனும் நிச்சயமாக ஒவ்வொரு தமிழ் எழுத்தாளனும் எந்த அளவிலோ பாதிக்கப்பட்டேயிருக்கிறான்.

இத்தாக்கங்களால் சுயமாகத் தன்மான, நீதி உணர்ச்சிகளால் உந்தப்பட்டுச் சிலரும், விடுதலைப் போராட்ட சக்திகளின் தூண்டுதலால் பலரும் இனவிடுதலை வேட்கும் இலக்கியங்களைப் படைக்கலாயினர். இந்தச் செல்நெறியில் இணையாமல் பொதுமை இலக்கியங்களையே படைத்துக் கொண்டிருந்த எழுத்தாளர்களும் உண்டு.

"காக்கின்றோம்" என்று சொல்லி வந்து, இங்கு தமிழினத்தைக் கழுத்தறுக்கும் கயமையில் இறங்கிய இந்திய இராணுவத்தின் இரும்புக் கரங்களுக்குள் தமிழீழப் பிரதேசங்கள் முழுவதும் சிக்குண்டிருந்த நாட்களில், விசாரணைகள் என்ற பெயரில், தம்மைக் கொடுமைப்படுத்திய அந்த இராணுவத்திடம், ஆயுதம் தாங்கியவர்களின் நிர்ப்பந்தங்களால் தான் தாம் பயந்து விடுதலை இலக்கியங்களை எழுதி வழங்கியதாகக் கூறித் தம்முயிர் காக்க வேண்டிய பரிதாபநிலை அன்றைய வடக்குக் கிழக்குத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இருந்தது.

1991இல் இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டுச் சில மாதங்களில் வெடித்திருந்த இரண்டாம் ஈழப் போர்க்காலத்தில் அன்றாடம் ஏற்பட்ட நிர்ப்பந்தமானது ஏராளம் இதயங்களை ஆவேசமூட்டி எழுதுகோல் ஏந்த வைத்தது. தெருக்கூத்துக்களாக, பத்திரிகை, கவியரங்கக் கவிதைகளாக, இசைப் பாடல்களாக, சிறுகதைகள், நாவல்களாக, ஒளிவீச்சுப் படக்கதைகளாக்குறும் படங்களாக விடுதலைப் போராட்டத்துக்கு வலுவூட்டும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டு உலா வந்தன. ஏக இலங்கைக்குள் தமிழர்களுக்கு நல்வாழ்வு பெற்றுத் தரலாம் என்று நம்பி எழுதிக் கொண்டிருந்த இடதுசாரி எழுத்தாளர்கள் இன விடுதலை இலக்கியப் போக்கிற்கு வழிவிட்டு ஒதுங்கியிருக்க வேண்டியதாயிற்று.

அன்று ஆட்சிபீடத்திலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் தோற்க, சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்து சந்திரிகா அம்மையாரின் சமாதானச்சதி சறுக்குண்டதால், நிறுத்தப்பட்டிருந்த போர் மூன்றாம் ஈழப்போராக வெடித்தது. அந்தப் போரில் யாழ் குடாநாட்டுத் தமிழ்க்கிராமங்கள் அங்குலம் அங்குலமாக ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வசமாகி வருகையில், யாழ்ப்பாணப் போர் முனைகளில் விடுதலை வீரர்கள் குவித்த அமோகமான வெற்றிகளின் உற்சாகத்தில் "வானம் எம் வசம்" என்று பாடிக் குதூகலித்தது யாழ்ப்பாண இலக்கிய உலகம். ஈற்றில் அரச படைகளின் சூரியக்கதிர் ஒன்று, இரண்டு என்னும் நடவடிக்கைகள் மூலம் யாழ் குடா முற்றாக இராணுவத்தின் பிடிக்குள் சிக்குண்ட தறுவாயில், கொழும்பு, வவுனியா, வன்னி என்று இடம் மாறிக் கொண்ட இலக்கிய கர்த்தாக்கள் போக, ஏராளம் எழுத்தாளர்கள் விரும்பியும் விரும்பாமலுமாக குடாநாட்டுக்குள், இராணுவப் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டனர். சில மாதங்களுள் முல்லைத்தீவு இராணுவப் பெருந்தளம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டுப் பெரும் பகுதி கடல், நிலப்பரப்பு புலிகளால் மீட்கப்பட்ட செய்தியால் ஆத்திரமும், ஆவேசமும் கொண்ட இராணுவம் பழிவாங்கும் நோக்கில் தமது கைக்குள் அகப்பட்டிருந்த யாழ் குடா மக்களில் பல நூறு பேரைக் கைது செய்து படுகொலை புரிந்து செம்மணியில் புதைத்த கொடுமை, இங்கு அஞ்சியஞ்சிக் காலம்கழித்த எழுத்தாளர்களை மேலும் கதிகலங்க வைத்தது. இதனால் முதுபெரும் எழுத்தாளர் சிலர் இங்கு சிங்கள அரசின் விசுவாசிகளே தாங்கள் என்று காட்டிக்கொள்வதன் மூலம் தங்கள் உயிர்களையும், சொத்துக்கள் முதலீடுகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக - ஈழவிடுதலைப் போராட்டத்தையும் போராளிகளையும் கொச்சைப்படுத்தும் இலக்கியங்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டும் வைத்தனர். வேறு எழுத்தாளர் சிலர் குடா நாட்டு மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கு விடிவும் விடுதலையும் வேண்டித் தெய்வங்கள் மீது பிரபந்தங்கள் பாடிய தன் மூலம் தத்தம் மனங்களுக்கும் மக்கள் மனங்களுக்கும் மறைமுகமாகத் தெம்பும் நம்பிக்கையும் ஊட்டி வந்தனர். இன்னும் சில எழுத்தாளர்கள் "எமக்கும் ஒரு காலம் வரும்" என்று கைகளையும் மனங்களையும் ஆற்றிக் கொண்டனர். தமிழ்ப் பண்பாட்டு இலக்கியங்களைப் புலமையாளர் சிலர் ஆக்கி வெளியிட்டமையும் கலாசாரம் பேணிய மறைமுகப்பணியாகும். பத்திரிகா தர்மம் தெரிந்த - நியாய உணர்வும் ஜனநாயகப் பண்பும் கொண்ட பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், அரசால் திட்டமிட்டுத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த யாழ் குடாநாட்டுள், வெளியுலகுக்குத் தெரியாத விதமாக திரைமறைவில் நடந்த அரச அட்டூழியங்களை அம்பலப்படுத்தும் விதத்தில் உண்மைச் செய்திகளை வெளியிட்டமைக்காக அரச படைகளால் பழிவாங்கும், பயமுறுத்தும் விதத்தில், விசாரணைக்கென்றழைக்கப்பட்டும் எச்சரிக்கப்பட்டும், வாகனங்களால் மோதி வீழ்த்தப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆயினும், விடுதலைப் போராட்டம் நடக்கும் நாடுகளைப் போல இங்கு எழுத்தாளர்கள் அரச படைகளால் படுகொலை செய்யப்படவில்லை . காரணம், "இவர்கள், நாங்கள் இலை போட்டாலும் குந்துவார்கள்" என்று அரசதரப்பு நம்பியமையாக இருக்கலாம். முட்கம்பி வேலிகள், முழத்துக்கு முழம் சோதனைச் சாவடிகள், சுற்றி வளைப்புக்கள், ஊரடங்குச் சட்டம் என்பவற்றால் ஒரு புறம் பயமூட்டிய ஆக்கிரமிப்பாளர்கள், மறுபுறம் வீட்டுக்குள் அடைக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு நீலப்படங்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், தாராளமாக அரச சீல்ச்சாராயம், கள்ளச்சாராய வடிசாலை உற் பத்திகள் என்பன கிடைக்க வழி செய்த தன் மூலம், அம்மக்களின் மனங் களை மயக்கி, அவர்களின் அற்ப இச்சைகளுக் குத் தீனிபோட்டு, மனங்களைச் சீரழித்து, மக்களை மந்தைகளாக்கி, மானம், மரியாதை, நீதி, நியாயம் பற்றிச் சிந்திக்கும் இயல்பே செத்துவிட்டவர்களாக்கி, விடுதலைப் போராட்டத்தையும் இனக் கட்டமைப்பையும் குலைத்து நலித்து விடும் சூழ்ச்சியில் வெற்றிகண்டு கொண்டிருந்தனர்.

தீய ரசனைகள், தீய பழக்கங்களிலிருந்து தற்காக்கவும் நல்லுணர்வுகளையும், தேச, இன, மொழிப் பற்றுக்களையும் பேணிக் கொள்ளவும், வளர்த்து வரவும் தூண்டக் கூடிய இலக்கியங்கள், கலைப்படைப்புக்கள், ஒலிபரப்புக்கள், பத்திரிகை, சஞ்சிகைகள் தம்மை நெருங்கமுடியாத திறந்த வெளிக்கைதிகளான மக்கள் இவ்வாறான கலாசார அழிப்புக்கு ஆளாக நேர்ந்ததையிட்டு எம் மக்கள் மீது யாரும் ஆத்திரப்பட நியாயமில்லை.

இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டு, ஆட்சிக்கெதிராக - மண்மீட்புக்காகப் போராடத் தூண்டும் இலக்கியங்களைப் படைப்பதென்பது அபாயகரமானதுதான். ஆனால், அபரிமிதமான குடியால், பாலியல் ஒழுக்கக்கேடுகளால், குடும்பப் பிரிவுகளால், சந்திச் சண்டித்தனங்களால், கோஷ்டி மோதல்களால், வழிப்பறி திருட்டுக்களால், பதவி மோகத் தில்லுமுல்லுகளால் மோசமாகச் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதக் கூட்டத்தை நல்லுணர்வு பெறவைக்கும் - நன்நெறிக்கு மீளவைக்கும் - நல்வாழ்வு பெறத் தூண்டும் மனிதநேய இலக்கியப்பணி புரிவதுமா இலக்கியப்படைப்பாளிகளை அவலத்துள் மாட்டியிருக்கும்?

மக்கள் சமூகங்களுக்கு உய்யும் வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாகச் செயற்பட வேண்டிய மகத்தான பொறுப்பைச் சுமப்பவர்கள், எழுத்தாளர்கள், அங்கு நெஞ்சதிர்ந்து நிலை குலைந்து நின்ற மக்கள் சமூகத்தின் மனநோய் மருத்துவர்களாகச் செயற்பட்டிருக்க வேண்டிய இலக்கிய கர்த்தாக்கள் கவலைக்கிடமான விதத்தில் தாங்களே புகழ்ப்போதை நோயாளர்களாகி அலைந்திருக்கிறார்கள். தன்னைத் தன்னைப் பெருமைப்படுத்தும் பாராட்டுவிழாக்கள் நடத்துவிப்பதிலும், பட்டங்கள் சூட்டுவிப்பதிலும், பத்திரிகைகளில் பாராட்டு விளம்பரங்கள் போடுவிப்பதிலுமே கரிசனையாக அலைந்திருக்கிறார்கள்.

ஆனால், இங்கு தமிழினத்தின் மூலவேரிலேயே நோய் தாவிக் கொண்டிருப்பதைத் தம் நுண்ணறிவால், பொறுப்புணர்வால் உணர்ந்து கொண்ட ஆன்மபலம், இலட்சிய வேகங்கொண்ட அன்றைய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பண்பாட்டு, கலாசார அழிவைத் தடுக்கும் நோக்கங் கொண்ட இலக்கியங்களைப் படைத்து வெளியிட்டனர். சமூகத்தில் இறங்கிச் சூறாவளிப் பிரசாரங்களில், தமிழின மரபு பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஈழத்தின் பல நகரங்களிலும் பண்பாட்டெழுச்சி புத்துயிர் பெறும் "பொங்கு தமிழ்" விழாக்கள் நடப்பதற்கு வழிகாட்டியாகப் "பொங்கு தமிழ்" விழா எடுத்தனர். இப்பணிகளால் குடாநாட்டில் கலாசாரச் சீரழிவின் வேகந்தணியும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வு ஓரளவாவது ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

அண்மையில், தமிழ் மொழிக் கல்விப் பணிபுரியும் நிறுவனம் ஒன்றில், தள்ளாத முதுமையிலும் தளராது இலக்கியச் சாதனைகளாற்றிக் கொண்டிருக்கும் பேறறிஞர் நால்வரைக் கௌரவிக்கும் வைபவமொன்று பெரும் ஏற்பாட்டில் போதிய பத்திரிகை விளம்பரங்களுடன் நடைபெற்றது. அவ்விழாவில் அமரத்துவம் எய்திவிட்ட தமிழ்ப் பேராசான்மார் நால்வரின் திருவுருவப் படங்களும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன. ஆனால், அந்த விழாவில் பங்குபற்றியவர்களோ, பாராட்டப்பட்ட நால்வர், பாராட்ட வந்த நால்வர், படங்களைத் திரைநீக்கம் செய்த ஒருவர், அப்படத்தவரின் உறவினர் மூவர், விழாச் சபையினர் ஐவர், ஒலிபெருக்கியாளர் ஒருவர், தேநீர் பரிமாறிய ஒருவர், நான் என இருபது பேர் மட்டுமே. தமிழ்த் தொண்டே உயிர் மூச்சாக வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தமிழாளர்களுக்கு முழுத்தமிழினமுமே நன்றிக் கடமைப்பட்டது என்பதை உணர முடியாத அவ்விழாவிற் கலந்து கொள்ள முற்படாத இழி நிலைக்கு இன்று நம் சமூகம் இறங்கியதற்கான காரணங்களை நாம் அறிய வேண்டும்.

01. 7 ஆண்டுகளாக ஊரடங்கு, கெடுபிடிகளினால் மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்து பழகிவிட்டமை.

02. அப்படிக்கிடந்து, பொழுதைப் போக்குவதற்காகக் கொடிய திரைப்படங்களைத் தொலைக்காட்சிகளில் பார்த்து, தீய இரசனைகளில் மூழ்கி, நல்லுணர்வுகள் அடியோடு அழிந்து போனமை.

03. எழுத்தாளர்கள் தத்தம் சொந்தப் புகழ் பாடும் பாராட்டு, பட்டமளிப்பு விழாக்களையே இலக்கிய விழாக்கள் என்ற போர்வையில் நடத்துகிறார்கள். இவற்றுக்கு நாம் போய், எதற்காகப் பொருளை, நேரத்தை வீணாக்க வேண்டும் என்ற எண்ணம் அனைத்து மக்கள் மனங்களிலும் ஆழப்பதிந்து விட்டமை.

04. இந்த எழுத்தாளர்களின் முன்மாதிரியைப் பார்த்துப் பார்த்து மற்றவர்களும் குறைந்த செலவில் நிறைந்த புகழீட்டும் நப்பாசையில் தம் செலவில் பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுவிக்கும் வழிகளில் அலைந்து வினை கெடுவது.

(38 ஆம் பக்கம் பார்க்க)

> இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டு, ஆட்சிக்கெதிராக - மண்மீட்புக்காகப் போராடத் தூண்டும் இலக்கியங்களைப் படைப்பதென்பது அபாயகரமானது தான். ஆனால், மோசமாகச் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு மனிதக் கூட்டத்தை நல்லுணர்வு பெறவைக்கும் - நன்நெறிக்குமீளவைக்கும் - நல்வாழ்வு பெறத் தூண்டும் மனிதநேய இலக்கியப் படையப்பணி புரிவதுமா இலக்கியப் படைப்பாளிகளை அவலத்துள் மாட்டியிருக்கும்?

செய்தி பல குவித்து நற்சேவை புரிந்து வரும் தன்னிகரில்லா ஈழநாதமே!
புது அகவையில் புகுந்திடும் நன்னாளில்பொலிவுபெற வாழ்த்துகின்றோம்!





திருக்குமரன்
புடைவை மாளிகை

முதன்மைச்சாலை, முல்லைத்தீவு.
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.

திருக்குமரன்
மணப்பந்தல் சேவை

7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(சி-7260)

மக்களின் மனங்களில்
பலரகச் செய்திகளைச்
சுடச் சுடக் கொடுக்கும்
ஈழநாதமே!
14 ஆவது அகவையில்
கால் பதிக்கும் வேளை
உன்னை மனமுவந்து
வாழ்த்துகின்றோம்.



கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க சமாசம்
முல்லை மாவட்டம்

(சி-7717)

எங்கள் ஈழநாதமே நீ வாழி! வாழி!!
அறிவியலா? உள்ளூர்ச் செய்தியா? வெளிநாட்டுச் செய்தியா? விளையாட்டுச் செய்தியா?
காலையில் எங்கள் கண்கள் தேடும் ஈழநாதமே!
நீ மென் மேலும் புதுப்பொலிவோடு வளர மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

கிளிநொச்சி
பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்

பணிப்பாளர்,
பணியாளர், அங்கத்தவர்கள்.

(சி-7272)

நாம் இடர்பல பட்ட போது எம் குரலாய் எங்கும் ஒலித்த ஈழநாதமே!
வலியது உன் நெஞ்சுரம்! வாழ்க... என்றும் வளர்க...!



இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின்
"லக்பொஹொர"

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்
விவசாய இரசாயனம்





ஜீனசேன லிமிட்டெட்டின் விவசாய
சிற்றூர்திகள் உபகரணங்கள்

ஆகியவற்றின் வடபகுதி பிரதான களஞ்சியம்

# வேலும் மயிலும் களஞ்சியம்

353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி

(ஈழநாதம் பணிமனை முன்பாக)

(சி-7919)

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாய சேவை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும், விவசாய திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனங்கள், உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலைக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# பாரதிபுரம்: துயர்படிந்த கிராமம்

ஜெயக்குமார்

அந்த மாட்டு வண்டி முறிகண்டிக் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. தூரத்தே தெரிந்த இந்த வண்டியினைக் கண்டவர்கள் அதனை உற்று, உற்று அவதானிக்க ஆரம்பித்தனர்.

வன்னிப் பகுதியில் மாட்டு வண்டிகளைத் தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. ஆயினும், இவ்வாறு இதனை மக்கள் உற்று நோக்கியதற்கு காரணம் இருந்தது.

ஆளே இல்லாத அந்த வண்டியினை அதில் இணைக்கப் பட்டிருந்த மாடுகள் இரண்டும் மட்டுமே தனியாக இழுத்துக் கொண்டு கிராமத்தின் மக்கள் செறிந்துவாழும் பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்தன.

“வண்டில்காரன் எங்கே?” அங்கு நின்ற




பலர் மத்தியிலும் கேள்விக் கணைகள எழுந்தன. மக்களின் சந்தேகம் வலுக்க, வலுக்க மாட்டு வண்டியும் கிட்ட வந்து கொண்டிருந்தது.

அந்த வண்டிக்குள் ஏதோ கிடப்பது போலத் தென்பட்டது. ஆனாலும், தூரப் பார்வைக்கு அது என்ன என்பதைச் சரியாக ஊகிக்க முடியவில்லை.

“வண்டில்காரனுக்கு உடம்பு சரியில்லாமல் படுத்துக்கிடக்கிறானோ” ஒருவர் சொன்னார்.

“சீ. அப்படி இருக்காது. அது ஏதும் சாமான் போல இருக்கும்” மற்றவர் சொன்னார்.

“இல்லை,இல்லைக் கிடக்கிறது ஆள் போலதான் கிடக்கு” முதலாமவர் சொன்னார்.

“ஓம் அப்பிடிப்போல தான் இருக்குது. கால் போல ஏதோ தெரியுது தான்” மற்றவர் உறுதியாகச் சொன்னார்.

இன்னொரு பகுதியில் இருந்த சிலர் ஏதோ குசுகுசுவெனக் கதைத்தார்கள். அவர்களுக்கு வண்டியிலிருப்பது ஓரளவுக்கு விளங்கியிருக்க வேண்டும்.

ஆனால், குசுகுசுவெனக் கதைத்தவர்கள் வண்டி வந்த பக்கமாக எட்டி எட்டிப் பார்த்தார் கள். அவர்களின் பார்வை பலரின் வருகையை எதிர்பார்ப்பதுபோல் இருந்தது.

வண்டியும் மக்களுக்கு கிட்டவாக வந்து விட்டது. வண்டியில் கிடப்பது ஒரு ஆள் என்பது அப்போதுதான் தெளிவாகத் தெரிந்தது. அங்கிருந்த எல்லோரும் ஓடிப்போய் அதனைப் பார்த்தார்கள்.

அதில் உயிர் எப்போதோ பிரிந்துபோன ஒரு ஆணின் சடலம் இருந்தது. யாருடையது இச்சடலம்...? எல்லோர் மத்தியிலும் கேள்விகள் எழுந்தன....?

○ ○ ○

கிளிநொச்சியில் உள்ள பாரதிபுரம் கிராமத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பமானது.

ஏ-9வீதியின் இரணைமடுச் சந்தியில் இருந்து மேற்குப்பக்கமாக எமது உந்துருளி திரும்பி அக்கிராமத்தை நோக்கி விரைந்தது. எமது பயணத்திலும் ஒரு முக்கிய நோக்கம் இருந்தது.

இக்கிராமத்தினை ஏற்கனவே எனக்குத் தெரியாது. இது ஒரு பெரும் காட்டுப்பகுதி என்றுதான் நான் இது வரை காலமும் நினைத்திருந்தேன்.

ஆனால், பாதை செல்லச் செல்ல குடிமனைகள் தென்பட்டன. குடிசைகள் போன்ற வீடுகள்.

“இங்கு மிகவும் கஷ்ரப்பட்ட சனம்தான் இருக்கும்போல கிடக்குது” நான் சொன்னேன்.

“ஓமண்ணை இது ஒரு கஷ்ரப்பட்ட கிராமம் தான்” உறுதிப்படுத்தினார் கூடவந்தவர்.

எமது உந்துருளி ஒரு பெரிய நாற்சந்தியில் போய்நின்றது.

“அண்ணை இந்தச் சந்திக்கு பெரிய வரலாறே இருக்கு. இந்த ஊர்ச்சனம் எதை மறந்தாலும் இந்தச் சந்தியை மறக்காது....” கூட வந்தவர் பீடிகை போட்டார்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அச்சந்தியில் பெரிதாக ஒன்றும் இல்லை. ஒரு பெரிய மகிழ மரம் மட்டும் தான் நின்றது.

அச்சந்தியில் இருந்து திரும்பி தெற்குப் பக்கமாகப் போனோம். ஒரு சங்கக் கடை இருந்தது. அப்பால் சென்றதும் பாடசாலை ஒன்று இருந்தது. இப்போதுதான் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டிருக்க வேண்டும்.

நாம் அப்பகுதி கிராம அலுவலர் குணசிங்கம் வீட்டுக்குச் சென்றோம்.

“தம்பி, இந்தக் கிராமத்திலை இப்ப 336 குடும்பங்கள் இருக்கின்றன. நீங்கள் குறிப்பிட்ட ஐந்து வீட்டை எழுமாற்றாகத் தெரிவு செய்து அவர்களுடன் கதைத்தால் இக்கிராமத்தின் நிலை புரியும். அந்த ஐந்து குடும்பமும் ஏதோ ஒரு வகையில் போரினால் பாதிக்கப்பட்டதாக இருக்கும் அல்லது ஒருவரை இழந்தாவது இருக்கும்” என்ற கிராம அலுவலர் தொடர்ந்து கூற ஆரம்பித்தார்.

போரினால் நேரடிப் பாதிப்பு என்பதைவிட மறைமுகப் பாதிப்பினையே இக்கிராமம் நிறைய எதிர்கொண்டுள்ளது. கிளிநொச்சியை ஆக்கிரமித்த இராணுவ நடவடிக்கையான 'சத்ஜெய'வின் போதுதான் இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்தார்கள்.

இவர்கள் இடம்பெயர்ந்து திக்குத் திசையற்றுப் போனபோது தான் இவர்களின் நிலை மிகவும் மோசமானது. தங்களுக்கென எடுத்துச் செல்லக் கூடியதாக பெரிதாக எதுவுமே இல்லாத இவர்கள் இடம்பெயர்ந்து ஆறு ஏழு மாதமாக நிவாரணமும், தொழிலும் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டார்கள்.

கிளிநொச்சி நகரத்தின் இராணுவ முன்னரங்கப் பகுதி இவ்வூரிலிருந்து கிட்டத்தட்ட நாலு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும். இப்பகுதியில் இராணுவம் நிலை கொண்டிருக்கவில்லை.

இதனால் இந்த ஏழை மக்கள் தாங்கள் இடம்பெயர்ந்து இருந்த இடங்களில் இருந்து இப்பகுதிக்கு தங்கள் வீட்டுக்காணியில் உள்ள வருமானங்களை எடுத்துக் கொண்டுபோய் சீவிப்போம் என்று நினைத்து இப்பகுதிக்கு வருவார்கள்.

ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பி வந்ததே கிடையாது. இப்பகுதியில் வந்து மறைந்து கிடக்கும் இராணுவம் இவர்களைப் பிடித்து, அடித்து துன்புறுத்தி அவர்களை வெட்டியும், சுட்டும் கொன்றுவிடும்.

மகிழடிச் சந்தியில் தான் இந்த ஊர்க் குடும்பத் தலைவர்களினதும், இளைஞர்களினதும் உயிர்கள் பிரிந்து போயிருக்கின்றன. அதில் தான் இராணுவம் பலரை வெட்டியும், சித்திரவதை செய்தும் சுட்டும் கொன்றிருக்கிறது.

இக்கிராமத்தில் பெரும்பாலான இளம் பெண்கள் விதவைகளா கவே இருக்கின்றனர். ஆனால், இயற்கை மரணமோ அல்லது செல் வீச்சு இறப்புக்களோ இவர்களை விதவைகளாக்க வில்லை. வீட்டின் பசிக் கொடுமை தீர்க்க சொந்த இடம் தேடிப் போனவர்கள் முகவரி இல்லாது போனார்கள்.

இவ்வாறு பல தகவல்களைக் கூறி முடித்து நிறுத்தினார் கிராம சேவையாளர்.

தொடர்ந்தும் அவர் சில முக்கிய விடயங்களைச் சொல்லவே முற்பட்டார்.

“இந்த மக்களின் அவல வாழ்வைப் போக்க வேண்டுமாயின் அவர்களுக்கான உதவிகள் சரியான முறையில், வாழ்க்கையை மேம்படுத்தக் கூடியதாகத் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். அதைவிடுத்து, பதிவுகளை மேற்கொள்வதும், தகவல் திரட்டுவதுடன் மட்டும் நடவடிக்கைகளை உதவி நிறுவனங்களும் அரசாங்கமும் நிறுத்திக் கொள்வது நல்லதல்ல” என்றார் அவர்.

கிராமசேவையாளர் முன்னர் கூறிய கூற்றில் எங்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லை.

அப்படியென்ன, ஒரு கிராமத்தின், அதுவும் இராணுவத்தின் முன்னரங்கப் பகுதிக்கு அப்பால் இருந்த கிராமத்தில் எப்படி இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும்?

கிராம சேவையாளர் கொஞ்சம் மெருகுபடுத்தி எங்களுக்கு கதைவிடுகிறார் என நினைத்தோம். சரி, எதற்கும் ஐந்து வீடு வேண்டாம். ஒரு வீட்டுக்கு போவோம். அவரின் கூற்றில் உண்மை இருக்கின்றதா? என்பதை அறிந்துவிட முடியும் எனத் தீர்மானித்தோம். உந்துருளியை உசுப்பினோம்.

“இதென்ன இந்த சின்ன வீடுகள் உள்ள இடத்தில் பெரிய கட்டடம் தெரியுது. அதுவும் இடிந்துபோய் இருக்குது” கூட வந்தவர் சொன்னார்.

இருவரும் திரும்பிப் பார்த்தோம்.

அந்த இடிந்த கட்டடத்தின் கூரைப்பகுதி செப்பனிடப்பட்டு கிடுகால் வேயப்பட்டு இருந்தது.

“அட மினி' அண்ணை, இந்த சின்னக் கிராமத்தில இந்தப் பெரிய மினி இருக்குது....” கூடவந்தவர் சிரித்துக் கொண்டு சொன்னார்.

நாங்கள் அப்பகுதியில் இருந்த சிறுவீதி வழியாகச் சென்று குச்சொழுங்கை ஒன்றில் திரும்பி ஒரு வீட்டினுள் நுழைந்தோம்.

“இந்த வீட்டுக்காரர் எங்கே?” அங்கு நின்ற இளம் பெண்ணிடம் கேட்டோம்.

அந்தப் பெண்ணின் கண்கள் பனிக்கத் தொடங்கின.

சிறிது நேரம் அமைதியானோம். பின்னர் சுதாகரித்துக் கொண்டு;

“அவருக்கு என்ன நடந்தது?” ஏதோ விசயம் தெரிந்தவர்கள் போல் கேட்டோம்.

“அவரும், அவரின்ரை மச்சானும் எங்கடை காணியில இருந்த பத்துத் தென்னையிலும் தேங்காய் பிடுங்க வந்தார்கள். இரண்டு பேரையும் ஆமி பிடிச்சுப் போட்டான்.” அந்தப் பெண் கூறினார்.

“இந்தப் பகுதியில் ஆமி ஆக்களைப் பிடிச்சது உங்களுக்கு தெரியும் தானே. அவர்கள் தேங்காய் பிடுங்கவரும் போது நீங்கள் மறிச்சிருக்கலாம் தானே. ஏன் மறிக்கவில்லை........” நாங்கள் கேட்டோம்.

“நீங்கள் இப்பவந்து உப்பிடிக் கேக்கிறியள். எங்கட கணவரில எங்களுக்குப் பாசம் இல்லை யோ. என்ன செய்யிறது இடம் பெயர்ந்து போன தோட உழைப்பு எதுவும் இல்லை. உழைப் பில்லாமல் எப்பிடிச் சாப்பிடுறது. நாங்கள் கிடப்பம். மூண்டு, நாலு வயது பிள்ளைகள் என்ன செய்யும் அந்தப் பிள்ளைகளை நினைச்சுத் தான் அவை போறவை” சொல்லி முடித்தவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டார்.

நாம் தொடர்ந்து எதுவுமே பேசவில்லை. கிராம சேவையாளரின் கூற்று சரிதான் என்பதை உறுதியாக்கிக் கொண்டோம்.

ஒருவாறு அவ்வீட்டில் இருந்து மெதுவாகக் கிளம்பினோம்.

நாம் அங்கிருந்து நகர்ந்து சிறிது தூரம் சென்றதும் எமக்கு வியப்பே காத்திருந்தது.

அங்கு மக்கள் கூட்டமாக நின்றார்கள். நாம் அருகில் போய் ஏன் நிற்கின்றீர்கள் என்று கேட்டோம்.

“ஏதோ பதிவு செய்கிறார்களாம் அதுதான் வந்திருக்கிறம்” என்றார் அதில் நின்ற ஒருவர்.

எமது கண்கள் அங்கிருந்த பலரையும் சுற்றிப்பார்த்தன. பெரும்பாலான பெண்களின் நெற்றியில் குங்குமத்திலகம் இருக்கவில்லை.



அவர்களிடம் பேச்சுக்கொடுத்து அவர்களின் வேதனைகளைக் கேட்கும் சக்தி எம்மிடம் இருக்கவே இல்லை.

எமது உந்துருளி திரும்பியது.

○ ○ ○

அந்த வண்டியில் இருந்த சடலம் வேறு யாருடையதும் இல்லை. இக்கிராமத்தைச் சேர்ந்த ஜெகநாதனுடையது.

இவர் வீடு பார்ப்பதற்காக மகிழடிச் சந்திக்கு வந்தபோது அங்கு மறைந்திருந்த இராணுவம் இவரைச் சித்திரவதை செய்து கொன்றுவிட்டது.

இவரது சடலத்தைக் கண்ட சிலர் இந்த மாட்டு வண்டியைக் கொண்டு வந்து சடலத்தை வண்டியில் ஏற்றினார்கள்.

அப்போது இப்பகுதியில் மறைந்திருந்த இராணுவம் இவர்களைத் துரத்திக் கொண்டு ஓடி வந்ததும் அவர்கள் வண்டியையும் சடலத்தையும் விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

அந்த இரண்டு ஐந்தறிவு படைத்த மாடுகளும் சடலத்துடன் இருந்த வண்டியையும் இழுத்துக் கொண்டு வீட்டுக்கே வந்து விட்டன. ■

# இலங்கைத் தீவில் சம அந்தஸ்தில் சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறிலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் இன்று சம அந்தஸ்தில், சம பலத்திலுள்ள இருதரப்பினர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகியுள்ளது. அத்தோடு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதும் விடுதலைப்புலிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டம் தமிழ் மக்களின் உரிமைக்கானது என்பதும் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகிவிட்டது.

"இலங்கை அரசைப் போலவே தமிழீழ விடுதலைப்புலிகளையும் சமமான முறையில் ஜப்பான் நோக்குகின்றது. புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காகவே ஆயுதம் தாங்கிப் போராடுகின்றனர். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறும்போது இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் சம பங்காளிகளாகவே அங்கீகரிக்கப்படுவர்" என்பது ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷியின் கூற்றுக்கள் ஆகும்.

"தற்போதைய நிலையில், சிறிலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் சமபலமுள்ள சக்திகளாகவே உள்ளனர். எனவே நாம் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அரசு மற்றும் புலிகள் ஆகிய இருதரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிவருகின்றோம்" என்பது இலங்கைக்கான ஐரோப்பிய யூனியனின் வதிவிடப் பிரதிநிதி வோல்டர் எல். வில்சன் அவர்களின் கருத்துக்களாகும். இவை விடுதலைப்புலிகளையும் சிறிலங்கா அரசுடன் சம அந்தஸ்துடன் உலகம் நோக்கத் தொடங்கிவிட்டது என்பதன் வெளிப்பாடே ஆகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது என்பதற்கு- மேற்கூறப்பட்டவை மட்டுமல்ல மேலும் பல எடுத்துக் காட்டுக்களையும் கூற முடியும். குறிப்பாக, பல உலக நாடுகளின் இராஜதந்திரிகள், தூதுவர்கள் கிளிநொச்சி வந்து விடுதலைப் புலிகளுடன் சந்திப்புக்களை நடத்துகின்றமையும், தமது நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு அழைப்புக்கள் விடுத்துள்ளமையும் சுட்டிக்காட்ட முடியும். இதனைத் தவிர, பல்வேறு உலக அமைப்புக்களும் (உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம், உலக உணவு நிறுவனம் போன்றவை) விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகளை கிளிநொச்சியில் பிரிட்டன், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும், ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளும் சந்தித்துப்பேசியுள்ளமையானது, விடுதலைப்புலிகள் சர்வதேசத்தின் கவனத்தைப் பெற்றுவிட்டனர் என்பதை மட்டுமல்ல, இப்பிராந்தியத்திலுள்ள ஒரு சக்தியாக அடையாளம் காணப்பட்டுவிட்டனர் என்பதையுமே எடுத்துக்காட்டும் ஒன்றாகவும் உள்ளது.

அது மட்டுமல்ல, கடந்த டிசம்பரில் ஒஸ்லோவில் நடைபெற்ற அவசர உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமையும், யூனில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளவுள்ளமையும், இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் விடுதலைப்புலிகளின் பங்கு அவசியம் என்பதை உலகம் புரிந்து கொண்டுவிட்டது என்பதையே வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. அதாவது, இலங்கை விவகாரத்தில் அரசும் - விடுதலைப் புலிகளும் சமஅந்தஸ்துடன் கூடிய இரு தரப்பினர் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



விடுதலைப்புலிகள் இயக்கம் 2000 ஆண்டின் இறுதியில் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் செய்தபோது, புலிகள் மீது சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்ப்பந்தமே காரணம் என ஒரு தரப்பினர் வாதிடுவதுண்டு. அதாவது, சிறிலங்கா அரசு மேற்குலகில் மேற்கொண்ட தீவிர பிரச்சாரத்தின் காரணமாக புலிகள் மீது நிர்ப்பந்தங்கள் சுமத்தப்பட்டதாக அவர்களினால் கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இன்னொரு தரப்பினர், மேற்குலகத்தவர் குறிப்பாக அமெரிக்கா, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு எனப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்தும், பயங்கரவாத அமைப்புக்கள் எனப்பட்டியலில் இடப்பட்ட அமைப்புக்கள் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியப்பாடுகள் அதிகரித்ததன் காரணமாகவும் புலிகள் யுத்த நிறுத்தத்தைச் செய்வதற்கு முன்வந்தனர் எனவும் கருத்து வெளிப்படுத்துபவர்களும் உண்டு.

அமெரிக்கா அது வரையில் விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் சற்று இறுக்கமானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததே ஒழிய இராணுவரீதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நேரடி நடவடிக்கைகள் எதற்கும் முயற்சிகளை மேற்கொண்டதாக இல்லை. அத்தோடு, இப்பிராந்தியச் சூழல் அமெரிக்கா உடனடியாக அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதானதாக இருக்கவும் இல்லை. இந்நிலையில், அமெரிக்காவின் நிர்ப்பந்தம், அச்சுறுத்தல் என்பன புலிகள் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளக்காரணமாகியது என்பது பொருத்தப்பாடானவாதமல்ல.

ஆனால், சில விமர்சகர்கள் 2001, செப். 11ஆம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது தொடுக்கப்பட்டதாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்தே புலிகள் யுத்த நிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் முன்வந்தனர் என வாதிட முனைகின்றனர். ஆனால், இது யதார்த்தத்திற்குப் புறம்பானதாகவே இருந்தது. ஏனெனில், 2001 செப். 11இல் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தையும், சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்பதையும் தெளிவாகவே உறுதி செய்திருந்தனர்.

ஆகையினால், இவ்விமர்சனம் இவ்விடயத்தில் பொருத்தப்பாடானதல்ல. ஆயினும், செப். 11இல் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்கு தலானது உலகிலுள்ள விடுதலை இயக்கங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதித்திருந்தன என்பது உண்மையே. இந்நிலையில், விடுதலை இயக்கங்கள் தமது செயற்பாடுகளை மிகவும் நிதானத்துடன் மேற்கொள்ள வேண்டிய நிலையிலேயே இருந்தன.

இது விடுதலைப் புலிகளுக்கும் பொருத்தப்பாடானதொன்றே ஆயினும், விடுதலைப்புலிகள் இத்தாக்குதலுக்கு முன்னதாகவே மேற்கொள்ளத் தொடங்கிவிட்ட அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளினால் இதன் அழுத்தம் பெரியளவிலானதாக இருக்கவில்லை. ஆயினும், விடுதலைப்புலிகள் அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகள் யதார்த்தச் சூழலைப் புறக்கணிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டது எனலாம்.

விடுதலைப்புலிகள் இயக்கம் எப்பொழுதுமே எவரின் நிர்ப்பந்தத்திற்கோ, இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்தோ தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டது இல்லை. ஆரம்பம் முதலே விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே வந்தது. அதாவது, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை; சம அந்தஸ்துடனான பேச்சுவார்த்தை; சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சு வார்த்தை என்பது புலிகளின் நிலைப்பாடாக இருந்தது.

ஆனால், உண்மையில் விடுதலைப் புலிகள் மீது நிர்ப்பந்தங்கள் இருந்தனவா என்பதற்கு அப்பால் விடுதலைப் புலிகளுக்கு யுத்தநிறுத்தம் ஒன்று தேவையாக இருந்தது என்பதே உண்மையாகும். அதாவது, சிறிலங்கா அரசின் சர்வதேச ரீதியிலான உண்மைக்கு மாறான பிரச்சாரத்தினை முறியடிக்க வேண்டிய நிர்ப்பந்தமும், சர்வதேச ரீதியில் தமது நிலைப்பாட்டினையும் நம்பகத்தன்மையையும் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருந்தது.

இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகள் தமது ஆற்றலை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தனர். சிறிலங்கா இராணுவத்தினால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்வது சாத்தியப்பாடானதல்ல என்பதை புலிகள் நிரூபித்திருந்தனர். இது ஓயாதஅலைகள் - 03 இன் முடிவின் போது உலகத்திற்கு வெளிப்படையாகவே தெரியவும் செய்தது.

இந்நிலையில், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னிலைப் படுத்துவதற்கு அரசியல், இராஜதந்திர ரீதியிலான பணிகளைப் புலிகள் மேற்கொள்வது அவசியமான தொன்றாக இருந்தது. ஏனெனில், விடுதலைப்புலிகள் தீவிரமான யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கால கட்டத்தில் - சிறிலங்கா ஆட்சியாளர்கள் அரசு என்ற தமது அந்தஸ்தினையும், அதற்குரிய வசதி வளங்களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெரும்பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவும் அன்று ஆட்சியில் இருந்த பொ.ஐ. முன்னணி அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரும், சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக நெருக்கமானவருமான லக்ஷ்மன் கதிர்காமரும் இதனையே தமது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதற்கென அவர்கள் இருவருமே பல விஜயங்களை ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்டுமிருந்தனர்.

இவர்கள் தமது முக்கிய பிரச்சாரமாக விடுதலைப்புலிகள் அமைப்பானது ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும், அவர்கள் சமாதானத்தின் விரோதிகள் எனவும் பிரச்சாரம் மேற்கொண்டிருந்ததோடு, 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதாகவும் ➡

பொய்ப்பிரச்சாரத்தில் இறங்கியிருந்தனர். அத்தோடு, விடுதலைப் புலிகளுக்கு மேற்குலகத்தில் இருந்தே நிதிகள் கிடைக்கப் பெறுகின்றன எனவும், விடுதலைப்புலிகள் அமைப்பை உலக நாடுகள் தடை செய்வதன் மூலம் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாதச் செயலை முடிவுக்குக் கொண்டு வரலாம் எனவும் பிரச்சாரம் செய்தனர்.

இப்பிரச்சாரத்தில் குறிப்பிடத்தக்கதொரு வெற்றியை சிறிலங்கா



அரசு பெற்றுக்கொண்டது என்றே கொள்ளலாம். குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் விடுதலைப்புலிகள் அமைப்பினை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்திருந்ததோடு புலிகளின் நடவடிக்கைகள் மீது தீவிர கவனமும் செலுத்தத் தொடங்கின. கனடா, சுவிஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் புலிகளின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தன. ஜேர்மனி உட்பட்ட மேற்கு நாடுகள் விடுதலைப்புலிகளின் நிதிமூலங்கள் தமது நாடுகளில் உள்ளனவா எனத் தீவிரமாக ஆராயத் தொடங்கின.

அத்தோடு, சிறிலங்கா அரசாங்கம் பல இராணுவ, பொருளாதார அனுகூலங்களையும் பெறத்தொடங்கியது. அமெரிக்க போன்ற நாடுகளில் சிறிலங்கா ஆயுதப்படையினர் பயிற்சியும், ஆலோசனையும் பெற்றனர். இராணுவத் தளபாடங்களும் கிடைக்கப் பெறாமலும் இல்லை. இதேவேளை பொருளாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

இவை ஒருபுறம் இருக்க, மேற்குலகம் அக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் எதிராக வெளிப்படுத்திய அபிப்பிராயங்கள், உலகமே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை எதிர்ப்பது போன்றும் - அது என்றுமே அங்கீகரிக்கப்பட முடியாதது போன்றதொரு தோற்றப்பாட்டையும் கொடுத்தது.

இவ்வாறானதொரு பாதகமான சூழ்நிலையிலும் விடுதலைப்புலிகள் ஆற்றலையும் பலத்தையும் நிரூபித்திருந்தனர். ஆயினும் சிறிலங்கா அரசு பிரச்சாரத்தின் மூலம் சர்வதேச ரீதியில் மேற்கொண்டிருந்த புலிகள் மீதான தப்பபிப்பிராயத்தையும், தோற்றப்பாட்டினையும் உடைத்தெறிய வேண்டிய தேவை விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்திற்கு இருந்தது. ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைக்கு சர்வதேச அங்கீகாரமும் ஆதரவும் தேவையானதாக இருந்தது.

இந்நிலையில்தான் 2000 டிசம்பர் இறுதியில் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவிப்புச் செய்த விடுதலைப் புலிகளின் தலைமை தமது அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தத் தொடங்கியது. இதன் முதற் கட்டமாக நோர்வே அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக அறிவித்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் நோர்வேயின் சிறப்புத் தூத ரான எரிக்சொல் ஹெய்மை 2000 ஆம் ஆண்டு நவம்பர் 01இல் சந்தித்துப் பேசினார்.

ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் விடுதலைப்புலிகளின் இச்சமாதானத்திற்கான ஒத்துழைப்பை உரிய முறையில் முதன்மைப்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் இயலாமையும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள அழுத்தமுமே புலிகளின் சமாதான முயற்சிகளுக்குக் காரணம் எனச் சாதிக்க விளைந்ததோடு, சமாதான முயற்சிகளுக்கு நிபந்தனைகளை விதிக்கவும் முற்பட்டனர். இதே வேளை, விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தையும் உதாசீனம் செய்து தொடராகப் பல இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இருப்பினும், விடுதலைப்புலிகள் நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் செய்யவில்லை. ஆனால், 2001ஆம் ஆண்டு ஏப்ரலில் விடுதலைப்புலிகள் அறிவிப்புச் செய்திருந்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் முடிவிற்கு வந்தவேளை - சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கைக்கு எதிராகப் புலிகள் மேற்கொண்ட பதில் நடவடிக்கையானது இராணுவத்தின் முகத்தில் அறைந்தாற்போல் இருந்தது. சிறிலங்கா இராணுவம் அத்துடன் திசை தெரியாது திணறியது. இராணுவத் தரப்பின் இயலாமை இராணுவத்தரப்பினாலேயே வெளிப்படுத்தத் தொடங்கும் அளவிற்கு நிலைமை உருவாகியது. அடுத்த நடவடிக்கை ஒன்றை அதனால் திட்டமிடவோ, செயற்படுத்தவோ முடியாததொருநிலை ஏற்பட்டது.

இது ஒருபுறம் இருக்க 2001 யூலையில், விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீதும், சர்வதேச விமானநிலையம் மீதும் மேற்கொண்ட தாக்குதலானது சிறிலங்காவின் பொருளாதாரத்தையே ஸ்தம்பிக்கும் நிலைக்குக் கொண்டு வந்ததெனலாம். ஆனால், இந்நிலையிலும் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே வந்தனர். ஆனால் தெளிவாக ஒன்றை மாத்திரம் நிரூபித்திருந்தனர். விடுதலைப்புலிகள்

**- ஜெயராஜ் -**

இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாதது என்பதும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியாது என்பதுமே அதுவாகும்.

இந்நிலையில், சிறிலங்காவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது, விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில்யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கு வழிவகுத்தது. நோர்வே அரசின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இவ் உடன்பாடு, யுத்தத்தை நிறுத்துவதற்கு வழிஏற்படுத்தியது. அத்தோடு, நிபந்தனைகள் அற்ற சம்அந்தஸ்துடனான, சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கும் அது வழிவகுத்தது.

இவ் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பல சரத்துக்களை சிறிலங்கா அரச தரப்பு அமுலாக்கம் செய்வதில் காலதாமதத்தை மேற்கொண்ட போதும், சிறிலங்கா ஆயுதப்படையினர் இவ் உடன்பாட்டிற்கு எதிரான பலமீறல் சம்பவங்களில் ஈடுபட்டநிலையிலும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு அனுசரணையான போக்கையே வெளிக்காட்டி வந்தனர்.

இந்நிலையானது விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் கொண்டிருந்த ஈடுபாட்டை வெளியுலகிற்குக் காட்டுவதாக அமைந்தது. அதாவது. விடுதலைப்புலிகள் மீது சந்தேகக்கண் கொண்டு நோக்கிய பல உலக நாடுகள் சமாதான முயற்சிகளில் புலிகள் காட்டும் அக்கறை குறித்துத்திருப்தி கொள்ளும் அளவிற்கும், நம்பிக்கை கொள்ளும் அளவிற்கும் விடுதலைப்புலிகளின் விட்டுக் கொடுப்புக்கள் இருந்தன.

இதேவேளை, யுத்த நிறுத்தத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் இனப்பிரச்சினையைச் சர்வதேசப்பிரச்சினை என்ற மட்டத்திற்கு உயர்த்தியது. தாய்லாந்தில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை பின்னர் ஐரோப்பிய நகர்களான ஒஸ்லோ, பேர்ளின் என இடம்பெற்றன. அத்தோடு, சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தமது நாடுகளில் நடத்துவதற்குப் பல நாடுகள் முன் வந்ததோடு -விடுதலைப்புலிகளைத் தமது நாடுகளுக்கும் அழைத்தன. இந்நிலையானது இனப்பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தியதோடு, விடுதலைப் புலிகளின் அந்தஸ்தினை உயர்த்தியும், அவர்களுக்கான அங்கீகாரத்தையும் தேடிக்கொடுப்பதாகவும் இருந்தது. அத்தோடு, விடுதலைப்புலிகள் சமாதானத்தின் விரோதிகள் எனச் செய்யப்பட்ட பிரச்சாரத்தையும் முறியடிப்பதாக இருந்தது.

இவ்வாறு தமிழரின் உரிமைப் போராட்டமும், விடுதலைப் புலிகளும் பெற்றுக் கொண்ட அங்கீகாரமானது இலங்கையில் பேரினவாத சக்திகளுக்குப் பெரும் சீற்றத்தையும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிக்கும் ஒன்றாகியது.

உலக நாடுகளில் ஒரு தரப்பினர் - குறிப்பாக பிராந்திய, பூகோள ரீதியிலான ஆதிக்க நிலைப்பாட்டைக் கொண்ட நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை, தமது அரசியல் - இராணுவ குறிக்கோள்களை ஈட்டுவதற்காகப் பயன்படுத்திக்கொள்கின்றன. இன்னொருதரப்பினர் தமது உதவித்திட்டங்கள், கடன் வழங்குதல் போன்றவற்றிற்கு இவற்றை வரையறைகளாகக் கொண்டுள்ளனர். இவர்கள் அரசியல் இராணுவ நோக்குநிலை குறைந்தவர்கள் ஆகும்.



இந்த நிலையில். சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பெரும் எடுப்பிலான பிரச்சார நடவடிக்கைகளை மேற் கொண்டபோது - சிறிலங்கா அரசை ஆதரிக்க முயன்ற சில வல்லாதிக்க நாடுகள் விடுதலைப் புலிகள் மனித உரிமைமீறல்களில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டவிளைந்தன. இவை சிறிலங்கா அரசு மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையைக் கண்டு கொள்ளவில்லை. இதற்கு மனிதஉரிமை ஸ்தாபனங்களில் சில புலிகளின் நடவடிக்கைகள் குறித்து வெளியிட்ட சில அறிக்கைகளையும் ஆதாரமாக்க முயன்றனர். இது விடுதலைப்புலிகளைப் பொறுத்து ஒரு பாதகமான விடயமாகவே அமைந்தது. அதிலும் குறிப்பாக சிறுவர்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதான குற்றச்சாட்டு பெரிதும் பாதிப்பை விளைவிப்பதாக இருந்தது.

இந்நிலையில், தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இவ் விடயம் குறித்து சமாதானப் பேச்சு வார்த்தை மேசைகளிலும் புலிகள் பிரஸ்தாபிக்க முன்வந்தனர், யுனிசெப் பணிப்பாளர் போன்றவர்களுடன் சந்திப்புக்களை நடத்தி தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியதன் மூலமும் விடுதலைப்புலிகள் தம்மீது சுமத்தப்பட்டு வந்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துக் கொண்டுள்ளனர்.

அதாவது, சர்வதேச நாடுகளின் உதவியானது - ஒரு கட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான விடயத்துடன் பொருத்திப் பார்க்கப்பட்டதுண்டு. இந்நிலையில், தற்பொழுது சிறிலங்காவிற்கு வழங்கப்படும் உதவிகளில் விடுதலைப் புலிகளும் தாக்கத்தை விளைவிக்கும் சாத்தியங்கள் உருவாகியுள்ளமையானது, மனிதஉரிமை விடயத்தில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் திருப்திகரமான வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக சர்வதேச அமைப்புக்கள் கருதத் தொடங்கியுள்ளதையே வெளிக்காட்டுவதாக வுள்ளது.

இந்த வகையில் விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியில் தமக்கு எதிராக மேற்கொண்ட குற்றச்சாட்டுகள் - தம்மீது சர்வதேசம் கொண்டிருந்த பார்வை, நிலைப்பாடு என்பனவற்றை தமது மதிநுட்பம் மிக்க அரசியல் - இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் மாற்றம் அடையச் செய்துள்ளனர். இதனை இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போது விடுதலைப்புலிகள் இயக்கம் மேற்கொண்ட வெற்றிகரமான அரசியல் இராஜதந்திர நடவடிக்கையின் பின்னான ஒரு சிறப்புமிக்க நடவடிக்கை எனக் கொள்ளுதல் தவறாகமாட்டாது.

இந்த வகையில் சர்வதேச அரங்கில் இன்று விடுதலைப்புலிகள் குறித்த பார்வை குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் கண்டுள்ளமையும் - அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் சக்தி என்பதும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டுள்ளதான பலமும் தென்னாசிய புவிசார் அரசியலில் மாற்றம் ஒன்றைத் தோற்றுவிப்பதாகியுள்ளது. அதாவது இலங்கைத்தீவில் இரண்டு அரசியல், இராணுவ மையங்கள் உண்டு என்பதை சர்வதேச உலகம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியமை இம்மாற்றத்திற்கு காரணமாகும்.

ஆகையினால், தற்பொழுது தென்னாசிய புவிசார் அரசியல் சூழலை ஆராய்பவர்கள், இலங்கைத் தீவிலுள்ள இவ்விரு அரசியல் - இராணுவமையங்களையும் கருத்திற் கொண்டே தீர்மானங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். விடுதலைப்புலிகள் அரசு ஒன்றிற்கான கட்டுமானத்தை இதுவரை ஏற்படுத்தாது இருந்து விடினும், சிறிலங்கா அரசுடன் சமநிலையில், சமஅந்தஸ்தில் பார்க்கப்படும் அமைப்பாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது என்பதையே இன்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்துவதாய் உள்ளன. ★

பல்சுவையுடன்
செய்தி குவிக்கும்
ஈழநாதமே!
புது அகவையில்
பொலிவு பெறுக!

அக்கராயன்
ப.நோ.கூ.சங்கம்

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

(சி-7276)

ஈழநாதமே!
புது அகவை காணப்புறப்படும் உன்னை
வாழ்த்துகின்றோம் வாயார....

சி.இ. ஒலிப்பேழை ஒளிக்கலையகம்
S.R.VIDEO MUSIC CORNER

யாழ். சாலை, கிளிநொச்சி.

* பாடல்கள் ஒலிப்பதிவும் வீடியோப்பிரதி வாடகைக்கு விடுநரும்.
* றேடியோ மற்றும் மின்சார உபகரணங்கள் திருத்துநரும், விற்பனையாளரும்.

(சி-7263)

சகல விதமான அழகுசாதனப்பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங் கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

மடு அன்னை பல்பொருள் வாணிபம்

முதன்மைச் சாலை, முல்லைத்தீவு.

(சி-7715)

ஈழ மண்ணில் பவனி வரும் ஈழநாதமே!
நீ என்றென்றும் வாழ்க!

கிளிநொச்சி மாவட்ட
கூட்டுறவுச் சங்கங்களின்
ஒன்றியம்

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

(சி-7277)

ஆண்டுகள் 14 ஆகும் வேளை, பல்லாயிரம் மக்கள்
மனதில் பதிந்துள்ள ஈழநாதமே வாழ்க!

குமரன் மருந்தகம்

பிரதானசாலை, முல்லைத்தீவு.

சகல ஆங்கில மருந்து வகைகள், பால்மா வகைகள், அழகுசாதனப்பொருட்கள், பிஸ்கற் வகை கள் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள....

(சி-7714)

தமிழீழ மக்களின் விடிவெள்ளியாகத் திகழும்
ஈழநாதமே பல்லாண்டு காலம்
வாழ்க! வாழ்க!

முல்லை நகரப் புனரமைப்புக்குழு

கரைத்துறைப்பற்று, முல்லைத்தீவு.

(சி-7716)

ஈழநாதத்துக்கு இனிய வாழ்த்துக்கள்!
தமிழீழ மக்களின் தேசிய நாளிதழ் ஈழநாதம் 14ஆம் ஆண்டில்
காலடி பதிப்பதையிட்டு மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்!

அருட்கண்ணன் இரட்டைப்புலி அப்பளம்
N.S
தயாரிப்பாளர்-
சி-சத்தியநேசன்,
உயிலங்குளம்.
உள்ளீடுகள்
உழுந்து, கோதுமை
மூலப்பொருட்கள்
3 மாத
உத்தரவாதம்
ARUDKANNAN IRADDAIPULI APPALAAM

நிறைந்த தரம்

குறைந்த
விலை

தமிழீழ மக்களுக்கு
பரிச்சயமான உருசி

இரட்டைப்புலி மார்க் அப்பளம்
NS
தயாரிப்பாளர்:
சி.சத்தியநேசன்
உயிலங்குளம்
உள்ளீடுகள்: உழுந்து.
கோதுமை, மூலப்பொருட்கள்
3 மாத
உத்தரவாதம்
DOUBLE TIGERS BRAND PAPPADAM

அனைத்துக்கும்
அருட்கண்ணன், இரட்டைப் புலி NO - I
அப்பளத்தை வாங்கி நிறைவாகுங்கள்.

முகவரி:
சற்குணம்,
உயிலங்குளம், துணுக்காய்.

(சி-7273)

# “விளையாட்டுத் துறையை வளர்ப்பது தேசியத்தை வளர்ப்பதற்கு ஒப்பானது!”

உலகளாவிய ரீதியில் பல்வேறு நவீனத்துவ தொழில் நுட்பங்களுடன் பெரு வளர்ச்சிபெற்று உன்னத நிலையை அடைந்துவிட்ட விளையாட்டுத்துறை தொடர்ச்சி யான போருக்கு முகம்கொ டுத்து வந்ததால் இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களை விடப் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இதற்கு சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை மற்றும் இனரீதியான ஒடுக்கு முறையால் போராட்டமே வாழ்வாகிப்போன எமது இளைய தலைமுறைக்கு விளையாட்டுத் துறையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள முடியாது போனதே காரணமாகும்

தற்போது போர்ச்சூழல் நிலை மாற்றம் பெற்று சமாதான சூழ் நிலை ஒன்று உருவாகியிருப்பது, இத்துறையை வளர்த் தெடுப் பதற்கான திறவுகோலாக அமைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது ஏற் பட்டுள்ள சமாதான நடவடிக் கையின் பின்னான காலப்பகுதியி லாவது ஏனைய மாவட்டங்களின் விளையாட்டுத் தரங்களை மனக்கண்ணிலிருத்திக் கணக்குப் போட்டுப் பார்க்க அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் வியைாட்டுத் தொடர்புக ளும் அது தொடர்பான நவீனத் துவத்தை அறிவதற்கான வாய்ப் புக்களும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளும் தாராளமாகி யுள்ளன.

இந்நிலையில் விளையாட்டு சார்ந்தோர் திசைதிரும்பிப்பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள் ளது. தேசிய மட்டங்களில் விளையாடக் கூடிய திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் உண்மையில் எங்கோ ஓர் மூலையில் இலைமறை காயாக இருப்பார்கள். அவர்களை இனங்கண்டு முதலில் மாவட்ட வீரனாக்குவதிலேயே அம்மா வட்டத்தின் வெற்றியின் முதல் அம்சம் தங்கியுள்ளது.

இப்படியாக தெரிவு செய்யப் படும் வீரர்கள் நடைமுறை நுட் பங்களோடும் நவீனத்துவத் தோடும் ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு வளர்த்தெடுக்கப் படும்போது தேசிய ரீதியாக மிளிரக் கூடிய வீரர்கள் உருவாக் கம் பெறுவார்கள்.

இவற்றைக் கருத்தில் கொண்டு யுத்தம் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியி லேயே இளைய சமுதாயத்தின் விளையாட்டுத்துறையின் மேம் பாட்டிற்காக விளையாட்டு த் துறை ஒன்று உருவாக்கப்பட்டு அது துரித வேகத்தில் செயற்பட் டும் வருகின்றது.

இது தற்போது வன்னிப்பகுதி என்ற குறுகிய வட்டத்தில் இருந்து வியாபித்து தமிழீழம் என்ற ரீதியில் விளையாட் டுத்துறையை சர்வதேச தரத் திற்கு வளர்த்தெடுப்பதற்கு பெரும் முயற்சிகளை மேற் கொண்டு வருவதுடன் செயற் திட்டங்களிலும் இறங்கியுள்ளது.

அது தனது செயற்பாட்டைத் தொடர்ந்து வழங்கிவருகின்றது.

பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இப்போட்டி களில் பெறுமதி வாய்ந்த பரிசு கள் வழங்கப்படுவதுடன் கரப் பந்து, உதைபந்து, வலைப்பந்து ஆகியவற்றிற்கான தேசிய அணி யொன்று உருவாக்கப்பட இருக் கின்றமையும் முக்கிய விடய மாகும்.



2002 இல் மன்னார் உதைபந்தாட்ட அணி

இதில் பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் வன்னி மாவட்ட வீரர்களாக இருக்கின்ற போதும் இன்றைய நிலையில் தேசிய அணியொன்று உருவா க்கப்படுவது இன்றியமை யாத தாகவே உள்ளது.

இவை ஒருபுறம் இருக்க, சிறந்த வீரனை உருவாக்குவ தற்குப் பக்கபலம் என்பது மிகவும் முக்கியமானதாக உள் ளது. அதாவது மாவட்ட ரீதி யாக ஒரு வீரரோ அணியோ வெற்றி பெறுகின்றது என்றால் அவற்றை மேலும் வளர்ப்பதற்கு எவரும் முன்வருவதில்லை. இதனால் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் தலைசிறந்த வீரர்கள் உருவாக்கம் பெறக்கூடிய ஒரு வீரர் தனது விளையாட்டை மேலும் தொடரமுடியாத நிலை ஏற்படுகின்றது. இதனை உணர் ந்து விளையாட்டு ஆர்வலர்கள் திறமைவாய்ந்த வீரர், அணிகளை பராமரிக்க முன்வருவார்களே யானால் தாய்நாட்டிற்குப் பெருமை சேர்க்கக் கூடிய வீரனை உரு வாக்குவதுடன் சிறந்த அணிக ளையும் உருவாக்க முடியும்.

இவை ஒருபுறமிருக்க, வெற்றி பெறும் அணியையும் வீரர்களை யும் அந்தந்த மாவட்ட விளை யாட்டு ஆர்வலர்கள் கௌர வித்து, மேலும் வளர ஊக்க மளிக்க முன்வருவதுடன் மைதானங்கள் மற்றும் விளை யாட்டு உபகரணங்களையும் வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும்.

விளையாட்டு என்பது அரசிய லுக்கு அப்பாற்பட்டு ஒரு உல கம் பூராகவும் வரவேற்கப்படுவ தும் தேசியத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதுமாகும். எனவே அப்படிப்பட்ட துறை ஒன்று வளர்த்தெடுக்கப்படுவதென்பது எமது தேசியத்தை வளர்த்தெடுப் பது போன்றதாகும்.

விளையாட்டு வளர்ந்தால் தேசியம் வளரும். தேசியத்தின் ஒருமைப்பாடு விளையாட்டி லேயே அதிகமாக வெளிப்படுத் தப்படு கின்றது என்பதற்க மைய .இம்முறை தமிழீழத் தேசியக் கொடியின் கீழ் தமிழீழத்தின் எட்டு மாவட்டங் களின் அணிகளும் ஒருங்கே கலந்துகொள்கின்றமை தமிழீழ பெருவிளையாட்டில் முக்கியத் துவம் பெறுகின்றது.

இதன் ஆரம்பத்துடன் தமிழீழ தேசியரீதியான விளை யாட்டுக்கள் அத்தனையும் ஒரு மேம்பாட்டுக்கு வரவேண்டும் அதற்காக ஒவ்வொரு மாவட் டத்தில் இருக்கின்ற உத்தி யோகத்தர்களும், விளையாட்டு ஆர்வலர்களும் ஒன்றிணைந்து விளையாட்டுத் துறையை வளர்த் தெடுக்க முன்வர வேண்டும்.

அரச சேவையில் இருக்கும் ஆசிரியர், வைத்தியர் ஆகியோர் தமது கடமையை எப்படிச் செய்கிறார்களோ அதேபோன்று இளைய சமுதாயத்தின் விளை யாட்டு வளர்ச்சிக்கு அரசாங்கத் தால் நியமிக்கப்பட்ட விளை யாட்டு உத்தியோகத்தர்கள் இளைஞர்களுடன் நின்று விளை யாட்டை வளர்த்தெடுக்க முன்வர வேண்டும்.

பயிற்சி வழங்குபவர்கள் தென்னிலங்கைக்கோ அன்றி உலக நாடுகளுக்கோ சென்று பயிற்சியைப்பெற்று பயிற்சி வழங்க முன்வர வேண்டும்.

இதனூடாக விளை யாட்டு உத்தியோகத்தர்கள், ஒவ் வொரு மாவட்டத்திலும் சகல விளையாட்டுக்குமான பயிற்சி வகுப்புக்களை வழங்க வேண் டும். அந்தப்பயிற்சிக்கான ஒத்து ழைப்பைத் தமிழீழ விளையாட் டுத்துறை எப்போதும் வழங்குவ தற்கு தயாராக இருக்கிறது.

அத்தோடு விளையாட்டு கிராம ரீதியாக வளர்த்தெடுக்கப் படுவது முக்கியமானது. அங்கு தான் இலைமறைகாயாக, வலி மையான உடல் கட்டுமானங் களைக் கொண்ட போட்டியாளர் கள் உள்ளனர். இதைக் கருத்திற் கொண்டு விளையாட்டு உத்தியோகத்தர்கள் கிராமரீதி யாக இறங்கி விளையாட்டை வளர்க்கும் போது திறமையான வீரர்களை நாங்கள் வெளியில் கொண்டு வரலாம்.

**தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா அவர்களுடனான கருத்துரைகளிலிருந்து...**

விளையாட்டுக்கு வயது மிகவும் முக்கியமானதாக உள்ளது. இதற்குப் பாடசாலைச் சமூகம் ஆர்வம் காட்ட முன்வர வேண்டும். அவை தனியாகக் கல்வியோடு மட்டும் நின்று விடாது, விளையாட்டு ரீதியாக வளர்த்தெடுக்கப்பட்டுக் கொண்டு செல்லும் போதுதான் சர்வதேச ரீதியில் போட்டிகளுக்கு முகம் கொடுக்க கூடிய வீரர்களை வளர்த்தெடுக்கமுடியும். கழக ரீதி யாக மட்டும் வீரர்களை வளர்த் தெடுப்பது என்பது இயலாத காரியமாகவே இருக்கும்.

இதன் கன்னி நடவடிக்கை யாக, தமிழீழத்தின் அனைத்து மாவட்ட விளையாட்டு அணிக ளையும் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஒருங்கிணைத்து தமிழீழ பெருவிளையாட்டுப் போட்டி ஒன்றை நடத் துகின்றது.

தமிழீழ விளை யாட்டுத்துறை உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் யுத்தம் நடை பெற்றுக் கொண் டிருந்ததால் அதன் முழுமை யான செயற்பாடு களை மேற் கொள்ள முடி யாத நிலையே இருந்தது.



2002 இல் புதுக்குடியிருப்பு வலைபந்தாட்ட அணி

இருந்தும் வன்னி மாவட்டத்தில் பிரதேச ரீதியாகவும், வெளிமாவட்டம் என்ற ரீதியில் மன்னார் மாவட்டத்தையும் இணைத்து முதன் முறையாக 2002 ஆம் ஆண்டு போட்டிகளை நடத் தியது. இதில் உதைபந்தாட்டம், கரப்பந் தாட்டப் போட்டிகளில் மன்னார் மாவட்ட அணிகள் வியத்தகு வெற்றிகளைப் பெற்று இரு வெற்றிக் கிண்ணங்களை யும் சுவீகரித்தது.

இவ்வெற்றி மூலம் வன்னி மாட்ட வீரர்கள் எவ்வளவு பின்ன டைவான நிலையில் இருக்கின் றார்கள் என்பதை மன்னார் அணி வீரர்கள் அன்று விளையாட்டு ஆர்வலர்களுக்கும், வீரர்களுக் கும் உணர்த்தினர்.

அப்போட்டிகளைச் சவாலாக ஏற்றுக்கொண்ட கிளிநொச்சி, முல்லைமாவட்ட வீரர்கள் விளையாட்டை மேம்படுத்த முயற்சித்தபோதும் நாட்டு நிலைமை அப்போது இடமளிக்க வில்லை. இப்போது அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. வீரர்களி டையே புதுத்தெம்பு ஏற்பட் டுள்ளது. பக்கபலமாக தமிழீழ விளையாட்டுத்துறை உள்ளது.

இத்துடன் 2004 ஆம் ஆண்டு தடகளப் போட்டிகளையும் தேசிய ரீதியாக நடத்துவதற்குத் தீர்மானித்துள்ள தமிழீழ விளையாட்டுத்துறை, அடுத்தபடி யாக உள்ளக விளையாட்டுக் களான கபடி, கிளித்தட்டுப் போட்டிகளை தேசியரீதியாக நடத்துவதற்கும் தீர்மானித்துள் ளது.

விளையாட்டு என்பது உலக நாடுகளில் கூடி வெற்றி தோல் வியை ஜீரணிக் காத கழகங்க ளுக்கிடையே, நாடுகளுக்கிடையே பிரச்சனைகள் வருவது வழமை யாக இருந்தாலும் அது எங்கள் இடத்தில் வரக் கூடாது. ஏனென்று சொன்னால் நாங் கள் விளையாட்டில் இன்னும் சரியான நிலைக்கு வந்துசேர வில்லை. நாங்கள் விளை யாட்டில் வளர்வதற்கு முன்பா கவே விளையாட்டுச் சம்பந்த மான போட்டிகளில் பிரச்சனை களை ஏற்படுத்தி முரண்பாட்டை வளர்த்துக் கொண்டால் விளை யாட்டை வளர்த்தெடுக்க முடியா மல் போய்விடும்.

ஆகவே விளையாட்டுக் கழகங்களும் வீரர்களும் விளங் கிக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் அனைவரும் விளையாட்டை வளர்த்தெடுக்கும் வரைக்கும் எந்தவிதமான பிரச்சி னையும் இல்லாமல் தேசியரீதி யாக ஒன்றுபட்டு விளையாட்டை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நிலைக்கு வரவேண்டும் என்பதே.

அத்தோடு மாவட்டரீதியாக கடமையில் இருக்கும் மாவட்ட விளையாட்டு உத்தியோ கத்தர்கள், பிரதேச ரீதியான உத்தியோகத்தர்கள் பயிற்றுநர் கள் எல்லோரும் தங்களது கடமையைச் சரியாகச் செய்ய முன்வரவேண்டும்.

இவைகளைக் கருத்தில் எடுத்து அனைத்து சமூகமும் நாளை நடைபெறவுள்ள தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப் போட் டியுடன், தமிழீழ விளையாட்டுத் துறையை மேம்பாடடையச் செய்வதுடன் எதிர்கால விளை யாட்டுத்துறையை ஒளிமய மான தாக்க முன்வர வேண்டும்.

ஜெயந்திரன்

14 ஆவது அகவை காணும் ஈழநாதம் தினசரிக்கு
எமது வாழ்த்துக்கள்!!!






புதிய வெளியீடுகள் வெளிவந்து விட்டன

அறிவமுது
பொத்தகசாலை

- அறிவியல்
- மருத்துவம்
- பெண்ணியம்
- பகுத்தறிவு
- பொதுஅறிவு
- அரசியல்
- நாவல்கள்

021-2223961

உலகமுற்போக்கு சிந்தனையாளர்களின் அரிய நூல்கள் உட்பட பாடசாலை நூல்கள், உபகரணங்கள், காகிதாதிகள் அனைத்தும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

☞ கிளிநொச்சி ☞ வட்டக்கச்சி ☞ விசுவமடு ☞ புதுக்குடியிருப்பு
☞ முள்ளியவளை ☞ கந்தபுரம் ☞ மல்லாவி ☞ நாச்சிக்குடா

(சி-7908)



2 வருட உத்தரவாதம்



இந்த தம்ரோ கதிரைகள் 6 வாங்கும் தங்களுக்கு

இலவசம்...

மதிப்புயர்ந்த ரீபோ ஒன்று அல்லது அதே கதிரை ஒன்று

இவ்வாய்ப்பு குறுகிய காலத்திற்கு மட்டுமே



வரையறுக்கப்பட்ட தம்ரோ கம்பனி
கண்டி வீதி,
நிட்டம்புவ
தொ.பேசி: 033-85339, 85215, 85216
மின்அஞ்சல்: 033-85681

வழங்குனர்:
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டம்,

இளந்தென்றல்
அணைகல வாணிபம்

யாழ் - கண்டி நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

தம்ரோ

உலகம் நம்பும் உன்னத தளபாடங்கள்
உங்கள் அருகில் உள்ள அனைத்து தம்ரோ
விற்பனை முகவரிடமும் தற்போது பெற்றுக்கொள்ளலாம்

(சி-7270)

# தனது 13 ஆண்டு கால வரலாற்றில் "ஈழநாதம்" சந்தித்த நெருக்கடிகளும் சவால்களும்

**சி.சிவபாலன்**



கடந்த வருடம் பெப்ரவரி மாதம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் ஏ-9 வீதியூடாக வன்னிக்கும் உலகிற்குமான தொடர்புக் கதவுகள் திறந்து விடப்பட்டமையையும் தொடர்ந்து பெருமளவு இராஜதந்திரிகளும் அரசியல் வாதிகளும், ஊடகவியலாளர்களும் மையங்கொள்ளும் ஓர் இடமாக வன்னி மாறிவிட்டது.

சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவும் அதற்குப் பலவழிகளிலும் ஆதரவு வழங்கவும் உலகநாடுகள் பலவற்றின் இராஜதந்திரிகளின் வருகை இந்தச் சமாதான முயற்சிகள் தொடர்பாக செய்திகளைச் சேகரிக்க வரும் ஊடகவியலாளர்களின் படையெடுப்பு எனத் தொடர்கிறது. வன்னியின் வீரம் செறிந்த போராட்டத்தையும் யுத்தம் வன்னிக்கு வழங்கிய அவலத்தையும் வெளியிலிருந்து அறிந்து கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் வன்னிக்கான கதவுகள் திறக்கப்பட்டதும் பெருமளவில் அவற்றை நேரில் பார்க்க இங்கு படையெடுக்க ஆரம்பித்தனர். இதன் உச்சக் கட்டமாக அமைந்தது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடனான ஊடகவியலாளர் மாநாடு.

இவ்வாறு வந்த ஊடகவியலாளர்களுக்கு வன்னியில் கண்ட ஒவ்வொன்றுமே வியப்புக்குரியதாக அமைந்திருந்தன. கொடூரயுத்தத்தைத் தாங்கிக் கொண்டு வன்னியில் மக்கள் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பு, பெரும் சவால்கள் மத்தியிலும் அவர்களின் சீரான ஒழுக்கமான வாழ்க்கை முறை என்பன ஒருபுறம். அழிக்கப்பட்ட படைத் தளங்கள், சாட்சியம் கூறிய வீரம் செறிந்த போராட்டத்தின் வரலாறு; அது மட்டு மல்ல, இப்போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டே தமிழ் மக்களுக்கென விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டு வந்த நிர்வாக அமைப்புகள் மறுபுறமாக் எல்லாமே ஆச்சரியத்துக்குரிய விடயங்களாக - அவர்கள் மனத்தில் படியவைக்கப்பட்டிருந்த விம்பங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே - அமைந்திருந்தன.

அதேவேளை யுத்தத்தின் போது சிறிலங்காப்படைத் தரப்பு மேற்கொண்ட கொடூரத்தனமான அழிவு வேலைகள் கூட அவர்களின் மனதில் ஆழமாகப் பதியும் ஒன்றாக இருந்தது.

சுருக்கமாகக் கூறப்போனால் அவர்கள் இங்கு கண்டகாட்சிகள் ஒவ்வொன்றும் பல செய்திகளை அவர்களுக்குக்கூறின - வழங்கின எனலாம். இவ்வகையில் இவ் ஊடகவியலாளருக்கு ஈழநாதம் பத்திரிகை நிறுவனமும் செய்திக்குரிய பொருளாகவே மாறியிருந்தது. அனைத்துலக ஊடகவியலாளர்கள் மட்டு மல்ல, கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிய செய்தி ஊடகங்களின் ஊடகவியலாளர்கள்கூட 'ஈழநாதம்' பற்றி அறிந்து கொள்வதில் அதீத ஆர்வம் காட்டியிருந்தனர்.

உலகத்துடனான தொடர்புக் கதவுகள் மூடப்பட்டிருந்த அதேவேளை, இறுக்கமான பொருளாதாரத் தடை சிங்கள அரசாங்கங்களினால் கடைப்பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், ஈழநாதம் நிறுவனத்தால் அதற்கு எவ்வாறு தாக்குப் பிடிக்க முடிந்தது? என்பது குறித்து பல கேள்விகளை அவர்கள் எழுப்பினர்.

உலகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்துவிட்ட செய்மதித் தொலைபேசிக் கருவிகளையும், நவீன கணினி முறையில் இயங்கும் ஒலி/ஒளிப் பதிவுக் கருவிகளையும் கையில் வைத்திருந்த அவர்களுக்கு - நவீன அச்சுக் கலையின் உச்சங்களையும், நவீன ஒலி/ஒளி பரப்புச் சாதனங்களையும் பயன்படுத்தி செய்திகளை வெளியிட்டு வந்த அவர்களுக்கு, ஈழநாதம் நிறுவனத்திலிருந்த வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகளும் செய்தி சேகரிப்பு முறையும் அச்சு இயந்திரங்களும், அச்சுக் கோர்ப்பு, ஒற்றுரு (Block) தயாரிப்பு முறைகளும் பெரும் ஆச்சரியத்தையே ஏற்படுத்தின.

வெல்லப்பட முடியாத ஒரு இன விடுதலைப் போராட்டம் குறித்த செய்திகளை மக்களுக்கு வெளியிட்டு வரும் ஓர் ஊடகம் எவ்வளவு சவால்களைச் சந்தித்திருக்கும் என்பதை இவையும், நிறுவனம் இயங்கிவந்த சூழலும் நிச்சயம் அவர்களுக்கு உணர்த்தியிருக்கும்.

வழமையாக ஒரு பத்திரிகையை வெளியிடும்போது ஏற்படும் சிரமங்கள், நெருக்கடிகளுக்கு மேலதிகமாக ஏனைய பத்திரிகைகள் சந்தித்திராத பல நெருக்கடிகளை ஈழநாதம் சந்தித்திருக்கின்றது. ஈழநாதத்தைப் பொறுத்தவரை மக்கள் வழங்கிய ஆதரவும், அவர்களின் ஒத்துழைப்பும் ஈழநாதம் வெளியிடும் செய்திகள் குறித்து அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் - அதாவது மக்களுக்கும் ஈழநாதத்துக்கும் இடையேயிருந்த புரிந்துணர்வு - இச்சவால்களைச் சந்திக்கப் பெரும் உறுதுணையாக இருந்திருக்கின்றது.




சிங்கள இனவாதிகளின் கொடூர ஒடுக்குமுறைக்குள் இருந்து மீள்வதற்கு தமிழ் மக்கள் நடத்திவந்த போராட்டத்தை அழித்துவிட, இந்திய வல்லாதிக்கச் சக்திகள் எடுத்த முயற்சிகளைத் தோற்கடித்து விடுதலைப் புலிகள் ஒரு பெரும் போராட்ட சக்தியாக வளர்ச்சியடைந்திருந்த வேளை ஈழநாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்குத் துணையாக இருப்பது அவர்களுக்கு வழிகாட்டுவது உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறி அவர்களை முற்போக்கான பாதையில் செல்லவைப்பது போன்ற பொறுப்பான பணி அதற்கு உள்ளது. பல்லாயிரம் போராளிகளினதும், மக்களினதும் உயிர்க் கொடையும், செந்நீரும், வியர்வையும், உழைப்பும் பல்வேறு ஈகங்களும் இப்போராட்டத்தின் பின்னணியில் உள்ள நிலையில், இப்பொறுப்பு மேலும் அதிகமாகிறது. எனவே, பத்திரிகை வெளியிடுகின்ற செய்திகள் குறித்த நம்பகத் தன்மை மக்கள் மத்தியிலே இருப்பது அத்தியாவசியமான ஒன்றாகும். அதற்கு மிகைப்படுத்தப்பட்ட செய்திகள், அதீத நம்பிக்கையூட்டும் செய்திகள், திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் பிரசுரமாகாது இருப்பது அவசியமாகும். இவ்விடயத்தில் ஈழநாதம் மிகவும் உறுதியுடன் இருக்கின்றது. இந்த உறுதிப்பாட்டை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அதற்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

போர்ச் சூழலிலும் சரி, சமாதானச் சூழலிலும் சரி மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்லாது அன்றைய சூழலை உள்ளதை உள்ளபடியே புரிந்து கொள்ளக்கூடிய வகையிலான செய்திகளை ஈழநாதம் வெளியிட்டு வருவதன் மூலம் அதன் நம்பகத் தன்மை பாதுகாக்கப்பட்டு வருகிறது. போராட்டம் தொடர்பான இராணுவ, அரசியல், இராஜதந்திர நகர்வுகள், வெற்றிகள், ஏற்ற இறக்கங்கள், மாவீரர்களின் ஈகங்கள், மக்களின் பங்களிப்புக்கள், மக்களின் அவலங்கள் என மக்களுக்கு நிகழ்காலச் சூழலைப் புலப்படுத்தும் செய்திகள், ஆக்கங்கள் என்பன அதில் வெளியிடப்பட்டு வருகின்றன.

மேலும், சிங்கள அரசாங்கங்களின் தொடர்ந்த பொருளாதாரத் தடை காரணமாக பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கிய மக்களுக்கு அவர்களின் அன்றாடப் பணிகளை இலகுவாக்கும் வகையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், மருத்துவம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் மக்களுக்கும் இடையேயான இணைப்பாளனாக ஈழநாதம் இருந்து வந்திருக்கின்றது.

பாரிய இடப்பெயர்வு அவலங்கள், படுகொலைச் சம்பவங்களின்போது தொடர்புகளை இழந்த உறவுகளிடையே இணைப்பை ஏற்படுத்தும் ஊடகமாக விளங்கி வந்திருக்கின்றது.

மக்களின் பொருண்மிய, கல்வி, கலை, கலாச்சார, விளையாட்டுத்துறை வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இதேவேளை, மக்களும் ஈழநாதம் தொடர்பான புரிந்துணர்வைக் கொண்டவர்களாகவே உள்ளனர். யுத்தச் சூழல் காரணமாகவும், பொருண்மியத் தடை காரணமாகவும் ஈழநாதம் சந்தித்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க மக்களின் இந்தப் புரிந்துணர்வே காரணமாக இருந்திருக்கின்றது.

கடந்த 13 ஆண்டுகளில் வெளிவந்த ஈழநாதம் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால், அவை சீரற்ற பல்வேறு அளவுகளில் வந்திருக்கின்றன. பல்வேறு வகையான தாள்கள், மட்டைகள் என அச்சிடக்கூடிய அனைத்தும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நாளேடானது இரண்டு பக்கங்களில் மட்டும் வெளிவந்த மிக நெருக்கடியான பத்திரிகைத் தாள் தட்டுப்பாட்டுக் காலங்களும்கூட உண்டு. இதேவேளை தேய்ந்த அச்சுக்கள், அச்சு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக தெளிவற்ற அச்சடிப்பு, தெளிவற்ற படங்கள் எனப் பல -வாசகர்களின் வாசனைக்கு இடையூறான விதத்திலமைந்த பத்திரிகைகள் கூட வெளிவந்திருக்கின்றன. ஆனால், இவையெல்லாம் பத்திரிகைக்கும் வாசகர்களுக்குமுள்ள புரிந்துணர்வு காரணமாகவேவெற்றி கொள்ளப்பட்டன.



யாழ். நகரில் 13 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாதம் நிறுவனம் யாழ். குடாநாட்டுக்கும் வன்னிப் பெருநிலப் பரப்புக்கும் இடையே தரை வழிப்பாதை துண்டிக்கப்பட்டபோது வன்னியிலும் கிளை பரப்பி தனது வன்னிப் பதிப்பையும், யாழ். பதிப்பையும் ஒருங்கே வெளியிட்டது. பின்னர் யாழ். நகரிலிருந்து தென்மராட்சிக்கும், தென்மராட்சியிலிருந்து கிளிநொச்சிக்கும் இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பைக் கிழக்குப் புறமாகச் சுற்றி பழைய முறிகண்டி, கரிப்பட்டமுறிப்பு, புதுக்குடியிருப்பு என இடம்பெயர்ந்து மீண்டும் கிளிநொச்சி நகரை வந்தடைந்திருக்கின்றது.

மக்கள் செறிவாக வாழும் இடத்தில் அல்லது அதற்கு நெருக்கமாக இயங்குவது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஈழநாதம் தனது இடம்பெயர்வு நகர்வை மேற்கொண்டது. எனினும் இதன்போது கூட அதனது பணி நின்றுவிடவில்லை. வலிகாமம் பெரும் இடப்பெயர்வின்போது ஈழநாதமும் தனது வளங்களுடன் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்து கொண்டிருந்தபோதும் ஒருபுறம் பத்திரிகை அச்சாகிக் கொண்டிருந்தது. பின்னர் யாழ். குடா நாட்டை இராணுவம் முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டவேளை, வன்னிக்கு நகர்ந்து வன்னிப் பதிப்புடன் இணைந்து கொண்டது.

பின்னர் சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட நகர்வின் போது இடைத் தங்கலாக சில மாதங்கள் பழைய முறிகண்டியில் இயங்கியது. இவ்வேளையில் அங்கிருந்த சிறிய பரப்பளவுள்ள சீமெந்துத் தரையில் இயந்திரங்கள் நிலை நிறுத்தப்பட ஏனைய பிரிவுகள் மரங்களின் கீழேயே இயங்கின. பின்னர்கூட மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் தொடர்பகங்கள் மட்டும் இயங்க, ஏனைய பிரிவுகள் அனைத்தும் அதற்கு அண்மையிலுள்ள காட்டைக் குடைந்து பாரிய மரங்களுக்குக் கீழே அமைக்கப்பட்ட சிறிய கட்டடங்களிலேயே இயங்கின.

இந்த நகர்வுகளின் போதெல்லாம் அச்சு இயந்திரங்கள், அச்சுக்கள், அச்சிடும் தாள்கள், தளபாடங்கள், மின்பிறப்பாக்கிகள், ஏனைய உபகரணங்கள், மூலப் பொருட்கள் என்பனவற்றை நகர்த்திச் செல்ல ஈழநாதம் ஊழியர்களின் அயராத உழைப்பு அளப்பரியதாகும். பாரந்தூக்கிகள் எதுவும் இல்லாத நிலையில் சிறிய கப்பிப் பொறித் தொகுதி ஒன்றின்

(35 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் உணர்வுக்கு மதிப்பளித்து, உள்ளூர்ச் செய்திகளுடன் உலகச் செய்திகளையும் அள்ளித்தந்து மக்கள் மனதை மகிழ்விக்கும் ஈழநாதமே! புது அகவைகாண வாழ்த்துகின்றோம்.

# கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்

பணிப்பாளர்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

(சி-7275)

# JEGA MOTORS
ஜெகா மோட்டோர்ஸ்
காட்வெயா

Dealers in : Electrical goods, Paint & Electrical Contractors.

Jaffna Road - Nelliady
T.P. & Fax - 021 . 2263237

(சி-7243)

ஈழ மண்ணில் இன்னல் களைய, கருத்துக்களமாக உயர்ந்தெழுந்து, மக்கள் மனதைக் தட்டியெழுப்பி, 14 ஆவது அகவை காணப்புறப்படும் ஈழநாதமே! வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றோம்.




# கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்

பணிப்பாளர்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

(சி-7274)

எம் கரங்களில் தவழும் தரமான இதழே! ஈழநாதமே! பதினான்காவது அகவை புகும்வேளை பொலிகவென வாழ்த்துகின்றோம்.



# இளவரசி


# புடவை மாளிகை
(விமல்ஸ்)

புது. சந்தி, புதுக்குடியிருப்பு

(சி-7261)

கண்ணைக் கவரும் வண்ணக் கலரில் வெள்ளிநாதத்தையும் அள்ளித் தரும் ஈழநாதமே! 14ஆவது அகவையில் எம்மையும் அழைக்கும் உன்னை வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

5 ஆவது அகவையில்



# சர்வதேச தொலைத்தொடர்பு சேவை



மிகவும் குறைந்த கட்டணத்தில் உரையாடும் நடைமுறை

உலகின் எப்பாகத்திலிருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடர்புகொள்ள

| புதுக்குடியிருப்பு | கிளிநொச்சி | மல்லாவி |
|---|---|---|
| 008737620 77512, 008737630 80842 – T.P | 00873763018082, 009470212371 – T.P | 00873763080838 - T.P |
| 0087376207751 4, 00873763080 844 – FAX | 009470213251 - T.P - FAX | 00873763080840 - FAX |
| | 00873763018084 - FAX | |

ஆளுகை சர்வதேச தொலைத் தொடர்பு சேவை, தமிழீழம்.

(சி-7280)

கலைகள் ஒவ்வொன்றும் தம்வடிவங்களில் நின்று உணர்த்தும் தத்துவங்களால் அது பல்வேறு பெயர்களைப் பெறுகின்றது. இன்றைய காலகட்டத்தில் நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையிலும் மனிதன் மனிதனாக வாழ முடியாத நிலையில் மனவிரக்தியடைந்து சீரழிந்த வாழ்வை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கும் வேளையில் அவனது துயரைப்போக்கும் ஒரு சாதனமாக இசைக்கலையுடன் இணைந்த பாடற்கலை உள்ளது.

# கவிஞர்களின் கவிவரிகளுக்கு நாம் உயிர்வடிவம் கொடுக்கிறோம்



ஆதிகால மனிதர்களும், யோகிகளும் தவஞ்செய்யும் முனிவர்களும் வேட்டையாடும் மக்களும், தாம் காதாற் கேட்ட ஒலிகளைக் கொண்டு இசைக்கருவிகளை தயாரித்து அவனது நாவினால் பிறக்கின்ற ஒலியையும் இணைத்து பாடும் மரபுவழி உருவாகியது. அந்த வகையில் தமிழீழத்தில் இன ஒடுக்கு முறை தலைவிரித்துத் தாண்டவமாடும் வேளை தனது கண்களால் கண்ட சம்பவங்களை கவி வடிவிலே, கவிஞர்கள் எழுதிய வரிகளுக்கு உயிர்வடிவம் கொடுத்தவர்கள் தமிழீழக் கலைஞர்கள். இவர்களின் பணி தமிழீழ போராட்ட வரலாற்றில் மிகவும் உன்னத பணியாக அமைகின்றது.

அந்தவகையில் தமிழீழ இசைக்கலைஞர்கள் இசையமைப்பு மூலம் 150இற்கும் மேற்பட்ட பாடல்களைப்பாடி தமிழீழத்திலும் வெளியுலக நாடுகளிலும் முதன்மையான இடத்தைப் பிடித்துக் கொண்ட பாடகர் எஸ்.ஜீ. சாந்தன் அவர்கள். அவர்களுடனான நேர்காணலை மேற்கொண்ட போது "கவிஞர்களின் கவி வரிகளுக்கு நாங்கள் உயிர் வடிவம் கொடுக்கின்றோம்" எனக்கூறிய அவர் தனது கலையுலக வரலாற்றை தொடர்கின்றார்.

கேள்வி : தங்களுக்கு இக்கலைத்துறையில் எவ்வாறு ஆர்வம் உருவாகியது?

● கலைத்துறையில் எமது குடும்பத்தில் முன்னர் எவரும் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. அனேகமாக எங்களுடைய ஊரில் எல்லோரும் பாடக்கூடியவர்களாகத்தான் காணப்படுகின்றனர். எங்களுடைய ஊர் புங்குடுதீவு. அனேகமாக பெண்களாக இருந்தால் என்ன, ஆண்களாக இருந்தால் என்ன. எல்லோரும் ஓரளவு பாடக்கூடியவர்கள்தான். கேட்பதற்கும் இனிமையாக இருக்கும். ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒரு ராகத்தை அறிந்து இருப்பார்கள். காலையில் தேவாரத்தைப் பாடினால் பூபாளம் - அதை அறியாமலே பூபாளத்தைப் பாட வேண்டும்.

சின்ன வயதில் எங்களுடைய ஊர்க் கோயில்களில் 'கண்ணன் கோஷ்டி', 'அருணா கோஷ்டிகள்' வரும்போது மிக ஆர்வமாக முன்னுக்கு இருந்து கேட்டுக் கொண்டிருப்பேன். அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் காரைக் காண்பதென்றால் பெரிய கஷ்ரம். சைக்கிள் காண்பதென்றல் கஷ்ரம். இந்தக் கோஷ்டிகள் வந்தால் எங்கு என்றாலும் நடந்தே போய்ப் பார்ப்போம்.

அந்தக் கோஷ்டிகள் போய் முடிய பூவரசம் மரங்களில் ஏறியிருந்து நாங்கள் பாடத்தொடங்குவோம். என்னுடைய பாட்டைக் கேட்டுக்கொண்டிருக்கும் எல்லாரும் "நல்லா பாடுகின்றாயடா தம்பி" என்று சொல்லுவார்கள். அதனால் எனக்கு கலைத்துறையில் ஒரு ஆர்வம் ஏற்பட்டது.

கேள்வி : நீங்கள் இசைத்துறையில் காலடி எடுத்து வைத்து முதன்முதல் பாடிய பாடல் எது?

● கொழும்புக்கு சிவராத்திரி விழாவுக்கு நான் போயிருந்தேன். கொழும்பு கதிரேசன் கோயிலில் என்னைப் பாடவைத்தார்கள் அப்போது நான் "மருதமலை மாமணியே முருகையா...." என்ற பாடலைப்பாடினேன். எனக்கு அப்போது தாளம், சுருதி ஒன்றும் தெரியாது என்னுடைய விருப்பப்படி ஏதோ பாடினேன். அப்போது எனக்கு வயது பன்னிரெண்டு. அது தான் நான் இசைத்துறையில் காலடி எடுத்து வைத்த முதற் பாடலாக அமைந்தது. அப்படித் தொடங்கிய எனது வாழ்க்கை இசைத்துறையோடு போய்விட்டது.

கேள்வி : நீங்கள் தமிழர்களின் போராட்டம் சம்பந்தமான ஏராளமான பாடல்களை பாடியுள்ளதாகத் தெரிகின்றது. ஏன் அவ்வாறான பாடல்களைப் பாடுவதற்கு முன்வந்தீர்கள்?

● சினிமாப் பாடல்களில் வருகின்ற போராட்டம் சம்பந்தமாக வரும் பாடல்களையே முதலில் பாடி வந்தோம், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் ஒரு மாவீரர் நாள், முதலாவது மாவீரர் நாள் நேரம்; கோணாவில் என்ற இடத்தில் நிகழ்வொன்று நடைபெற்றது. எனது நண்பர் கணேஸ் என்பவர் ஒரு பாடலை எழுதினார்.

"வானம் பூமியானது, பூமி வானமானது, இந்த புழுதியெல்லாம் குருதியானது....." என்ற பாடலையே நான் மெட்டமைத்துப் பாடினேன். புதுவை அண்ணா மற்றவர்கள் அந்த வீடியோ ஒலிநாடாவைப் பார்த்துவிட்டு எனது வீட்டிற்கு வந்து, "இந்தியாவில் உள்ள இசையமைப்பாளர்களின் இசையில் இங்குள்ள பாடகர்கள் பாடவேண்டும்" என்று சொன்னார்கள். "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற ஒலிப்பதிவு நாடா. இங்கு பரீட்சாத்தமாகவே தயாரிக்கப் பட்டது. ஆனால், அது வெற்றியளித்தது. இதனால் இங்குள்ள இசையமைப்பாளர்களின் இசையில் இங்கு பாடல்கள் பாடப் பட்டன.

போராட்டத்தில் இராணுவத்தினராலும் மாற்று இயக்கங்க



ளினாலும் பெரியதுன்பங்களை அனுபவித்திருக்கிறோம். அத்தோடு எனது நெருங்கிய நண்பர்களெல்லாம் போராளி களாக இருந்தார்கள். அந்த நேரம் இரகசியமாக வந்து சந்தித்து விட்டுப் போவார்கள். அவர்களுடன் பழகி உண்டு உறங்கி வாழ்ந்திருக்கின்றேன். சில வேளை அவரை அடுத்த நாள் வித்துடலாக கூடக்கண்ட அனுபவங்கள் நிறைய உண்டு. என்றுதான் சொல்லவேண்டும்.

நேர்காணல்: சு. பாஸ்கரன்
பூ. சுபாநந்

கேள்வி : மக்களின் நேரடியான போராட்டப் பங்களிப்பு - எழுச்சி தொடர்பாக பாடல்கள் ஏதாவது பாடியிருக்கின் றீர்களா?

● மக்களின் எழுச்சி சம்பந்தமாகவும் கூடுதலான பாடல்கள் பாடியுள்ளேன். எல்லைப் படைகளாக களமுனைகளில் காவலில் நின்ற எல்லைப்படை வீரர்களைப் பாடியிருக்கின்றேன். அதாவது "தமிழீழத்தின் எல்லையை காத்திட நினைப்பவர் எல்லைப்படை....." என்ற பாடலைக்குறிப்பிடலாம். அது ஒலிப்ப திவு செய்யப்படவில்லை. மக்களோடு பழகியமையால் இவ் வாறு உண்மைச் சம்பவங்களை உணர முடிகின்றது.

மக்கள் பற்றிப் பாடுவது எங்களுடைய திறமையில்லை. அது கவிஞர்களுடைய திறமை. அவர்கள் அந்த வரிகளை எழுதுவார்கள் நாங்கள் அதற்கு உயிர் கொடுக்கின்றோம். அதுதான் எங்களுடைய வேலை. அந்த வரிகளினை உச்சரிக் கின்ற விதத்தை இசையமைப்பாளர்கள் சொல்லுவார்கள். அது கவிஞர்களுக்குரிய வெற்றிகள் என்று தான் சொல்ல வேண்டும்.

கேள்வி : நீங்கள் யாருடைய பாடல்களை கூடுதலாகப் பாடியிருக்கின்றீர்கள்?

● கூடுதலாக புதுவை அண்ணாவின் பாடல்களைத்தான் பாடியிருக்கின்றேன். பண்டிதர் பரந்தாமன் அவர்கள் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள் ஆகியோரின் பாடல்களை குறிப்பிடலாம். இந்தப் பாடலை சாந்தன் தான் பாடவேண்டும் என்று சொல்லுவார்கள். என்னுடைய உச்சரிப்பு கவிஞர்கள் எதிர்பார்க்கின்றபடி இருப்பது - அவர்கள் நினைத்தவாறு பாடல்கள் வெளிவருவது என்பதால் அப்படிக் கேட்கிறார்கள்.

கேள்வி : உங்களுடைய குடும்ப நிலை பற்றியும் கலைத்துறை பற்றியும் கூறுவீர்களா?

● எங்களுடைய அப்பா ஒரு முதலாளி. கொழும்பில் கடை வைத்திருந்தார். பதினேழு வருடங்கள் கொழும்பில் தான் இருந்தோம். அனேகமான எங்களுடைய தீவகப்பகுதி மக்கள் வியாபாரிகளாகத்தான் இருந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு உன்னதமான நிலையில் எங்களுடைய அப்பா இருந்தார்.

ஆரம்பத்தில் ஒரு கல்வீட்டில் இருந்தோம். எங்களுடைய ஊரில் ஐந்து கல் வீடுகளில் ஒன்று எங்களுடையது. பிறகு, வியாபாரம் அடிபட்டுப் போகக் கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு வந்தோம்.

இங்கு மிகவும் கஷ்ரமான நிலையில் நீச்சலடிப்பு. அதாவது இசையை மட்டும் நம்பியிருக்கமுடியாது. இந்தியாவிற்கு என்றால் இது பொருந்தும். ஆனால் தமிழீழத்தைப் பொறுத்த ளவில் கலையால் உயர்ந்தவர்கள் என்றால் - பொருளாதார ரீதியாக எவருமே உயரவில்லை என்றே சொல்லவேண்டும். அப்படி கேள்விப்பட்டதும் இல்லை. ஏதாவது ஒரு உத்தி யோகத்தை செய்து கொண்டு இதை ஒரு பக்கத் தொழிலாகச் செய்யலாமே தவிர இதை நிரந்தரமாகச் செய்ய இயலாது.

நானும் அப்படித்தான் எதிர் நீச்சல் போட்டு மிகவும் சிரமப்பட்டிருக்கிறேன். வன்னியில் ஒரு நிகழ்ச்சி என்றால் கால்நடையாக நடந்து போய் பாடியிருக்கின்றோம். என்னுடைய ஆர்வம்தான் என்னை இந்த நிலைக்கு கொண்டு வந்தது.

நான் என்னுடைய கல்வியை சிறிசண்மு கானந்தா வித்தியாசாலையில் எட்டாம் வகுப்புடன் நிறுத்திவிட்டேன். "நான் பாட்டுகளைப் பாடினால் எனது தந்தையார் ஏசுவார்" "இந்தச் சினிமாத் தொழில் எல்லாம் வேண்டாம் கடையில் போய்நில்" என்று சொந்தக்காரன் கடையில் விடுவார். நான் பதினைந்து நாட்களுக்குள் ஓடி வந்துவிடு வேன். கலைத்துறையில் எனது வழிகாட்டிகள் எனப்பலரைச் சொல்லலாம். ஆர்மோனியத்துடன் பாடும்போது ராமநாதன் என்பவர் தான் ஆர்மோனியம் வாசித்தவர். அவர் தனக்கு தெரிந்ததை எனக்குச் சொல்லித் தருவார். இதுதான் சுருதி, இதுதான் தாளம், என்று சொல்லுவார்.

ஒவ்வொரு, ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொருதரரைச் சந்தித்து அவர்களிடம் இருந்து நல்ல நல்ல விடயங்களை கற்றுக்கொண்டேன். இப்பொழுது ஒலிப்பதிவு என்றால் கண்ணன் மாஸ்ரர் சிறீகுகன், இசைப்பிரியன், செயல் வீரன், தமிழீழ இசைக்குழு எஸ்.பி.அண்ணர் அவர்களிடம் இருந்து ஒவ்வொன்றையும் கற்றுக்கொண்டேன். படிப்படியான வளர்ச்சி இது. அரை இடம், இது முழு இடம் என்று சொல்லுவார்கள். நாங்கள் அதைக் கேட்டு கிளிப்பிள்ளை மாதிரி செய்வோம். எல்லோருமே வளர்த்து விட்டவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நான் கல்வி கற்ற காலத்தில் சங்கீதம் படிக்க வில்லை. அப்போது சங்கீத ஆசிரியரும் இல்லை.

கேள்வி : உங்களுடைய பாடல்கள் தமிழீழத்திலும் சர்வதேச ரீதியில் பெற்றுள்ள செல்வாக்கு பற்றி கூறுவீர்களா?

● முன்னைய கலைஞர்களினுடைய நிலைமை வேறு. இப்போது இயக்கம் எங்களை நல்ல முறையில் பார்க்கின்றது. ஒருதலை நிமிர்வொன்று இருக்கின்றது. நாங்கள் முன்னர் பாடும்போது ஈழத்துச் சீர்காழி, ஈழத்து சௌந்தரராஜன் என்று இந்தியாவிலுள்ள ஒருவருடைய பெயரைச்சேர்த்து வைத்து

(38 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூரிலேயே கடந்த
22 வருடங்களுக்கு மேலாக
மக்களுக்கு உன்னத சேவையாற்றும்
**மானிப்பாய் "சுந்தர்சன்" ஸ்தாபனம்**
இன்று புதிய அகவையில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் மக்கள் தினசரியினை இன்னும் பல அகவை
இனிதாய் வாழ வாழ்த்துகின்றனர்



* ☆ மின்சார உபகரணங்கள்
  மின் அலங்காரப் பொருட்கள்
* ☆ P.V.C நீர்க்குழாய்கள்
  பீலி வகைகள்
  அதற்கான இணைப்புக்கள்
* ☆ குளிர்சாதனப் பெட்டிகள்
  துணிதுவைக்கும் இயந்திரங்கள்
* ☆ சமையல் வாயு சிலிண்டர்கள்
  வாயு அடுப்புக்கள்

இன்னும் பலவகையான மின்சாரத்தில் இயங்கும் பொருட்களை நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்

# "சுந்தர்சன்"

மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி, மானிப்பாய்.

தொலைபேசி / தொலைநகல் } 2222751

(சி-7910)

---

நாதமே!
உன் வரவு கண்டு முகம் மலர்ந்தோம்.
உறவாய் ஒன்று கூடி அகம் மகிழ்ந்தோம்.
உன் பணி சிறக்க எம் கரம் கொடுப்போம்.
உயர்ந்திடு மேலும் இவ்வுலகில்

# பருத்தித்துறை
# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## (வரையுள்ளது)

எமது சேவைகள்:



* ☆ நுகர்ச்சிச் சேவை
* ☆ கிராமிய வங்கிச் சேவை
* ☆ வாகனச் சேவை
* ☆ வாடகை கதிரைச் சேவை
* ☆ எரிபொருள் விநியோகச் சேவை

இன்னும் பல
சேவைகளினூடாக
மக்களுடன்
இணைந்துள்ளோம்.



அங்கத்தவர், பணியாளர்கள்.
பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்,
பருத்தித்துறை.

(சி-7911)

---

தமிழீழ தேசமதில்
தக்கதோர் விடயங்களை
உண்மையாய் எடுத்துரைக்கும்
எங்கள் நாதமே!
உனை என்றும்
பார் புகழ வாழ்த்துகின்றோம்.



# தயா
# நகைப்பூங்கா

தங்க நகை வியாபாரம்

அழகிய கலைநயம் ...
எழிலுறு தொழில்வளம் ...
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு ...



22 கரட் தங்க நகைகள் குறித்த
தவணையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

# தயா
## நகைப் பூங்கா

TNP

213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7901)

---

## யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ-து

இன்று 13 ஆண்டு நிறைவினை பூர்த்தி செய்யும் ஈழநாதம் மக்கள் நாளிதழை எமது நிறுவனம் சார்பாக வாழ்த்துவதோடு, மேன் மேலும் பல வருடங்கள் மக்கள் உள்ளங்களில் நிலைத்திருக்க வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்து கின்றோம்.

"சிக்கனமே சிறந்த செல்வம்"
"குறைந்த வட்டியில் நிறைந்த சேவை"
"எமது பணம் எம்மவர்களுக்கே உதவிட
சிக்கன கூட்டுறவுச் சங்கங்களை நாடுங்கள்"

021-2223131

பணிப்பாளர்,
பணியாளர்கள்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ-து

337,(383) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7902)

# “ஆசிரிய விருத்தி”

## எமது சமூகத்தேவைக்கான ஓர் நோக்கு

கு. சிதம்பரநாதன்
(விரிவுரையாளர், இணைப்பாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.)

இன்றைய கல்வியியலில் ஆசிரிய விருத்தி என்பது எல்லாக் கல்வி சம்பந் தப்பட்டவர்களாலும் பேசப்படுகின்ற தாரக மந்திரமாக உள்ளது. அதே வேளை, பாடசாலைக் கல்வி தொடர்பான மதிப்பீடுகள் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை என்பதும் அவர்களது கருத்தாக உள்ளது.

கடந்த இரு தசாப்தங்களாக ஆசிரியர் விருத்தி, கல்வி விருத்தி தொடர்பான சிந்தனைகள் பல்கிப்பெருகியுள்ளதுடன் இவை தொடர்பான விரிவானதும் நுண்ணியதுமான அணுகுமுறைகள் செயற்படுத்தப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எமது கல்விச் சூழலைப் பொறுத்தவரை பாரம்பரியமான கல்வி மரபுமுறைகள் தொடக்கம் இன்றைய நவீன அணுகுமுறைகள் வரை கல்விப் பாரம்பரியத்தையும், கல்வி விருத்தியின் பரிணாமத்தையும் காணக்கூடியதாக உள்ளது.

புதிய கலைத்திட்டங்களின் விருத்தி, ஆசிரியவிருத்தி, நவீன கற்பித்தல் உத்திகள், கல்வியின் தரவிருத்தி, நவீன மதிப்பீட்டு அணுகுமுறைகள், நவீன முகாமைத்துவ அணுகு முறைகள்,.. என்றவாறு கூறப்படுகின்ற எல்லா விடயங்களும் கல்வியை விருத்தி செய்வது அல்லது எதிர்கால சமுதாயத்தை விருத்தி செய்வது என்ற நோக்கத்தை அடைகின்ற பல்வேறு பாதைகளே. எல்லாப் பாதைகளும் சமுதாய மேம்பாட்டுக்காகத் திருப்பப்பட்டிருக்கின்ற போதும் சமுதாய மேம்பாடு என்பது தர அளவிலும். எண்ணிக்கை அடிப்படையிலும் எந்தளவுக்கு அடையப்பட்டிருக்கின்றன என்பது வினாவுக்குரிய, ஆராய்வுக்குரிய விடயமாகவே உள்ளமை நோக்கற்பாலது.

இன்னும் சொல்லப் போனால், கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் கல்வியின் தரம் மேம்பாடுடையதாக இருந்தது என்று கூறுவாரும் உளர். காரணம் கல்வியின் தரம் பாடஉள்ளடக்கங்களில் மட்டும் தங்கியுள்ள ஒன்றல்ல என்பது புலனாகிறது.

கல்வியின் விடய உள்ளடக்கம் ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் இரட்டிப் படைவதாக யுனெஸ்கோ (UNESCO) அறிக்கை கூறுகிறது. மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் வெகுவாக அதிகரிக்கிறது. இதனால்

> மாணவர்களில் காணப்படுகின்ற பல்வேறு திறன்களை இனங்காணவும் மதிப்பீடு செய்யவும் ஏற்ற திறன்கள் ஆசிரியர்களிடம் கைவர வேண்டியது அவசியம்.

பாடசாலை எண்ணிக்கை, ஆசிரிய எண்ணிக்கை போன்றன அபரிமிதமான அதிகரிப்பைக் காட்டுகின்றன. உலகின் பொருளாதார மற்றும் தொழில் வாய்ப்பு சிந்தனைகள் பாரம்பரிய சிந்தனைகளில் இருந்து மாறுபடுகின்றன.

மாணவர் பாடசாலையை விட பல்வேறு மூலங்களூடாக புதிய விடயங்களை அறியக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. இன்றைய உலகமயமாக்கல் மற்றும் தகவல் தொடர்புகளூடாக புதிய விடயங்களை நோக்கி மாணவர்கள் ஆகர்ஷிக்கப்படுகிறார்கள். இதனால் புதிய கலாச்சார பரிமாணங்களுக்குள் அவர்கள் வரமுயற்சிக்கிறார்கள்.

இவ்வாறான பின்னணியில் எமது பிரதேச மாணவர்களின் கல்வி தொடர்பான வளர்ச்சி பற்றி நாம் அக்கறைப்படுவதற்கு முன்னர் இருக்கின்ற நல்ல நிலைமைகளை பேணுவது அதியுயர் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

மீள்குடியேற்றம், மூடப்பட்ட பாடசாலைகள் திறக்கப்படல், பாடசாலைக் கட்டடம் உட்பட அடிப்படைக் கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப்படல், இழந்த கல்வியை மீளப்பெறல், பெற்றோரின் பொருளாதார நிலைமையால் பெற்றோரிலும், மாணவர் களிலும் கல்விசார் உள நாட்டங்களை ஏற்படுத்தல், யுத்தச் சூழலில் குழம்பியுள்ள நிர்வாக ரீதியான கட்டமைப்பை மீள ஒழுங்குபடுத்தல், ஆசிரியர் வினைத் திறனை அதிகரித்தல்.... போன்ற இன்ன பிற விடயங்கள் எமது மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான அதியுயர் முக்கியத் துவம் வாய்ந்த, ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த விடயங்களாக உள்ளன.

மேற்சொன்ன நிலைமை களில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடும் சகலரினதும் உழைப்பு அவர்களது சாதாரண கடமைக் கூறு அல்லது சேவை என்பதிலும் அதிகமாக இருக்கவேண்டிய தேவை மிக முக்கியமான தாகும்.

எனவே “ஆசிரிய விருத்தி” என்ற எண்ணக்கரு எமது பிரதேசச் சூழ்நிலை களைக் கருத்தில் கொண்டு அவர்கள் அத்தொழிலில் ஈடுபடுவதற்கான சிந்தனைகளை உள்ளடக்கியதாக இருத்தல் அவசியம். அவர்கள் தொழில் சார்ந்த அறிவு மட்டுமன்றி தொழில் சார் திறன்களையும், தொழில் சார் நீதியையும் எமது சூழலுக்கேற்ப கைவரப் பெற்றவர்களாக மாறக்கூடிய ஆசிரிய விருத்தி அவசியம். பின்வரும் வரைபடம் மூலம் இதனை விளக்கலாம்.




* உன்னத ஆசிரியர் விருத்தி.

பொதுவாக தொழில் சார்ந்த அறிவு ஆசிரியர்களுக்கு உண்டு. சற்றுக் குறைவாயினும் அதனை அவர்கள் விருத்தி செய்து கொள்வது எளிதான விடயமாகும். அவர்கள் “நுண் மாண் நுழைபுலம்” உள்ளவர்களாக தங்களை விருத்திசெய்து கொள்ள வேண்டும்.

தொழில் சார்ந்த அறிவை விருத்தி செய்வதற்காக இடையறாது சம்பந்தப்பட்ட நூல்களை வாசிப்பதும், துறை போந்தவர்களிடம்கலந்துரையாடலும் கிடைக்குமாயின் நவீன தொடர்பாடல் உத்திகளைப் பயன்படுத்தும் தொழில்சார் அறிவை மேம்படுத்தும் தொழில்சார் திறனைப் பொறுத்தவரை எமது பிரதேசத்திற்கும் அதன் தேவைகளுக்கும் ஏற்ற விதமான உத்திகளைப் பாவிக்கக் கூடிய ஏது நிலைகள் உண்டு. மாணவர்களுக்கும் பொருத்தான எளிய இணக்கல் உபகரணங்களை (IMPROVISED APPAR ATUS) தாமே ஆக்குதல், அவற்றைப் பொருத்தமான வகையில் வடிவமைத்தல், பொருத்தமான பாடப்புறச் செயற்பாடுகளை வடிவமைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல், அவர்களுக்குப் பொருத்தமான கல்வி மற்றும் தொழில் ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கல், அவர்களுக்கு கல்விசார் உள நாட்டங்களை ஏறபடுத்த முயற்சித்தல், பெற்றோர்மற்றும் சமூகத்துடன் பொருத்தப் பாடுடைய தொடர்பாடல் திறன்களை வளர்த்தல்... என்பன அவற்றுட் சிலவாகும். இவ்வாறான திறன்கள் எண்ணிக்கையில் குறைவான, அதிக மாணவர்களைக் கொண்ட நகரப்பாடசாலைகளிலும் பார்க்க அதிக எண்ணிக்கையான நகர்ப்புற மற்றும் கிராமப் பாடசாலைகளில் மிகமுக்கியமானதாகவும், வேறுபட்டனவாகவும் உள்ளன. இவ்விடயத்தில் ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களும் விசேட திறன்களைக் கொண்டிருத்தல் அவசியமாகின்றது.

மாணவர்களில் காணப்படுகின்ற பல்வேறு திறன்களை இனங்காணவும் மதிப்பீடு செய்யவும் ஏற்ற திறன்கள் ஆசிரியர்களிடம் கைவர வேண்டியது அவசியம். குறிப்பாக பரீட்சையை நோக்கி சிறப்பாகப் பரீட்சையில் வெற்றிகொள்ளும் மாணவர்களை மட்டும் இனங் கண்டு அவர்களை ஊக்குவிப்பது எமது கல்விப் போக்கிற்கு பாதகமானது.

கல்வி மேம்பாட்டிற்காக கற்பித்தலில் நவீன உத்திகளைப் பயன்படுத்தும் திறனும் கிடைக்கக்கூடிய எல்லா சந்தர்ப்பங்களிலும் செயல் ரீதியான ஆய்வூடாக கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவதும் தொழிற்திறனை மேம்படுத்த உதவும்.

‘தொழில் சார் நீதி’ என்கிற எண்ணக்கரு ஆசிரியர்விருத்தியில் காணப்படவேண்டிய முக்கிய கூறாகும். உண்மையில் இங்கு தான் ஆசிரிய விருத்தியின் முழுமையே தங்கியிருக்கிறது. இவ்விடயத்தில் கல்வியாளர்களும், கல்வி விருத்திபற்றிச் சிந்திக்கிறவர்களும், ஆசிரியர்களும் அதீத கவனத்தைக் கொண்டவர்களாக இருத்தல் அவசியம்.

எமது கல்வி மரபில் ஆசிரியர் ஒழுக்கம் அதீத கவனத்தை ஈர்க்கிறது. நாம் கல்விக்காக பலதரப்பட்ட நூல்கள், உபகரணங்கள், நிதி உதவி, ஆலோசனை போன்றவற்றை ஏனைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். யதார்த்தமாக அதனை நாம் தவிர்க்க வேண்டியதும் இல்லை, தவிர்க்கவும் முடியாது. அதற்காக அந்த நாட்டின் கலாச்சார விழுமியங்களை நாம் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் எழாது. அவ்வாறாயின் அது எமது அறியாமையே.

எமது ஆசிரியர்கள் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், சுய ஒழுக்கத்தையும் சுய தொழிலை மதிப்பீடு செய்கின்றவர்களாகவும் அதனைப் பொருத்தமாக அமைத்துக் கொள்கின்றதுமான உளவிருப்பத்தையும் ஆற்றலையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டிய தேவை என்றும் எமது சமூகத்திற்கு அவசியம். இவ்வாறான ஆசிரிய விழுமிய விருத்தி இன்று நேற்றல்ல, சங்ககாலத்திலேயே உள்ளமையை நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயிறெழிவு கட்டுரை வன்மை நில
மலை நிறைகோன் மலர் நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே”

மேலும் சிறப்பாக ஆசிரியருக்கு இருக்கக் கூடாத பண்புகளையும் அவர் பின்வருமாறு கோடிட்டுள்ளார்.

“மொழிகுண மின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தை
யும்
உடையோ ரிலரா சிரியராகுதலே”

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் சங்ககாலத்தில் வலியுறுத்தப் பட்டிருப்பினும் இன்று இவற்றை மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும் இன்றைய நவீன கல்விச் சிந்தனையாளர்களும் அதே விடயங்களை வேறு வடிவங்களில் புதிய கருத்துருவங்களாக வெளிப்படுத்த முயல்வதைப் பார்க்கலாம்.

வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியர்களது செயற்பாடுகள் சமூக நீதியை நிலை நிறுத்தப் பொருத்தமாக அமைய வேண்டும். இதனையே “கல்வியில் சமத்துவம்” என்ற விடயம் குறித்து நிற்கின்றது. பாடசாலையில் இனரீதியான, சமய ரீதியான, சாதி ரீதியான, பொருளாதார வேறுபாடான கருத்துக்களை ஆசிரியர்கள் உள்ளார்ந்த ரீதியாகத் தவிர்த்தல் அவர்களது தொழில் சார் நீதியை நடைமுறைச் சாத்தியமாக்குகிறது. யாவருக்கும் சமத்துவக்கல்வியைக் கொடுக்க வேண்டிய அவர்களது கடமைக் கூறு வினாவுக்கு அப்பாற்பட்டதாக அவர்கள் அமைத்தல் வேண்டும். இவர் நமர், இவர் பிறர் என்ற எண்ணங்கள் எழாதிருப்பது ஆசிரியவிருத்தியை மகிமைப்படுத்தும்.

மாணவர் ஒழுக்கம் தொடர்பான ஆசிரியரின் எண்ணக் கருவூலங்கள் ஓரினமானதாகவும், எமது சமுதாய மேம்பாடு குறித்ததாகவும் அமைவது ஆசிரியர் தொழில் சார் நீதி சம்பந்தப்பட்டதாகும். அடிப்படை யில் மாணவர்கள் எல்லோரும் நல்லவர்கள் அவர்களை வழிப்படுத்தலில் தனிமனித வளர்ச்சியும், அதனூடு சமூக வளர்ச்சியும் எல்லைகளாக இருத்தல் வேண்டப்படுகிறது. பெரியோரை மதித்தல், எதிர்கால நம்பிக்கை, கலாச்சார விழுமி யங்களை ஏற்றல், அவற்றினூடு துலங்கல் போன்றன மாணவர்களிடம் ஆசிரியர்களூடாகவும் சென்றடைய வேண்டிய அம்சங்களாகவுள்ளன.

நிர்வாக அல்லது முகாமைத்துவத்துடன் முரண்பாடு கொள்வதன் மூலம் மாணவர்களுடைய கல்விக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தாத வகையில் ஆசிரியர்களிடம் தொழில்விருத்தி ஏற்பட வேண்டிய அவசியம் உணரப்படுகிறது. இவ்விடயத்தில் கல்வி தொடர்பான எல்லோரும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். ஆசிரியர்களிடையேயான வேறுபாடுகளைக் களையவும் ஏனையோருடைய கடமைக் கூறுகளை ஏற்கவும் மதிப்பளிக்கவும், துலங்கவும் ஆசிரியர்களது விருத்தி வேண்டப்

> ஆசிரியர்களது உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற அதே வேளை மாணவர்களுடைய கல்வி உட்பட அவர்களது அடிப்படை உரிமை களை மதிக்கின்ற மனப் பாங்கு ஆசிரிய விருத்திக்கு பெரிதும் உதவக்கூடியது.

படுகிறது.

ஆசிரியர்களது உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற அதே வேளை மாணவர்களுடைய கல்வி உட்பட அவர்களது அடிப்படை உரிமைகளை மதிக்கின்ற மனப்பாங்கு ஆசிரியவிருத்திக்கு பெரிதும் உதவக் கூடியது. மாணவர்களுடன் இருபக்கத் தொடர்பாடலை நியாயமாக ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர். ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள லீவு போன்ற சலுகைகள் அவர்களுக்கு அவசியமானதே ஆயினும் அதனை உரிமையாகக் கையாள்வதன் மூலம் மாணவர்களுடைய அடிப்படைக்கல்வியுரிமை பறிக்கப்படுவதை ஆசிரியர்கள் ஏற்றுமதிப்பளிக்

(38ஆம் பக்கம் பார்க்க)

# 14 வது அகவை காணப் புறப்படும் ஈழநாதம் நாளேடு தனது பயணத்தை வியத்தகு சிறப்புடன் நகர்த்த

# வாழ்த்துகின்றோம்


**கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்**

பிரதான வீதி, நெல்லியடி.

அழகுசாதனப் பொருட்கள்,
சகல விழாக்களுக்குமான அன்பளிப்புப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-7249)

**புதிய சீமாட்டி புடவை அகம்**

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(சி-7245)

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

**மஹாலக்ஷ்மி தங்க மாளிகை**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

பிரதான வீதி, (சி-7248) நெல்லியடி, கரவெட்டி.

**SIVARAJ TRADING CO.**

மின்சாரப்பொருட்கள், கட்டடப் பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகள், C.I.C பெயின்ற், lanka Pride பெயின்ற் வகைகள், மஸ்கனைற் அஸ்பெஸ்ரஸ் சீற் வகைகளுக்கான முகவர்கள்.

163, Main Street. Point Pedro.

(சி-7247)

**லவ்லி கூல்பார்.**

**லவ்லி. றெக்கோடிங் சென்ரர்.**

**லவ்லி ஆசனப்பதிவகம்.**

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

மக்கள் சகலரினதும் தேவைகளைப்
பூர்த்தி செய்யும் நிறுவனம்.

(சி-7244)

நவீன வடிவமைப்புகளில்
அழகிய தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**வைஷ்ணவி நகைப் பூங்கா**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

பிரதான விதி. (சி-7246) நெல்லியடி

14-வது ஆண்டு நிறைவைக் காணும் ஈழநாதம்
வெள்ளி விழா, பொன்விழாவையும் காண வாழ்த்தும்

**உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

மக்களுக்கு கீழ்வரும் சேவைகளையும் அளிக்கின்றது.

- நுகர்ச்சி சேவை.
- கிராமிய வங்கிச் சேவை.
- தொலைத்தொடர்பு, பக்ஸ்.
- அரிசி ஆலை.
- பொதி மற்றும் பயணிகள் போக்குவரத்துச் சேவை.
- விவசாய மற்றும் கனரகப் பொருட்கள்.
- எரிபொருள்.

வாழ்த்துவோர்:
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

(சி-7241)

**ஜெய கணேசா ஸ்ரோர்ஸ்**

வீரவாகு கட்டடம், பருத்தித்துறை.

ஈழநாதம் நாளிதழின் 14ஆம் ஆண்டு நினைவுச் சிறப்பிதழ்
சிறக்க எம் நல்வாழ்த்துக்கள்!!

இந்தியன் எவரடி கம்பனியின் உன்னத தயாரிப்பான லாவா பற்றரிகள், லாவா டோர்ச்சுகள், லாவா பென்ரோர்ச் பற்றரிகள் போன்றவற்றின் முகவர் லாவா பற்றரிகள் பிரகாசமானவை. நீடித்துழைப்பவை.

(சி-7242)

ஆண்டு பதின்நான்கில் கால் பதிக்கும் எம்மினிய ஈழநாதமே!
உன்பணி சிறக்க, ஊரெங்கும் உலவ உளம் நிறைத்து வாழ்த்துகின்றோம்.

தரமான தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்...

**லாவண்யா ஜுவல்லறி**

60, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

தொலை பேசி : 024 22484
தொலை நகல் (Fax) : 024 20236.

கிளை நிறுவனம் :
'லாவண்யா ஜுவல்லரி'
45, பெரிய கடை, மன்னார்.
தொலை பேசி : 023 32043

(சி-7264)

# வன்னியின் மான்மியமும் தொன்மையும், இன்றைய சீரான கட்டுப்பாடும் நிர்வாகமும்



**பேராசிரியர் பொன். சக்திவேல்**

வன்னிப் பிரதேசத்தின் வனப்பை பலர் கூறக்கேட்டும் அதனைப் பார்க்கக் கிடைக்காத சந்தர்ப்பம். அதனில் முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயமும், மல்லாவி மகா வித்தியாலயமும் எமது நடமாடும் புத்தகச் சந்தையைத் தங்கள் பாடசாலையில் நடாத்துமாறு விடுத்த அழைப்பை ஏற்றுச் சென்ற போதே வன்னியின் மான்மியமும், தொன்மையும், தற்போதைய சீரான கட்டுப்பாட்டு நிர்வாகமும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

தமிழரின் வரலாற்று பிரதேசம் தனது மான்மியத்தை இழக்காது தலை நிமிர்ந்து நடைபோடும் காட்சியே சிறப்புக்குரியது. இன்று வன்னிப் பிராந்தியத்தில் காணப்படும் கடைகள் யாவும் தூயதமிழ் பெயர்களுடனே இயங்கு கின்றன. சுகாதார வசதிகள் கிடையாத வன்னிப்பிரதேச சிற்றுண்டிக் கடைகளில் ஈ, இலையான் போன்றவற்றையோ காணமுடி யாது. உணவுப் பொருட்கள் பாதுகாப்பாக பேணி வைக்கப்படுகின்றன. பதார்த்தங்கள் வழங்கப்படும் போது கூட அவை மூடிய பொலித்தீன் பைக்கட்டுக்களுள் வைத்தே வழங்கப்படுகிறது. நிர்வாகம் திறம்பட இயங்குவதோடு ஈழ பொலிசார் பாஸ் பரிசோ தனை செய்யும் போது கூட "சிரமத்திற்கு மன்னிக்கவும் எமது கடமை இது" எனக் கூறும் போது உண்மையான நிர்வாகம் தெரிகின்றது.

வன்னி நாட்டு மான்மியத்தையும் தொன்மையையும் ஆராய்ந்தோமானால், கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தமிழகத்துத் தொண்டைமண்டலத்திலிருந்து வன்னிப் பகுதியில் குடியேறிய வன்னித் தலைவர்க ளினதும் மக்களினதும் வருகை முக்கிய பங்கினை வகித்தது. இவர்களின் வருகைக்கு முன்னர் வன்னிப் பகுதியின் முக்கிய குடியேற்ற மையங்களாக தனிக்கல், கணுக் கேணி, முள்ளமாகர், கிழக்கு மூலை, மேற்கு மூலை ஆகியவை விளங்கியதை வையபாடற் சான்றுகள் மூலம் நாம் அறிகிறோம். வன்னியர் காலத்தில் மாங்குளம், கொங்கன்புளியங் குளம், செட்டிகுளம், துணுக்காய், பனங்காமம் ஆகியன முக்கிய இடங்களாக குறிப்பிடப்பட்டு ள்ளன. போர்த்துக்கேயர், டச்சுரு ஆவணங்கள் பனங்காமம், கரிக்கட்டு மூலை, கருநாவல் பற்று, மேல்பற்று, முள்ளியவளை, தென்னம ரவடி, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் நிலைத்திருந்த வன்னிச் சிற்றரசுகள் பற்றிக் கூறுகின்றன. யாழ்ப்பாண அரசர் இடையி டையே படை உதவியுடன் தமது நேரடி ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றாலும் கூட பெருமளவுக்கு சுதந்திரமாகவே வன்னி அரசுகள் காணப்பட்டன. இவற்றின் சுதந்திர வேட்கையால் இவை "அடங்காப்பற்று" என்ற பெயரைப் பெற்றன. எனினும் வருடமொரு முறை யாழ்ப்பாண அரசர் குறிப்பாக முள்ளிய வளைப் பகுதியில் கோட்டை அமைத்திருந்த செய்தியும் வையாபாடலில் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரதான தலைமைப் பீடத்தை வைத்திருந்த இவர்கள் இத்தலைமை யகத்திற்கு ஆபத்து ஏற்படும் போது தம்மைப் பாதுகாக்க முள்ளியவளைப் பகுதியைத் தேர்ந்தெடுத்தனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வாவெட்டி, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் யாழ்ப்பாண அரசர் நிலை கொண்டிருந்தமையை வையா பாடலில் 96-99 எடுத்துரைக்கின்றன.

வன்னி நிலம் ஒருபோதும் அடங்கிக் கிடக்கவில்லை என்பதையே "அடங்காப்பற்று" குறித்து நிற்கின்றது. யாழ்ப்பாணத்தரசு வீழ்ந்து படும் போது யாழ்ப்பாண அரசின் ஆட்சிமைய மாக பெரு நிலத்திற்கே (வன்னி) நகர்ந்தது. பகை சூழ்ந்த போதெல்லாம் தமிழரசின் உயிர்ச் சூட்டைப் பெரு நிலமே ஒளித்து வைத்திருந் தது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கி லேயர், இந்தியர் என்போர் படையெடுத்து வந்த போது எல்லாப் பகைவருக்கும் வன்னி நிலம் ஒரு பொல்லாத கனவாய்த்தான் முடிந்திருக் கிறது.

வன்னியர் குடியேறியதாகச் சொல்லப் பட்ட போதும் ஐதிக்கத்தின் படி வன்னியரின் தோற்றம் அகஸ்தியர், புவஸ்தியர் எனும் இரு முனிவர்களின் யாகத் தீயிலிருந்து தோன் றினர் எனவும் கூறப்படுகிறது. அத்தோடு வன்னி மாநிலத்திலிருந்து ஆதிகாலத்திலேயே வண்ணாத்திப் பூச்சிகளின் உதவியுடன் கதிர்காமக் கடவுளுக்கான பாத யாத்திரை வற்றாப்பளை அம்மன் கோவிலில் ஆரம்பித்ததாகவும் வரலாறு உண்டு.

வன்னியின் பிரதேச எல்லைகள் குறித்து ஜே.பி. லூயிஸ் வைத்துள்ள குறிப்புகளில் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய இடங்க ளில் இருந்த அடங்காத பகுதியான படியால் "அடங்காப்பற்று" என அழைக்கப்பட்டது. வன்னி மாவட்டம் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களையும், கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியான ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் உள்ளடக்கியது வன்னிப் பிரதேசமாகும்.

**வன்னியின் பிரதேச எல்லைகள் குறித்து ஜே.பி. லூயிஸ் வைத்துள்ள குறிப்புகளில் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய இடங்களில் இருந்து அடங்காத பகுதியான படியால் "அடங்காப்பற்று" என அழைக்கப்பட்டது. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களையும், கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியான ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் உள்ளடக்கியது வன்னிப் பிரதேசமாகும்.**

வீரவன்னியர் பதினோராம் நூற்றாண்டி லேயே தமிழ் நாட்டிலிருந்து குடியேறினர் என கே.பி.லூயிஸ்சும், இராஜராஜ சோழன் (கி.பி. 985-1015) இடையிலேயே குடியேறினார்கள் என பேராசிரியர் பூலோகசிங் கமும், மாகோன் வரலாறு எனும் செல்வி தங்கேஸ்வரியின் நூலில் 12 ஆம் நூற்றாண் டிற்கு பின் மாகோன் படையெடுப்பு நடந்ததா கவும், அதற்குமுன்பே வன்னியர்களின் ஆட்சி ஈழத்தில் செல்வாக்கும் முக்கியத்துவமும் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

வன்னி அன்ட் வன்னியஸ் (Vanni and Vanniyars) எனும் நூலை எழுதிய சி. நவரத் தினம் அவர்கள் அடங்காப்பற்று பிரதேசம் அன்று ஏழு வன்னியர்களின் ஆட்சிப் பிரதேசங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன; (1) பனங்காமம், (2) முள்ளியவளை (3) கருநாவல்பற்று, (4) தென்னை மரவடி, (5) மேல்பற்று, (6) கரிக்கட்டு மூலை, (7) செட்டிக்குளப்பற்று என்பனவாகும். இந்த ஏழு வன்னிமைப் பற்றுகளில் பனங்காமம் பற்று அடங்காப்பற்றின் அரைவாசி நிலத்தைக் கொண்டதாகும்.

*வன்னி நாடு இதுபோல எப்பவும் வருந்தியது இல்லை. ஜெயசிக்குறு எனும் எதிரி மகாமூர்க் கனும் படுமுட்டாளுமாக இருந்தான். வன்னிமை களின் உயிர் நிலைகளின் மீது நேரடியாகத் தொடுக் கப்பட்ட ஒரு போராக இருந்தது. ஆதியான தலச்சிறப்புடைய தாய்த் தெய்வ வழிபாட்டிடங் களைச் கைவிட்டு, அழகிய சிறிய குடியிருப்பைக் கைவிட்டுச் சனங்கள் சிதறியோடினார்கள்.*

வன்னி நாட்டில் ஆதியான வழிபாடான அம்சங்களை தாய்த் தெய்வ வழிபாடும், நாக வழிபாடும், பாலியம்மான் வழிபாடும் ஒன்றித்து இருப்பதாகச் சாட்சி அளிக்கின்றது.

இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட வேளையிலே பனங்காமத்தை பண்டாரவன்னியன் ஆட்சி புரிந்தான். இவனது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன். அந்நியர் ஆட்சியையும் அடக்கு முறையையும் எதிர்த்து நின்ற பண்டார வன்னியன் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தனது ஆட்சியைப் பொறுப்பேற்றான். ஆங்கிலேயர் முதன் முறையாக கண்டியைக் கைப்பற்ற முனைந்தபோது பண்டார வன்னி யன் தனது படைகளை அனுப்பி உதவினான் என வரலாறுகள் சான்று பகர்கின்றன. ஆங்கி லேயர் கரிக்கட்டு மூலை வன்னியனான காக்கை வன்னியனைத் துணையாகக் கொண்டு முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஒரு கோட்டை யைக் கட்டினர். இக்கோட்டையை 1803, ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி பண்டார வன்னியன் தனது படையுடன் சென்று கைப் பற்றினான். இக் கோட்டையைக் கைப்பற்றிய போது பண்டார வன்னியனுக்கு உதவி செய்த தாகவும், ஆங்கிலேய அரசுக்கு துரோகம் செய்ததற்கு எதிராகவும் குமரசேகரம் முதலியாரை ஆங்கிலேயர் தூக்கிலிட்டுக் கொன்றனர். இவ்விடம் "தூக்குமரத்தடி" என அழைக்கப்படுகின்றது. 1803 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு பண்டாரவன்னியன் நித்திரையாயி ருந்த வேளையில் தோற்கடிக்கப்பட்டான். இவ் வேளையில் கண்டி மன்னன் சிறி விக்கிரம சிங்கனின் கண்டி முத்திரை பொறிக்கப்பட்ட-முத்திரை பதிக்கப்பட்ட பீரங்கி ஒன்றை கைப் பற்றியமை மூலம் பண்டார வன்னியனுக்கு கண்டி மன்னர் உதவி செய்துள்ளார் என்பதில் தெளிவு பெறலாம். பண்டார வன்னியன் தோற் கடிக்கப்பட்டதை நினைவு கூருமுகமாக "Here about Van Driebery defeated Pandara Vanniya, 31.Oct.1803" என பொறிக்கப்பட்ட சிலையொன்று கற்சிலைமடுவில் உள்ளது.

வன்னிப் பகுதியில் கி.மு 3ம் நூற்றாண் டிலேயே குடியேற்றங்கள் நடைபெற்றது என்பதை, கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்து சாசனம் இரண்டில் "தமிழ் வணிகன் விசாகன்" எனப் பொறிக்கப்பட்டுள்ளமை விளக்குகிறது. இச் சாசனம் பெரியபுளியங்குளம், வெடுக்கு நாறிமலை போன்ற இடங்களில் காணப்படுகி ன்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையில் இருக்கும் மணற்கேணி என்ற இடத்தில் "பதினெண் பூமி வீரக்கொடியர்" எனும் சாசனம் உள்ளது. இதே போன்று துங்குவேலி சிவன் கோயிலில் உள்ள 31/2 கல்வெட்டு சிலாபப் பகுதியை ஆதிக்கம் செலுத்திய நவரத்தினவன்னியனை குறிப் பிட்டுச் செப்பேடு கிடைத்ததாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கயிலாய வன்னியன் பற்றிக் குறிப்பிடும் செப்பேடு ஒன்று கள்ளியங்காட்டில் கண்டெடுக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வன்னிப் பிரதேசம் பற்றிய ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் வன்னிப் பிரதேசத் தில் கண்டு பிடிக்கப்பட்ட 54 சாசனங்கள் முக்கியமானவை.

வன்னியர் பற்றிய பூரண கதைகளைப் பார்ப்போம். கற்சிலை மடுவில் வைத்து பண்டார வன்னியன் தாக்கப்பட்டான். அவன் தாக்கப்பட்டபோது வன்னி நாச்சியார் சிவன் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவேளை துர்க்குறிகள் தோன்றியதாகவும், நிராசையா லும் கோபத்தாலும் அவளது இதயம் நொருங்கிப் போனது. அவள் பெருந்தீயை மூட்டி ஆபத்தில் தனது சகோதரனுக்கு உதவாத அறுபத்தினான்கு கிராமங்களின் பெயர்களையும் ஓலையில் எழுதித் தீயில் போட்டுச் சபித்தாள் எனவும் அந்தத் தீயி லேயே தன்னை மாய்த்து கொண்டாள். இத னால் அவள் வழிபட்ட சிவனாலயம் அதன் தலச் சிறப்பை இழந்து விட்டது. அவள் சபித்த அறுபத்துநான்கு கிராமத்தவர்க்கு குலைப்பன் காய்ச்சல் வந்ததாக கர்ணபரம் பரைக் கதை கூறுகிறது.

வன்னிக் காட்டில் நெடுந்தூரம் செல்லும் போது தூர்ந்து கைவிடப்பட்ட பெரிய குளங்களைக் காணலாம். இங்கே வாழ்ந்த வன்னியர் எங்கோ போய்விட்டதாகவும் இவையே வன்னி நாச்சியார் சபிக்கப்பட்ட பிரதேசமாகவும் கருதப்படுகிறது. வன்னிப் பெருநிலத்தை இப்பொழுதும் போட்டு உலுப்புகின்ற மலேரியாக் காய்ச்சலே குலைப்பன் காய்ச்சல் எனத் தமிழில் வழங்கப்படுகிறது. அநுராதபுரத்திலும், வன்னிப் பிரதேசத்திலும் ராஜ்ய வீழ்ச்சிக்கு மலேரியாவே காரணமா கிறது. இதனால் மக்கள் குலைப்பன் காய்ச்சலுக்குப் பயந்து இடம் பெயர்ந்தனர் என்பதன் மூலம் நாச்சியாரின் சாபம் என்பதை அறிய முடிகிறது.

வன்னியர் பூமி பிறர் ஆட்சியில் இருந்து தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் வந்தமையை மல்லாவியில் வாழும் நிலாந்தன் "வன்னி மான்மியத்தில்" கீழ்க்காணுமாறு விபரிக்கிறார்.

வன்னி நாச்சியார் தீக்குளித்து சாபமிட்ட ஒன்றரை நூற்றாண்டின் பின் கற்குளத்தைத் தேடிச் சென்றோம். ஜெயசிக்குறுவினால் அகதிகளானோர் மாதர் பணிக்கர் மகிழங் குளத்தில் கூடாரமிட்டு இருந்தனர்.

புதூர்க் காட்டிற்கும் குஞ்சுக்குளம் காட்டிற்கும் இடையில்தான் நாகதாளிக் காட்டில் கற்குளம் இருப்பதாக முதிய கிராமவாசிகள் தெரிவித்தனர். அந்தக் காட்டில் நரசிம்மம் இருப்பதாகவும், நாம் அங்கு செல்வதால் அது கோபமுறலாம் எனவும் எச்சரித்தார்கள். பாழடைந்த ஒரு கிணறு நில அளவைத் திணைக்களத்தினது உள்ளது. அதனருகே ஒற்றையடிப் பாதை போவதாகவும்

(32 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியின் மான்மியமும்...

அதனூடாகச் சென்றால் கற்குளம் உள்ளது எனவும் கற்குவியல்கள் தூர்ந்து அழிந்து போய் விட்டதாகவும் குளம் தான் இருப்பதாகவும் வேட்டைக்காரர் சொன்னார்கள். இங்குள்ள யானைக்காட்டில் பெருமரங்களின் அடியில் பாய் விரித்தாற் போல பூண்டுகள் மண்டிக் கிடந்தன. அடர்ந்த காடு இரகசியம் எதையோ மறைத்து வைத்துக் கொண்டு எவனோ ஒரு உரித்தாளனைக் காத்திருப்பது போல மௌனமாக இருந்தது.

ஒரு இராஜதானிக்கு உள்ளே செல்வது போன்ற காட்டுப் பாதைகளின் இடையிலே இரண்டு ஆறுகள், கற்குளத்தை அடைய நாம் முயற்சித்த போதும் நரசிம்மம் வழியைக் குழப்பியது போல அதை அடைய முடிய வில்லை.

வன்னி நாச்சியாரின் சினம் தணியாது அவளது சாபம் கிராமங்களின் மீது குலைப் பன் காய்ச்சலாகப் பரவியது. அவளை யாரா லும் தேற்ற முடியவில்லை. தேற்றப்பட முடி யாது துக்கமும் கோபமுமாக அவள் நெடுமூச் செறிந்தாள். ஆங்கிலேய ட்றிபேக் காட்டின் மார்பைப் பிளந்து கொண்டு வருவது போன்று வியூகம் அமைத்தான். வெற்றி நிச்சயம் - கல்லிருப்பில் உள்ள பனங்காமத்தில் காய முற்றுப் பின்வாங்கினான் பண்டார வன்னியன். வன்னி நாச்சியார் வன்மத்துடன் திரும்பவும் தீயில் வீழ்ந்தாள்.

புதுார்க் கோயிலில் பூசை நிறுத்தப்பட்டுவிட்டது. நாகதம்பிரானைப் பிறகு எவரும் காணமுடியவில்லை. கோயிற் சுவரில் குளவி பெரிய கூடுகட்டியது. மடுமாதா முற் றுகை இடப்பட்ட காட்டின் நாயகி போல வியாகுல முற்றிருந்தாள். கற்குளத்தில் சேனைகளின் ஆரவாரம் கேட்டது. நாச்சியார் கோபத்தால் இறுகிக் கல்லானாள். கோயில் கிராமங்கள் யாவும் அவளது சாபத்திற்கு இலக்காகின. ஊரெல்லாம் குலைப்பன் காய்ச்சல் தொடர்ந்தது. யாராலும் அவளைத் தேற்ற முடியவில்லை.

வன்னி நாடு இதுபோல எப்பவும் வருந் தியது இல்லை. ஜெயசிக்குறு எனும் எதிரி மகாமூர்க்கனும் படுமுட்டாளுமாக இருந்தான். வன்னிமைகளின் உயிர் நிலைகளின் மீது நேரடியாகத் தொடுக்கப்பட்ட ஒரு போராக இருந்தது. ஆதியான தலச்சிறப்புடைய தாய்த்தெய்வ வழிபாட்டிடங்களைக் கைவிட்டு, அழகிய சிறிய குடியிருப்பைக் கைவிட்டு சனங்கள் சிதறியோடினார்கள்.

வன்னி நாச்சியாரின் சாபத்துக்கு இலக் காகி இடம்பெயர நேர்ந்த மகா அனர்த்தம் இதுவாகத்தான் இருக்க முடியும். ஜெயசிக் குறு "வெற்றி நிச்சயம்" படை இரண்டு நோக்கான யாழ்ப்பாணத்திற்கு ஒரு தரைவழி விநியோகப்பாதையைத் திறப்பது மற்றையது கண்டி வீதி வழியே வன்னி நாட்டை இரண்டாகப் பிளந்து விடுவது. சாலையைப் பிடிக்கத் தொடங்கிய நடவடிக்கை சாலையை இழக்காமல் இருக்க பெருங் காட்டையும் பிடிப்பதில் முடிந்தது.

அங்குதான் கெட்ட காலம் தொடங்கியது. காடு அடங்க மறுத்தது. அது எவரினது பகைக்கும் அடங்கியதில்லை. அதைப் பிடிக்க முயல, முயல அது விஸ்வரூபமெடுத்து ஒரு காட்டைப் பிடித்து வைத்திருக்க இன்னும் பல காடுகளை வெல்ல வேண்டியதாகவும் இருந்தது. காடு திமிறியது. பகைவரின் கைக்குள் பிடிபட மறுத்தது. அது விரிந்து கொண்டே போனது. அதன் பிரமாண்டம் யாராலும் வெல்லப்பட வியலாததாயிருந்தது. அதன் அந்தரங்க வழிகளினூடே உரித் தாளரை உள்வர விட்டு அதன் மாய இருளில் அவர்களை உரு மறைத்து வைத்தது. ஜெய சிக்குறு தறிகெட்டு அலையும் காயப்பட்ட ஒரு அலியன் யானை போல் ஆகியது. கடை சியில் காடுதான் வென்றது. இந் நிகழ்வானது ரஷ்யா நாட்டைக் கைப்பற்ற ஹிட்லர் புறப் பட்டதை ஞாபகப்படுத்துகிறது.

பண்டார வன்னியன் மறுபிறப்பெடுத்தான். வன்னி நாச்சியாரின் சினம் அவனுடைய சிரசி லேற கற்சிலைமடுவில் அவன் காயப்பட்டுத் தோற்றோடிய அதே இடத்திலிருந்து புறப்பட் டது படை. காடு அதன் இரகசிய வழிகளை அவனுக்காகத் திறந்து வைத்திருக்க, கைவிடப்பட்ட திருத்தலங்கள் எங்கும் குல தெய்வங்கள் குதூகலித்துக் காத்திருந்தன. வன்னி நாச்சியாரும் சினமது மாறி, நடு இர விலே முதல் அடியிலே ட்றிபேக் முதுகெ லும்பு முறிந்து விட்டது. நொண்டி நொண்டி ஓடினர் ஓமந்தை வரைக்கும். வன்னி நாச்சியார் சினம் நீங்கி சமாதானமானாள். நந்திக் கடலில் தனது சகோதரன் பண்டார வன்னியனின் பிதுர்க்கடன் முடித்தாள்.

### வன்னி நாடுகளின் தோற்றம்:

பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பாளிமொழியிலும் சிங்கள மொழியிலுமுள்ள வரலாற்று நூல்கள் வன்னிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மாகன் ராஜரட்டையை ஆட்சிசெய்த காலத்தில் மூன்றாம் விஜயபாகு மாயரட்டையிலுள்ள ஸீகள வன்னியை அடக்கி ஆட்சி புரிந்தானென்று "பூஜாவலிய" கூறுகின்றது. எனவே விஜயபாகுவின் காலத் தில் மாயரட்டையிலும் வன்னிப் பிரதேசம் பரந்திருந்ததென்பது தெளிவாகின்றது. விஜய பாகு வன்னிராசன் என்ற நிலையை அடைந்து மாயரட்டையில் அதிகாரஞ் செலுத்தினா னெனச் "சூளவம்சமும்" எடுத்துரைக்கின்றது.

காடு அதன் இரகசிய வழிகளை அவனுக்காகத் திறந்து வைத்திருக்க, கைவிடப்பட்ட திருத்தலங்கள் எங்கும் குலதெய்வங்கள் குதூகலித்துக் காத்திருந்தன. வன்னி நாச்சியாரும் சினமது மாறி நடு இரவிலே முதல் அடியிலே ட்றிபேக் முதுகெலம்பு முறிந்து விட்டது. நொண்டி நொண்டி ஓடினர் ஓமந்தை வரைக்கும். வன்னி நாச்சியார் சினம் நீங்கி சமாதான மானாள். நந்திக் கடலில் தனது சகோதரன் பண்டாரவன்னியனின் பிதுர்க்கடன் முடித்தாள்.

இரண்டாம் பராக்கிரமபாகு ராஜரட்டையிலும் ரோகணத்திலுமுள்ள வன்னி மன்னர் மேலே தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தான். அவ்வரசனது ஆட்சிக் காலத்தில் இளவரச னான விஜயபாகு (iv) அநுராதபுரத்துக்குச் சென்ற பொழுது ராஜரட்டையிலிருந்த வன்னி மன்னர்கள் அவனைக் கண்டு கௌரவித்துக் திறைகொடுத்தனர். வன்னிராசர் படைகளை வைத்திருந்தனரென்றும் வெண்கொற்றக் குடை, சாமரம், ஆசனம் முதலியவற்றைத் தம் பதவிச் சின்னங்களாக இளவரசனிட மிருந்து பெற்றனரென்றும் "சூளவம்சம்" கூறும். எனவே இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் வன்னிமை என்ற குறுநிலவரசுகள் வளர்ச்சியடைந்த நிலையிலிருந்தனவென்று கொள்ளலாம். அரசனுக்குத் திறை செலுத்திய போதும் தத்தம் பிரதேசங்களைச் சுயமாகவே ஆளுவதற்கும் வன்னி மன்னர் உரிமை பெற்றிருந்தனர். ஆகையால் வன்னிமைகள் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஈழநாட்டின் முப்பெரும் பிரிவுக ளான ராஜரட்டை, மாயரட்டை, ரோகணம் என்பவற்றில் வன்னிகள் காணப்பட்டமையும் கவனத்திற்குரியது.

மாகன் ஆட்சி செய்த பிரதேசத்திலும் வன்னிகளிருந்தன. மகான் தோப்பாவையைக் (பொலநறுவை) கைப்பற்றிப் படையாட்சி வன்னியருக்குக் கொடுத்தான் என்று "மட்டக்க ளப்பு மான்மியங்" கூறும். அத்தோடு மட்டக்க ளப்பிலுள்ள முக்குவ வன்னிமையை மாகன் அமைத்தானென்றும் அந்நூல் சொல்லு கின்றது. என்றும் மாகனுடைய காலத்திலேயே முதன் முதலாக ஈழத்தில் வன்னிமைகள் தோன்றினவென்று கொள்ளமுடியாது. மாகன் வன்னிமைகள் இடம் பெற்ற தொண்டை மண்ட லத்திலிருந்தன்றிக் கலிங்க நாட்டிலிருந்தே வந்தான். அத்துடன் முக்குவரே முதன் முதலாக வன்னிமைகளாகியிருக்க முடியாது. சேர நாட்டிலிருந்து வந்த முக்குவர் வன்னிய ரிலிருந்து வேறுபட்ட ஒரு சமூகப் பிரிவினரே. வன்னிமைகள் என வழங்கிய குறுநில அரசுகளோ வன்னியாரென்ற சமூத்தவரோ சேர நாட்டிலிருந்ததற்கு எந்தவிதமான சான்றுகளு மில்லை. மேலும் மாகனும் விஜயபாகுவும் ஆட்சி செய்த பிரதேசங்களில் வன்னிமைகள் இடம் பெற்றிருந்தமையால் இவ்விரு மன்னரின் காலத்துக்கு முன்னரே ஈழத்தில் வன்னிமை கள் உருவாகியிருத்தல் வேண்டும்.

தொண்டை மண்டலத்திலிருந்த கிழியூர் மலைய மான்களின் கல்வெட்டுக்கள் வன்னிய நாயன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்த குறுநில மன்னர்க்கும் வேளைக்காரருக்குமிடையில் நிலவிய தொடர்பைத் தெளிவுபடுத்துகின்றன. வேளைக்காரர் வன்னிப் பிரதானிகளின் படைகளிற் சேவகம் புரிந்து வந்தனர். எனவே ஈழத்து வன்னிமைகளின் தோற்றத்தையும் வேளைக்காரப் படையின் வரலாற்றோடு இணைத்து நோக்குவது சாலப் பொருந்தும். சோழர் ஈழத்தைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த காலத்தில் வேளைக் காரப் படைகளும் ஈழத்துக்கு வந்திருந்தல் வேண்டும். ஈழமான மும்முடி சோழ மண்டலத்தில் படைத் தலைவர்கள் நிர்வாகத்திற் பங்குகொண்டிருந்தனர். இப்படைத் தலைவர்களும் இவர்கள் வச முள்ள வேளைக்காரர் முதலியோ ரைக் கொண்ட படைப் பிரிவும் தொண்டை மண்டலத்திற் போல ஈழத்தின் சில பகுதிகளில் காலப் போக்கில் சுயாட்சி மாநிலங்கள் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தி ருத்தல் கூடும்.

வேளைக்காரருக்குக் கொடுக் கப்பட்ட படைப்பற்றுக்கள் வன்னி மைகள் உருப்பெறுவதற்கு வழி யமைத்தன. வன்னியபற்று என வழங்கிய நிலப்பிரிவுகள் தென் னிந்தியாவிற் காணப்பட்டதைப் போல ஈழத்திலும் வன்னிப் பற்று என்ற பிரிவுகளிருந்தன. சோழராட்சிக் காலத் தில் ஈழத்திலிருந்த அதிகாரிகள் நிர்வாகத்தின் பொருட்டு பற்று என்னும் பிரிவுகளை வகுத்திருந்தனர். இப் பற்றுக்களிற் சில வன்னிய பற்றுக்களாக உருப்பெற்றன. சோழ ராட்சி நிலவிய பிரதேசங்களிலேயே பிற்கா லத்தில் வன்னிமைகள் நிலவியதும் இங்கு நோக்கற்பாலது.

ஈழத்திலுள்ள வரலாற்றுச் சார்புள்ள தமிழ் நூலகள் யாவும் வன்னியர் தமிழகத்திலிருந்து வந்தார்களென்று கூறுகின்றன. மேலும் புத்தளத்து வன்னிமை பற்றிக் கூறும் வன்னி உட்பட என்ற சிங்கள நூலும் அவ்வன்னி மையிற் சிறப்பிடம் பெற்றிருந்த முக்குவர் இந்தியாவிலிந்தே இலங்கைக்கு வந்தன ரென்று கூறுகின்றது. எனவே தமிழகத் திலிருந்து வந்த வன்னியர் அதிகாரம் பெற்ற தன் விளைவாக ஈழத்திற் பல வன்னி மைகள் தோன்றினவென்று கொள்ளலாம். வன்னியராண்ட பிரதேசங்கள் வன்னி நாடுகள் என வழங்கிவந்தனவென்று யாழ்ப்பாண வைபவமாலையும் கூறுகின்றது.

திருகோணமலையில் இருந்த வன்னி மைகள் பற்றிக் கவிராசர் பாடிய கோணசர் கல்வெட்டு கூறுகின்றது. மனுநீதி கண்ட சோழனுடைய மகனாகிய வரராம தேவன் கோணஸ்வரத்தின் மகிமையைக் கேட்டறிந்து: அங்கு தன் மகன் குளக்கோட்டனோடு புனித யாத்திரை வந்தான் என்றும், பின் குளக் கோட்ட சிவாலயத்தையும், பாவனாசச்சுனை யையும் அமைத்து. ஆலயத் திருப்பணிகள் செல்வனே செயற்பட ஏற்பாடு செய்தான் என்றும் இந்நூல் கூறும்.

வனனிமைகள் திருகோணமலைப் பிரதே சத்தில் ஆண்டதற்கும், தனத்தாரும் வரிப்பத் தரும் அங்கிருந்தமைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. கங்குவேலி யிலுள்ள ஒரு கல்வெட்டுத் திருமலை வன்னிய னாரும். ஏழூர்களைச்சேர்ந்த அடப்பர்களும் கூடித்தம்பிரானார் கோணைநாதனுக்குக் கங்குவேலியில் நிலங்களையும் புற்றரைக ளிலுள்ள வருமானத்தையும் விட்டதாகக் கூறுகின்றது. மேலும் தானம். வரிப்பத்து என் பனவற்றையும் இக்கல்வெட்டுக் குறிப்பிடு கின்றது.

கோட்டியாரம்பத்தைச் சேர்ந்த வெருகல் என்னுமூரிலுள்ள ஒரு கல்வெட்டு, ஒரு கோயி லின் தெற்கு மதிலைக் கயிலாய வன்னியனார் கட்டினாரென்று கூறுகின்றது. ஆராய்ச்சியாளர் இக்கல்வெட்டு பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று கருதுவர். இக்கருத்துப் பொருத் தமானதெனின் கயிலாய வன்னியனார் பதினா றாம் நூற்றாண்டிற் கோட்டியாரம்பத்தை ஆண்டிருக்க வேண்டும்.

திருமலை, கட்டுக்குளம் ஆகிய இடங்களில் குளககோட்டன் வன்னிமைகளை நியமித்தா னென்று கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்ற போதும் இவனே அங்கிருந்து வன்னிமை களைத் தோற்றுவித்தானென்று கொள்வதற் கில்லை, கோணேசர் கல்வெட்டு கஜபாகுமகா ராசன் திருப்பணிபற்றிச் சொல்வன, குளக் கோட்டனின் காலத்திற்கு முன்பே திருமலை வன்னிமை ஏற்பாடாகியிருந்ததென்று கொள் வதற்கு ஆதாரமாயுள்ளன. பாசுபதமறையவர் இறந்ததன் விளைவாக ஆலயத்திற் பூசை முதலியன தடையுற்ற போது கஜபாகு மகாராசன் அங்கு சென்று வன்னிபம். தானம். வரிப்பத்து, நாட்டவர் என்போரை அழைத்து விசாரணை நடத்தி. வெளிநாட்டிலிருந்து பிராமணர்களைக் கொணர்வித்து மீண்டும் ஆரா தனைகள் வழமைபோல நடைபெற ஏற்பாடு செய்தான். அத்துடன் 1,100 பொன் கொடுத்துக் குருகுலக் கணக்கிற் பதிப்பித்து ஆயம், தானியவரி ஆகியவற்றிலும் வாணிபத்திற் கிடைக்கும் வருவாயிலும் பத்திலொரு பங்கை ஆலயத் திருப்பணிக்குக் கொடுக்க வேண்டும் மென்று அரசன் ஆணையிட்டான்.

பதினாலாம் நூற்றாண்டில் யாழ்ப்பா ணத்தையாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் திரு மலை வன்னிமைமேல் ஆதிக்கம் பெற்றிருந் தனரென்று கொள்வதற்குச் சில சான்றுகளுள் ளன. அந்நூற்றாண்டைச் சேர்நததென்று கருதப்படும் 'நம்பொத்த' என்ற சிங்கள நூல் திருகோணமலை 'தெமள பட்டணத்தில்' (தமிழரசில்) அடங்கிருந்ததெனக் கூறுகின்றது. தஷிண கைலாச புராணம் சொல்வனவற் றிலிருந்தும் திருமலையிலே செகராசசேகரனின் ஆதிக்கம் நிலவியதென்பதை உய்த்துணர முடிகின்றது.

பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டு களில் ஆட்சி புரிந்த யாழ்ப்பாண மன்னர்கள் திருகோணமலை வன்னியரோட மணத் தொடர்பு கொண்டிருந்தனர். கனக சூரியசிங் கையாரிலாயனும் புதல்வரும் வடதேசத்தி லிருந்து ஈழத்திற்குத் திரும்பியபோது திருகோணமலையிலே தங்கிய பின்னரே தமது நாட்டை மீட்டனரென்று யாழ்ப்பாண வைபவ மாலை கூறுகின்றது. செண்பகப் பெருமாள் என வழங்கிய சபுமல் குமாரன் யாழ்ப் பாணத்தை விட்டுக் கோட்டைக்குச் சென்ற காலத்திற்கனகசூரிய சிங்கையாரியன் யாழ்ப்பாணத்திலே தன்னாட்சியை மீண்டும் ஏற்படுத்தவதுற்குத் தன்னுறவினனாகிய திருமலை வன்னியனாரிடமிருந்து படைத் துணை பெற்றிருக்கக் கூடும். சங்கிலியனின் ஆட்சிக் காலத்திலே யாழ்ப்பாணத்தரசனும் திருமலை வன்னியனாரும் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்து போத்துக்கேயரை எதிர்த்து வந்தனர். திருமலை வன்னியனார் இறந்தபின் அவனது மகன் இளைஞனாக இருந்ததினாற் சங்கிலியன் வன்னியை ஆளுவதற்குத் தானே உரிமையுடையவ னென்று சொல்லி அதனொரு பிரிவைக் கைப்பற்றிக் கொண்டான். சங்கிலி இறந்த பின் கண்டியரசர் திருமலை வன்னியிலே தங்களாதிக்கத்தைத் திணித்தனர். ■

# என் பஞ்சுப் பொதி

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை பிரசவவிடுதி!

அந்த வேளையிலும், அந்த நேரத்திலும், பரவசத்திலும் எனக்கு அதன் தூய்மை பலவகையிலும் புறந்தள்ளப்பட்டு நெருக்கடி மிகுந்த போர்ச் சூழல்களால் துவேசிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் இப்படியொரு மருத்துவமனை, மகோன்னதமாய், ஆறுதல் தருவதாய், ஆசுவாசப்படுத்துவதாய்.... என் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருக்கையில், அவள் பிஞ்சுக் கை என் உடலில் பட என் சிந்தனை காற்றடிக்க விரைந்து கலையும் மேகம் போலக் கலைந்து போகிறது.

அவள் என் மகள்! அழகான பஞ்சுப்பொதி! அந்தப் பஞ்சுப் பொதியில கொவ்வைப் பழம் போல செவ்விதழ்; திராட்சைக் கண்கள் வட்டாரி வைச்சு வட்டம் கீறினது போல; வட்ட முகம் நிலவு போல.

நிலவு என்ன நிலவு! இவளைக் கொண்டு தான் நிலவிற்கு ஒப்புவமை சொல்ல வேணுமே ஒழிய, நிலவைக் கொண்டு இவளுக்கு ஒப்புவமை சொல்லுறது பேதமையாய்த் தோன்றுகின்றது.

நிலவில இருக்கிற மறை இவளில இல்லை. பிரகாசம்! பிரகாசம்!! நிர்மலமான உலகத்துப் பிரகாசங்களையெல்லாம் திரட்டிக் கொண்டது மாதிரிப் பிரகாசம்.

அவள் கண்களில் எப்படி இத்தனை ஒளி? இத்தனை கூர்மை இருக்க முடியும்? முகம் காட்டும் கண்ணாடி போல என்பார்களே உண்மை தான்.

அவள் என்னிலிருந்து ஜனனித்து ஆக 72 மணித்தியாலங்கள் மட்டும் தானே!

இந்தக் கண்ணாடியில் யாரும் எதையும் இன்னும் வரையவில்லை. அதனால் தான் அவள் அத்தனை பிரகாசமாய்! அத்தனை தூய்மையாய்! சஞ்சரித்துக் கொண்டிருக்க வேணும்.



இத்தனை காலம் இந்தப் பேற்றை அடையத் தாமதித்த என்னை நினைக்க எனக்கே வியப்பாய் இருந்தது.

ஏனோ இத்தனை வயது வரை எனக்கு இது தோன்றாமலே போய்விட்டது. எத்தனையோ பேரது ஆலோசனையின் பின் எத்தனையோ கோடானுகோடிக் கணச்சிந்தனையின் பின் இந்தத் தீமானத்திற்கு வந்திருந்தேன், அவர்கள் விரும்பியதன் படியே இல்லாமல், என் விருப்பப்படியே.

அவள் அடிக்கடி 'களுக் களுக்' கென்று சிரித்துக் கொள்கிறாள். அசல் நானே தான்!.

இதென்ன அசட்டுச் சிந்தனை! 'என்ர மகள் என்னை மாதிரி இல்லாம பின்ன ஆரை மாதிரி இருப்பாள்!'

தந்தை - தாயிலிருந்து, பேரன்-பேர்த்தி, பூட்டன் - பூட்டி, கொப்பாட்டன் - கொப்பாட்டி..... வரையான மரபணுக்களின் பிரதிபலிப்பு இருக்கும் என்று படித்திருக்கிறேன்.

ஆனால் இவள் அசல் நான் தான்! ஆராய்ச்சி தேவையே இல்லை.

என், இளவயது நிழற்படம் மனதில் பதிகிறது. இவளே தான் அவள். அவளே தான் இவள். எந்தக் கண்டு பிடிப்பாளனாலும் இவளின் நிழற்படத்தையும் என் நிழற்படத்தையும் கலந்து விட்டு எது நான்? எது இவள்? என்று கண்டு பிடிக்க முடியாத அசல்!

என், இளவயது நிழற்படம் மனதில் பதிகிறது. இவளே தான் அவள். அவளே தான் இவள். எந்தக் கண்டு பிடிப்பாளனாலும் இவளின் நிழற்படத்தையும் என் நிழற்படத்தையும் கலந்து விட்டு எது நான்? எது இவள்? என்று கண்டு பிடிக்க முடியாத அசல்!

"இவளில எந்த விம்பமும் வரையப்பட விடக்கூடாது." என்னுள் தீர்மானம் உறுதியாகிறது.

"மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள், வரையறைகள், வரம்புகள் எந்தத் தூசியும் படியவிடக் கூடாது," எனக்குள் கெட்டியாகிறது என் தீர்மானம்.

அந்த நேரம் பார்த்து என் பஞ்சுப் பொதி தும்முகிறது!.

"இதை யார் நினைக்கிறார்கள்? இந்த நேரத்தில் என் தீர்மானத்தை இது ஆட்சேபிக்கிறதோ!" என்னுள் கவலை பரவுகிறது.

ஒரு உண்மை பொறி தட்டுகிறது. "என்னில் வரையப்பட்ட படங்களை இவளில வரைய விடப்படாது," என்ற என்ர தீர்மானம் எந்தளவிற்குச் சாத்தியமானது?

நான் என்ன தனி உலகத்திலா இருக்கிறன்? மனதளவில் மட்டும் தான் தனி உலகத்தை என்னால இதுவரையில அதுவும் எவ்வளவு கஸ்ரப்பட்டு சிருஷ்டிக்க முடிந்ததே ஒழிய, இருப்பதெல்லாம் இந்த முகம் தொலைத்த மனிதர்களோட தானே!

விடிந்தால் என் தங்கச்சி, தம்பி கட்டாயம் வருவார்கள். கரிசனையோடு அழைத்துப்போக அல்ல, தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தில் பிற்போக்குத் தனங்களிலிருந்து விடுபட முடியா



தவர்களாய் தாங்களும் கண்ணியவான்களாய் காண்பிக்க. தெறித்துப் போனவளானாலும் தாம் பண்பாய், நாகரிகமாய் நடந்து கொள்வதாய் பிள்ளையின் எதிர்காலம் கருதி, தம்பியை கையெழுத்திட அழைத்து வருவாள் என் அருமைத் தங்கை. பாவம். அவன் அப்பாவி வருவான்.

"என் அருமைத் தங்கை அடக்கத்தின் உறைவிடம், எப்படி ஆவேசப்படுவாள்? எப்படிப்பட்ட வார்த்தைகளாலெல்லாம் நிந்திப்பாள்?" என்று நினைக்க எனக்கு என் பஞ்சுப் பொதி போல 'களுக்' கென்று சிரிப்பு வருகிறது.

"ஓடுகாலி எத்தினை தரமடி சொன்னம்! நாங்கள் பார்த்துச் செய்து வைக்கிறம் எண்டு. எத்தினை பேரையடி பிடிக்கேல்ல, பிடிக்கேல்ல எண்டாய். அவன் சீதனம் கேக்கிறான், அவன் உடலழகை மட்டுமே பாக்கிறான், மன அழகை ஆரும் பாக்கேல்ல, நாட்டுல நடக்காததையே கேட்டவன்கள். எத்தனை கிரந்தங்கள், சாக்குப் போக்குகள் சொன்னாய்! சண்டாளி! குடும்ப மானத்தை வாங்குகிறாயே பாவி.

என்ன பாவமடி செய்தம் உன்னோட பிறக்க? மகாராணி எந்த உலகத்திலையடி சஞ்சரிக்கிற?..."

நான் நினைத்துக் கொண்டிருந்தது சரி தான். என்ர நினைவுகள் உள்ளுணர்வுகள் எப்பவும் தவறியதில்லை.

வந்தாள் பத்திரகாளி போல. வாய்க்கு வந்தபடியே கரித்துக் கொட்டிக் கொண்டு என் பஞ்சுப் பொதியைப் பார்த்து உறுத்து விழித்தாள்.

என் பஞ்சுப் பொதிக்கு அசௌகரியமாய் இருந்திருக்க வேணும். திடுக்கிட்டு வீரிட்டுக் கத்துகிறாள்.

போச்சு படம் கீற ஆரம்பிச்சாச்சு! "எப்பிடி இவர்கள் கீறல்கள் படாமல் என் கண்ணாடியைக் காப்பாற்றுவன்?"

தாதி வந்து கொண்டிருப்பதனால் அவள் முகம் மறு மூடியைப் போட்டுக் கொண்டிருக்க வேணும்...

சிரிக்க முயன்று அவள் தோற்றுக் கொண்டிருப்பது எனக்கு அந்த வேளையிலும் வேடிக்கையாயிருந்தது.

என் தம்பி, தாதி காட்டிய இடத்தில் மிதுலன் என்று ஆங்கிலத்தில் ஒப்பமிடுகிறான். "அவன் பதிவுப் பெயர் சிறிதரன். ஏன் மிது......என்று ஒப்பமிடுகிறான்?"

ஒரு விநாடியில் எல்லாம் புரிந்தது. அது என் அருமைத் தங்கையின் ஐடியாவாய்த்தான் இருக்கும்.

முறைத்துப் பார்த்தேன். என் முறைப்பை அவள் புரிந்து கொண்டிருக்க வேணும். அவளுக்குத் தெரியும் இங்கிதம் இல்லாமல் எந்தப் பிழையையும் எந்த வேளையிலும் சுட்டிக் காட்டுவேன் என்று.

நிமிர்ந்து உறுத்துப் பார்த்துவிட்டுச் சைகை செய்தாள். தம்பி அழித்துவிட்டு அழகாய் தமிழால் ஒப்பமிட்டான் சிறிதரன் என்று.

எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

அவள் தாதிக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டாள். "தம்பி பழக்க தோஷத்தில் செல்லப் பெயரை வைத்து விட்டான்" என்று,

எப்பிடியோ நான் என் பஞ்சுப் பொதியோட வீட்ட போகப் போறன்.

என் தனி உலகிற்குள் பிரவேசிக்கும் வரையில்; எழுந்து சுயமாய் நடமாடும் வரையில்; இவர்கள் போசிப்பில் இருக்கும் வரையில் இவர்கள் அத்தனை பேரின் அர்ச்சனைகளையும் தாங்கித்தான் ஆகவேண்டும்.

இன்னும் கொஞ்சம் திட்டம் தீட்டியிருந்தால் இவர்களது போசிப்பைத் தவிர்த்திருக்கலாம் தான். ஆனா எனக்கு வேஷம் போடத் தெரியாதது பெரிய பலவீனம். பாழாய்ப் போன சம்பிரதாயத்தில ஒப்பமிட வேண்டியிருந்ததே ஒப்புக்காக வேனும்.

"அப்பான்ர கண்ணில முளிச்சுப் போடாத" அவள் முணுமுணுப்பு அரையும் குறையுமாய் விழுந்து கொண்டுதானிருந்தது.

நான் சட்டை செய்யவில்லை. எனக்கு நம்பிக்கை இருந்தது. என் சித்தப்பா அற்புதமான மனுசன். வெள்ளையைத் தவிர வேறில்லை! சாடிக்கேற்ற மூடி என்று என் சித்தப்பாவை, என் கொள்கைகளை ஆதரிக்கும் போதெல்லாம் என் உறவுகள் அவரையும் திட்டித் தீர்த்துக் கொண்டுதானிருந்தார்கள்.

என் சித்தப்பாவின் ஆதரவு எனக்கு எப்பவும் இருக்கும். மனுசன் மனிதத்தை விற்ற மனுசன் அல்ல. 'அப்போஸ்' என்று என்னை வைவதுபோல, வாழத் தெரியாதது, பிழைக்கத் தெரியாதது என்று என்னைக் கேலி செய்வது போல, அவரையும் வைது கொண்டுதானிருந்தார்கள் என் உடன்பிறப்புக்கள்.

அந்தாள் அவர்கள் தூசிப்பை, அவர்கள் போடும் வேசங்களை, சூழ்ச்சிகளை நினைத்து வேதனைப்படுமே ஒழிய அவர்கள் கோமாளித்தனங்களைப் பார்த்து கோபமடைந்ததும் இல்லை; சிரித்துக் கொண்டதும் இல்லை.

"ஆர் ஆரைப் பார்த்துச் சிரிப்பது... எல்லாம் வேடிக்கை தான்."

அலாரம் அடிக்க என் பஞ்சுப்பொதிக்கு இடையூறாய் இருக்குமே என்று அவசரமாய் எழுகிறேன். அலாரத்தை நிறுத்த அலாரத்தைக் காணவில்லை, என் பஞ்சுப்பொதியையும் காணவில்லை.

கண்ணைக் கசக்கி விட்டுப் பார்க்க, கணத்தில் புரிந்தது. இரவு குளோனிங் குழந்தையை வரவேற்று வூதிட்டு விட்டு உறங்கியது.

**எட்வின்**

மரபணுக்களை மாற்றம் செய்து நிறைவான குழந்தைகளை ஆண்களின்ர தேவையே இல்லாமல் உருவாக்கலாம் என்ற போது துள்ளிக் குதித்தவள் நான்.

"பெண்ணால தன்னிலிருந்தே தன் வாரிசை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆணாலும் முடியும். ஆனா பெண், வாடகைத் தாயாகத் தேவைப்படுவாள். செயற்கைக் கர்ப்பப்பையும் கண்டுபிடிக்கும் வரையிலும் ஆணுக்கு."

இரண்டு கட்சி நாங்கள். நானும் சித்தப்பாவும் வரவேற்று ஒரு கட்சி, மற்றையவர் எல்லாம் எதிர்த்து ஒரு கட்சி எதிர்க்கட்சியாய்.

ஆண்களாய் இல்லாம அரட்டுகிற பல ஆண்களின் கொட்டம் அடங்குகிற காலம் நெருங்குகிறதை நினைத்து எனக்கு ஆனந்தம்.

எங்கட சர்ச்சை அதில்லை. மரபணுக்களிலிருந்து நிறைவான வளமான குழந்தையை உருவாக்க முடிந்தால், சாத்தியம் என்றே வைத்துக் கொண்டால் வாழ்க்கை சுவாரசியம் இழந்து போகும் என்பது எதிர்க்கட்சி வாதம்.

வெயிலுக்க நிக்கிறவனுக்குத்தான் நிழலின்ர அருமை தெரியுமாம்! அவையள்.

எனக்கெண்டா, சாத்தியமெண்டால் மீண்டும் மனிதத்தைக் காண்பதற்கும், எம் தேசத்தை மீட்க விதையாய்ப் போன மாவீரச் செல்வங்களின் இடத்தை நிரப்புவதற்கும் வேணுமென்றே தோன்றியது.

காலம் பதில் சொல்லும் எண்டு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நித்திரைக்குப் போனதின் விளைவு-எனக்கொரு குழந்தை!

"கனவு மெய்ப்பட வேண்டும்" பாரதியின் வரிகள் வந்து போயின!.

கருமை சூழ்ந்த வாழ்வகற்ற
காலத்தின் குரலாய்
என்றும் ஒலிக்கும்
ஈழநாதமே!
எங்கள் இளையநாதமே!
எழுந்திடு!
என்றும் உன்பணி தொடர்ந்திடு!



# சுப்பகூஸ்

DSI பாதணிகளின்
யாழ். குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்
**மொத்த வியாபாரிகளுக்கு**
**கொழும்பு விலையில் விசேட கழிவு**

எடுப்பான தோற்றத்துக்கு DSI பாதணிகள்



## சுப்பகூஸ்



(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
**இல. 75, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 2225543.**
(சி -7905)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

---

**பதின்மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்று**
**பதின்நான்காம் ஆண்டில் கால் பதிக்கும்**
**ஈழநாதமே!**
உன் அகவைகள் தொடரட்டுமென
வாழ்த்துகின்றோம்.

**கட்டைவேலி – நெல்லியடி**
**ப.நோ.கூ.சங்கம்**

எமது சங்கத்தின் சேவைகள்:

- கட்டடப் பொருட்கள், விவசாய விற்பனை நிலையம்.
- புடைவை, கனரக விற்பனை நிலையம்.
- கிராமிய வங்கி, கடன் வழங்கல்.
- வெதுப்பகம், பொதி செய் நிலையம்.
- எரிபொருள் நிலையம், வாகன சேவைகள்.
- தேநீர்ச்சாலைகள், புத்தக விற்பனை நிலையம்.
- தொலைபேசி, போட்டோ பிரதி.
- தட்டச்சு, கணினி.
- வாடகை சேவை, பாலர் பாடசாலை.
- நூல் நிலையம், கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்.
- புலமைப் பரிசில் திட்டங்கள், மகளிர் பயிற்சித் திட்டங்கள்.

அங்கத்தவர்கள், பணியாளர்கள்
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி.
(சி-7906)

---

வீரம் விளைந்த மண்ணில்
தமிழர் விடுதலைக் குரலாய் ஒலிக்கும்
ஆழம் நிறைந்த ஒலியே!
என்றும் ஆற்றுக உன்பணியைத் தொடர்ந்து...

மல்லாவி நகரிலும், கிளிநொச்சி நகரிலும் எமது மக்கள் விரும்பும் பொருட்களை நேரடியாக இறக்குமதி செய்து நீண்ட காலமாக மக்கள் பணியில் நன்மதிப்பைப் பெற்ற



# பிள்ளையார் தாபனத்தினர்

இன்று பதின்நான்காம் அகவையில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் மக்கள் தினசரியினை வாழ்த்துகின்றனர்.



**பிள்ளையார்**
பல்பொருள் வாணிபம்
யோகபுரம், (சி-7912) மல்லாவி.

**பிள்ளையார்**
பல்பொருள் உதிரிகள் வாணிபம்
(முருகன் கோயில் முன்பாக)
முதன்மைச்சாலை, கிளிநொச்சி. (சி-7913)

**மருதடிப் பிள்ளையார்**
**களஞ்சியம்**
யோகபுரம், (சி-7914) மல்லாவி.

**முத்துப் பிள்ளையார்**
**வண்ணச்சோலை**
தொடரித்தெரு, (சி-7915) கிளிநொச்சி.

கட்டடப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள், அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள், கிருமி நாசினிகள், புடைவை வகைகள்
**விற்பனையாளர்கள்.**

**முத்துப் பிள்ளையார்**
**வண்ணச்சோலை**
யோகபுரம், மல்லாவி.
(சி-7916)

உலகெங்கும் உன் நாதம் ஒலிக்க வாழ்த்துகிறோம் ஈழநாதமே!

# உப்பு உற்பத்தி நிறுவனம்

கண்டி வீதி, ஆனையிறவு.



சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தரமான அயடீன் கலந்த உப்பினை உங்கள் நாளாந்த பாவனைக்கு பயன்படுத்துகிறீர்களா?

THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT

எமது ஏக விநியோகஸ்தர்கள்

யாழில்
எஸ். பி. ஓ. ரான்ஸ்போட்
மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
021-2225220

வவுனியாவில்
கஜன் பல்பொருள் வாணிபம்
சந்தை உட்புறம்,
வவுனியா.
024-20251

(சி-7294)





வண்ணத் தமிழ் சுமந்து வலம் வரும் ஈழநாதமே!
வாசல்கள் தேடி நீ வரும் போதெல்லாம்
உன் எழில் கண்டு வியந்து போகிறோம்.
பதினாலகவையில் நீ கால் பதித்திட வாழ்த்துகிறோம்.




- அதிக விளைச்சலைப் பெற கலப்படமற்ற தேவையான பவர் அன் கொம்பனியின் உள்ளீடுகள்,
- உத்தரவாதமளிக்கப்பட்ட மகாவலி சீமெந்து,
- எவரெடி பற்றரி கிளி, முல்லை, சாவகச்சேரி பிரதேசங்களின் ஏக விநியோகஸ்தர்.

உத்தரவாத விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.

# லலிதா ரேடிங் கொம்பனி (சிவா கட்டடம்)

சிவசுந்தரம் வீதி, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

(சி-7293)

மனம் மகிழ வைக்கும் ஈழநாதமே
மனமார வாழ்த்துகிறோம்.

## திருமகள் அழகுச்சோலை

ஸ்ரீ அபிராமி அழகு சாதன மாளிகை எனும் பெயரில் இயங்கி வந்த எமது வாணிபம் தற்போது திருமகள் அழகுச்சோலை எனும் பெயரில் இயங்கிவருகின்றது.

புதுக்குடியிருப்புச்சந்தி. (சி-7256)

ஈழநாதமே !
திசையெட்டும் பறந்து
உன் விசை கொண்ட
மட்டும்
வளர்க ! வாழ்க !

## தெய்வம் வாணிப மாளிகை

புதுக்குடியிருப்புச்சந்தி

(சி-7257)

எல்லோர் மனங்களிலும் எழிலாகும் ஈழநாதமே!
புது அகவையில் புகழாரம் சூட்டுகின்றோம்.
வாழ்க, வளர்க நீ!

## வேளாங்கன்னி உதிரிப்பாக வாணிபம்

முல்லைவீதி, (றொபின்) புதுக்குடியிருப்பு

மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம், சைக்கிள், ட்ரக்ரர் உதிரிப்பாகங்கள், கட்டடப்பொருட்கள், பெயின்ற் வகைகள், மின்சாரபொருட்கள் விற்பனையகம்.

(சி-7258)

பல்சுவைச்செய்திகள் பதித்துச் சுமந்திடும்
ஈழநாதமே!
பதின்நான்காம் அகவையில் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

## சுமங்கலி நகைப்பூங்கா

22கரட் தங்க நகைகளை அணிந்து மகிழ்ந்திட...
உள்ளங்கவர் டிசைன்களில் பெற்றுத்திளைத்திட...
நாடவேண்டிய ஒரே இடம்.

பிரதான வீதி, (சி-7253) கிளிநொச்சி.

## பிள்ளையார் மருந்தகம்
(அகிலன்ஸ்)

பல்சுவை ததும்ப பவனி வரும்
ஈழநாதமே! பாரில் உன் புகழ் மிளிர
வாயார வாழ்த்துகிறோம்.

- சகல விதமான ஆங்கில மருந்து வகைகள்,
- சிறுவர் பெரியோருக்கான ஊட்டச்சத்து நிறைந்த பானம் (Tonic) வகைகள்
- மற்றும் போசாக்கு நிறைந்த பால்மா வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

நீண்ட காலமாக கிளிநொச்சி நகரில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மருந்தகம்.

பிள்ளையார் மருந்தகம்
(அகிலன்ஸ்)

பிரதான வீதி, கிளிநொச்சி.

## கர்வலோ மூக்குக் கண்ணாடி நிறுவனத்தினர்
## CARVALHO OPTICALS

Eye Testing and Dispensing

No : 13, Bus Stand Complex,
Vavuniya. (சி-7266) Dial : 024 - 22649

PP
## Pettah Palace
பெட்டா பெலஸ்

Dealers in Textiles
No. 81, H.P. Road,
Vavuniya.

024 - 22646

(சி-7267)



ஈரேழு அகவையினை எம்மிடையே நிறைவு செய்தாய். போர் சூழ்ந்த எம் பூமியின் புதினமெலாம் தேரேறித் தேசமெலாம் பவனி வருமாறு சீரோடு செப்பி வரும் அரிய தமிழர் நாதமே!
ஈடு இணையில்லா எம் இனிய ஈழநாதமே!
கோடானு கோடி வருடங்களின் போலும் இம் மண்ணில் தேடரும் புகழும் வீறு கொள் நடையும் கொண்டு நீ விண்மதி போல
நீடு நீ வாழி! நீணிலம் மீது நெறியுடன் வாழி! வாழியவே!

இரணைமடு கனகாம்பிகை துணையுடன் வாழ்த்தும்

## அம்பிகை உணவகம்

(திங்கட் செல்வி உணவகம்)

(சி-2266)

தமிழீழமதில்
கதிரனாய்
பவனி வரும்
ஈழநாதமே!
புது அகவையில்-உன்
பணி மிளிர
வாழ்த்துகின்றோம்.

## A.O.M.A
சோட்டோகான்
கராத்தே கழகம்

மல்லாவி.

(சி-2905)

ஈழமெங்கும் பவனி வரும்
இணையில்லா ஈழநாதமே!
ஈரேழு அகவையில்
புதுமைகள் சேர்த்திட
வாழ்த்துகின்றோம்.

தரமான, சுவையான உணவு
வகைகளுக்கு கிளிநொச்சி நகரில்...

## யாழ். தாமரை உணவகம்

தொடரித் தெரு, கிளிநொச்சி.

(சி-7262)

ஈழநாதமே ஊடகத்துறையில் உன்பணி தொடர வாழ்த்துகின்றோம்.

பொருளாதார அபிவிருத்திப் பாதையில் என்றும் உங்களுடன்-

## கிராமிய அபிவிருத்தி வங்கி

உங்கள் தொடர்புகளுக்கு எங்கள் கிளைகள்

☆ கிராமிய அபிவிருத்தி வங்கி,
பிரதான சாலை,
கிளிநொச்சி.

☆ கிராமிய அபிவிருத்தி வங்கி,
முல்லைச் சாலை,
புதுக்குடியிருப்பு.

☆ கிராமிய அபிவிருத்தி வங்கி,
பிரதான சாலை,
துணுக்காய்.

☆ கிராமிய அபிவிருத்தி வங்கி,
ஆண்டான்குளம்,
மன்னார்.




(சி-7292)

## தனது 13 ஆண்டு...

மூலமே வாகனங்களில் கிளாலியைக் கடக்கும் போது - மிதவைகளில் அச்சு இயந்திரங்கள் ஏற்றி இறக்கப்பட்டன. இராணுவ நடவடிக்கைகள் எதிர்கொள்ளப் பட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த நகர்த்தல்கள் எல்லாம் நடைபெற்றன. இவற்றுடன் கூடவே ஈழநாதம் ஊழியர்கள் மட்டுமல்ல அவர்களின் குடும்பத்தினரும் நகர்ந்தனர்.

இவ்வாறு இடப்பெயர்வால் ஏற்பட்ட நெருக்கடிகள் ஒருபுறமிருக்க, அன்றாடம் இப்பத்திரிகைகள் சந்தித்த நெருக்கடிகள் பல. இங்கு பயன்பாட்டில் இருந்த இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள், ஏனைய உபகரணங்கள் பழுதடையும் போது அவற்றைத் திருத்தியமைப்பதற்கு அதற்கான உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்வது என்பது சிரமம் மிக்கதாகும். இதற்கு உள்ளூர் தொழில் நுட்பவியலாளர்களே பெரிதும் கைகொடுத்தனர். அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அவ் உதிரிப்பாகங்களை எடுத்துச் சென்று அவற்றைப் போலக் கடைந்தெடுத்து உபயோகிப்பதே வழமையாகும். அநேகமான உபகரணங்களில் சில உதிரிப்பாகங்கள் Made in Tamil Eelam (தமிழீழத்தில் தயாரிக்கப்பட்டது) என பொறிக்கக் கூடியவையாகும். இது வானொலிக்கருவி முதல் அச்சு இயந்திரங்கள் வரை பொருந்தும். அச்செழுத்துக்களின் அதி உச்சப் பயன்பாட்டைப்பெற அச்சுக்கோப்பாளர்கள் தினமும் பல்வேறு உபாயங்களையும் கையாள்வர்.

இதேவேளை, அன்றாடம் தேவைப்படும் அச்சிடும் தாள்கள், மை, அச்செழுத்துக்கள், ஒற்றுருவுக்குத் தேவையான மூலப் பொருட்கள் என்பன போன்றவை மக்களின் உதவியுடனும், ஏனைய சில அமைப்புக்களின் துணையுடனும் குருவி சேர்ப்பது போல சேர்த்துப் பெறப்படும். இதற்கென சில ஊழியர்கள் கடற்கரைகளிலும் பொட்டல் வெளிகளிலும் காத்திருப்பர்.

யாழ். குடாநாட்டில் முற்று முழுதாக பத்திரிகை இயங்கியவேளை, வன்னிக்கான பத்திரிகை விநியோகம் உயிராபத்தான பயணத்தின் மூலமே சாத்தியமாகியது. வன்னியில் பத்திரிகை விநியோகமோ, காடு மேடு, வெள்ளம், காட்டாறுகள், யானை, இருள், நீண்ட தூரங்களைக் கடந்து மேற்கொள்ளும் பணியாகும். செய்தியாளர்கள் குண்டு வீச்சு, இராணுவத் தாக்குதல், பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் சேகரித்த செய்திகளை பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பெரிதும் சிரமமுற்றனர். இவர்கள் இதற்கு பத்திரிகையை எடுத்துச் சென்று விநியோகிக்கும் ஊழியர்களின் உதவியையும், மக்கள் போக்கு வரத்துச் சாதனங்களின் துணையையும் பெற்று வந்தனர். மிக முக்கியமான செய்திகளுக்கு மட்டும் தொலைத் தொடர்பு சாதனங்களின் உதவிபெறப்பட்டது.

களமுனையில் பிரதான செய்தியாளராக நிர்வாகப் பொறுப்பாளரே செயற்படுவார். பாரிய சமர்க்களங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், களத்திலிருந்து செய்திகளை உடனுக்குடன் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும் சிறப்புச் செய்தியாளராக அவரே செயற்படுவார். அதேவேளை, அரசியல் நகர்வுகளின் போதும் அவரே முக்கிய செய்தியாளர். நிறுவனத்தின் நடுநாயகமாக நின்று பணிபுரியும் அவருக்கு இது ஒரு சிறப்புப் பணியாகும். போராட்டம் தொடர்பான செய்திகளை உறுதிப்படுத்துவதில் தலைமைப் பீடம் முதல் தளபதிகள், துறைப் பொறுப்பாளர்கள் அனைவரும் ஈழநாதத்திற்கு என்றும் உறுதுணையாக இருந்து வருகின்றனர். இவ்வகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரின் துணை ஈழநாதத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களித்திருக்கின்றது.

ஈழநாதம் பத்திரிகைக்கு ஆக்கங்கள் படைப்பதில் மக்கள் மத்தியிலிருந்து மட்டுமல்ல, போராளிகள் மத்தியிலிருந்தும் பல படைப்பாளிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரு தரப்பிலிருந்தும் பல படைப்பாளிகளை அறிமுகப்படுத்திய பெருமையும் ஈழநாதத்திற்கு உண்டு.

நிர்வாகப் பகுதியும் தாசன், சந்திரன் என முன்னர் இயங்கிவந்த வேலைப்பகுதிகளும் அழகன், முடியரசி என இப்போது ஈழநாதத்தின் கிளை நிறுவனங்களாக இயங்கிவருகின்ற வேலைப் பகுதிகளும் ஈழநாதத்திற்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படாது பார்த்துக் கொண்டன. தொகுத்துப் பார்த்தால் 24 மணி நேரமும் வருடத்தின் 365 நாட்களும் எங்காவது ஒரு பகுதி ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிறுவனமாக ஈழநாதம் இயங்கி வருகின்றது.

இதன் வரலாற்றில் 13 ஆவது ஆண்டு பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள ஆண்டு எனலாம். தற்போது ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைச் சூழ்நிலை அதனிலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. கணினி முறையில் அச்சுக் கோர்த்து ஒற்றுரு முறையில் அச்சிடப்பட்டு வரும் இது வாராந்தம் வர்ண அச்சுப்பதிப்புடன் வெள்ளிநாதத்தையும் வெளியிட்டு வருகின்றது.

இது, கடந்த ஆண்டுகளில் ஈழநாதம் மேற்கூறிய அனைவரினதும் ஆதரவுடன் மேற்கொண்ட பணிக்குக் கிடைத்த பரிசு என்றே கூறவேண்டும்.

இவ்வேளையில், இதன் முதல் நிர்வாகப் பணிப்பாளர் மேஜர் அழகனை நினைவு கூராமல் இருக்க முடியாது. ஏனெனில், அவர் ஈழநாதம் குறித்து வைத்திருந்த குறிக்கோள்கள் பல நிறைவேறும் தருணமாக இப்போதைய காலகட்டம் உள்ளது. ஈழநாதத்தை இன்று வெளிவரும் வடிவில் வெளியிட வேண்டும் என்பது, அவர் இந்த நிறுவனத்தை 13 ஆண்டுகளுக்கு முன் பொறுப்பேற்றபோது வைத்திருந்த குறிக்கோள்களில் ஒன்றாகும். அவர் பத்திரிகை அல்லது சஞ்சிகை யொன்றை எடுத்துப் பத்திரப்படுத்துவாரானால் அதில் நவீன அச்சு இயந்திரங்கள் குறித்த விபரங்கள் இருக்கும் என நிச்சயமாக நம்பலாம்.

இதேவேளை அவரது முக்கிய அபிலாசை, ஈழநாதம் பத்திரிகை எத்தகைய நெருக்கடி, இடரைச் சந்தித்தாலும் வெளிவந்தேயாக வேண்டும் என்பதாகும். பத்திரிகையில் களமுனைப் புகைப்படங்களை வெளியிட எனப் புகைப்படக் கருவியுடன் களமுனைக்குச் சென்றவேளையில், அவர் வீரச்சாவடைந்தார். அவரது வித்துடல் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த வேளையில்கூட மறுநாளைய பத்திரிகைக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அதுபோலவே, ஈழநாதம் தனது பணியை நாளாந்தம் தொடர்ந்து செய்துவரும் அதே வேளை, போராட்டத்தின் திருப்பு முனைகளாக அமைந்த களமுனை மற்றும் ஏனைய செய்திகளைத் தாங்கி விசேட பதிப்புக்களை பல தடவை வெளியிட்டுள்ளது. எவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்தபோதும் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டேயிருக்கிறது.

ஈழநாதம் தனது குறிக்கோளில் கடந்த 13 வருடங்களாக பிறழாது பணிபுரிந்து வருகிறது. அது தனது குறிக்கோளில் பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ளது என்றே நம்புகின்றது. அதனால் தான் அது சந்தித்த பல தடைகளையும் வெற்றி கொள்ள முடிந்திருக்கிறது என்றே கூற முடியும். ●

## கிளிநொச்சியின்...

திறக்கப்பட்ட வங்கக் கடல்வழி ஒப்பீட்டளவில் ஸ்திரமானதாகவும், பத்திரமான தாகவும், கேந்திர முக்கியத்துவம் உடையதாகவும் காணப்பட்டது.

வன்னி மையத்திலிருந்து சிந்திக்கும் ஒரு நிலை வந்திரா விட்டால் இந்த வங்கக் கடல் வழியின் கேந்திர முக்கியத்துவம் ஒப்பீட்டளவில் குறைந்தளவே உணரப்பட்டிருந்திருக்கும்.

இப்படிப்பார்த்தால் 'றிவிரச' கொண்டு வந்த மைய நகர்ச்சியானது யாழ்ப்பாண மையநோக்கு நிலையி லிருந்து ஈழப்போரை வன்னிமைய நோக்கு நிலைக்குப் போகுமாறு நிர்ப்பந்தித்தது எனலாம்.

இதை இன்னும் சரியாகச் சொன்னால் - சிறியதும் தனது கடலேரிகளின் வழியே எளிதில் முற்றுகையிடப் படக் கூடியதுமாகிய ஒரு குடாநாட்டின் மையத்திலிருந்து சிந்தித்துவந்த தமிழர்களை 'றிவிரச' படை நடவடிக்கையானது பரந்தகன்றதும், பெரியதும் என்பதினாலேயே முற்றுகையிடப்பட முடியாததுமாகிய ஒரு பெருநிலத்தின் மையத்திலிருந்து சிந்திக்குமாறு நிர்ப்பந்தித்தது எனலாம்.

இந்த வன்னி மைய நோக்கு நிலையின் மற்றொரு வெற்றியே ஆனையிறவை மீட்டது என்பதும்.

ஓயாத அலைகள் ஒன்று யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியால் நொந்து போயிருந்த ஈழப்போரின் இதயத்துக்குத் தெம்பூட்டிப் புத்தூக்கத்தைக் கொடுத்தது.

அதோடு திறக்கப்பட்ட சர்வதேசக் கதவினூடாக சுரந்துவந்த புதிய பலமும் சேர்ந்துவிட சந்திரிகா - ரத்வத்த அரசின் ஜெயசிக்குறுக் கனவுகளைச் சிதறடிப்பது புலிகளுக்குச் சாத்தியமாகியது.

கிளிநொச்சியை மீட்ட ஓயாத அலைகள் இரண்டு, ஜெயசிக்குறுவை முறியடித்த ஓயாத அலைகள் மூன்று போன்ற எல்லாச் சமர்களையும் இத்தகையதொரு பின்புலத்தில் வைத்தே விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த வெற்றிகள் யாவும் சேர்ந்து யுத்தகள வலுச்சம நிலையைத் தலைகீழாக மாற்றின.

குறிப்பாக கட்டுநாயக்க விமானப்படைத் தளத்துக்கு வீழ்ந்த அடி தலைகீழாய் மாறிய வலுச்சமநிலையை சிங்களவர் களுக்கு அவர்களுடைய தலை நகரத்தில் வைத்தே நிரூபித்தது.

இந்த மாறிய வலுச்சம நிலையின் பேறாகக் கிடைத்ததே இப்பொழுது நிலவும் புரிந்துணர்வு.

இந்த மாறிய வலுச்சம நிலையின் மீது கட்டப்பட்ட நகரமே கிளிநொச்சி.

வன்னிமைய நோக்கு நிலையிலிருந்து வடிவமைக்கப்பட்ட ஒரு யுத்த வியூகத்தின் வெற்றிகளால் மாற்றப்பட்ட யுத்தகள வலுச்சமநிலையின் பிரகாரம் உருவாகிய சமாதானத்தின் மீது கிளிநொச்சி இப்பொழுது கட்டப்பட்டிருக்கிறது.

இப்படி வலுச் சமநிலையைப் புலிகளுக்குச் சாதகமாக மாற்றிய தொடர் சமர்களின் தாய்ச் சமராக ஓயாதஅலைகள் ஒன்று காணப்படுகிறது.

வங்கக் கடலைத் திறப்பதில் தொடங்கிய வெற்றிகளின் ஒருகட்ட உச்சமாக இன்று கிளிநொச்சி புதுப் பொலிவோடு மிடுக்காய் நிமிர்ந்து நிற்கிறது.

ஒரு தலைநகரமாக எழுச்சி பெறத் தேவையான உபரித் திரட்சியோ அல்லது பௌதீக உட்கட்டுமானங்களோ அல்லது கல்விப் பின்புலமோ இல்லையென்ற போதிலும் கூட யதார்த்தத்தில் அது ஒரு தலைநகரம் தான்.

ஈழப் போரின் சமாதான நகரம் அது. ஈழப் போரின் ராஜதந்திர நகரமும் அதுவே.

ஒரு சிறு பட்டினம் உரிய அடிப்படை வளங்கள், பலங்கள் எதுவுமற்ற ஒரு பின்னணியில் இப்படியொரு முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பது என்பது மிகவும் அசாதாரணமான ஒன்றே.

அது காரணமாகவே அதையொரு நிச்சயமற்ற நகரம் என்று கூறவேண்டியுள்ளது.

வன்னிப் பெருநிலத்திலுள்ள ஆகப்பெரிய நகரம் அது. ஆனால் இங்குள்ள நகரங்கள் எல்லாவற்றுள்ளும் நிச்சயமற்ற நகரமும் அதுவே.

நிலவும் சமாதான முயற்சிகளின் மீது அது கட்டப்பட்டிருக்கிறது என்பதால் தான் அதற்கு இத்துணை புகழும் பெருமையும் கிடைத்தன.

ஆனால் சமாதானம் முறியும் ஒரு நிலை வந்தால் கிளிநொச்சியின் எழுச்சியைப் பாதுகாப்பது கஸ்ரமாகிவிடும்.

சமாதான முயற்சிகள் முறிந்து யுத்தம் என்று வந்து விட்டால் ஒப்பீட்டளவில் யுத்த களத்துக்குக் கிட்டவாயிருக்கும் நகரமும் கிளிநொச்சியே. இதுவும் அதன் நிச்சயமற்ற தன்மைகளைத் தீர்மானிககிறது.

சமாதானத்தின் வளர்ச்சிக்கும் தேய்வுக்கும் ஏற்ப அதன் கதியும் மாறும்.

சமாதானத்தின் கதி எதுவோ அதுதான் கிளிநொச்சியின் கதியும். ■

## தமிழர் தாயகம்...

தற்போது பிரவேசித்துள்ளது. எனினும் வடக்கு கிழக்கின் மனிதவளம் இரண்டு எல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று யுத்தமும் யுத்த அழுத்தமும் நாட்டின் மனிதவள அபிவிருத்தியில் எதிர் மறை விளைவினையும், சிதைவினையும் ஏற்படுத்தியுள்ளது. இடப்பெயர்வும், சமூகச் சிதைவும் வாழ்விடங்களில் ஏற்பட்ட பௌதீக மாற்றங்களும் தலைமுறை தலைமுறையாக பாரம் பரிய தொழில் திறனை இளைய தலைமுறைக்கு வழங்கிவந்த தொடர் சங்கிலியில் ஓர் இடை வெளியினை ஏற்படுத்தியுள்ளது.

பௌதீக வளங்களின் அழிவு, ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்புக்களின் செயற்பாட்டிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியதோடு சமூகத்தின் மனித வளத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் மட்டுப்படுத்தியுள்ளது. அல்லது இல்லாமல் செய்துள்ளது. இவற்றிற்கும் மேலாக பாடசாலைகளின் அழிவும் இடப்பெயர்வும் பல ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் கல்வியில் ஓர் தொடரறு நிலையினை தோற்றுவித்ததோடு இடைவிலகல்களின் அளவினையும் அதிகரித்துள்ளது.

யுத்தம் நேரடியாக குடும்பங்களில் உறவினர்களின் இழப்பிற்கும், இயலாமைக்கும் காரணமாக இருந்ததோடு குடும்பங்களில் தங்கிவாழ வேண்டிய விசேட தேவைகள் கொண்ட தொகுதியினை உருவாக்கியுள்ளது.

மறுபக்கத்தில் கொழும்பையும் மேற்கைத்தேய நாடுகளையும் நோக்கி நகர்ந்த தமிழ் மக்கள் நவீன தொழில்நுட்பத்தின் பிரயோகத்திற்கும் புதிய அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கும் ஏற்பத் தங்களுள் அறிவுத்திறனையும் வாழ்க்கை முறையையும் வளப்படுத்தியுள்ளனர். அத்துடன் உலகெங்கும் தங்கள் மூளைவளத்திறனாலும் தொழில் ஆர்வத்தினாலும் உழைக்கும் பற்றுறுதியினாலும் புலம்பெயர்ந்து தேசங்கள் எங்கும் சென்ற தமிழ் மக்களின் மனிதவளம் மிகச்சிறந்த நிலையில் உள்ளது.

இவ்வாறு இரண்டு எதிர்முனைகளில் உள்ள மனிதவளத்தினை ஒருங்கிணைப்பதன் மூலம் துரிதப்படுத்தப்பட்ட மனிதவள அபிவிருத்தியை அடைய வேண்டியதும் ஓர் புதிய தேவையாக உள்ளது.

தற்போது ஆரம்பிக்கப்படவுள்ள பாரிய புனரமைப்புப் பணிகளைத் தொடர்வதாயின் தமிழர் தாயகத்தின் பெருமளவு கட்டுமானப்பணிகளுக்கான தேர்ச்சிபெற்ற மனித வளம் தேவையாகவுள்ளது.

அத்துடன் துரிதப்படுத்தப்பட்ட புனரமைப்பு அபிவிருத்திக்கான கட்டுமானத்துறையில் கனரக தொழில்நுட்பங்களும் பாரியள விலான முதலீடுகளைச் செய்யக் கூடிய தனியார் துறையும் உள்வாங்கப்பட வேண்டியுள்ளது.

மீளக்குடியமர்வு என்பது வெறுமனே சொந்தக்காணிகளுக்குத் திரும்புதல் அல்லது வெந்தவீட்டினை கட்டியெழுப்புதல் என்றில்லாமல், அதற்கும் மேலாக சுயமாகத் தங்கள் குடும்பத்தினையும் அபிவிருத்தி செய்யக்கூடிய ஓர் விரிந்து செல்லக் கூடிய பொருளாதாரப் பொறி முறையினுள் மக்கள் ஒவ்வொருவரினையும் பொருத்த வேண்டியுள்ளது. இதற்கு அதிகளவு முதலீடுகள், தொழில் அபிவிருத்தி முனைப்புகள், தொழில் வாய்ப்புகள் என்பன உருவாக்கப்பட வேண்டியதோடு அதற்கு ஏற்றவகையில் வடக்கு கிழக்கின் சட்டநிர்வாக கட்டமைப்பிற்குள் பொருத்தமான தளர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்தின் மீளக்கட்ட மைப்பு என்பது தேசம்தழுவிய ஒரு முகம் நோக்கிய தயார்ப்படுத்தலிலும் அதற்காகத் தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழ்கின்ற, பணியாற்றுகின்ற எல்லாத் தமிழ் மக்களினுடைய சுயஈடுபடுத்தலிலும்தான் தங்கியுள்ளது.

தனிப்பட்ட வேறுபாடுகள், சுயபுலமைப் பெருமிதங்கள் கடந்தகால கசப்புணர்வுகள் எல்லாவற்றையும் கடந்து தாயகத்தினை கட்டி எழுப்புவதற்கான அணியில் எல்லோரும் திரண்டெழவேண்டியுள்ளது. அதன் மூலமே தாயகம் எதிர்கொள்ளும் புனரமைப்பு அபிவிருத்தி சவால்களை வெற்றி கொண்டு உலக சமுதாயம் வலிந்து தருகின்ற வளத்துடன் எமது மக்களின் வாழ்க்கையினை வளம் பெறச்செய்ய முடியும். இது ஒருவகையில் காலத்திலும் விரைவான கடின உழைப்பில் ஈடுபடவேண்டிய புனிதப்பணியாகவே அமைய முடியும. ●



# அந்திவானம் பதிப்பகம்



பதிப்புலகில் புதுப்பொலிவு
பதிப்பில் துல்லியம்

சிறந்த உங்கள் சேவைக்காக

**ஓவ்செற் பதிப்பு**

அழகு மிகு வர்ண அச்சுப்பதிப்பின் சிகரமாக இயங்கிவரும் எமது பதிப்பகத்தில்

- நேரச்சு (Offset),
- துணியச்சு
- திரையச்சு (Screen Printing)
- றப்பர் முத்திரை (Ruber Stamp)
- கணினி வேலைகள்
- நிழற்படி (Photostat)
- மென்றாட்காப்பீடுகை (Laminating)
- கல்லச்சு (Roneo)
- குட்டச்சு
- பாடசாலை உபகரணங்கள்

(சி-7713)

ஆகிய சேவைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் குறைந்த விலையில் முதற்தரத்தில் ஒரே கூரையின் கீழ்ப் பெற தரம் நாடுவோர் நாடவேண்டிய ஒரே பதிப்பகம்

## அந்திவானம் பதிப்பகம்

வேணாவில்,
புதுக்குடியிருப்பு.

யாழ் சாலை,
கிளிநொச்சி.

14ஆம் அகவை காணும் ஈழநாதம் பத்திரிகைக்கு எமது நல்வாழ்த்துகள்



நேற்றைப்போல் இன்றில்லை இன்றைப்போல் நாளையில்லை
ஆகவே...
உங்கள் இனிய காலத்தின் நினைவை மீட்க..

# அருச்சுனா

புகைப்படக் கலையகம்




டிஜிற்றல் முறையில், பல வகைகளில், தரமான லெமினேற்றிங் செய்துகொள்ள

நவீன கொனிக்கா கொம்பியூட்டர் என்லாஜர் மூலம் தெளிவான, அழகான படங்களைப் பெற்றுக்கொள்ள

நீங்கள் பயணிக்க வேண்டிய கலையகம்
புதுக்குடியிருப்பிலும் கிளிநொச்சியிலும்

## அருச்சுனா

(சி-7713)

14ம் ஆண்டில் பாதம் பதிக்கும் ஈழ நாதத்தின் ஓசை ஊரெங்கும், உலகெங்கும் ஓங்கி ஒலிக்க எங்கள் மனதினிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# தமிழர் கல்வி...

(வகுப்பறைகள், மண்டபங்கள் ஆகியன), தளபாட வசதி, உபகரண வசதி, கற்றற் பொருட்கள் வசதி என்பன பெரும்பாலான இடங்களில் போதாமல் உள்ளன. குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்திலும் வன்னி மாவட்டங்களிலும் போரினால் சிதைவுற்ற கட்டடங்கள், தளபாடங்கள் ஆகியன மிகவும் கூடுதலாகும். மிக அண்மைக் காலம் வரை கல்விக்குத் தேவையான உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் என்பனவற்றை இங்கு தருவிப்பதற்கும் அரசு விதித்த தடை குறுக்கீடாக இருந்துள்ளது. அரசினால் மாணவர்க்கு இலவசமாக வழங்கப்படும் நூல்கள்கூட உரிய காலத்துள் வந்தடைவதில்லை. போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர், இக் குறைபாடுகளை நீக்குவதற்கான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது "யானைப் பசிக்குச் சோளப் பொரி" கதையாகத்தான் உள்ளது.

## பாடசாலை அதிபர்கள்:

பாடசாலைகளில் கற்றல் நிகழ்வுகளும் ஏனைய இணைப்பாடச் செயற்பாடுகளும் செவ்வனே ஒப்பேறுவதற்குச் சிறந்த தலைமைத்துவம் பாடசாலைகளில் இருப்பது அவசியமாகும். 2000 ஆம் ஆண்டு யூன் மாத புள்ளி விபரப்படி வடக்கு கிழக்கிலுள்ள 1976 பாடசாலைகளில் 1251 பாடசாலைகளில் மட்டுமே அதிபர் தரத்திலுள்ளோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். இதன் பின்னரான காலப்பகுதியில் அதிபர்கள் நியமனங்கள் இடம்பெற்றுள்ளனவெனினும் தலைமைத்துவம் இல்லாமலே இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகள் இன்றும் உள.

## ஆசிரிய வளம்:

கல்விச் செயற்பாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது ஆசிரிய வளம். ஆசிரிய வளப் பற்றாக்குறையானது வேறு பல பிரச்சினைகளைப் பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகளிலும் தோற்றுவிக்கும் வலுவைக் கொண்டது. ஆசிரிய எண்ணிக்கை மட்டுமன்றி ஆசிரியரின் தொழிற்தகைமையும் வினைத்திறனும்கூட இங்கு கருதப்படுகின்றன.

ஆசிரியர் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், யாழ்ப்பாணக் கல்வி வலயம், திருகோணமலைக் கல்வி வலயம் ஆகிய இரண்டும் தவிர்ந்த ஏனைய 22 கல்வி வலயங்களும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகப் பாதிப்புற்றவையே. 2001 ஆம் ஆண்டுப் புள்ளிவிபர ஆண்டறிக்கையின் பிரகாரம் எல்லாமாக 4216 ஆசிரிய வெற்றிடங்கள் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் இருந்துள்ளன. இவற்றுள் மிகவும் பாதிப்புற்ற பகுதி ஆரம்பக்கல்வியும் ஆங்கிலக் கல்வியுமாகும். அவ்வேளை 2135 ஆரம்ப ஆசிரியர்க்கும் 1701 ஆங்கில ஆசிரியர்க்கும் பற்றாக்குறை நிலவியது. 2000 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட சில வகைக்கு ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். தொடர்ந்து இவ்வாண்டின் தொடக்கத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட புதிய ஆசிரிய நியமனங்கள் கூடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துவிடவில்லை.

### மாவட்ட ரீதியாக ஆசிரியர் பற்றாக்குறை:

| மாவட்டம் | பற்றாக்குறை (%) |
|---|---|
| யாழ்ப்பாணம் | 6.4 |
| கிளிநொச்சி | 47.0 |
| முல்லைத்தீவு | 46.9 |
| மன்னார் | 38.3 |
| வவுனியா | 25.5 |
| திருகோணமலை | 13.0 |
| மட்டக்களப்பு | 15.7 |
| அம்பாறை | 10.2 |
| மொத்தம் | 18.4 |

(ஆதாரம்: 2001 புள்ளிவிபர ஆண்டறிக்கை. மாகாணக் கல்வித் திணைக்களம்)

ஆசிரிய நியமனத்தினை மேற்கொள்வதற்குத் திறைசேரி அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை எனும் நிலை இப்பற்றாக்குறை நீடிப்பதற்குக் காரணமாகக் கொள்ளப்பட்டது. "எவ்வாறு தமிழ்மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை மட்டும் நீடிக்கின்றது" என்பதற்கு உரத்துக் குரல் கொடுக்க எவரும் காணப்படவில்லையா என்பது இங்கு முன்வைக்கப்பட வேண்டிய வினாவாகும்.

தமக்கு மேலேயுள்ள அதிகாரிகளின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ள விரும்பாதவர்களும் இப்பிரதேசங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகளுமே இந் நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

போரின் கொடூரத்தை அதிகளவில் சந்தித்த வன்னி மாவட்டங்களே ஆசிரியர் பற்றாக்குறையை அதிகளவில் சந்தித்துள்ளன என்பதனை அருகிலுள்ள அட்டவணை சுட்டுகின்றது.

### வன்னிப் பிரதேசம் - ஆசிரியர் பற்றாக்குறை.

| கல்வி வலயம் | பற்றாக்குறை (%) |
|---|---|
| கிளிநொச்சி | 47.0 |
| முல்லைத்தீவு | 44.0 |
| துணுக்காய் | 51.2 |
| மடு | 54.0 |
| வவுனியா வடக்கு | 50.7 |

2002 ஆம் ஆண்டு நவம்பரில் கட்டுரையாளர் கிளிநொச்சிப் பிரதேசத்தில் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி கிளிநொச்சிப் பிரதேச ஆசிரியர் பற்றாக்குறை 54% ஆகக் காணப்பட்டது. ஆசிரியர் பற்றாக்குறை ஒருபுறமிருக்க, கிடைக்கக்கூடிய ஆசிரியர்களை நியாயமான முறையில் பங்கீடு செய்வதிலும் பாகுபாடு காட்டப்பட்டுள்ளமையைப் புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. அரசியல்வாதிகளின் நெருக்கீடு, செல்வாக்குள்ளோரின் ஆதிக்கம் போன்றன ஆசிரியர் வளப்பங்கீட்டுக்குக் காரணமாக அமைந்ததாக நாம் கருத முடியும்.

மாவட்டங்களுக்கிடையிலான வேறுபாடுகள் ஒருபுறமிருக்க மாவட்டம் ஒவ்வொன்றுக்குள்ளேயும் போயும்கூட ஆசிரிய வளப்பங்கீடு சரிவர மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை இன்றும் தொடர்கின்றது. உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாண வலயம் 2.1% மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு காணப்பட்ட வேளை தீவக வலயம் 19.7% பற்றாக்குறையைக் கொண்டிருந்தது. திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை வலயம் 1.9% மேலதிக ஆசிரியர்களைக் கொண்டிருந்த வேளை, மூதூர் வலயம் 21.03% பற்றாக்குறையைக் கொண்டிருந்தது. அதேபோல மட்டக்களப்பு மாவட்டத்தின் பற்றாக்குறை 15.7% இருக்கும் அதேவேளை அம்மாவட்டத்திலடங்கும் கல்குடா வலயத்தின் பற்றாக்குறை 29.4% ஆகியுள்ளது.

பாடரீதியாகவும் ஆசிரியர் பங்கீடு சரிவர இடம்பெற்றிருக்கவில்லை. குறித்த ஒரு பாடத்திற்கான ஆசிரியர்கள் ஒரு பாடசாலையில் மேலதிகமாகக் காணப்படும் அதேவேளை, இன்னொரு பாடசாலையில் அதே பாடத்திற்குத் தட்டுப்பாடு நிலவியுள்ளது.

ஆசிரியர் - மாணவர் விகிதத்தினை நோக்குவோமாயின் ஆசிரிய வளப் பிரச்சினையை நான் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் பார்க்க இவ்விகிதம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உயர்வாகக் காணப்படுகின்றது. எட்டு மாவட்டங்களுக்கிடையிலேயே எவ்வாறு இவ்விகிதம் வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதனை அருகிலுள்ள அட்டவணை புலப்படுத்துகின்றது.

### ஆசிரியர் மாணவர் விகிதம்

| மாவட்டம் | % |
|---|---|
| யாழ்ப்பாணம் | 23.7 |
| கிளிநொச்சி | 42.7 |
| முல்லைத்தீவு | 46.3 |
| மன்னார் | 35.4 |
| வவுனியா | 28.5 |
| திருகோணமலை | 26.5 |
| மட்டக்களப்பு | 27.8 |
| அம்பாறை | 27.3 |
| மொத்தம் | 28.1 |

வசதிகள் பொருந்திய பாடசாலைகள் பிள்ளைகளின் வதிவிடங்களுக்கு அண்மையில் காணப்படாமை, சில கோட்டங்களில் IAB பாடசாலைகள் எதுவுமே காணப்படாமை போன்ற நிலைமைகளும் இங்கு காணப்படுகின்றன.

புதிய பாடசாலைகளை நிறுவுதல், பாடசாலைகளின் வசதிகளைப் பெருக்கித் தரமுயர்த்துதல், தொலைவிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவரை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தல் என்பவை இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையலாம்.

## கலாச்சார சமூக நியமங்களுக்கு ஒவ்வாத அம்சங்கள்:

ஏறத்தாழ எல்லாப் பாடசாலைகளுமே, பொதுத் தேர்வுகளுக்குப் பிள்ளைகளைத் தயார்ப்படுத்தும் நோக்கிலேயே பாடசாலைகளில் கல்வி வழங்கப்படுகிறது. பிள்ளைகள் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவு செய்யும் திறன்கள், வாழ்வோடு இணைந்த அம்சங்களை உள்ளடக்கிய கல்விச் செயற்பாடுகள் எமது பண்பாட்டு விழுமியங்களை மதித்து ஏற்கும் மனப்பாங்குகளின் விருத்தி, பிள்ளைவாழும் பிரதேசத் தேவைகளுக்கேற்ற கல்விபோன்ற இன்னோரன்ன அம்சங்கள் இன்று நலிவடைந்த நிலையில் உள்ளன. முதியோரை மதிக்காத போக்கு, குருவைக் கௌரவிக்காத மனப்பாங்கு, மகளிர், சிறுவர் ஆகியோரின் உரிமைகள் மீறப்படுதல், சுயநல மனப்பாங்கினை வளர்த்தல் போன்ற நிலைப்பாடுகளைத் தோற்கடிக்கக் கூடிய வகையிலேயே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

## பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டமையும் இடைவிலகலும்:

போர்ச் சூழலினால் ஏற்பட்ட பல்வேறு துன்பங்களும் வசதிக் குறைவுகளும், சிலபிள்ளைகளுக்கு கல்வியைத் தொடரும் வாய்ப்பினை இல்லாமல் செய்துவிட்டன. இதேபோன்று 14 வயதுக்கு முன்னதாகவே பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்த பிள்ளைகளும் உள்ளனர். இவ்வாறான பிள்ளைகளுக்கான பல திட்டங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் இடம் பெற்று வருகின்ற போதும் பயனடைய வேண்டிய எல்லா மாணவர்களையும் இச் செயற் திட்டங்கள் சென்றடையவில்லை. இத்திட்டத்திற்குப் பதிலாக புதிய வலுவுடைய திட்டங்களை நாம் கண்டுபிடிக்கவேண்டும். உதாரணமாக இவர்களுக்கென முழுநேரப் பாடசாலைகளை உருவாக்கி அங்கு சிறப்பான கற்பித்தல் சாதனங்களையும் கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்திக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

## கல்வி வழிகாட்டல் சேவை:

எமது பாடசாலைகளில் கல்வி வழிகாட்டல் சேவை உருவாக்கப்பட வேண்டுமெனும் தேவை பலராலும் உணரப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் நடைமுறை சார்ந்த சில பிரச்சினைகள் இருக்கின்றன எனினும் வடக்கு கிழக்குத் தமிழ் மொழி மூலமான பள்ளிகளில் கல்வி வழிகாட்டல் சேவையொன்று அவசியமாகவும் விரைவாகவும் தொடக்கப்பட வேண்டும். கல்வியில் அசிரத்தை, ஒழுங்கற்ற பாடசாலை வரவு, இடைவிலகல் ஆகியவற்றை நாம் இவ்வாறான சேவைகள் மூலம் கட்டுப்படுத்த முடியும்.

## சமூக நலனின் புறக்கணிப்பு:

ஒருசில வேலைவாய்ப்புக்களை மனதில் வைத்துக்கொண்டு கல்வியைத் தொடரும்போது போட்டி பொறாமை என்பன தாமாகவே வளர்ந்துவிடும். சுயநலச் சிந்தனை அளவுக்கு மீறிக் காணப்படுதல் விரும்பத்தக்கதல்ல. எப்படியும் மற்றவரை முந்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே பிரத்தியேகக் கல்வி வளர்வதற்குக் காரணமாக அமைந்தது. பிரத்தியேகக் கல்வியே இவ்வாறான நிலைமையை வளர்க்கின்றது எனவும் கூறலாம்.

கூட்டுணர்வு ஏற்படக்கூடிய பல செயல்களில் மாணவரை ஈடுபடவைக்கும் இணைப்பாடச் செயற்பாடுகள் நன்முறையில் திட்டமிடுதல் 'நான்'எனும் முனைப்பிலிருந்து மாணவரை விடுவித்து 'நாம்' எனும் உணர்வுநிலையைத் தோற்றுவிக்க உதவும்.

## ஆசிரியர் வாண்மை விருத்தி:

கல்வி விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திச் செயற்பாடுகள் நல்லமுறையில் திட்டமிடப்பட வேண்டும். பதவி உயர்வுக்கு வழிகோலும் தராதரப்பத்திரங்களை தரக்கூடிய பயில்நெறிகளோ பயிற்சிகளோ ஆசிரியரின் வினைத்திறனை மேம்படுத்தாவிடின் எவ்வித பயனையும் தரா. ஆசிரியர்களுக்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட பயிற்சிகளும் மீள் பயிற்சிகளும் கிடைக்கக்கூடிய நடைமுறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் ஆசிரிய மத்திய நிலையங்கள் சிறப்பாக இயங்குவதற்கான வளங்களும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதன் அவசியம் உணரப்படவேண்டும்.

## தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்கள்:

எமது தேவைகள் பலவற்றினை நிறைவேற்றக்கூடிய சில சிந்தனைகள்:

1. எமது கல்வி நிலையில் மேம்பாடுகாணல் என்பது மக்களின் கல்விபற்றிய விழிப்புணர்வில்தான் பெருமளவு தங்கியுள்ளது.
2. இப்பிரதேசத்தின் கல்வி தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை மாகாண மட்டத்திற்கு கிடைக்கும் வகையிலான முயற்சிகள் பல தரப்பினராலும் முடுக்கிவிடப்படல் வேண்டும்.
3. மாணவர் கற்கும் பாடப்பரப்பினுள் புதிய விடயங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். பிரதேசத்தின் நலனுக்காய் உழைத்தவர், சுதேசியத்தின்பால் நாட்டங் கொள்ளவைக்கும் கற்பித்தற் பொருட்களும் முறைகளும், தொழில் மகத்துவம், சேவை மனப்பாங்கு போன்ற விடயங்களை நாம் கருத்திற் கொள்ளலாம்.
4. அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஆசிரியர்களையும் பிற கல்விசார் ஆளணியினரையும் ஊக்குவித்தல் அவசியம். "கூலிக்கு வேலை" என்ற நிலைமை மாறி "வேலைக்குக் கூலி" எனும் நிலைமை தோன்ற வேண்டும்.
5. பாடசாலைகளின் ஆளணி உட்பட சகல வளங்களையும் பெருக்கும் திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும்.
6. வளப்பங்கீட்டில் சமத்துவம் பேணப்படுதலை உறுதி செய்தல் வேண்டும்.
7. பிரதேச தேவைகளுக்கும் அதன்பால் அத்துறையில் வேலை வாய்ப்பைப் பெறக்கூடிய வகையிலும், புதிய கற்கை நெறிகளை குறிப்பாக உயர்கல்வி மட்டத்தில், உருவாக்கும் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. வயது, நீண்டகால சேவை என்பன போன்ற தகைமைக்களை விடுத்து, உண்மை அனுபவம், ஆற்றல், வினைத்திறன் செயற்பாடு ஆகிய தகைமைகளின் அடிப்படை யில் தொழில் வழங்கலும் தொழிலில் உயர்வு வழங்கலும் நடைமுறைக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## மேற்கத்தைய....

தெளிவான விளக்கத்தை முதலில் எழுதினார். அதன் பின்வந்த பிரிட்ஷ் மருத்துவர் எட்வா்ட் ஜென்னா் அதைக் குணப்படுத்தும் வழியை 1796 இல் கண்டுபிடித்து, தடுப்பு மருந்தையும் (Vaccination) தயாரித்தார். இதற்கும் மக்களின் எதிர்ப்புக் கிளம்பியது. இருந்தும் அவரது கண்டுபிடிப்பு நோயை முறியடிப்பதற்கான சத்திவாய்ந்த புதிய மருந்தும் கண்டு பிடிக்க வழிவகுத்தன.

பிரெஞ்சுக்காரரான லூயி பாஸ்டர், விசர் நாய்க்கடி, எலிக்கடி வலிப்புகளுக்கும் அந்திராக்ஸ் போன்ற நோய்களுக்கும் தடுப்பு மருந்தைப் பயன்படுத்தினார்.

கிருமிகளே நோய்க்கு முக்கிய காரணம் என்பதையும் நிருபித்தார்.

1882இல் ரொபர்ட் கோச் என்பவர் காசநோயை உண்டாக்கும் கிருமியைக் கண்டுபிடித்தார். "19ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய கொலையாளி" எனவும், அந்நோய் விபரிக்கப்பட்டது. ஓராண்டின்பின் அவரே கொலரா தொற்றுவதற்குக் காரணமான கிருமியையும் கண்டுபிடித்தார். நுண்ணுயிரியலில் (Microbiology) பாஸ்டர் மற்றும் ரொபர்ட் கோச் அறிமுகப்படுத்திய கண்டுபிடிப்புக்கள், தடுப்பாற்றலியல் (Immunology) சுகாதாரம், உடல் நலம் பேணல் போன்ற வற்றின் முன்னேற்றங் களுக்கு வழிவகுத்திருக்கின்றன. கடந்த 1000 வருடங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் காட்டிலும் இந்தக் கண்டுபிடிப்புக்களே மனிதருக்குப் பேருதவியாயமைந்தனவாகும்.

20ஆம் நூற்றாண்டிலும் மருத்துவத் துறையில் பாரிய மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. நீரிழிவு நோய்க்கு (Diabetes) இன்சுலின், புற்று நோய்க்கு கீமோ தெரபி, சுரப்பிகள் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கு இயக்குநீர் சிகிச்சை (Hormone Treatment), காசநோய்க்கு அன்டிபையோட்டிக் (Antibiotics) சிலவகை மலேரியாவுக்கு குளோரோகுயின், சிறு நீரகக் கோளாறுகளுக்கு டயலிசிஸ் போன்றவற்றுடன் திறந்த இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் மாற்று உடலுறுப்புகளைப் பொருத்தியமை போன்றனவும் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

21ஆம் நூற்றாண்டு ஆரம்பித்துள்ள போதிலும், புதிய பல நோய்களின் அச்சுறுத்தல்களும் அவற்றைத் தடுப்பதிலும் ஆர்வம் காண்பிக்கப்படுகின்றது.

அன்றைய காலங்களிலில்லாத எயிட்ஸ் போன்ற புதிய நோய்களும், ஒரு காலத்திலிருந்த நோய்களும் மீண்டும் தலைதூக்கியுள்ளதாகவும் கூறப்படுகி ன்றது. இதுவரை அறியப்பட்ட 20,000 வியாதிகளில் மூன்றில் இரண்டு பாகத்தைத் தடுப்பதற்கு சிகிச்சை முறைகளே இல்லையென ஜேர்மன் மருந்தியல் வெளியீடு அறிவித்துள்ளது.

1990 களில் பிரெஞ்சு அன்டர்ஸன் போன்ற மருததுவரால் நடத்தப்பட்ட ஆய்வுக்குப்பின் மரபணு சிகிச்சை (Genetherapy) மூலம் விஞ்ஞான மருத்துவ முன்னேற்றம் காண முடியுமெனவும், இதுவரை குணப்படுத்த முடியாத நோய்களைக் குணப்படுத்த முடியும் எனவும் கூறப்பட்டது. காலப்போக்கில் பிறவியிலேயே இருக்கும் பரம்பரை நோய்களை உடையவர்க்கும் அவற்றைக் குணப்படுத்துவதற்கேற்ற ஜீன்களை ஊசி மூலம் செலுத்திக் குணமாக்கலாமெனவும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அதன் மூலம் தீங்கிழைக்கும் புற்று நோய் செல்களையும் அழித்துவிட முடியுமாம். ஒருவரின் இயல்பை வைத்து, அவருக்கு வரும் நோய்க்கான சாத்தியங்களைக் கண்டுபிடிக்கும் மரபணு ஆய்வு முறை ஏற்கனவே உள்ளதும் குறிப்பிடத் தக்கது.

ஆகவே, இன்றைய மருத்துவக் கலையின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் பண்டைய மருத்துவக் கலையின் செயல் முறைகளும் அன்றிருந்த அறிவாளிகளின் கருத்துக்களும் பாதுகாக்கப்பட்டு வந்ததே காரணமெனலாம்.

## யாழ். குடாவின்...

இவைகள் தாம் இன்றைய இலக்கிய விழா மண்டபங்கள் வெறிச்சோடிக் கிடப்பதற்குக் காரணங்கள் என்பதை நாம் உணர வேண்டும். இக்காலப்பகுதியில் குடாநாட்டு மக்கள், வாழ்வு என்ற பெயரில் அனுபவித்த மரண வேதனைகளையும் கைபறியவிட்ட பண்பாட்டு விழுமியங்களை மீட்க வேண்டியுள்ள அவலநிலையினையும் சித்திரிக்கும் இலக்கியங்கள் தோன்றத் தவறியமைக்கும், இம்மக்களிடையே இலக்கியரசனை குறைவடைந்தமைக்கும், வாசிப்புப் பழக்கம் பெருமளவில் குன்றிப் போனமைக்கும் கூட மேற்கூறிய நிலைமைகள்தாம் காரணம் என்பதில் ஐயமில்லை.

தன் ஆன்மா ஈடேற்றமடையவும் சமூகத்தின் வாழ்வு சிறக்கவும் இன அடையாளங்கள், பண்பாட்டு விழுமியங்கள் நிலைக்கவும் சிறக்கவுமாக ஆழ்ந்த பொறுப்புணர்வோடு ஊக்கமாகச் செயற்படவேண்டிய கட்டாயக் கடமை இன்றைய தமிழீழ இலக்கிய க்ர்த்தாக்களுக்கு இருப்பதை நாம் உணர்ந்து கொள்வோம். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவத் தமிழன் பாடி வைத்ததை ஞாபகப்படுத்திக் கொள்வோம். தமிழன்னையினதும் தமிழ்ப் பரம்பரையினதும் நற்சமகாலததுக்காகவும் நல்லெதிர்காலத்துக்காகவுமாகத் தம் வாழ்வின் வசந்தங்களை முழு நீளமாகக் கருக்கி வந்து, ஈற்றில் தம் உயிர்களையும் ஆகுதியாக்கிக் கொண்ட மனித் தெய்வங்களான பல்லாயிரம் மாவீரத்தியாகிகளின் தெய்வீகத்தை உணர்ந்து கொள்வதன் மூலம் நாம், அவர்களின் கனவுகளை நனவாக்கும் வல்லமை தரும் மனத்தூய்மையை, மனோசக்தியை, ஆன்மபலத்தை ஈட்டிக் கொள்வோம். அவர்களின் தியாகத்தில் குளிர்காயும் சுயநலவெறியை அறவே துடைந்தெறிந்து, நலிக்கப்படும் தமிழ் வாழ, நசுக்கப்படும் தமிழினம் வாழ உழைப்பதால் வரும் உயர்ந்த புண்ணியப்புகழை ஈட்ட முற்பட்டு, எங்கள் எழுதுகோல்களை கைகளில் புதுவேகத்துடன் ஏற்றுவோமாக!

## ஆசிரிய விருத்தி...

கக்கூடிய நிலைக்கு "ஆசிரிய விருத்தி" அவசியமாகிறது. குறிப்பாக நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளில் இந்த நிலைமை பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது கல்வி தொடர்பானவர்களால் சிந்திக்கப்படுகிறது.

பாடசாலைமட்டக்கணிப்பீட்டு, மற்றும் வகுபபறையில் காணப்படுகின்ற மதிப்பீட்டு முறைகள் ஆசிரியர்களின் அக்கறையீனமான, விதண்டாவாதமான மற்றும் அறியாமை காரணமாக பாதிப்புக்குள்ளாவது சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கான பல்வேறு எல்லைக் கோடுகள் வழங்கப்பட்ட போதும் இதன் யதார்த்தமான தன்மை அவர்களின் சிறந்த ஆசிரியர் விருத்தியிலேயே தங்கியுள்ளது.

தமது குழந்தைகளில் காட்டுகின்ற அளவுக்கு பாடசாலைக் குழந்தைகளிலும் அக்கறை காட்டக்கூடிய உயரிய மனப்பாங்கு ஆசிரியர்களிடம் அவசியமானது. உண்மையான சமூகப் பற்றினூடாகவே சமூகத்தேவை நிறைவு செய்யப்படும.

நேரம் தவறாமை, நேரத்துக்கு மதிப்பளித்தல் போன்ற விடயங்களில் ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்து மாணவர்களுக்கு 'நேரம்' பற்றிய மகிமையை உணர்த்தக் கடமைப்பட்டவர்கள.

எந்த விடயத்திலும் மேலும் மேலும் புதிய விடயங்களைச் சேர்க்கவும் ஒவ்வாத எண்ணக் கருக்களை மாற்றவும் தர்க்க ரீதியாகச் சிந்திக்கவும் கூடிய அறிவியல் ரீதியான சிந்தனையுடையவர்களாகத் தங்களை மாற்ற அவர்கள் தயங்கக் கூடாது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று தொழில்சார் அறிவு பெரும்பாலும் ஆசிரியர்களிடம் உண்டு. தொழில்சார் திறனை விருத்தி செய்யலாம். அதனை ஏனையோர் மதிப்பீடும் செய்யலாம். தொழில் சார் நீதியை ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதும், அதனை மதிப்பீடு செய்வதும், கடினமான பணியாகும். ஆயினும் ஆசிரிய விருத்தி என்பது மேற்கூறிய மூன்று முக்கிய விடயங்களினதும் சமநிலை யானதும் மேற்பொருந்துவதுமான (OVER LAPING) விடயமாகும்.

## கவிஞர்களின் கவி...

பாடல்களைப்பாடிக் கொண்டிருந்தோம்.

ஆனால் இப்போது தலைவர் பிரபாகரன் காலத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றோம். எப்படியென்றால் எங்களுடைய பெயரை வைத்து வெளிநாடுகளில் பாடுகின்றார்கள். தமிழீழத்திலுள்ள மக்கள் என்னை "எங்கடசாந்தன்" என்று அழைக்கிறார்கள். வெளிநாடுகளில் வேறுபாடகர்கள் 'ஜேர்மன் சாந்தன்', 'கனடா சாந்தன்' என்று என்னுடைய பெயரை வைத்துப்பாடுகின்றார்கள்.

நாங்கள் போராட்டத்துக்குத்தான் பாடல்களைப் பாடியிருக்கின்றோம். சினிமாவுக்கு அல்லது தரக்குறைவான வேலைக்கு நாங்கள் பாடவில்லை. தலைவரைப் பாடியிருக்கின்றோம். போராளிகளைப் பாடியிருக்கின்றோம். மாவீரர்களைப் பாடியிருக்கின்றோம். அதுதான் எங்களுக்குச் சந்தோசம்.

எங்களைக் கொழும்பிலோ, வவுனியாவிலோ யாழ்ப்பாணத்திலோ எங்கு என்றாலும் சரி, பெரிதாக மதிக்கின்றார்கள். மக்களின் துன்பதுயரங்களை பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டி விளங்காத மக்களுக்கும் விளங்கும் தன்மையை ஏற்படுத்துகின்றோம். நான் கிட்டத்தட்ட 150 பாடல்களுக்கு மேல் பாடியிருக்கின்றேன். எங்களுடைய கலையுலகிலேயே பெரிய ஒரு இழப்பு என்னவென்றால் சிட்டுவின் இழப்புத்தான்.

கேள்வி : தென்னிந்திய பாடல்களுக்கும் தமிழீழப்பாடல்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஐம்பது, அறுபது வருடங்களாக எங்கள் மக்கள் சினிமாப்பாடலைத்தான் கேட்டுக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் இப்பொழுது சினிமாப் பாடல்களைக்கேட்க பெரிய வெட்கமாக இருக்கின்றது. தமிழ் நாடு எங்கள் தாய் நாடு என்று சொல்லுவோம். இப்பொழுது பிறமொழிப் பாடகர்களை கொண்டுவந்து பாடுவிக்கின்றார்கள். "மூளைக்குள்ளே" என்பதை "மூலைக் குள்ளே" என்றும் பாடுகின்றார்கள். "தோட்டம்" என்பதை "தொட்டம்" என்று பாடுகின்றார்கள். பரீட்சைக்கு ஒரு பிள்ளை இப்படி எழுதினால் புள்ளியே போடமாட்டார்கள்.

பரபல அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் ஒரு பேட்டியில் கூறியிருக்கின்றார் "தமிழ் நாட்டுக்காரர்களுக்கு இடமில்லை, தமிழ்ப் பாட்டை ஆங்கிலத்தில் எழுதிப் பாட வேண்டும் என்று இப்பொழுது அவர்களைத்தான் பாட வைக்கின்றார்கள். அவர்கள் தான் இப்பொழுது பாடுகின்றார்கள். உதித் நாராயணன், சாதனா சர்க்கம் போன்றோரை வைத்துத்தான் இப்பொழுது பாடுவிக்கின்றார்கள். அவர்கள் பெரும் தமிழ்ப் பிழைகளுடன் பாடுகிறார்கள்.

ஆனால் இங்கு அப்படியில்லை. தமிழ் மொழியைக் காக்கின்ற இடமென்றால் தமிழீழம் தான். எவ்வளவோ நாடுகளுக்கு போகின்ற பாடல்களை இப்படிக் கொச்சையாகப் பாடுகின்றார்கள். அதற்குக் கண்டனம் கூட இல்லை. ஆனால் இங்கு அப்படியில்லை. இந்தத் தமிழறிவை ஊட்டியது புதுவை அண்ணா என்றுதான் சொல்ல வேண்டும். மிகத்துல்லியமாகக் கவனித்துக் கொண்டிருப்பார். சினிமாப்பாடல் மாதிரி இவை அழிந்துபோகும் பாடல்கள் அல்ல. போராட்டங்கள் நடந்த சம்பவங்களை வெளிக்காட்ட மிகத் தெளிவாகத் தமிழை உச்சரிக்க வேண்டும். காசியண்ணாவின் பாடல்களைப் பாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவரை இன்னமும் கூட நான் காணவில்லை. இது எனக்கு ஒரு தாக்கம். அந்தப் பாக்கியம் எப்போது கிடைக்குமோ தெரியாது. காசிஆனந்தன் அண்ணாவின் பாடல்கள் பழைய வரலாறுகளை எடுத்துக்காட்டுகின்றன. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற பாணியில் தான் இருக்கும். "முல்லைத்தீவுகள் தொடரும் பகைவன் முண்டமும் தலையும் சிதறும்....." மேலும் பழைய வரலாறுகள், நில வளங்கள் என்று பாடியிருக்கின்றார்.

கேள்வி : நாடகத்துறையில் தங்களுடைய பங்களிப்பு எந்த அளவிற்கு உள்ளது?

இசைத்துறையில் இருந்தது போல இத்துறையிலும் ஆர்வம் இருந்தது. அதுவும் ஆரம்பத்திலேதான். பாடசாலையில் படிக்கின்ற காலத்தில் சாம்ராட் அசோகன் என்ற நாடகத்தில் முதன்முதல் புத்தபிக்குவாகப் பாத்திரமேற்று நடித்தேன். பின்னர் கிளிநொச்சியில் கங்கேஸ்வரா மன்றம் என ஒரு மன்றத்தை உருவாக்கியிருந்தோம். அதில் "அருணகிரிநாதர்", "அல்லோலகல்லோலம்", "கேட்காத காதுகள்" என்று பத்து நாடகங்களுக்கு மேல் நடித்தேன். "அரிச்சந்திர மயான காண்டம்" என்ற நாடகத்தில் நடித்திருக்கின்றேன். அதில் அரியாலை செல்வமும் நடித்திருக்கின்றார். இந்த நாடகம் மிக வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டிருக்கிறது.

இது தமிழீழப் போராட்டத்திற்கு பெருமளவு நிதியைப் பெற்றுக்கொடுத்த நாடகம். இது யாழ்ப்பாணத்தில் பெருமளவு நிதியைப் பெற்றுக்கொடுத்தது.

கேள்வி : தமிழீழத்தில் பல கலைகள் அழியும் வாய்ப்பு உள்ளது. அதுபற்றி?

பல பாரம்பரியக் கலைகள் அழிவதற்கு முக்கிய காரணம், சிலர் அந்தக் கலைகளை தங்களுக்குள் வைத்திருப்பதும் மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க விரும்பாததும். அந்த வகையில் நாட்டுக் கூத்துக்கள், வடமோடி, தென்மோடி இசைநாடகங்கள் எல்லாம் ஒரு வட்டத்திற்குள் தான் நின்றன. அவை தான் எங்களுடைய பாரம்பரிய கலைகள். சினிமாப் பாடல்கள் பாடலாம். வேறு பாடல்களைப் பாடலாம். பாரம்பரியக் கலைகளைக் காக்க வேண்டும். இப்பொழுதும் இளம் சந்ததியை வளர்க்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருக்கின்றது. இல்லை என்றால் இப்படியான கலைகள் அழிந்து போய்விடும்.

கேள்வி : தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டுப் பற்றி?

நான் 1991ஆம் ஆண்டே தலைவரைச் சந்தித்தேன். "இந்த மண் எங்களின் சொந்தமண்" என்ற ஒலிநாடா வெளியிடும் போது புதுவை அண்ணா ஏற்பாடு செய்து தந்தார். அப்போது தலைவர் கூறினார். "சாந்தனுடைய பாடல் எல்லாம் மிகவும் நன்றாக இருக்கின்றன. சாந்தனின் பாடல் தான் எனக்கு கேட்க இனிமையாக இருக்கின்றது" என்று பாடல்கள் ஒலிப்பதிவு செய்யும் போது தலைவரின் கையினால் சிறப்புப் பரிசில்கள் பெற்றிருக்கின்றேன். அண்மையில் கரும்புலிகள் ஒலிநாடாவிற்கு பரிசில் தந்தார். மாலதி படையணியின் "வெஞ்சமரின் வரிகள்" என்ற பாடல்களிற்கும் தலைவர் பரிசில் தந்துள்ளார். எந்தப் பெரிய அரசினது விருது கிடைத்தாலும், மன நிறை வடைய மாட்டோம். தலைவரின் கையினால் பரிசு வாங்கினால் எமக்குப் பெரிய சந்தோசம்.

கேள்வி : உங்களுடைய பிள்ளைகளிடம் இக்கலைத்துறை வளர வாய்ப்பு இருக்கின்றதா?

நிறைய இருக்கின்றது. எனது மூத்த மகன் நல்ல பாடகராக வருவார் என்றுதான் நினைத்தேன். இப்போது மாவீரராகிவிட்டார். அடுத்த வரும் போராளி. அவரும் பாடுகின்றார். அவரைத் தீர்மானிப்பது மக்கள் தான்; ரசிகர்கள் தான். மற்றது கோகுலன் என்று இருக்கின்றார், அவரும் பாடுவார். படிப்பில் அக்கறை இருப்பதால், இத்துறையில் இன்னும் முழுமையாக ஈடுபடவில்லை.

E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ

14 ஆவது அகவையில் பாதம் பதிக்கும் ஈழநாதத்தினை வாழ்த்துகிறோம்!

ஜப்பானிய தொழில்
நுட்பத்துடன்
தயாரிக்கப்பட்டு
ஆண், பெண்,
சிறுவர்களுக்கான
**லுமாலா**
சைக்கிள்கள்
எமது வசம்.

**10 வருட உத்தரவாதம்**

வெள்ளிக் கம்பி இணைப்புடன் கரியர், பெல்,
பூட்டு, ஸ்ராண்ட், மட்பிளேட் இலவசம்!

HERO CYCLES

8 வருட உத்தரவாதம்

ஜப்பானிய தொழில்
நுட்பத்துடன் உருவாக்கம்
பெற்று புது மெருகுடன்
ஆண், பெண்,
சிறுவர்களுக்கான
**ஹீரோ** சைக்கிள்கள்

கரியர், பெல், பூட்டு, சைட் ஸ்ராண்ட்,
மட்பிளேட்,ரூல்பாக், சாவிசெட்,
சைட் கண்ணாடி இலவசம்

ரூபா 100, 000 பெறுமதியான
காப்புறுதிச் சான்றிதழ் இனாம்

சைக்கிள், மோட்டார் சைக்கிள்களுக்கான ரயர், ரியூப் வகைகள்,
தலைக்கவசங்கள் [Helmet] , T.V, றேடியோ,
கசற் வகைகள், மின்னுபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள்
நம்பிக்கையுடனும், தரமானதாகவும் நியாய விலையிலும் உங்களுக்குக் கிடைக்கும்.

சைக்கிள் , சைக்கிள் உதிரிப்பாக விற்பனையில் அரைநூற்றாண்டுக்கும்
மேலான அனுபவமும் நன்மதிப்பும் பெற்றவர்கள்.

# இ .சுப்பிரமணியம் அன்கோ

**[பிள்ளையார் சைக்கிள் பலஸ்]**

இல.6,8. கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(சி-7904)

இ. சுப்பிரமணியம் அன்கோ

E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ E.S. அன்கோ

Kodak EXPRESS
QUALITY MONITORING SERVICE

NIMALAN
STUDIO &
COLOUR LAB
KILINOCHCHI
நிமலன் ஸ்ருடியோ
& கலர் லாப்

*புலர்ந்து விடியும் பொழுதினில்*
*புதிய பல விடயங்கள் தாங்கி வரும் நாதமே!*
*இன்னும் மலர்க! மலர்ந்து மணம் வீசுக...!*
*புலிமறவர்;மக்களின் கரங்களில் தவழுக!*

# நிமலன் வீடியோ
# புகைப்படக்கலையகம்



எமது கலையகத்தினரால்பிடிக்கப்படும் புகைப்படங்களையும், தங்களது இல்லங்களில்
நடைபெறும் மங்களகரமான விழாக்களையும் சிறந்த முறையில் வீடியோப்படம் பிடித்திடவும்
புகைப்படம் பிடித்து உடனுக்குடன் பிரதி செய்து பெற்றுக்கொள்வதற்கும்
உங்கள் படச்சுருள்களை உடனுக்குடன் பிரதி செய்து பெற்றுக்கொள்வதற்கும்

## நிமலன் வீடியோ புகைப்படக்கலையகம்

யாழ் சாலை,
கிளிநொச்சி.

முல்லைசாலை,
புதுக்குடியிருப்பு.

துணுக்காய் சாலை,
மல்லாவி.

**விரைவில் முல்லை நகரிலும் எமது சேவையினை ஆரம்பிக்க உள்ளோம்.**

(சி- 7923)


GHJ
ஆண்டு பதினான்கில்
அடியூன்றி நிமிரும்
அழகு 'ஈழநாதமே'!
அன்போடு வாழ்த்துகின்றோம்.
★ நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
★ தரம் குன்றா தங்க நகைகள்
★ தங்க நகை உலகில் தமக்கென
தனியிடம் பதித்தவர்கள்
கணேசா நகையகம்
123,பஜார் வீதி, வவுனியா.
T.P : 024-22464
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு–11.


தரம் நிறைவு
விலை மலிவு
புடைவையில் புத்தெழில்
பாதையில் பல தடைகள் கண்டு உனைப் பார்க்காது தவித்தோம் அன்று.
இன்று வீரமாய் எம் மண்ணில் வந்து நாதமே! விளக்கிடு பல உண்மையைத் துணிந்து.
என்று வாழ்த்தும்
வவுனியா நகரில் வசந்தம் வீசும், புடைவை உலகில் புதுமை படைத்திடும் உங்கள் நாயகி
சாந்தா ரெக்ஸ்
Santha Tex
உங்கள் தெரிவிற்கு
★ மங்கையர் மனங்கவர் ஆடைகள்
★ ஆண்களுக்கான சேட்டிங் சூட்டிங்
★ சிறுவர்களுக்கான சிறப்பு ஆடைகள்
★ அழகு சாதனப் பொருட்களுக்கு
நீங்கள் நாட வேண்டிய இடம்
108-A, பஜார் வீதி,
வவுனியா.
✆ - 024- 22879